Registered as Newspaper

# உதயன் சஞ்சீவி

சுடர் : 36 கதிர் : 115 | ஞாயிற்றுக்கிழமை | பங்குனி 8ஆம் நாள் 21 மார்ச் 2021 | வள்ளுவர் ஆண்டு 2051

பக்கங்கள்: 20+24 விலை : ரூ.40 செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## மாகாண சபை தேர்தலுக்கான பிரேரணை அமைச்சரவைக்கு!

**2 வாரங்களுக்குள் சமர்ப்பிக்க முஸ்தீபு**

கொழும்பு,மார்ச் 21

மாகாண சபைகளுக்கான தேர்தலை விரைவில் நடத்துவதற்கு தேவையான சட்டத்திருத்தம் 19 ➤

## காணாமல் ஆக்கப்பட்டோரை விடுவித்துவிட்டு பேச வரட்டும்

*டக்ளஸின் சந்திப்பு ஐ.நா.வுக்கான நாடகமே என்கிறார் அனந்தி*

யாழ்ப்பாணம், மார்ச் 21

காணாமலாக்கப்பட்டவர்களில் அரசின் கைவசம் உள்ளவர்களை விடுவித்து விட்டு, அரசு மக்களுடன் பேச வரவேண்டும் என்று தமிழர் 19 ➤



# 200 அடி பள்ளத்தில் குடைசாய்ந்தது பஸ்

- 14 பேர் உயிரிழப்பு
- 34 பேர் தீவிர சிகிச்சைப்பிரிவில்

பதுளை, மார்ச் 21

லுணுகலையிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த தனியார் பஸ், பசறையை அண்மித்த பகுதியில், வீதியை விட்டு விலகி 200 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது. விபத்தில் 14 பேர் உயிரிழந்தனர். 43 பேர் படுகாயமடைந்தனர். அவர்களில் 34 பேர் தீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர். 19 ➤

## ஹெரோய்ன் விற்பனை: சிறை அலுவலர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 21

யாழ்ப்பாணத்தில் ஹெரோய்ன் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்த சிறைச்சாலை உத்தியோகத்தர் ஒருவர் மதுவரித் திணைக்கள 19 ➤

## வடக்கில் மூவருக்கு கொரோனா

யாழ்ப்பாணம், மார்ச் 21

வடக்கு மாகாணத்தில் மேலும் 3 பேருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை நேற்று சனிக்கிழமை கண்டறியப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத் 19 ➤

## இரண்டு மாதங்களுக்குள் மாகாண சபைத் தேர்தல்!

தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 21

நாடாளுமன்றில் சட்டமூலம் நிறைவேற்றப்பட்ட பின்னர், 2 மாதங்களுக்குள் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேர்தல் ஆணைக் 19 ➤

## காணாமல் ஆக்கப்பட்டோருக்கு ஒரு மாதத்தில் தீர்வு கிட்டுமாம்

**அமைச்சர் டக்ளஸின் அடுத்த குண்டு**

யாழ்ப்பாணம், மார்ச் 21

வடக்கு, கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கு ஒரு மாதத்தில் தீர்வைப் பெற்றுக்கொடுக்க என்னால் முடியும் என்று அமைச்சர் டக்ளஸ் 19 ➤



## பிரி. நீதிமன்றால் பிரியங்க விடுவிப்பு!

**வழக்குச் செலவுகளை தமிழர்களே செலுத்தவேண்டும் எனவும் பணிப்பு**

கொழும்பு, மார்ச் 21

தமிழர்களுக்கு கழுத்தறுப்பு சைகை **செய்த மேஜர் ஜெனரல் பிரியங்க பெர்னாண்டோவுக்கு எதிராக** பிரிட்டனின் வெஸ்ட்மினிஸ்டர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் **தாக்கல் செய்யப்பட்ட வழக்கில்**, பிரியங்க பெர்னாண் 19 ➤

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணின் கரட் எதுவாயினும் அதிகூடிய முற்பணம்

அதிகபட்ச முற்பணத் தொகை
ரூ. 70,000/-
0.79% மாதாந்த வட்டி வீதம் மட்டுமே

- அதிகபட்ச இரகசியத் தன்மை
- சிநேகபூர்வமான உடனடி சேவை
- சிறந்த பாதுகாப்பு

மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள் அல்லது.


செலான் பக்க கடன் 011 200 88 88 செலான் வங்கி

Brand Finance Rating "A+" Fitch Rating: "A" (lka)

Dialog HOME BROADBAND

பிற்கொடுப்பனவு Data Add-ons க்கான

டேட்டா டபுள் ஆகிவிட்டது



விரும்பிய வகையில் தெரிவு செய்து கொள்ள தினசரி, வாராந்த, மாதாந்த Data Add-on தெரிவுகள் ரூ.60/- முதல்

செயற்படுத்தல் MyDialog App, hbb.dialog.lk மூலம் அல்லது 678க்கு SMS செய்வதன் மூலம்

அதிதுரித Home Broadband

Dialog எதிர்காலம் இன்றே.

TRC/DBN/PRO/20/06

*வரிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டது

**வேலையாள்கள் தேவை**

- ஹாட்வெயார் அனுபவம் உள்ளவர்கள்
- பொருள் ஏற்றி இறக்குபவர்கள்
- திறமைகேற்ப ஊதியம் வழங்கப்படும்
- தங்குமிடம், உணவு இலவசம்

**சிற்றி ஹாட்வெயார் அன் ஸ்ரோர்ஸ்**
**55, 57 ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்**
**077 847 3222, 021 222 2121**

# மாகாணசபை முறைமையை ஒழிப்பதே எனது நிலைப்பாடு

**புர்காவுக்கும் விரைவில் தடை வரும் என்கிறார் சரத் வீரசேகர**



கொழும்பு,மார்ச் 21

**மாகாணசபை முறைமை ஒழிக்கப்பட வேண்டும் என்ற எனது நிலைப்பாடு ஒரு போதும் மாறாது. அதற்காகத் தொடர்ந்தும் குரல் கொடுப்பேன். அமைச்சரவையிலும் கருத்துக்களை முன்வைப் பேன் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.**

மாகாணசபை முறைமைக்கு அமைச்சர் சரத் வீரசேகர கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின் றார். ஆனாலும் தேர்தல் நடத்தப் படும் என்று அரசு அறிவித்துள் ளது. இது தொடர்பில் எழுப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக் கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மாகாண சபை முறைமையை ஒழிப்பேன் என்று நான் கூற வில்லை. அதற்கு எதிரானவன் நான்.

எனவே, குறித்த முறைமையை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் படுமானால், அதற்கு முழு ஒத்து ழைப்பையும் வழங்குவேன்.

மாகாண சபை முறைமை தொடர் பில் நாடாளுமன்றம் தான் முடி வெடுக்க வேண்டும்.

இந்த விவகாரம் தொடர்பில் அமைச்சரவையில் கலந்துரை யாடும் போது, எனது கருத்துக் களை முன்வைப்பேன். மாகாண சபை முறைமை தொடர்பான எனது எதிர்ப்பு ஒரு போதும் மாறாது என்றும் அவர் தெரி வித்தார். புர்கா தடை தொடர் பில் எழுப்பட்ட கேள்விக்குப் பதி லளித்த அவர், " அதற்கான அமைச்சரவைப் பத்திரத்தில் கையொப்பமிட்டுள்ளேன்.

முன்கூட்டியே ஒதுக்கப்பட்ட நிகழ்ச்சி நிரல்களின் அடிப்படை யிலேயே அமைச்சரவைக்குப் பத்திரம் வரும். அந்தவகையில் தான் தாமதம் ஏற்பட்டுள்ளது. எனினும், ஒரிரு வாரங்களில் அமைச்சரவைக்கு குறித்த பத்தி ரம் நிச்சயம் வரும்." என்றார். (க-44)

## மரண அறிவித்தல்

### சிதம்பரப்பிள்ளை தங்கராசா



அராலி மேற்கு வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப் பிள்ளை தங்கராசா நேற்று (20.03. 2021) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - விசாலாட்சி தம்பதி யரின் அன்புப் புதல்வனும், காலஞ் சென்றவர்களான சொக்கலிங்கம் - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், கலாநாயகியின் அன்பு கணவனும், சிந்துசா, வேணுசா, யுகதீசன், யதுசா, நேருஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும், விஜேந்திரன், நவநீதன் ஆகியோரின் அன்பு மாமனாரும், விந்துசன், விஷான், அசானன், ஆரணன், ஆரபி, அஷ்சிகா ஆகியோரின் அன்புப் பேரனும், நடராசா, தேவி, திலகவதி, விஜயலட்சுமி, காலஞ்சென்றவர்களான நாகமுத்து, அமிர்தலிங்கம், புஸ்பராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், நாகமுத்து, மகாலிங்கம், காலஞ்சென்ற விநாயகமூர்த்தி, குலசிங்கம், வள்ளிநாயகி, புவனேஸ்வரி, தனேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.03.2021) ஞாயிற்றுக்கிழமை மதியம் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அராலி மேற்கு கொத்துத்துறை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பிரதான வீதி,**
**சித்தன்கேணி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# இலங்கை– பங்களாதேஷ் பிரதமர்களிடையே சந்திப்பு



கொழும்பு,மார்ச் 21

பிரதமர் மஹிந்த ராஜபக்ச மற்றும் பங்களா தேஷ் பிரதமர் திருமதி. ஷெயிக் ஹசீனா ஆகியோருக்கு இடையிலான சந்திப்புபங்களா தேஷ் தலை நகர் டாக்காவில் நேற்று இடம் பெற்றது.

சந்திப்பில் தம்மை வரவேற்றமைக்கு பிரதமர் மஹிந்த நன்றி தெரிவித்தார்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் இலங்கை மக்களின் வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந் திர உறவு 2022 ஆம் ஆண்டு 50 ஆவது வருடத்தை நோக்கிச் செல்கிறது. இதனைக் கொண்டாடும் வகையில் இராஜ தந்திர அதிதி யாக நீங்கள் இலங்கைக்கு வருகை தர வேண்டும் என்று பங்களாதேஷ் பிரதமருக்கு அழைப்பு விடுத்தார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் பங்களா தேஷ் நாட்டுக்கான பயணம், தனிப்பட்ட முறையில் தனக்கும், பங்களாதேஷ் நாட்டு மக்களுக்கும் கௌரவமளிப்பதாக பங்களா தேஷ் பிரதமர் திருமதி ஷெயிக் ஹசீனா தெரிவித்தார் என்று பிரதமரின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (க-இ)



இடர் ஆபத்து முகா மைத்துவம் தொடர்பாக பாடசாலை மாணவர்க ளின் திறன்களை மேம் படுத்தும் நோக்கில் நடா ளாவிய ரீதியில் நடை பெற்ற சித்திரம் வரை தல் போட்டியில் தேசிய மட்டத்தில் வெற்றியீட் டிய முல்லைத்தீவு பாரதி மகா வித்தியாலய மாணவன் ரா.சஜந்தனுக்கு முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் ச.ரவி சான் நிதழ் வழங்கிக் கௌரவித்தார். (ச-222)

# சாவ.மருத்துவமனையில் மீண்டும் கிளினிக்குகள்!




சாவகச்சேரி, மார்ச் 21

சாவகச்சேரி மருத்துவமனை யில் கொரோனாத் தொற்றுக் காரணமாக மட்டுப்படுத்தப் பட்ட அளவில் நடத்தப்பட்டு வந்த கிளினிக்குகள் மீண்டும் முழு அளவில் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

இதையடுத்து கிளினிக்குக்கு வரும் நோயாளர்களின் நலன் கருதி கிளினிக் மண்டபத்துக்கு அருகிலுள்ள கட்டடத்தில் நோயாளர்கள் தங்க வைக்கப் பட்டு கட்டம் கட்டமாக மருத்து வரிடம் அனுப்பி வைக் கப்படுகின்றனர்.

ஒரே தடவையில் 200 நோயாளர்களுக்கு மேல் இருக்கக்கூ டிய இருக்கைகளைக் கொண்ட மண்டபம் காணப்படுகின்ற போதி லும், கொரோனாத் தொற்று, சமூக இடை வெளியைக் கருத்தில் கொண்டு அண்மை யில் புனரமைக்கப் பட்ட கட்டடத்தில் நோயாளர் கள் தங்கவைக்கப்பட்டு சிகிச் சைக்காக குறிப்பிட்ட அளவு நோயாளர்கள் மண்டபத்துக்கு அனுப்பப்படு கின்றனர்.

கட்டடத்தினுள் செல்ல மறுப் போர் அருகில் உள்ள மரநிழலில் தங்க வைக்கப்பட்டு வழங்கப் பட்ட டோக்கன் இலக்கத்தின் பிரகாரம் மருத்துவரிடம் அனுப் பப்படுகின்றனர். (ற-9)

# திண்மக் கழிவுகளை தரம்பிரித்து வழங்குக

**வவுனியா வர்த்தகர்களுக்கு அறிவுறுத்தல்**



வவுனியா,மார்ச் 21

வவுனியா நகரிலுள்ள வர்த்தக நிலையங்க ளில் சேகரிக்கப்படும் திண்மக் கழிவுகளை நான்குபை களில் தரம் பிரித்து வழங் குமாறு வர்த்தக நிலையங்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

வவுனியா நகரில் கழிவகற்றல் நடவ டிக்கையை மேற் கொள்வதில் நகரசபை ஊழியர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குவது டன், தரம்பிரிப்பதில் தாமதங்கள் ஏற் படுவதால் வர்த்தக நிலையங்களில் கழி வுகளை வழங்கும் போது பச்சை நிறத் திலான பைகளில் உணவுக் கழிவுகளை யும், சிவப்பு நிறப் பைகளில் பிளாஸ் டிக் மற்றும் பொலித் தீன் கழிவுகளையும், மஞ்சள் நிறப் பைக ளில், கடதாசிக் கழி வுகளையும், நீலநிறப் பைகளில் கண்ணாடி மற்றும் உலோகக் கழிவுகளையும் இட்டுவைத்து குப்பை அகற்ற வரும் ஊழி யர்களிடம் வழங்கு மாறு வர்த்தக நிலை யங்களுக்குச் சென்ற நகரசபை ஊழியர் கள் அறிவுறுத்தல் களை வழங்கி வரு கின்றனர்.

10 ரூபா முதல் 40 ரூபா வரையில் செலுத்தி தேவை யான கழிவுப்பை களை நகரசபை கழிவு சேகரிக்கும் பிரிவில் பெற்றுக் கொள்ளுமாறும், நடை முறைகளை மீறுப வர்களுக்கு எதிராக எந்த விதமான முன் னறிவித்தல்களும் இன்றி சட்ட நடவ டிக்கை எடுக்கப்படும் என்றும் நகரசபை யின் சுகாதாரப் பிரி வினர் அறிவித்துள் ளனர். (ஐ-110)




# நடைபாதை வியாபாரத்துக்கு புத்தாண்டு காலத்தில் தடை!

## சாவகச்சேரியில் நடவடிக்கை

சாவகச்சேரி, மார்ச் 21

**சித்திரைப் புத்தாண்டு காலப்பகுதியில் சாவகச்சேரியில் நடைபாதை வியாபாரத்தை மேற்கொள்வதற்கு சுகாதாரப் பகுதியினர் தடை விதித்துள்ளனர்.**

பண்டிகைக்கால நடைபாதை வியாபாரத்துக்கான அனுமதியை சாவகச்சேரி நகர சபையிடம் வியாபாரிகள் கோரியுள்ளனர்.

இதுதொடர்பில் நகரசபையினரிடம் சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினர் தெரிவித்ததாவது.

கொரோனாத் தொற்று அதிகரித்து வருகின்றமையால் நடைபாதை வியாபாரத்துக்கு அனுமதி வழங்க முடியாது என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

நடைபாதை வியாபாரிகள் கொரோனாத் தொற்றுள்ள பிரதேசங்களிலிருந்து வருவதால் கை கழுவுதல் மற்றும் முகக்கவசம் அணிதல் போன்ற சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிக்க மாட்டார்கள். மக்கள் பண்டிகைக்கான பொருள்களை கொள்வனவு செய்யும் போது சுகாதார விதிமுறைகளைப் பேணமாட்டார்கள். என்றனர். (வ-9)

# மருதடி விநாயகர் ஆலய திருவிழா நாளை ஆரம்பம்

மானிப்பாய், மார்ச் 21

வரலாற்றுச் சிறப்புப் பெற்ற மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் நாளை திங்கட்கிழமை காலை 10.30 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

25 தினங்கள் நடைபெறவுள்ள உற்சவத்தில் எதிர்வரும் 31 ஆம் திகதி புதன்கிழமை மாலை 7 மணிக்கு மஞ்சத்திருவிழாவும், ஏப்ரல் மாதம் 10 ஆம்திகதி சனிக்கிழமை மாலை 7 மணிக்கு கைலாச வாகனத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

தொடர்ந்து ஏப்ரல் மாதம் 13 ஆம்திகதி சப்பறத் திருவிழாவும், மறுநாள் 14 ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12 மணிக்குத் தேர்த்திருவிழாவும். மறுநாள் வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. கொடியேற்றம், தேர்த் திருவிழா, தீர்த்தத் திருவிழா தவிர்ந்த ஏனைய நாள்களில் முற்பகல் 9.45 மணிக்கும், நண்பகல் 12 மணிக்கும், மாலை 4.45 மணிக்கும் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெறும் என உற்சவ கால தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ நாகேந்திர திவாகரக் குருக்கள் தெரிவித்துள்ளார். (வ-50)

# ஆண்டு நிறைவு நிகழ்வு

கிளிநொச்சி, மார்ச் 21

கிளிநொச்சி, ஆனைவிழுந்தான் சுவாமி விவேகானந்தர் அறநெறிப் பாடசாலையின் 8ஆவது வருட நிறைவு விழா இன்று காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி திருநெறிக் கழகத்தின் செயலாளர் அ.சிவஞானசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையின் கண் வைத்திய நிபுணர் எஸ்.ரி.எஸ்.சந்திரகுமார் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (ச-13)

# நட்புறவு கழகத்தின் ஒன்று கூடல்

கைதடி, மார்ச் 21

கைதடி மக்கள் நலன் பேணும் நட்புறவுக் கழகத்தின் ஒன்று கூடல் நிகழ்வு நாவற்குழியிலுள்ள ஹனிமூன் விடுதி வளாகத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

கைதடி மக்கள் நலன் பேணும் நட்புறவுக் கழகத்தின் தலைவர் திரு.க.சிறிதரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் மிக முக்கிய விடயங்கள் பற்றி கலந்துரையாடப்படவுள்ளன. இதனால் கழகத்தின் நிர்வாக உறுப்பினர்கள், பொதுச்சபை உறுப்பினர்கள், கழகத்துடன் இணைந்த சன சமூக நிலையங்களின் பிரதிநிதிகள் மற்றும் மாதர் சங்கங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் சுகாதார நடைமுறைகளைப் பேணி இந் நிகழ்வில் கலந்துகொள்ள வேண்டும் என்று கழகத்தின் செயலாளர் கேட்டுள்ளார். (வ-288)

# சுற்றுலா நீதிமன்ற அமர்வு இனி ஒவ்வொரு புதனிலும்

முல்லைத்தீவு, மார்ச் 21

மாங்குளம் புதிய நீதிமன்றக் கட்டடத் தொகுதியில் இதுவரை காலமும் ஒவ்வொரு மாதத்தின் 2 ஆம் 4 ஆம் வாரத்தின் புதன்கிழமைகளில் இடம்பெற்று வந்த முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தின் சுற்றுலா நீதிமன்ற அமர்வுகள், கடந்த 15ஆம் திகதி முதல் ஒவ்வொரு மாதத்தின் அனைத்துப் புதன்கிழமைகளிலும் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ப)


# முக்கிய அறிவித்தல்

வடக்கு மாகாணத்தில் எமது கட்சியில் இணையவிரும்புபவர்கள் எமது தலைமை காரியாலத்தில் தொடர்பு கொள்ளவும்.

எதிர்வரும் மாகாண சபை தேர்தலில் இப்போது எமது கட்சியில் இணையும் உறுப்பினர்களில் இருந்தே. எதிர்வரும் மாகாண சபை தேர்தலுக்கான வேட்பாளர்களையும் தெரிவு செய்யவுள்ளோம் என்பதையும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

**இக்கட்சியில் இணைபவர்கள் இன, மத, பால், வேறுபாடு அற்றவர்கள்**

**அகில இலங்கை மக்கள் எழுச்சிக்கட்சி**
**ALL Ceylon People uprising party (CPUP)**

தலைமைச் செயலகம்:
இல. 32 மஞ்சவனப்பதி வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

T.P.No : 021 222 3460
Fax : 021 222 3480
Whats app : 077 747 4111

முதலாவது கிளை:
40/1, லோறிஸ் றோட்,
கொழும்பு - 04

T.P.No : 021 259 4626
Whats app : 075 024 6146

எல்லோரும் சேர்ந்து சுபீட்சமாக நாட்டை உருவாக்குவோம்
"Let's Build Ceylon as Best Country in the World"

# காடழிப்புக்களை வெளிப்படுத்தும் ஓவியங்களை அகற்றப் பணிப்பு

கொழும்பு.மார்ச் 21

இலங்கையில் காடழிப்புக்கள் இடம்பெறுவதை வெளிப்படுத்தும் விதத்தில் வரையப்பட்டுள்ள. ஓவியங்களை அகற்றுமாறு ஜனாதிபதி செயலகம் உத்தரவிட்டுள்ளது.

அதற்கமைவாக நெலும்பொக்குண வுக்கு அருகில் வரையப்பட்டிருந்த ஓவியங்களை அகற்ற கொழும்பு மாநகரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

வனவிலங்கு இயற்கை பாதுகாப்பு சமூகத்தைச் சேர்ந்த சிறுவர்களே இந்த சுவரோவியத்தை வரைந்தனர்.

கொழும்பு மாநகர சபையினதும், பொலிஸாரினதும் அனுமதியைப் பெற்றே அவர்கள் குறிப்பிட்ட சுவரோவியத்தை வரைந்தனர் என்று தெரிவிக்கப் படுகிறது. இதேவேளை இந்த ஓவியங்களை அகற்றுவதற்கு ஓவியங்களை வரைந்த சிறுவர்கள் தங்கள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். (க-இ)

# குருதி இருப்பு குறைந்தது; கொடை வழங்கக் கோரிக்கை

கொழும்பு.மார்ச் 21

கடந்த காலத்தில் சுமார் 12 ஆயிரம் அலகுகளாகப் பேணப்பட்டு வந்த குருதி வழங்கல், தற்போது 8 ஆயிரமாகக் குறைந்துள்ளது. எனவே குருதிக்கொடை வழங்குவதற்கு மக்கள் முன்வர வேண்டும் என்று தேசிய குருதிமாற்றுச் சேவை நிலையம் கோரியுள்ளது.

தற்போது கொவிட்19 தொற்றுப் பரவலால், குருதிக்கொடை வழங்குவதற்கு மக்கள் அச்சமடைகின்றனர். எனினும் குருதியைச் சேகரிக்க அனைத்து நடைமுறைகளும் மிகவும் பாதுகாப்பான சூழலில் மேற்கொள்ளப்படுகின்றன.

எனவே குருதிக் கொடை வழங்க மக்கள் பயம் கொள்ளத் தேவையில்லை என்று நிலையத்தின் மருத்துவர் லக்ஷ்மன் எதிரிசிங்க தெரிவித்துள்ளார். (க-இ)

# புனித சூசையப்பர் ஆலயத் திருவிழா

மன்னார், மார்ச் 21

மன்னார் மறை மாவட்டத்தில் கத்தோலிக்க மக்கள் செறிந்து வாழும் தாழ்வுபாடு கிராமத்தில் அமைந்துள்ள புனித சூசையப்பர் ஆலயத் திருவிழா திருப்பலி கடந்த வியாழக்கிழமை காலை சிறப்பாக இடம் பெற்றது.

கடந்த 9 நாள்கள் நடைபெற்ற நவ நாள் திருப்பலிகளைத் தொடர்ந்து அன்று மாலை வெஸ்பர் நற்கருணை வழிபாடும் அதனைத் தொடர்ந்து நற்கருணை இறையாசீரும் மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி அ. விக்டர் சோசை அடிகளாரால் வழங்கப்பட்டன. (ப-56)

வலி.தென்மேற்கில்

# ரூ.15 மில்லி. செலவில் சோலர் மின் இணைப்பு

வலி.தென்மேற்கு. மார்ச் 21

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் மின்கட்டணம் மாதாந்தம் அதிகரித்து வருவதால் சபைக்கு மிகப் பெரிய நிதி இழப்பு ஏற்படுகிறது.

இவற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கில் முதற்கட்டமாக 15 மில்லியன் ரூபா செலவில் குறிப்பிட்ட சில இடங்களுக்கு சோலர் மூலம் மின் இணைப்பு பொருத்துவதற்கு பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மானிப்பாய் பட்டினம், மானிப்பாய் கிராமம், பண்டத்தரிப்புப் பட்டினம் மற்றும் பண்டத்தரிப்புக் கிராமம் என நான்கு உப அலுவலகங்களை உள்ளடக்கிய வலி. தென்மேற்குப் பிரதேச சபையின் மின் கட்டணமே அதிகரித்துக் காணப்படுகின்றது. இதைக் கட்டுப்படுத்தும் வகையில் சில வேலைத்திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படவுள்ளன. இந்த வருடத்துக்கான வரவு செலவுத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டமைக்கமைய சி.டி.எஸ்.பி கடன் திட்டத்தினூடாக ஐந்து மில்லியன் ரூபா செலவில் தலைமை அலுவலகத்துக்கு சோலர் மூலம் மின் இணைப்பு ஏற்படுத்தப்படவுள்ளது.

இதேபோல் வலி.தென்மேற்கு பிரதேச சபையின் கீழுள்ள சந்தைகள் மற்றும் உப அலுவலகங்கள் ஆகியவற்றில் மின்கட்டணத்தைக் கட்டுப்படுத்தும் வகையிலும், வருமானத்தை அதிகரிக்கும் நோக்குடனும் உள்ளூராட்சி மன்றங்களை வலுப்படுத்தும் செயற்றிட்டத்தின் கீழ், பண்டத்தரிப்பு உப அலுவலகம் மற்றும் மானிப்பாய் பொதுச்சந்தை ஆகியவற்றுக்கு முதற்கட்டமாக 5 மில்லியன் ரூபா செலவில் சோலர் மின் இணைப்பு பொருத்தப்படவுள்ளது. (ற-115)



# மணல் அகழ்வை நிறுத்தாவிடில் குடிப்பதற்கும் தண்ணீர் இருக்காது

மட்டக்களப்பு.மார்ச் 21

மட்டக்களப்பு மாவட்டத்தில் சட்ட விரோத மணல் அகழ்வு தொடர்ந்தால், இரண்டு வருடங்களுக்குப் பின்னர் ஒருவருக்கும் ஒரு வேலையும் இருக்காது. குடிப்பதற்குத் தண்ணீரும் இருக்காது. பயணிப்பதற்கு வீதியும் இருக்காது. விவசாயம் செய்ய நிலமும் இருக்காது. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் எச்சரித்தார். செங்கலடி பிரதேச செயலக அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

மணல் அகழ்வுக்காக வழங்கப்பட்டுள்ள அனுமதிப் பத்திரங்கள் அனைத்தும் இரத்துச் செய்யப்பட வேண்டும். இவ்வாறு செய்வதனால் சிலருக்கு வேலை வாய்ப்பு இல்லா மல் போகும். ஆனாலும் மக்கள் இதனைப் புரிந்து கொள்வார்கள் என்று நம்புகின்றேன். நீங்கள் நிறுத்தாவிட்டால், நாங்கள் நடவடிக்கை எடுப்போம் என்றும் அவர் தெரிவித்தார். (க-இ)

# இன்றைய நாள்

**மேடம்:** சிறு சிறு தொல்லைகளை சமாளிக்க வேண்டி இருக்கும். புதியவர்களுடன் பழகும்போது கவனம் தேவை. மன உற்சாகம் உண்டு. கடன் விவகாரங்கள் கட்டுக்குள் இருக்கும். மனம் தெளியும்.

**இடபம்:** புதிய முயற்சிகள் சாதகமான பலன் தரும். பிள்ளைகளால் வீண் அலைச்சலை சந்திக்க வேண்டி இருக்கும். எதிர்காலத் திட்டங்களை இருமுறை சரிபாருங்கள்.

**மிதுனம்:** பணியிடத்தில் சற்று கவனமாக பேசுவது நல்லது. மனப்பக்குவம் அதிகரிப்பதால் வாக்குவாதங்கள் அகலும். அக்கம் பக்கத்தினருடன் இருந்த சிறு பிரச்சினை முடியும்.

**கடகம்:** குடும்பத்தில் கோபமாக பேசுவதை தவிர்ப்பது நல்லது. கௌரவம் குறையாமல் காப்பாற்றிக் கொள்வீர்கள். திறமையால் பணிச்சுமையை சமாளித்து வெல்வீர்கள்.

**சிம்மம்:** அக்கம்பக்கத்தில் கருத்து வேறுபாடு ஏற்படும்படி பேச வேண்டாம். அலுவலகத்தில் நல்ல விடயங்கள் நடக்கும். பிரிந்த சொந்தங்கள் சேருவர். குடும்பத்தினர் உங்களை புரிந்து கொள்வர்.

**கன்னி:** பேச்சில் உணர்ச்சி வசப்படாமல் இருப்பது நல்லது. இன்று புதுப்புது வாய்ப்புகள் வந்து மகிழ்ச்சிக்குள்ளாக்கும். பணியாளர்கள் கவனமாக இருந்து பாராட்டுப் பெறுவீர்கள்.

**துலாம்:** மற்றவர்கள் விஷயங்களில் தலையிடாமல் இருங்கள். அடுத்தவர் பிரச்சினைகளில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது. உங்களால் ஏற்பட்ட பிரச்னையால் சிறு சங்கடம் வரும்.

**விருச்சிகம் :** முனைந்து வேலையைப் பார்த்தாலே பிரச்சினை இருக்காது. மனதை அரித்து வந்த கவலைகளிலிருந்து விடுபடுவீர்கள். திறம்படத் திட்டம் தீட்டி முன்னேறுவீர்கள்..


**தனுசு:** குடும்பத்துடன் பொழுதைக் கழிப்பீர்கள். புதியவர் அறிமுகமாவார். பயணம் மேற்கொள்வீர்கள். தடைப்பட்ட சுபநிகழ்ச்சி நடக்கும். பணியில் இருந்த கஷ்டம் நீங்கி நிம்மதி அடைவீர்கள்..

**மகரம்:** ரகசியங்களை வெளியிட்டுச் சிக்கலில் மாட்ட வேண்டாம். இன்று உறவினர்களால் சுபச்செலவுகள் ஏற்படக்கூடும். பெரிய மனிதர்களின் விரோதத்துக்கு ஆளாகாமல் கவனமாக இருங்கள்.

**கும்பம்:** அலுவலகத்தில் சமீபத்தில் ஏற்பட்ட பிரச்சினை நீங்கும். தேவையில்லாத சிறு குழப்பம் ஏற்படலாம். சுபச்செலவு வரும். தைரியம் குறையலாம். செலவு அதிகரிக்கலாம்.

**மீனம்:** உழைப்பால் நற்பலன் உண்டாகும். மன உறுதி பிறக்கும். புதிய நண்பர்கள் அணுகினால் விசாரித்துச் சேர்த்துக் கொள்ளலாம். பாராட்டும், வெற்றியும் கிடைக்கும். லாபம் அதிகரிக்கும்.




இப்புத்தாண்டில், நேர்த்தியின் பிரதிபலிப்பு
உங்கள் இல்லத்தில் செழித்தோங்கட்டும்.

இப்புத்தாண்டில் 30% கழிவுடன் உங்கள் வீட்டின் களிப்பை இரட்டிப்பாக்குங்கள். Rocell டைல்ஸ், குளியலறை மற்றும் உதிரிப்பாகங்கள். நாடு முழுவதிலுமுள்ள Rocell காட்சியறைகள் மற்றும் விற்பனை நிலையங்களில் கிடைக்கும்.

DentsuGrant

Rocell
என்றும் இனிமை

www.rocell.com | அழையுங்கள் 076 6 22 33 44 | காட்சியறைகள் வாரத்தின் 7 நாட்களும் திறந்திருக்கும்.

TILES | BATHWARE | ACCESSORIES


## சம்புநாதேஸ்வரர் ஆலயத்தில் விசேட பூசை

யாழ்ப்பாணம், மார்ச் 21

நாட்டு மக்கள் அனைவரும் கொரோனாத் தாக்கத்திலிருந்தும் அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீள்வ தற்காக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இறை ஆசி வேண்டி நாளை திங்கட்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் சங்கானை சாத்தாவோலை ஸ்ரீ சம்புநாதேஸ்சுவரர் தேவஸ்தானத்தில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

வழிபாடுகளின் நிறைவில் தேவஸ்தான பிரதம குருக்கள் சிவஸ்ரீ சு.ரங்கநாதக் குருக்களின் அருளாசி உரையும் வேத பாராயணமும் இடம்பெறவுள்ளன. (ச)

## செயலமர்வு

மாந்தை, மார்ச் 21

மாந்தை கிழக்கு பிரதேச செயலக அலுவலர்களுக்கு தகவல் உரிமைச் சட்டம் தொடர்பான முழுநாள் செயலமர்வு உதவிப் பிரதேச செயலர் தலைமையில் கடந்த 18ஆம் திகதி பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.

மாந்தை கிழக்கு பிரதேச செயலகமும் ரஹமா நிறுவனமும் இணைந்து இந்தச் செயலமர்வை நடத்தின. (ச-9)



## விழிப்புணர்வு கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 21

சாப் மனித நேயக்கண்ணி வெடி அகற்றும் நிறுவனத்தால் "வெடிபொருள் ஆபத்தில் இருந்து எம்மை நாம் பாதுகாப்போம்" என்னும் கருப்பொருளிலான விழிப்புணர்வு கருத்தரங்கு வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்தில் நேற்று நடைபெற்றது.

இதில் அந்த நிறுவனத்தின் தொழில்நுட்ப ஆலோசகர் சோபன், ஆபத்தை விளைவிக்கக் கூடிய வெடிபொருள்களிலிருந்து பாதுகாப்புப் பெறுவது எவ்வாறு?, வெடிப்பொருள் ஆபத்தான பகுதிகளை எவ்வாறு இனங்காண்பது? என்பது தொடர்பில் பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு விளக்கம ளித்தார். (வ-6)

## நியமனம் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 21

வடக்கு மாகாண பொதுச் சேவையின் தொழில் நுட்ப உதவியாளர், கால் நடை அபிவிருத்தி போதனாசிரியர் மற்றும் பயிற்சித் தர பதவிகளுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வு நாளை திங்கட்கிழமை 22ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி செல்வா கலையரங்கில் வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் அ.சிவபால சுந்தரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் கௌரவ பீ.எஸ்.எம். சார்ள்ஸும், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன் மற்றும் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் எஸ்.திருவாகரன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-288)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## எத்தனை காலம் தான் ஏமாற்றுவார்?

ஒரு நாட்டின் சட்டம் , ஒழுங்கு தொடர்பான நடவடிக்கைகள் யாவும் அந்த நாட்டு மக்களின் இயல்பு வாழ்வை எந்த வகையிலும் பாதிக்காத வகையில் இருக்க வேண்டும். அத்தோடு இன,மத, மொழி பேதமின்றி சகல தரப்பினரதும் ஜனநாயக ரீதியிலான சுயாதீன செயற்பாடுகளுக்கு பாதுகாப்பு உத்தரவாதமும் அளிக்கப்பட வேண்டும். சகல மக்களினதும் தனித்துவ அடையாளங்களான கலாசாரம் மற்றும் பண்பாட்டு விழுமியங்களுக்கு எந்த வகையிலும் பங்கம் ஏற்படாமல் அவற்றுக்குப் பாதுகாப்பு அங்கீகாரம் வழங்கும் தன்மையை உறுதி செய்வதாகவும் இருக்க வேண்டும். இதுவே பொதுவான ஜனநாயக விதி முறையாகும்.

அதுவும் ஜனநாயக சோஷலிசக் குடியரசாக, சர்வதேச சமூகத்தில் தன்னை அடையாளப்படுத்தி நிற்கும் இலங்கை போன்ற பல்மத,பல்லின,பன்மொழி கலாசாரம் ஒருமித்து வாழும் நாட்டின் சட்டம் – ஒழுங்கைப் பேணும் சகல செயற்பாடுகளும் சமதர்ம நோக்குடனேயே முன்னெடுக்கப்பட வேண்டும்.

ஆனால் இலங்கையில் சமதர்ம ஜனநாயகத் தன்மை எந்த அளவுக்கு உள்ளது என்பதே, தற்போது ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் முக்கிய பேசு பொருளாக,விவாதப் பொருளாக மாறியுள்ளன.

எத்தகைய குற்றத்தை இழைத்தவரும் நீதிமன்றில் விசாரணைக்கு முகம் கொடுக்கும் நிலையில், தான் குற்றவாளி என ஒப்புதல் வாக்குமூலம் அளிக்க மாட்டார்கள். அதுவே இயல்பு. தான் நிரபராதியென நிரூபிப்பதற்கான சாட்சியத் துணைகளை ஏற்பாடு செய்து கொண்டு தாம் குற்றமற்றவர் எனச் சத்தியம் செய்யவும் தயங்க மாட்டார்கள்.

ஜெனிவாவில், இலங்கைக்கு எதிரான பிரேரணை கொண்டு வரப்படும் போதும், தாம் குற்றமேதும் இழைக்காத உத்தமர்கள் என்று நிரூபிக்கவே இலங்கை அரசாங்கமும் படாதபாடுபடுகின்றது. அதனாலேயே உலக நாடுகளெங்கும் ஓடித்திரிந்து ஆதரவு யாசகம் கேட்டு வருகின்றனர்.


பௌத்த சிங்கள அடிப்படைவாத மேலாதிக்கச் சிந்தனையுடன் மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளும் ஜனநாயகத் தன்மையை முற்றிலும் புறக்கணித்த சர்வாதிகார செயற்பாடுகளாகவே சர்வதேசத்தால் பார்க்கப்படும் நிலை உருவாகியுள்ளது. இதற்கு ஆட்சியாளரே காரணிகளாவர்.

சர்வதேச ஜூரிகள் ஆணைக்குழு சிறுபான்மை இனத்தவரை இலக்கு வைத்து உருவாக்கும் சட்டங்கள் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல்களை உடன் ரத்து செய்ய வேண்டும் என இலங்கை அரசை வலியுறுத்தியுள்ளமை கூட, இலங்கை அரசாங்கத்தின் எதேச்சையான செயற்பாடுகளின் விளைவே.

இன, மத ரீதியான வன்முறைகளைத் தூண்டிய குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்படுவோரை விசாரணைகள் ஏதுமின்றி இரண்டு ஆண்டுகள் தன்னிச்சையாகத் தடுத்து வைப்பதற்கு அனுமதி வழங்கும் புதிய வழிமுறைகள் தொடர்பாக , ஜனாதிபதி தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி வர்த்தமானியூடாக வெளியிட்டிருப்பது குறித்தே சர்வதேச ஜூரிகள் அமைப்பு தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

நாடாளுமன்றில் விவாதிக்கப்படாமல் வர்த்தமானி மூலமாக வெளியிடப்பட்டிருக்கும் இவ்வழிகாட்டல் நெறிமுறைகள் சிறுபான்மை இனத்தவரை இலக்கு வைத்து மேற்கொள்ளப்படும் ஒரு நடவடிக்கையே என அவ் அமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது. பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் எவரையும் கைதுசெய்து தடுத்து வைத்திருக்கும் சட்டத்துக்கு ஒப்பானதாகவே இந்த வர்த்தமானியும் வெளியிடப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் மாற்றம் கொண்டு வரப் போவதாக அரசு அறிவித்து இரு வாரங்கள் கூட ஆகாத நிலையில், இந்த புதிய வர்த்தமானி அறிவித்தல் வெளிவந்துள்ளமையானது, புதிய மொந்தையில் பழைய கள் என்ற அரசின் உத்தியையே உணர்த்துவதாக உள்ளது. வெளியுலகுக்கு பயங்கரவாத தடைச்சட்டத்தில் தளர்வுகளை ஏற்படுத்திவிட்டதான தோற்றத்தை உருவாக்கி விட்டு, மறுபுறமாக இத்தகைய வர்த்தமானிகள் மூலம் அதே பழைய சர்வாதிகார நடவடிக்கைகளைத் தொடரவே கோத்தாபய அரசாங்கம் திட்டமிடுகின்றது. இவ்வளவு காலமும் நாட்டு மக்களை ஏமாற்றி வந்த அரசு, இனி உலகத்தையும் ஏமாற்ற நினைக்கிறது. எத்தனை காலம் தான் ஏமாற்றுவார் இந்த நாட்டையும், உலகையும்?




## சுகாதாரத் தொண்டர்களுக்கு வரும் 24 ஆம் திகதி தீர்வு

### அமைச்சர் மஹிந்தானந்த தெரிவித்தாராம்

**யாழ்ப்பாணம், மார்ச் 21**

**வடக்கில் போராட்டத்தை முன்னெடுத்துவரும் சுகாதாரத் தொண்டர்களின் பிரச்சினைக்கு எதிர்வரும் 24ஆம் திகதி தீர்வைப் பெற்றுத் தருவோம் என அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே உறுதியளித்ததை அடுத்து, உணவு தவிர்ப்பு போராட்டம் முடிவுறுத்தப்பட்டு, தற்போது கவனவீர்ப்பு போராட்டமாகத் தொடர்கிறது என்று பாதிக்கப்பட்ட தரப்பினர் தெரிவித்துள்ளனர்.**

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;

"சுகாதாரத் தொண்டர்களாகிய எமக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டும் எமது பணியைத் தொடர விடாத நிலையில், இதற்கு நீதி கோரி நாம் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்துக்கு முன்னால் கவனவீர்ப்புப் பேராட்டத்தை முன்னெடுத்தோம். இந்தப் போராட்டம், கடந்த மார்ச் முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்ட போதும் வடக்கு ஆளுநர் எம்மைச் சந்திக்க மறுத்துள்ளார். உணவுத் தவிர்ப்புப் பேராட்டத்திலும் கூட, எமக்கான நீதி கிடைக்காத நிலையில் வீதி மறியல் போராட்டங்களையும் முன்னெடுத்தோம். அப்போது இடம்பெற்ற சில வேண்டத்தகாத நிகழ்வுகளுக்கு நாம் மனம் வருந்துகின்றோம்.

எமது நீதி கோரிய போராட்டத்தின்போது, அரசியல் பிரதிநிதிகள், சமூகப் பிரதிநிதிகள் மற்றும் ஊடகவியலாளர்கள் போன்றோர் எம்மைச் சந்தித்திருந்தனர். இதன் ஒரு கட்டமாக, யாழ்ப்பாணத்துக்கு வந்த அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஆகியோர் கடந்த 18ஆம் திகதி போராட்டத்தில் ஈடுபட்ட எம்மைச் சந்தித்தனர். இதன்போது, சுகாதாரத் தொண்டர்களின் குறித்த பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஊடாக, எதிர்வரும் 24ஆம் திகதி நாடாளுமன்றத்துக்கு அழைத்துச் சென்று, ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரிடம் எம்மைச் சந்திக்க வைத்து, எமக்கான பணியைத் தொடர அனுமதி பெற்றுத்தரப்படும் என்று உறுதிமொழி வழங்கியுள்ளனர். இதையடுத்து, எமது உணவுத் தவிர்ப்புப் போராட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டு கவனவீர்ப்புப் போராட்டமாக தொடர்ந்து கொண்டிருக்கின்றது - என்றனர். (ப)



## கிளிநொச்சியில் மினி சூறாவளி

### ஐந்து வீடுகள் சேதம்

கிளிநொச்சி, மார்ச் 21

கிளிநொச்சியில் நேற்று பெய்த கனமழையுடன் வீசிய மினி சூறாவளியால் ஐந்து வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. கரைச்சி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட ஆனந்தபுரம் கிழக்கு பகுதியில் நேற்று பகல் 1 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில் இரண்டு தற்காலிக வீடுகள் முழுமையாகவும், மூன்று நிரந்தர வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

கரைச்சி பிரதேச செயலகத்தின் கவனத்துக்கு குறித்த விடயம் தொடர்பில் அறிவிக்கப்பட்ட நிலையில், பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி வழங்கும் நடவடிக்கையை பிரதேச செயலகம் முன்னெடுத்துள்ளது. (ப-6)

## உற்பத்தி கிராமத் திட்டம் முழங்காவிலில் ஆரம்பம்

முல்லைத்தீவு, மார்ச் 21

முழங்காவில் பகுதியில் 'சுபீட்சத்தின் நோக்கு' திட்டத்தின் கீழ் சமுர்த்தி உற்பத்திக் கிராமத் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குரிய 1.5 மில்லியன் ரூபாவுக்குரிய உத்தரவாதக் கடிதம் இதற்கென உருவாக்கப்பட்ட உற்பத்திக் குழுவினரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே, கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சிப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட விவேகானந்தநகர் கிராமத்திலும், கண்டாவளை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மயில்வாகனபுரத்திலும் இவ்வாறு 'சுபீட்சத்தின் நோக்கு' சமுர்த்தி உற்பத்திக் கிராமங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-இ)


இன்றே அனுப்பிடுங்கள்
0777 68 00 77
Nestle
MILO
சூரர்களுக்கு
ரூ.10,000,000/-
பெறுமதியான பரிசுகள்
வாரத்திற்கு 1000 வெற்றியாளர்கள்
RELOAD
Step 1
MILO உடன் பிள்ளையின் PHOTO ஒன்றினை எடுத்திடுங்கள்
Step2
PHOTO வில் பெயர், முகவரி, தொ.பேசி இலக்கத்தினை குறிப்பிட்டு
0777680077 அல்லது
milosrilanka அல்லது
த.பெ. 189, கொழும்பிற்கு அனுப்பிடுங்கள்.
போட்டி நிபந்தனைகளுக்கு உட்பட்டது. போட்டி காலம் பெப்ரவரி 01 முதல் ஏப்ரல் 15 வரை.

### கொரோனாக் கால

# வழிகாட்டல்களை புறக்கணித்தால் நான்காவது அலைக்கும் வாய்ப்பு

### அரசு எச்சரிக்கை

**கொழும்பு,மார்ச் 21**

**ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் கொரோனாத் தொற்று வீழ்ச்சியடைந்துள்ளது. எனவே மக்கள் தொடர்ந்தும் சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்ற வேண்டும். அவற்றை மீறினால் கொரோனாவின் நான்காவது அலை நாட்டைத் தாக்குவதை எவராலும் தடுக்க முடியாது.**



இவ்வாறு கொரோனா கட்டுப்பாட்டு இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, அமெரிக்கா, இத்தாலி, பிரான்ஸ் போன்ற நாடுகள் பெரும் அபாய நிலைமையை எதிர்கொண்டுள்ள நிலையில், இலங்கையில் கொரோனாத் தொற்றின் நான்காவது அலை தொடர்பான எவ்வித அச்சுறுத்தலும் காணப்படவில்லை. எனினும் மக்கள் தொடர்ந்தும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் அல்லது சுகாதார வழிகாட்டுதல்கள் புறக்கணிக்கப்பட்டால், எதிர்வரும் புத்தாண்டு மற்றும் ஈஸ்டர் ஞாயிறு அன்று இலங்கையும் நான்காவது அலையை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்படும்.

கடந்த கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டின் போது எந்தவிதமான கட்டுப்பாடுகளும் விதிக்கப்படாததால், ஜனவரி மாதப் பிற்பகுதியிலும், பெப்ரவரி மாதத் தொடக்கத்திலும் தொற்று உறுதியானோரின் எண்ணிக்கையில் கணிசமான அதிகரிப்பு காணப்பட்டது.

எனவே அனைத்து இலங்கையர்களும் சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்ட சுகாதார வழிகாட்டுதல்களை உரிய முறையில் பின்பற்ற வேண்டும். என்றார். (க-இ)

## புத்தாண்டு காலத்தில் எழுமாறான பி.சி.ஆர்.

### சுகாதார பரிசோதகர்கள் சங்கம் வலியுறுத்து

கொழும்பு,மார்ச் 21

எதிர்வரும் புத்தாண்டுக் காலப்பகுதியில், நாடு முழுவதும் உள்ள வர்த்தக நகரங்களிலும், சன நெரிசல் மிக்க பகுதிகளிலும் எழுமாறாக பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் சங்கத்தின் செயலாளர் மஹேந்திர பாலசூரிய தெரிவித்ததாவது,

சித்திரைப் புத்தாண்டுக் காலப்பகுதியில், கொவிட் தொற்றுப் பரவல் அபாயம் அதிகரிக்கக்கூடும். இதன் காரணமாக, நோய் அறிகுறிகளை வெளிப்படுத்தாத நோயாளர்கள், நெருக்கமான இடங்களுக்குச் செல்லும்போது, ஏனையவர்களுக்கும் தொற்றுப் பரவக்கூடிய அபாயம் உள்ளது. எவ்வாறிருப்பினும், நோய் அறிகுறிகளுடன் கூடிய நோயாளர்களின் எண்ணிக்கையில் ஓரளவு வீழ்ச்சித் தன்மை உள்ளது என்று அதிகாரிகளின் மூலம் கிடைக்கும் தகவல்களிலிருந்து கணிப்பிட முடிகின்றது - என்றார். (க-இ)

# ஆயுள்வேத சிகரெட்டுக்கு அனுமதி பெறவில்லை

### ஆயுள்வேத வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு,மார்ச் 21

அமைச்சர் விமல் வீரவன்சவால் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட கறுவாவிலான ஆயுள்வேத சிகரெட்டுக்கு, ஆயுள்வேத சூத்திர குழுவிடமிருந்து எந்தவொரு அனுமதியும் பெறப்படவில்லை என்று அகில இலங்கை அரச ஆயுள்வேத வைத்திய அதிகாரிகளின் சங்கம் தெரிவித்துள்ளது.

சங்கத்தின் ஏற்பாட்டுக்குழுச் செயலாளரான வைத்தியர் எம்.எஸ்.ஜே. பண்டார இது தொடர்பில் தெரிவித்ததாவது,

அமைச்சர் விமல் வீரவன்ச ஒருவகையான சிகரெட் ஒன்றை ஆயுள்வேதம் என்ற பெயரில் அறிமுகப்படுத்தியுள்ளார். ஆயுள்வேதத்தின் பெயரைப் பயன்படுத்தி இந்த மாதிரியான செயல்களில் ஈடுபடாதீர்கள். ஆயுள்வேதப் புகைப்பழக்கம் ஆயுள்வேத மருத்துவத்தில் மிக முக்கியமான சிகிச்சை முறைகளில் ஒன்றாகும். இந்த சிகிச்சை முறைகளைக் கையாளும் சந்தர்ப்பங்கள் ஆயுள்வேதத்தில் உள்ளன. இந்த சிசிச்சை முறைகளைப் பயன்படுத்தும் நோயாளர்களும் உள்ளனர். அவ்வாறிருக்க, இதனை சாதாரண இனிப்புப் பாணியைப் போன்று விநியோகிக்க முடியாது - என்றார்.

சங்கத்தின் நிறைவேற்றுக்குழு உறுப்பினரான வைத்தியர் ஜீ. ரணசிங்க தெரிவித்ததாவது, ஆயுள்வேத சூத்திரக் குழுவின் எந்தவொரு அனுமதியையும் பெறாது மருந்துகளை சந்தைப்படுத்துவது ஆயுள்வேத சட்டத்துக்கு முரணானது. ஆகவே, இது சட்டவிரோதச் செயலாகும். அமைச்சரின் செயலாளர்கள் ஆயுள்வேத சூத்திரக் குழுவுக்கு வந்து இவற்றை அங்கீகரிக்கக் கோரி எமக்கு பெரும் தாக்கத்தை ஏற்படுத்துவார்களோ என்று அவதானத்துடன் உள்ளோம் - என்றார். (க-இ)

## சீனாவின் சினோஃபாம் தடுப்பூசிக்கு அனுமதி

கொழும்பு,மார்ச் 21

சீனாவின் சினோஃபாம் தடுப்பூசியை, இலங்கையில் அவசர பாவனைக்காக பயன்படுத்துவதற்கு, தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை அனு மதி வழங்கியுள்ளது.

அதற்கமைவாக 6 லட்சம் சினோஃபாம் தடுப்பூசிகள், எதிர்காலத்தில் இலங்கைக்குக் கிடைக்கும் என்று ஆரம்ப சுகாதார சேவை கள், தொற்றுநோய் மற்றும் கொவிட் கட்டுப்பாட்டு இராஜாங்க அமைச்சர், விசேட மருத்துவர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார். (சு-இ)

## கொழும்பு மாநகருக்குள் 20 லட்சம் மரக்கன்றுகள்

### அடுத்த மாதம் வேலைத்திட்டம்

கொழும்பு,மார்ச் 21

"கொழும்புக்கு மரம்" எனும் தொனிப்பொருளின் கீழ், கொழும்பு மாநகரப் பகுதிக்குள், ஒரு லட்சம் மரக்கன்றுகளை நடும் வேலைத்திட்டம் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

கொழும்பு மாநகரில் நிலவும் ஒட்சிசன் பிரச்சினைக்குத் தீர்வாக இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

சுமார் ஒரு வருடத்துக்குள் ஒரு லட்சம் மரக்கன்றுகளை நடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என்று வனஜீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேவேளை விகாரமாதேவி பூங்காவில் கிராமிய பழவகை பூங்கா ஒன்றும் அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டத்தில் வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு, சுற்றாடல் கல்வி அமைச்சு உள்ளிட்ட பல நிறுவனங்களை இவ் வேலைத் திட்டத்தில் இணைப்பதற்கு, கொழும்பு மாநகர சபை நடவடிக்கை எடுத்துள்ளது. (க-இ)

## ரவி குழுவினருக்கு கொரோனா இல்லை

கொழும்பு,மார்ச் 21

மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பில், விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ரவி கருணாநாயக்க உட்பட 8 பேருக்கு கொரோனாத் தொற்று இல்லை என்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகளில் இவர்களில் எவருக்கும் தொற்று இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் அவர்கள் அனைவரும் கொழும்பு ரிமான்ட் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர் என்று சிறைச்சாலை பேச்சாளர் சந்தன எக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

2016 ஆம் ஆண்டு பிணைமுறை ஏலத்தின் போது, அரசுக்கு நட்டத்தை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டனர் எனத் தெரிவித்து, முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணநாயக்க உள்ளிட்ட 8 பேருக்கு எதிராக, கொழும்பு விசேட மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த வழக்கு விசாரணையில், எதிர்வரும் 23 ஆம் திகதி வரை எட்டுப்பேரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-இ)

## மாணவனைத் தேடி 4 குழுக்கள் களத்தில்

கொழும்பு,மார்ச் 21

காணாமல் போன பாடசாலை மாணவனைத் தேடும் பணியில் 4 பொலிஸ் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

பம்பலபிட்டி புனித அந்தோனியார் வித்தியாலயத்தில் கல்வி கற்கும், இரத்மலானை தஹம் மாவத்தையில் வசிக்கும் எல்டன் டெவொன் கெனி எனும் 16 வயதுடைய மாணவனே காணாமல்போயுள்ளார். இவர், கடந்த 18 ஆம் திகதி காலை வீட்டை விட்டு வெளியேறியுள்ளார். இவர் இன்னும் வீடு திரும்பவில்லை என தாயார் தெரிவித்துள்ளார்.

அன்றைய தினம் காலை 6.30 மணியளவில், மாணவன் சாதாரண ஆடையில் மொரட்டுவ நோக்கிப் பயணிக்கும் காட்சிகள் சி.சி.ரி.வி. கமராவில் பதிவாகியுள்ளன.

மாணவன் தொடர்பாக ஏதேனும் தகவல் கிடைத்தால் 077 377 9850 என்ற இலக்கத்துக்கு அழைக்குமாறு பொலிஸார் அறிவித்துள்ளனர். (க-இ)

## சுகாதார விதிமுறைகளை கைவிடும் பொதுமக்கள்

சாவகச்சேரி, மார்ச் 21

சுகாதார விதிமுறைகளில் சிறிது தளர்வு ஏற்பட்டதால் மக்கள் சுகாதார விதிமுறைகளை மீறிச் செயற்படுகின்றனர். வடக்கு மாகாணத்தில் கொரோனா பரவல் அதிகரித்துவரும் நிலையில், மக்கள் தம்மைத் தாமே பாதுகாக்க முன்வராவிடின் குடாநாட்டில் அடுத்த அலை உருவாகுவதைத் தடுக்க முடியாது.

இவ்வாறு சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி எச்சரித்துள்ளார்.

சுகாதார விதிமுறைகளை மீறினால் அனைத்து பொதுப் போக்குவரத்துகளையும் முற்றாக நிறுத்த வேண்டிய நிலை ஏற்படலாம்.

இந்தச் செயலானது எமக்கான நோயை நாமே வரவழைப்பதாகும். - என்றார். (த-9)




# யாகாவாராயினும் வாய் காக்க!

## காத்திட்டால் வாழ்வு உயிர்க்கும் சொல் உரைக்கப்படும்.

நாடு போற்றும் நம் திருவாய்களின் சுயத்தினைப் பேணும் க்லோகார்ட், சர்வதேச பற்சுகாதார தினத்தை முன்னிட்டு வழங்கும் செய்தி.




இலங்கையரின் முதன்மைப் பற்பாதுகாவலன்

# பௌத்த போதனைகளை திரிபுபடுத்துவதற்கு முயற்சி

## தடுக்குமாறு மகாசங்கத்தினர் வலியுறுத்து

**கொழும்பு, மார்ச் 21**

**இலங்கை தேரவாத பௌத்தத்தின் முக்கிய இடமாகும். பௌத்த சமயத்தைச் சேர்ந்த சில மோசடிக்காரார்கள் மற்றும் மோசடியான போலிப் பிக்குகள் பௌத்த அடிப்படை போதனைகளை திரிபுபடுத்துவதற்கு முயற்சித்து வருகின்றனர். தூய்மையான தேரவாத பௌத்த சமயத்தை அழிக்கும் இந்தத் திட்டமிட்ட சூழ்ச்சியை ஒழிப்பதற்கு அரசு உடனடியாகத் தலையிட வேண்டும் என்று மகாசங்கத்தினர் வலியுறுத்தினர்.**

பௌத்த ஆலோசனைச் சபை நேற்றுமுன்தினம் 9 ஆவது தடவையாக ஜனாதிபதி அலுவலகத்தில் கூடியது. அதில் மகாசங்கத்தினர் இதனை வலியுறுத்தினர்.

2 ஆயிரத்து 600 ஆவது சம்புத்த ஜயந்திக்காக முன்மொழியப்பட்ட பௌத்த நூல்களை ஒழுங்குபடுத்தும் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவது குறித்தும் அதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டது.

வரைவை மகாநாயக்க தேரர்களிடம் சமர்ப்பித்து, ஒரு மாத காலப் பகுதியில் திருத்தங்கள் மற்றும் முன்மொழிவுகளைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

தொல்பொருள்களைப் பாதுகாத்து தேசிய மரபுரிமைகளை உறுதிப்படுத்தும் நோக்கில் தொல்பொருள் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அதன் முன்னேற்றம் குறித்தும் மீளாய்வு செய்யப்பட்டது.

எமது நாட்டின் பல தொல்பொருள் சின்னங்கள் பௌத்த மரபுரிமைகளாகும். தொல்பொருள் ரீதியான ஒரு நாணயமாக அல்லது ஒரு பண்டைய பொருளாக மட்டும் அதனைப் பார்ப்பது பொருத்தமானதல்ல என்று மகாசங்கத்தினர் சுட்டிக்காட்டினர்.

தேரர்கள் சுதந்திரமாக ஆரன்ய சேனாசனக்களில் வாழ்வதற்குத் தேவையான சூழலை ஏற்படுத்தித் தருமாறும் கேட்டுக்கொண்டனர்.

இதேவேளை புத்த பெருமான், திரிபீடகம் மற்றும் பௌத்த புண்ணிய தலங்கள் தொடர்பில் பிழையான வியாக்கியானங்களைச் செய்து தவறான கருத்துக்களை பரப்புவோர் குறித்து கண்டறிந்து, அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அரசுக்குப் பரிந்துரைப்பதற்கு குழுவொன்றும் நியமிக்கப்பட்டது. (க-இ)



பங்களாதேஷ்

# வெளிவிவகார அமைச்சருடன் மஹிந்த குழுவினர் சந்திப்பு

கொழும்பு, மார்ச் 21

பங்களாதேஷுக்குப் பயணித்துள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையிலான குழுவினர், பங்களாதேஷ் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஏ.கே.அப்துல் மோனகை, டாக்கா தலைநகரில் நேற்று முன்தினம் சந்தித்தனர்.

சந்திப்பில் பங்களாதேஷ் நாட்டின் வெளிவிவகார அமைச்சின் செயலாளர், மேலதிக செயலாளர் மற்றும் அரச அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்று பிரதமரின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (க-இ)

# விஜயகலா மீதான நடவடிக்கை; சட்டமா அதிபரிடம் ஆலோசனை

கொழும்பு, மார்ச் 21

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மீளுருவாக்கம் பெற வேண்டும் என்ற கருத்தை வெளியிட்டார் என்று குற்றஞ் சாட்டப்பட்டுள்ள, முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு, சட்டமா அதிபரின் ஆலோசனை கோரப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை கொழும்பு நீதிவான் நீதிமன்றில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்தது.

இது தொடர்பான வழக்கு கொழும்பு பிரதம நீதிவான் புத்திக ஸ்ரீ ராகல முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

சம்பவத்துடன் தொடர்புபட்ட விசாரணைகள் முடிவடைந்துள்ளன. சம்பந்தப்பட்ட ஆவணங்கள் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன. சட்டமா அதிபரின் ஆலோசனை இன்னமும் பெறப்படவில்லை என்று குற்றப் புலனாய்வு திணைக்களத்தினர் மன்றில் தெரிவித்தனர்.

வழக்கை எதிர்வரும் செப்ரெம்பர் 10ஆம் திகதி மீண்டும் விசாரிக்க உத்தரவிட்ட நீதிவான், அன்றையதினம் விசாரணையின் முன்னேற்றம் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு குற்றப்புலனாய்வு திணைக்களத்தினருக்கு அறிவுறுத்தினார். (க-இ)



# பாக்குநீரிணையை நீந்திக்கடந்த இந்தியப் பெண்

மன்னார், மார்ச் 21

தலைமன்னாரில் இருந்து தனுஷ் கோடி வரையிலான பாக்கு நீரிணையை நீந்திக்கடந்து தெலுங்கானாவைச் சேர்ந்த 48 வயதான ஆசிரியர் சாதனை படைத்துள்ளார்.

பல்வேறு நீச்சல்போட்டிகளில் சாதனை படைத்த தெலுங்கானா மாநிலம் ஹைதராபாத்தைச் சேர்ந்த சியாமளா கோலி என்பவரே இவ்வாறு சாதனை படைத்துள்ளார்.

தலைமன்னாரிலிருந்து நேற்றுமுன்தினம் அதிகாலை 4.10 மணிக்கு அவரது நீச்சல் ஆரம்பமாகி, மாலை 5.50 மணிக்கு (அதாவது சுமார் 13 மணி 40 நிமிடங்கள்) நீச்சலை நிறைவு செய்தார்.

பாக்கு நீரிணையை நீந்தி கடந்த 13ஆவது நீச்சல் வீரராகவும் உலகளவில் இரண்டாவது வீராங்கனையாகவும், இந்திய அளவில் முதல் வீராங்கனை என்ற சாதனையையும் அவர் பெற்றுள்ளார்.

கடந்த ஆண்டு பாக் ஜலசந்தி கடலை நீந்திக் கடப்பதற்கு இந்திய இலங்கை அரசுகளிடம் அனுமதி கிடைத்தது. ஆனால் கெரோனா பரவல் காரணத்தால் அந்த முயற்சி முடியாமல் போனது.

"பாக்கு நீரிணையை பெண்ணான நான் நீந்தி கடந்ததன் மூலம் பெண்களால் அனைத்து சாதனைகளையும், உயர்ந்த இலக்குகளையும் அடைவதற்கு முடியும் என்ற நம்பிக்கை அளிக்கக் கூடியதாக இருக்கிறது" என்று சியாமளா கோலி தெரிவித்தார். (த-56)

# நளின் எம்.பிக்கு எதிராக சி.ஐ.டி.யில் முறைப்பாடு

கொழும்பு, மார்ச் 21

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டாரவுக்கு எதிராக, குற்றப்புலனாய்வுப் பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தேசிய புலனாய்வுப் பிரிவின் தற்போதைய தலைவர் மலேசியாவுக்கான இலங்கைத் தூதரகத்தில் பணியாற்றிய வேளை, சஹ்ரான் ஹாசிமை சந்தித்துள்ளார். அவர் சஹ்ரான் ஹாசிம் மலேசியா, இந்தோனேசியா மற்றும் இந்தியா உள்ளிட்ட நாடுகளுக்குச் செல்வ தற்கு உதவியுள்ளார் என்று நளின் பண்டார செய்தி யாளர் மாநாட்டில் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் தேசிய புலனாய்வுப் பிரிவின் தலைவர் சுரேஸ் சாலே முறைப்பாடு செய்துள்ளார்.

இது தொடர்பில் விசாரணை செய்வதற்காக விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது. சாட்சியங்களிடமிருந்து வாக்குமூலங்கள் பெறப்படும் என்று பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார். (க-இ)

# சரத் – அநுரகுமார சொற்போர் உக்கிரம்

கொழும்பு, மார்ச் 21

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகரவுக்கும், ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவுக்குமிடையிலான சொற்போர் உக்கிரமடைந்துள்ளது.

ஏப்ரல் 21 தாக்குதலுடன் தொடர்புடையவர்களின் தந்தையான மொஹமட் இப்ராஹிம் என்ற கோடீஸ்வர வர்த்தகர் ஜே.வி.பி.யின் தேசியப்பட்டியலில் நாடாளுமன்ற உறுப்பினராக பெயர் குறிப்பிடப்பட்டுள்ளார். இது தொடர்பில் கட்சியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவிடம் எதிர்காலத்தில் வாக்குமூலம் பெறப்படும் என்று சரத் வீரசேகர அறிவித்திருந்தார்.

இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் கருத்து வெளியிட்ட அநுரகுமார திஸாநாயக்க, "மாகாண சபை முறைமை நீக்கப்படும் என்று சரத் வீரசேகர அறிவித்தார். ஆனால் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசு தயாராகின்றது. எனவே, சரத் வீரசேகரவின் அறிவிப்பு புஷ்வாணமாகி விட்டது.

ஆயுதங்களை ஒப்படைத்து சரணடையுமாறு பாதாள குழுவினருக்கு சரத் வீரசேகர அழைப்பு விடுத்தார். ஆனால் பாதாளக்குழு அவ்வாறு சரணடையவில்லை. அத்துடன், இளைஞர்களுக்கு 2 வருடங்கள் இராணுவப் பயிற்சி வழங்கப்படும் என்று கூறினார். இதனை அரசு நிராகரித்தது. இதனால் தான் புஷ்வாண அறிவிப்புகள் என்று குறிப்பிட்டேன்." என்று பட்டியலிட்டுள்ளார்.

இந்த நிலையில் நேற்றும் சரத் வீரசேகரவை விளாசும் வகையில் அநுர குமார திஸாநாயக்க கருத்து வெளியிட்டார்.

"என்னை விசாரணைக்கு அழைக்க வேண்டும் என்று அரசோ அல்லது சரத் வீரசேகரவோ ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுக்கவில்லை. இந்த நிலையில் திடீரென சரத் வீரசேகரவுக்கு என்னை ஞாபகம் வருவது ஏன்? நாட்டில் பிரச்சினையொன்று உருவாகும் போது, அதனை திசைதிருப்புவதற்காக சரத் வீரசேகர போன்றவர்கள் செய்திகளை உருவாக்குகின்றனர்.

அதுமட்டுமல்ல புஷ்வாணமா, தோட்டாக்களா என்று என்னை மிரட்டுகின்றார். எங்களின் காதோரம் கூட தோட்டாக்கள் பறந்துள்ளன. எனவே, எம்மை மிரட்டி அடிபணிய வைக்க முடியாது." என்றார் அநுர. (க-44)

# HCL



## A Level இற்கு பின்னர் அடுத்த Level இற்கு

**10 பில்லியன் டொலர் வருமானம் பெறும் உலகத்தரம்வாய்ந்த நிறுவனத்தில் முழுநேர IT Engineer ஆக உருவாக வேண்டுமா?**

**உயர் தரத்தின் பின்னர் HCL TechBee இல் இணையுங்கள்**

நேரமும் காலமும் நிச்சயமற்றது. ஆனால் உங்கள் எதிர்காலம் அப்படியல்ல. உயர்தரத்தின் பின்னர் HCL TechBee இன் ஆரம்ப தொழில் வழிகாட்டல் திட்டத்தின் கீழ், 159,000 இற்கும் மேற்பட்ட ஊழியர்களைக்கொண்ட, Forbes பத்திரிகையினால் பட்டியலிடப்பட்ட உலகின் சிறந்த 30 நிறுவனங்களுக்குள் இடம்பெறும் உலகத்தரம் வாய்ந்த HCL Technologies நிறுவனத்தில் பணிபுரிந்துக்கொண்டே கற்கும் வாய்ப்பை பெறுங்கள். உங்கள் முதலாவது முழுநேர IT தொழிலை இலங்கையில் Analyst / Software Developer / Test Engineer ஆக ஆரம்பியுங்கள். நீங்கள் நிதி ரீதியாக சுதந்திரமாக செயற்பட முடிவதுடன், ஒரு பட்டத்தையும் பெற்று, HCL இல் உங்கள் தொழில் தகமையையும் வளர்த்துக்கொள்ள முடியும்.

### நிகழ்ச்சித்திட்டம்

- 100% புலமைப்பரிசிலுடன் தொழில்சார் பயிற்சி திட்டம்
- பயிற்சி காலப்பகுதியில் மாதாந்த கொடுப்பனவு ஒன்றை பெறுங்கள்.
- பயிற்சி நிறைவில் முழுநேர IT தொழில் ஒன்றை ஆரம்பிக்கலாம். உங்களது ஆரம்ப சம்பளம் IT சார் தொழில்களின் ஆரம்பநிலை சம்பளத்திற்கு ஒத்ததாக இருக்கும்
- HCL இல் தொழில் செய்துக்கொண்டே BSc (Hons) / BIT **(University of Moratuwa)** பட்டப்படிப்பை Horizon Campus இல் தொடரலாம். உங்கள் பட்டப்படிப்பிற்குரிய கல்வி கட்டணங்களிற்கு HCL பங்களிப்பு வழங்கும்.

### தகமை

- க.பொ.த உயர்தர பரீட்சை சித்திப்பெற்ற ஆண்டு 2010 அல்லது அதற்கு பிந்தியதாக இருத்தல்.
- 3 முக்கிய பாடங்களில் மற்றும் ஆங்கிலத்தில் குறைந்தது S சித்தி
- இலங்கை குடியுரிமை

TECH BEE™
EARLY CAREER PROGRAM

150 பேருக்கு மாத்திரமே வாய்ப்பு. விரையுங்கள் இன்றே பதிவுசெய்து ஆலோசனைகளை பெறுங்கள்.

**இன்றே பதிவுசெய்யுங்கள்**

**மேலதிக விபரங்களுக்கு இணையத்தளத்திற்கு வாருங்கள் அல்லது மின்னஞ்சல் செய்யுங்கள்**

- website: www.hclsrilanka.com/techbee
- email: RiseSL@hcl.com
- Address: HCL Technologies, Level 2, Alnitak Building, Orion City – IT Park, Colombo - 09

SCAN HERE

USD 10.02 BILLION REVENUE COMPANY | OPERATING IN 50 COUNTRIES | 159,000+ IDEAPRENEURS

# முஸ்லிம் சமூகத்தை ஓரங்கட்டும் இலங்கை

## சர்வதேச மன்னிப்புச்சபை கண்டனம்

கொழும்பு,மார்ச் 21

**இலங்கை அரசால் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள சில தீர்மானங்கள் முஸ்லிம் சமூகத்தை இலக்கு வைத்திருப்பதுடன், அந்தச் சமூகத்தை ஓரங்கட்டும் வகையிலும் அமைந்துள்ளன. அமைச்சரவையில் முன்வைக்கப்பட்ட யோசனைகள், தீர்மானங்கள் மற்றும் அரசால் வெளியிடப்பட்ட வழிகாட்டல்கள் என்பவை முஸ்லிம் சமூகத்தின் மீது பாகுபாடு காண்பிக்கும் வகையில் அமைந்துள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.**

இவ்வாறு சர்வதேச மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

'இலக்கு வைக்கப்படும் இலங்கையின் முஸ்லிம் சமூகமும், அதிகரித்துவரும் ஓரங்கட்டப்படலும்' என்ற தலைப்பில் சர்வதேச மன்னிப்புச் சபையால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் முன்கூட்டிய தடுப்பு நடவடிக்கைகள் எவையும் முன்னெடுக்கப்படாவிட்டால், முஸ்லிம் சமூகத்தை இலக்கு வைக்கும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் அதிகரிக்கலாம். அதன் விளைவாக நிலைபேறான சமாதானத்தை உறுதி செய்வதற்கான முயற்சிகள் பாதிக்கப்படக்கூடும்.

கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்போரின் சடலங்களைக் கட்டாயத் தகனத்துக்கு உட்படுத்தும் வகையில் அரசால் மேற்கொள்ளப்பட்டிருந்த தீர்மானம் மற்றும் முஸ்லிம் சமூகத்தை இலக்கு வைத்து இடம்பெற்ற வன்முறைகள் போன்றவற்றை இதற்கு உதாரணமாகக் குறிப்பிட முடியும். குறிப்பாக புர்கா மற்றும் நிகாபை தடை செய்வதற்கான அமைச்சரவை யோசனை, மத்ரஸா பாடசாலைகளைத் தடை செய்வதற்கான அமைச்சரவை யோசனை, நாட்டில் வெளிவரும் அனைத்து இஸ்லாமிய நூல்களையும் கண்காணிப்புக்கு உட்படுத்தல், இன மற்றும் மத ரீதியிலான அடிப்படைவாதச் செயல்கள், வன்முறைகளில் ஈடுபடுவோரைப் புனர்வாழ்வுக்கு உட்படுத்துவதற்கான வழிகாட்டல்கள் போன்ற விடயங்கள் தனியொரு சமூகத்தை இலக்கு வைப்பதாக உணர்கின்றோம். -என்றுள்ளது. (க-இ)



## ஊடகவியலாளர்களுக்கு காணி உரிமங்கள் வழங்கி வைப்பு

மட்டக்களப்பு, மார்ச் 21

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் ஊடகவியலாளர்கள் 30 பேருக்கு முதற்கட்டமாக காணி உரிமம் வழங்கும் நிகழ்வு மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. மட்டக்களப்பு மாவட்ட காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிப்பாளர் நேசகுமார் விமலராஜ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் கலந்துகொண்டு ஊடகவியலாளர்களுக்கு காணி உரிமங்களை வழங்கினார்.

நிகழ்வில் சிறப்பு அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட மேலதிக செயலர் (காணி) திருமதி.நவரூபரஞ்சினி முகுந்தன் கலந்துகொண்டார். (த-150)

## ரயில் கடவைகளில் தேவை தன்னியக்க பொறிமுறையே!

### அமைத்துத் தருமாறு கோருகின்றார் சமுதாய மருத்துவ நிபுணர்

யாழ்ப்பாணம், மார்ச் 21

ரயில் கடவை விபத்துகளுக்கு கடவைக் காவலாளிகள் மீது குற்றம் சுமத்துவதை விடுத்து, தன்னியக்க பொறிமுறைகளைக் கொண்ட பாதுகாப்பு கடவைகளை நிர்மாணிப்பதற்கு ரயில்வே திணைக்களம் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இவ்வாறு வலியுறுத்தியுள்ளார், சமுதாய மருத்துவ நிபுணர் முரளி வல்லிபுரநாதன்.

தன்னியக்க பாதுகாப்பற்ற கடவை அமைக்கப்படும் வரைக்கும் ஏற்படும் உயிரிழப்புகளுக்கும் ஏனைய சேதங்களுக்கும் ஏனைய நாடுகளைப் போல் ரயில்வே திணைக்களம் பொறுப்புக் கூறுவதுடன் உரிய இழப்பீட்டுக் கொடுப்பனவுகளை வழங்கவும் ரயில்வே திணைக்களம் முன்வரவேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

தவறினால் வெகுஜன அமைப்புகளும் மக்கள் பிரதிநிதிகளும் நியாயத்தையும் பொறுப்புக் கூறலையும் நிலைநாட்டுவதற்கு உரிய அழுத்தத்தைப் பிரயோகிக்க வேண்டும்.

தன்னியக்க கடவைகள் நிர்மாணிக்கப்படும்வரை ரயில் பாதையை ஊடறுக்கும் பாதையின் இரு புறமும் 57 மீற்றர் தூரத்தில் வேகத்தடுப்பான் திட்டுக்கள் நிர்மாணிக்கப்படுவதுடன் ரயில் பாதை தொடர்பான எச்சரிக்கைப் பலகைகள் அமைக்கப்படவும் வேண்டும். விபத்து ஏற்பட்டால் உடனடியாகத் தொடர்பு கொள்ளவேண்டிய அவசர தொலைபேசி இலக்கங்கள் அந்தப் பலகைகளில் வெளிப்படுத்தப்பட்டு இருந்தால் அது வாகனச் சாரதிகளின் அவதானத்தை தூண்டுவதுடன் விபத்துக்களை குறைக்கவும், விபத்து ஏற்பட்ட நிலையில் அதனால் உருவாகும் பாதிப்புகளைக் குறைக்கவும் முடிய வழி வகுக்கும்.

அதேவேளை, பாதுகாப்பற்ற கடவைகளை அண்மிக்கும்போது ரயில் எச்சரிக்கை ஒலி எழுப்புமாறு ரயில் சாரதிகளுக்கு அறிவுறுத்த வேண்டும்.

கடவை விபத்துகளைத் தவிர்க்க, ரயில் பாதை வழியே நடந்து செல்வதை பொதுமக்கள் இயன்றளவு ...ரை தவிர்த்துக் கொள்ள வேண்டும். குறிப்பாக ...ல் பாதை வழியே செல்லும்போது அலைபேசி ...வனையை முற்றாகத் தவிர்த்துக் கொள்ளவேண் ... என்று அவர் தனது செய்திக் குறிப்பில் குறிப்...டுள்ளார். (த-இ)

## வாரம் ஒரு சைக்கிள் வரணியில் திருட்டு

கொடிகாமம், மார்ச் 21

தென்மராட்சி வரணிப் பகுதியில் வாரத்துக்கு ஒரு சைக்கிள் திருடப்படுகிறது என்று சுட்டிக்காட்டப்படுகிறது. நேற்று முன்தினம் காலையும் அந்தப் பகுதியில் ஒரு சைக்கிள் திருடப்பட்டுள்ளது.

மாணவன் ஒருவன் யாழ்ப்பாணம் செல்வதற்காக வீட்டிலிருந்து சைக்கிளில் வந்து குறித்த சைக்கிளை வழமை போல் வரணி பாடசாலைக்கு அருகிலுள்ள கடை வளாகத்தில் நிறுத்திவிட்டு பேருந்தில் ஏறி யாழ். சென்றுவிட்டு, மீண்டும் வந்து பார்த்த போது சைக்கிள் திருட்டுப் போயிருந்தது. இதையடுத்து மாணவன் சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்துள்ளார்.

இதேபோன்றே கடந்த வாரங்களிலும் வரணி பாடசாலைக்கு முன்பாக உள்ள கடைத்தொகுதி வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்ட சைக்கிள் ஒன்று திருட்டுப் போயிருந்தது.

அத்துடன் அம்மாகடை பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிள் ஒன்றும் அடுத்தடுத்து திருடப்பட்டிருந்தது.

இந்தத் திருட்டுக்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு, மக்கள் மற்றும் இளைஞர்கள் அவதானம் செலுத்த வேண்டும் என சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ப-159)

## ரெலோவின் மாவட்ட அலுவலகம் திறப்பு

தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ) கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட அலுவலகம் நேற்று புதுக்குடியிருப்பில் திறக்கப்பட்டுள்ளது.

கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதனால் கட்டடத்தின் பெயர் பலகை திரைநீக்கம் செய்யப்பட்டு, கட்டடம் திறக்கப்பட்டது.

இதன்போது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், வினோநோகராதலிங்கம், கோவிந்தன் கருணாகரம் மற்றும் முன்னாள் மாகாணசபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், கட்சியின் ஆதரவாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ப-19)



## ஆள்களற்ற காணிகள், வீடுகளை இல்லாதோருக்கு வழங்க முடிவு

### கரைச்சி பிரதேச செயலாளர் தெரிவிப்பு

வன்னேரிக்குளம், மார்ச் 21

கிளிநொச்சி அக்கராயன் கிராம அலுவலர் பிரிவில் குடியேறாமலும், பயிர்ச் செய்கைகளுக்கு உட்படுத்தப்படாமலும் உள்ள காணிகளை காணிகளற்ற குடும்பங்களுக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று கரைச்சி பிரதேச செயலாளர் பா.ஜெயகரன் தெரிவித்தார்.

அக்கராயன் கிராம அலுவலர் பிரிவுக்கான காணிக் கச்சேரி நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு தலைமைதாங்கி கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

30 ஆண்டுகளுக்கும் மேலாக காணிகள் வழங்கப்பட்டன. எனினும், அக்கராயன் கிராம அலுவலர் பிரிவில் குடியேறாதுள்ள பல வீடுகள் மற்றும் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படாத பல காணிகள் காணப்படுகின்றன. கடந்த பத்தாண்டுகளில் காணிகளில் மீள்குடியமருங்கள், பயிர்ச் செய்கையில் ஈடுபடுங்கள் எனத் தொடர்ச்சியாக பிரதேச செயலகத்தால் அறிவிக்கப்பட்டு வருகின்றது. எமது அறிவித்தல்களை காணிகளைப் பெற்ற குடும்பங்கள் தொடர்ச்சியாக உதாசீனம் செய்து வருகின்றன. குடியேறாத பயிர்ச் செய்கைக்கு உட்படுத்தப்படாத காணிகளை காணிகளற்ற குடும்பங்களுக்கு வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். அக்கராயன் கிராம அலுவலர் பிரிவில் பல காணிகளில் குடும்பங்கள் இல்லாததன் காரணமாக தற்போது மீளக் குடியமர்ந்துள்ள குடும்பங்கள், குரங்குகள் மற்றும் பன்றிகள் உட்பட காட்டு விலங்குகளிலிருந்து பாதுகாப்புப் பெறும் நோக்கிலும் ஆள்களற்ற காணிகள் மற்றும் வீடுகளை அவர்களுக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (த-இ)

STUDY . WORK . SETTLE

UK-LONDON | CANADA | USA | NEW ZEALAND | AUSTRALIA | GERMANY | SINGAPORE

SCHOLARSHIPS AVAILABLE FOR SEPTEMBER 2021 INTAKE

FREE CONSULTATION!

VISIT VISA | STUDENT VISA | TOURIST VISA | VISA REJECTS

UNDERGRADUATE | POSTGRADUATE | PHD

• MBA Global • Business Management • Fashion Design • Film •Biomedical Science • Computer Science • Accounting & Finance • Health Sciences • Logistics • Early Childhood Studies • Engineering-Civil, Mechanical, Electrical & Electronic • Project Mgt • Hotel & Hospitality Mgt • Airline & Airport Mgt. • Law • Aircraft Maintenance Engineering • Aeronautical Engineering • Aerospace Engineering

Apply Pending GCE Advanced Level Results

Postgraduate Students Can Apply With Dependants

Students Applying to the UK in September 2021 will obtain an additional 2 Yr Post Study Work Visa. PhD Students will receive an additional 3 Yr PSW Visa.

LOHOS GROUP
Lucky Plaza Building, 4/7, 4th Floor, St.Anthony's Mawatha, Colombo 3, Kollupitiya.
Visit By Appointment Only - Contact Mr. Loho 0777917929
Contact Shevahn 0773529880
info@lohosgroup.com / lohosgroup@yahoo.com
www.lohosgroup.com

தமிழில் தொடர்புகளுக்கு : V.பாலசிங்கம் TEL: 0777 858139




நீங்களும் இன்றே விஷன் கெயாரின் செவிப்புலன் சிகிச்சை நிலையத்துக்கு வருகை தாருங்கள். எமது செவிப்புலனியல் நிபுணரை சந்தித்து இலவச ஆலோசனைகளைப் பெற்று உங்கள் அனைத்து செவிப்புலன் குறைபாடுகளுக்கும் சரியான தீர்வுகளைப் பெற்றிடுங்கள்.

இதில்
- இலவச செவிப்புலன் பரிசோதனை மற்றும் ஆலோசனைகள்
- இலவச செவிப்புலன் கருவிப் பரிசோதனை
- செவிப்புலன் கருவி மற்றும் காது வார்ப்பு சேவிஸ் செய்தல்
- காது தொடர்பான பிரச்சினைகளுக்கு வைத்திய நிபுணரை அணுகுவதற்குரிய ஏற்பாடுகள்

செவிப்புலன் குறைபாடுகளுக்கு எப்போதும் தகுதியுள்ள செவிப்புலனியலாளர் மூலம் துல்லியமான செவிப்புலன் பரிசோதனைகளை மேற்கொண்டு மிகப்பொருத்தமான செவிப்புலன் கருவிகளைப் பாவிப்பதன் மூலம் வெற்றிகரமான முடிவுகளைப் பெற முடியும்.

உங்களுக்குரிய நேரத்தை ஒதுக்குவதற்கு அழையுங்கள்

076 855 4976

VISION CARE HEARING SOLUTIONS

விஷன் கெயா ஒப்டிகல் சேவிஸஸ் (வரை) தனியார் நிறுவனம்

பிரதான கிளை : கொழும்பு ஏனைய கிளைகள் : யாழ்ப்பாணம், கண்டி, குருநாகல், கொழும்பு - றேஸ்கோஸ், பாணந்துறை, கம்பஹா, மட்டக்களப்பு, கிளிநொச்சி, வவுனியா, திருகோணமலை, மன்னார், தம்புள்ளை, அனுராதபுரம், கேகாலை, காலி, மாத்தறை, களுத்துறை, மகரகம, மாலபே, நீர்கொழும்பு, குளியாப்பிட்டி, ரத்தினபுரி, பண்டாரவளை, மொனராகலை, பதுளை, பொலன்னறுவை

oticon

முகவர்கள் தேவை

சுகாதார முறைப்படி ஏற்றுமதிக்கு தரமான முகக் கவசங்கள் தயாரிக்கும் எமது நிறுவனத்திற்கு நாடு முழுவதும் விநியோகத்தர்கள் தேவை.

விற்பனை மேலாளர்
P.A.M ஹெல் கேயார் (தனியார்) நிறுவனம்
ஹோமாகம மேலதிக தொடர்பு 074 143 5579
மின்னஞ்சல் : marketing@thermosl.com

# தொடரும் காணி அபகரிப்பால் தாயக பூமி இல்லாது போகும்

## சித்தார்த்தன் எம்.பி. எச்சரிக்கை



**யாழ்ப்பாணம், மார்ச் 21**

**காணி அபகரிப்பால் எமது தாயக பூமி இல்லாது போகும் நிலைமை காணப்படுகிறது. இந்த விடயத்தில் நாங்கள் அனைவரும் விழிப்பாக இருக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் எச்சரித்துள்ளார்.**

கொடிகாமம் மத்தி மடாலயக் காணிக்கான நீண்ட குத்தகை உடன்படிக்கை உறுதிப்பத்திரம் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களுடைய பிரச்சினைகளுக்கு முழுமையான தீர்வை எடுக்கும் படியான பிரேரணையைக் கொண்டு வரும்படி சர்வதேசத்திடம் கோரியே யாழ்ப்பாணத்தில் அண்மையில் எழுச்சிப் பேரணி முன்னெடுக்கப்பட்டது. இந்த விடயத்தில் சர்வதேச நாடுகளை முழுமையாக எதிர்பார்ப்பது உசிதமானதல்ல. சிறுகச் சிறுகத் தான் நாங்கள் அவர்களை எங்கள் பக்கத்துக்குக் கொண்டு வர முடியும். அதற்கு எமது கோரிக்கைகளை நீண்ட காலம் வரைக்கும் பேசு பொருளாகவே வைத்திருக்க வேண்டும் என்பதாலேயே இந்த போராட்டங்கள், உண்ணாவிரதங்கள் போன்றவை இன்னும் நடந்து கொண்டிருக்கின்றன. பொருண்மியம் நலிந்த குடும்பங்கள் வீட்டுத் திட்டம் பெறுவதற்கு காணி உரிமம் முக்கிய மானதாக காணப்படுகிறது. தொடர்ந்தும் காணியற்றவர்களுக்கு காணிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான முழுமையான முயற்சிகளை நாம் எடுக்க வேண்டும்- என்றார். (வ-159)

# நாவற்குழியில் ஒருவருக்கு தொற்று



யாழ்ப்பாணம், மார்ச் 21

நாவற்குழிப் பகுதியில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த நபரொருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மன்னார் பகுதியைச் சேர்ந்த ஒருவர் அண்மையில் நாவற்குழியிலுள்ள வீடொன்றுக்கு வந்து சென்றுள்ளார்.

அவருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து அந்த வீட்டிலுள்ளவர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர்.

அவர்களுக்கு கடந்த வியாழக்கிழமை பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதில் குடும்பத் தலைவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (வ-9)

# வரணியிலுள்ள கிணறுகள் நிபுணர்களால் சோதனை!

சாவகச்சேரி, மார்ச் 21

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட வரணிப் பிரிவில் உள்ள கிணறுகள் யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார திணைக்கள பூச்சியியல் நிபுணர்களால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. பிரதேசத்தில் உள்ள குடியிருப்புகள், பாடசாலைகள், தொழில் நிலையங்கள், கோவில்கள் மற்றும் நிறுவனங்கள் ஆகியவை பயன்படுத்தும் 200க்கு மேற்பட்ட கிணறுகள் இவ்வாறு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதன் போது, இரண்டு வீடுகளின் கிணறுகளில் டெங்கு நுளம்பு காணப்பட்டதைத் தொடர்ந்து, இரு வீடுகளின் உரிமையாளர்களும் எச்சரிக்கை விடுக்கப்பட்டது. கொரோனா அச்சம் காரணமாக டெங்கு நோயின் தாக்கத்தை மக்கள் கவனிக்காத நிலை காணப்படுவதால் அனைத்து குடியிருப்பாளர்களும் தமது காணிகள் மற்றும் குடியிருப்பு களைச் சுத்தமாக வைத்திருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ப-9)

## கோழிக் குஞ்சுகள் விற்பனைக்கு

ஒரு நாள் ஊர் கோழி குஞ்சுகள். கழுத்து வெட்டி குஞ்சுகள் உட்பட விற்பனைக்கு உண்டு. விலை 70.00 ரூபா

சுழிபுரம் 077 332 2433

## மணமகள் தேவை

கௌரவ குடும்பம் சொந்தமாக தொழில் புரியும் மணமகன்களுக்கு ஏற்ற 1983/ 1982 / 1979 ஆண்களுக்கு ஏற்ற வரன்கள் எதிர்பார்க்கின்றோம்.

ரஜீவ் திருமண சேவை 077 348 5967

## சிறுநீரகம் தேவை

33 வயதுடைய சிறுநீரக நோயாளி ஒருவருக்கு O/ A⁺ இரத்த வகையுடைய சிறுநீரகம் உடன் தேவை.

077 169 6329/077 497 5876

## விற்பனைக்கு

வவுனியாவில் Original Japan Super Cup 90 ரக இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்குண்டு புதிய வகை

பெரிய முன்சில்லு கப் 375.000/=

சின்ன முன்சில்லு கப் 365.000/=

C-50 300.000/=

தொடர்பு: 9am to 6pm 077 305 5106 / 077 273 7622

## வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் இயங்கும் பலசரக்கு விற்பனை நிலையத்திற்கு பொதி செய்வதற்கும் (பெண்) கனரக வாகனம் செலுத்துவதற்கும் தங்கி நின்று வேலை செய்யவும் ஆண் வேலையாட்கள் தேவை.

077 419 5015

## தோட்டக் காணி குத்தகைக்கு தேவை

பலாலி, வாசவிளான், இடைக்காடு, பத்தமேனி போன்ற இடங்களில் தோட்டக் காணி குத்தகைக்கு தேவை.

தொடர்புகளுக்கு கரிஸ் 076 908 1904

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

TVS Wego மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு.(BFR, 39000 km, சிவப்பு நிறம், First Owner)

077 898 9691 யாழ்ப்பாணம்

## பசு கன்றுடன் விற்பனைக்குண்டு

நல்ல இன கறவை J.C (கன்னி) பசு கன்றுடன் விற்பனைக்குண்டு

S. சிவா
70, குருசோ வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்
077 948 2799

## வாடகைக்கு

யாழ் வைத்தியசாலை வீதியில் 1ம் மாடியில் நான்கு கடைகள் வாடகைக்குண்டு. அலுவலகத்திற்கும் ஏற்றது.

தொடர்பு: 077 828 1956

## சேவை

நீங்கள் அடகுவைத்து மீட்டெடுக்கமுடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகு வைத்த நிறுவனத்திற்கு வருகை தந்து மீட்டு எடுத்து அதற்கான பெறுமதிப்பணம் அவ்விடத்திலேயே தரப்படும் நாடளாவிய ரீதியில் சினேக பூர்வமான சேவை.

AAA Gold Center

076 568 4346

## தேவை

வெள்ளவத்தை Colombo - 06 வசிக்கும் தமிழ் இந்து குடும்பத்தினருக்கு தங்களது இரு குழந்தைகளை தங்கி நின்று கவனிப்பதற்கு அனுபவம்வாய்ந்த தொடர்ந்து 1 வருடத்திற்கு மேல் வேலை செய்யக்கூடிய பெண் உறவுகள் தேவை.

077 522 2613

## வேலைவாய்ப்பு

யாழ் நகரில் பிரபல்யமான தனியார் நிறுவனம் ஒன்றிற்கு கணக்கு பதிவுனர் / உதவிக் கணக்காளர் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். இத்துறையில் 2 வருட முன் அனுபவம் உள்ள வர்கள் தங்களது சுயவிபரக் கோவையினை கீழ்வரும் விளம்பர இலக்கத்திற்கு 29.03.2021 முன் அனுப்பி வைக்கவும் தொழில் அனுபவத்திற்கு ஏற்ப ஊதியம் வழங்கப்படும்.

விளம்பர இல J.F/ 1024
C/O உதயன் பணிமனை
361, கஸ்தூரியர் வீதி, யாழ்ப்பாணம்

## பணியாளர்கள் தேவை

பிரபல காப்புறுதி நிறுவனத்துக்கு நிரந்தர தற்காலிக பணியாளர் தேவை. பணியில் இருந்து ஓய்வு பெற்றவர்களும் பணியாற்ற முடியும்.

தொடர்பு 076 711 2102

## வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் உள்ள சிகையலங்கார நிலையத்திற்கு வேலையாட்கள் தேவை

தொடர்பு 077 581 9527

## வீடு வாடகைக்கு (மேல்தளம்)

ஓட்டுமடத்தில் 3 அறைகளுடன் கூடிய வீட்டின் மேல் தளம் வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 077 720 5350

## தேவை

அரைக்கும் ஆலைக்கு அனுபவம் உள்ளவர்கள் (ஆண்/பெண்)

- சாரதிகள்
- கூலியாட்கள்

தொடர்பு: 077 772 2215

## பணியாளர்கள் தேவை

P.G.S Homes நிறுவனத்தில் பணிபுரிய ஆண்கள் தேவை.
(பண வசூலிப்பார்கள்)
சம்பளம் : 50, 000 - 70, 000/- ரூபா
மோட்டார் சைக்கிள் இருப்பவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

**P.G.S Homes,**
பருத்தித்துறை வீதி,
(கொமசல் வங்கி அருகாமை)
கொடிகாமம்

தொடர்புகளுக்கு 077 719 8380

## இவரைக் காணவில்லை



ஆச்சிரம வீதி புதுமுறிப்பு எனும் விலாசத்தில் வசித்த 65 வயதுடைய

**திருநாவுக்கரசு நிர்மலதாசன்**

என்பவரை 09.03.2021 இலிருந்து காண வில்லை. இவரை யாரும் கண்டால் கீழுள்ள தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்.

தகவல்
மகன் - சுதாகர்
077 205 1211
077 066 1485

## சர்வதேச அங்கீகாரமான பாட நெறி

- AMI Montessori & Child Care முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி நெறி
- Teacher Training Diploma ஆசிரியர் பயிற்சி நெறி
- Diploma in Maas & Digital Media ஊடக தொழில்நுட்ப கற்கைநெறி
- Business Management Diploma முகாமைத்துவ டிப்ளோமா
- Multimedia Diploma பல்லூடக பாடநெறி (உடனடியாக தொழிலில் ஈடுபட விரும்புகின்றவருக்கு)
- International Foundation Programe

Diploma பாடநெறியை நிறைவு செய்த மாணவர்கள் நேரடியாக பட்டப்படிப்புகளில் இணைய முடியும்

Hotline +94772 703 494

DIPLOMA ▶ HND ▶ DEGREE

INTERNATIONAL PROFESSIONAL ACADEMY, UK — WWW.IPAUK.ORG.UK

ISO 9001 : 2015 CERTIFIED | City & Guilds Approved Centre

April Intake

**AMAZON COLLEGE**

87, Kandy Road, (Opposite to Old Park) Jaffna

0772 703 494 | amazonjaffna@gmail.com

Head Office : 294, 2nd Floor, Galle Road, Colombo 04, Sri Lanka | 0114 386 126

HOTLINE 0215 61 21 51 amzoncollege | www.amazoncollege.lk

## யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்

புத்தாண்டு விசேட தள்ளுபடி

திருமண பட்டுப் புடைவைகளின் பூங்காவனம்

# இந்தியன் செலக்ஷனின்

புத்தம் புதிய ஆடைத் தெரிவுகள்



கொட்டன் Top, டெனிம் Top, மொடன் Top, சல்வார்கள், சல்வார் துணிகள், பட்டுச் சாறிகள், கொட்டன் சாறிகள், சில்க் சாறிகள், சேட், T -சேட், ரவுசர் வகைகள், பார்ட்டி புரொக்ஸ் என இன்னும் ஏராளமான ஆடைத் தெரிவுகள்.

அனைத்து வாடிக்கையாளர்களும் சுகாதார நடைமுறைகளை பேணவேண்டும்.



ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்

இடம் : யாழ் வீரசிங்கம் மண்டபம்

காலம்: 20.03.2021 - 13.04.2021 வரை

(10)

## திருமண சேவை

விசேடமாக கிறிஸ்தவ ஆவிக்குரிய சபைகளுக்காக உருவாக்கப்பட்ட திருமண இணையத்தளம்
www.kirubaimatrimony.com
பதிவுகள் இலவசம்.
தொடர்பு: 011 773 2288, 076 197 2285

## மணமகன் தேவை

1995 ல் பரணி நட்சத்திரத்தில் பிறந்த இந்து கௌரவ குடும்பத்தைச் சேரந்த செவ்வாய் தோசமற்ற கணக்கியல் துறையில் கடமையாற்றுகின்ற மணமகளுக்கு பொருத்தமான மணமகன் தேவை

தொடர்பு: 077 025 8686

## மணமகள் தேவை

கௌரவ இந்துக் குடும்ப 1990 அத்தம் 1ல் பிறந்த ஐரோப்பிய நாட்டு பிரஜை மணமகனுக்கு சைவ போசனமுடைய 2-5 வயது குறைந்த படித்த மணமகள் தேவை.

விபரத் தொடர்பு: 077 371 3845

## SALE

வார இறுதி மலிவு விற்பனை சில்லறையாகவோ மொத்தமாகவோ பெற்றுக்கொள்ளலாம் கிறவுன் யெலி டிப்பிப்டிப் பிஸ்கட் நியோய் ஊதுபத்தி வளர்ப்பு மீன் உணவு சகல சனி. ஞாயிறு தினாங்களில் காலை 10.00 மணி முதல் மதியம் 2.00 மணி வரை வியாபாரிகளுக்கு விஷேட கழிவு உண்டு.

மேலதிக விபரங்களுக்கு www.royjoygroup.com வலையமைப்பைப் பயன்படுத்தவும் றோய் யோய் மார்க்கட்டிங் அன் டிஸ்ரிபியுட்டஸ்.

17 இராச வீதி அச்சுவேலி 077 720 4883

## விற்பனைக்கு

மாங்கன்று. தேசி. தோடை. ஈரப்பலா. ஒட்டுபலா. கயூ. கொய்யா. மாதுளை. கமுகு. யம்பு. பசன்புறுட். ரகன் புறுட். தென்னங்கன்று. செவிளை தென்னை. விலும்பி நெல்லி. முருங்கன். பப்பா. டொமினேசி மா. அல்போன்னசா மா. கோப்பி. பட்டர்புறுட். றம்பிட்டான். கறுவா. கராம்பு. மங்குஸ்த்தான். ஏலக்கா. சிதா. அன்னமுன்னா. நாவல். இலுப்பை. பாலை. முதிரை. வாகை. சவுக்கு. தேக்கு. மலை வேம்பு. ஊர்வேம்பு. சித்திரவேம்பு. சமண்டலை. கருங்காலி. காயா கொண்டல்-கொன்றை. நாகமரம். அன்னாசி. பொக்ஸ்பிரல். றெட்பாம். கேவி. கொழும்பு வெற்றிலை. மஞ்சள். இஞ்சி. மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை. சாடி வகை. துளசி மாடம் ஐந்தூரியம் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: நியூ லங்கா பாம்
பலாலி வீதி, ஊரெழு மேற்கு
பிள்ளையார் கோயில் வீதி,
கணேசா பாடசாலை அருகில்
077 612 9343

நியூ லங்கா பாம்
கிளை:
K.K.S. வீதி, இணுவில்

## தேவை

யாழ்ப்பாணத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட குளிர்பான விநியோகஸ்த நிலையத்திற்கு Sales Man தேவை மோட்டார் சைக்கிள் இருத்தல் அவசியம் தொடர் கொள்ளவும்.

077473 7737, 077 325 7737

## வாகன விற்பனைப் பிரதிநிதி தேவை

லைட் வாகன ஓட்டுனர் அனுமதிப் பத்திரம் இருத்தல் அவசியம் விற்பனையில் முன்னனுபவம் இருத்தல் வரவேற்கத்தக்கது. வடமாகாணம் முழுவதும் பயணம் செய்யும் அனுபவம் இருத்தல் நன்று சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். அண்மையில் எடுக்கப்பட்ட புகைப்படம் மற்றும் விண்ணப்பத்துடன் நேரில் வரவும்.

றோய் யோய் மார்க்கட்டிங் அன்
டிஸ்ரிபியுட்டஸ்
17 இராச வீதி, அச்சுவேலி
www.royjoygroup.com

## ஒத்துமாறல்

கொழும்பு -5, நாரஹேன் பிட்டி பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் யாழ்ப்பாணத்தில் கடமையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தருடன் ஒத்துமாற விரும்புகிறார். விருப்பம் உள்ளவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு : 071 925 4041

## மணமகள் தேவை

யாழ். ஆதி சைவக்குருமார். 1985ல் அனுச நட்சத்திரத்தில் பிறந்த செவ்வாய்க் குற்றமற்ற மாநிறமான 5 அடி 8 அங் உயரமான உயர்தரம் படித்த இலங்கைப் பிரஜையான பிரான்சில் வதிந்து வேலைசெய்யும் மணமகனுக்கு. சைவ போசன அல்லது சைவபோசனமாக வாழக்கூடிய அல்லது போசன விவகாரத்தில் விட்டுக்கொடுத்து இணைந்து வாழக்கூடிய பிரான்சில் அல்லது ஐரோப்பிய நாடுகளில் வதியும் அல்லது பிரான்சில் உயர் கல்வி கற்பதற்கான தகுதியுள்ள இலங் கையில் வதியும் 1993 - 1986 ற்கிடையில் பிறந்த பிரான்சில் சென்று வாழக்கூடிய அழகிய மணப்பெண்ணை எதிர்பார்க்கிறோம்.

தொடர்பு : 077 959 3393

## ABI Fashion World அபி பஷன் வேல்ட் இன்



தமிழ் சிங்கள புதுவருட மாபெரும் விலைக்கழிவுகள்...

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டை வரவேற்கும் முகமாக

22.03.2021 முதல்
14.04.2021 வரை

70% சிறப்பு விலைக் கழிவுகளுடன் புத்தாண்டை மகிழ்வுடன் வரவேற்போம்.

சிறுவர் முதல் பெரியவர்கள் வரையான அனைவருக்கும் ஏற்ற உடைகள் ஒரே இடத்தில்

திருமணப் பட்டுப் புடைவைகளுக்கு பிரத்தியேக காட்சியறை அண்மையில் தரவிறக்கப்பட்ட புத்தம் புதிய டிசைன்களுடன்




அபி பஷன் வேல்ட் (பிறைவேட்) லிமிட்டெட்
112, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

021 222 3738

## ANNAI NAGAA FOOD City

யாழ் மண்ணின் முன்னோடி
அன்னை நாகா பூட் சிற்றி
3ம் தசாப்தத்தை நோக்கி...



500,000/= ரூபாவிற்கு மேல் பெறுமதியான மாபெரும் பரிசு மழை





தங்க நாணயங்கள்



ஆறுதல் பரிசில்கள்





100 இற்கும் மேற்பட்ட பொருட்களுக்கு விசேட விலைக் கழிவு

| யாழ் நகர் | கொக்குவில் | நல்லூர் |
| --- | --- | --- |
| 175, K.K.S Road, Jaffna. Tel: 021 222 5515 | No.38, K.K.S.Road Jaffna. Tel: 021 221 7133 | 341,343, Pointpedro Road, Nallur, Jaffna. Tel: 021 021 7515 |

175,K.K.S.Road. Jaffna. T.P: 021 222 5515, 021 221 6889

## பணிநிலை வெற்றிடம்

Photoshop, Designing, Typing
மிகவும் திறம்படத் தெரிந்த பெண்கள் எமது நிறுவனத்திற்கு தேவை.
காலை 9.30 - 4.00 வரை
எமது நிறுவனத்திற்குத் தொடர்பை ஏற்படுத்தி சமூகம் தரவும்.
தொடர்பு:
**G.N Printer**
T.P: 077 031 2313, 072 4741687, 077 017 2701.
28A, பிறவுண் வீதி, கலட்டி யாழ்ப்பாணம்.
(தொழில்நுட்பக் கல்லூரிக்கு முன்பாக)

## கடைகள் வாடகைக்கு உண்டு

யாழ். பிரதான வீதியில் 3 கடைகள் வாடகைக்கு உண்டு. (பிரபல்யமான இடம்) மற்றும் அலுவலகத்திற்கும் பயன்படுத்தலாம்.
**தொடர்பு: 077 330 7073**

## பணிப்பெண் தேவை

நல்லூரில் ஒரு வயோதிப பெண் ஒருவரை பராமரிப்பதற்கு பணிப்பெண் தேவை. (தங்கி நின்று பணிபுரிய வேண்டும்), வயது எல்லை (30-50) சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.
தொடர்புக்கு: **077 1988 155**

## வேலையாள் தேவை

எமது கால்நடை உற்பத்தி விற்பனை நிலையத்துக்கு பெண் வேலையாள் தேவை.
**JAFFNA EGG CENTER**
**077 8511 265**

## சாரதி தேவை

புன்னாலைக்கட்டுவனிலுள்ள பேக்கரி-யொன்றிற்கு மியூசிக் பாண் ஆட்டோ ஓடுவதற்கு சாரதி உடனடியாகத் தேவை.
தொடர்புகளுக்கு 076 747 8012

## பெண் வேலையாள் தேவை

யாழில் இயங்கிவரும் (மனோகரா திரையரங்கிற்கு அருகில்) போட்டோகொப்பி கடைக்கு பெண் ஊழியர் தேவை.
(வே.நேரம் 12PM - 7.30 PM)
தொடர்பு:- **076 832 3682**

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் கந்தர்மடத்தில் பல்கலைக் கழக மாணவர், தொழில் புரிவோருக்கு சகல வசதிகளுடனும் சிறந்த சுற்றாடலில் தங்குமிடம்.
தொடர்பு:- **076 8491738**
**021 222 1268, 078 567 9674**

## வீடு வாடகைக்கு

தனியார் நிறுவனங்களுக்கு அலுவலக, வீட்டு பாவனைக்கு தோம்பை வீதி, உடுவில் கிழக்கு, சுன்னாகத்தில் வீடு வாடகைக்குண்டு.
**077 923 7633**

## புடைவை கடைக்கு வேலையாள் தேவை

திருநெல்வேலி சந்தியிலுள்ள புடைவை கடைக்கு வேலைக்கு பெண்கள் தேவை.
வயதெல்லை : 20-35
தொடர்பு: **076 306 3306**

## வேலையாட்கள் தேவை

நல்லூர்பகுதியில் அமைந்துள்ள சைவ உணவகத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.
- உணவு பரிமாறுபவர் (முழுநேரம் / பகுதி நேரம்)
- சுத்திகரிப்பாளர் (ஆண்/ பெண்)
- சமையல் உதவியாளர் (ஆண்)

தொடர்பு: **076 166 1986**

## ஜெனரேட்டர் விற்பனைக்கு

FG.WILSON
(ENGLAND) 2004
VA 75-KW 60-RPM1500
VDC 12 - EIMSR
Type-880832
தொடர்பு:
**5 543 5310, 0777 555 983**

## உடல் எடை குறைய வேண்டுமா?

- எடை கூடுகிறதா?
- வயிறு, மார்பு குறைய வேண்டுமா?
- உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்ற கவலையா?

**பால்மா குளிசை** - வயிறு, மார்பு குறைக்கும் கிறீம் 15 நாள்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்.

## தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?

தலைமுடி வளரவேண்டுமா? பேன், பொடுகு தொல்லையா? ➤முடிகொட்டுகிறதா? ➤இளநரையா? ➤தலையிடியா? முடி அடர்த்தி இல்லையா?➤புதிதாக முடி முளைக்க வேண்டுமா? ➤பொன்னாங்காணி? கரிசலாங்காணி, இலாமிச்சை வேர், கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்துக்காய்ச்சிய எண்ணெய் குளிசை

**கருமை நிறம் நீங்க வேண்டுமா?**

**077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.**

**வெளிநாடு ஒன்றில் பட்டப்படிப்பைத் தொடருங்கள்**

## STUDY IN ABROAD
## TOP - 10 UNIVERSITIE'S

INTAKE - APRIL / MAY / SEP - 2021
(2 Years Work Permit)

DIPLOMA / HND / DEGREE / MASTERS உலகின் 500 க்கும் அதிகமான பல்கலைக்கழகங்களில் தொடர்பினைக்கொண்டுள்ள நாம் இலங்கை மாணவர்களுக்கு உயர் கல்வி பட்டப்படிப்புக்கான வழிகாட்டல் மற்றும் ஆலோசனை எமது சட்டத்தரணி ஊடாக வழங்கி வருகின்றோம்.

- ✓ 100 க்கும் அதிகமான துறையில் நீங்கள் விரும்பிய நாடு ஒன்றில் உயர் கல்வியைத் தொடரும் வாய்ப்பு .
- ✓ UK / CANADA / O/L, A/L தகமையுடன் With or without IELTS தகமையுடன் மாணவர்கள் வீசாவிற்கு விண்ணப்பிக்கும் வாய்ப்பு. BELARUS நாட்டிற்கான 100 % Students visa / Visiting visa (இரண்டு வாரத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.
- ✓ UKRAINE / LATVIA / LITHUANIA / NETHERLAND போன்ற நாடுகளுக்கான மாணவர் வீசாக்கான அனுமதிகள் தற்போது நடைபெறுகின்றன.

உடன் விண்ணப்பிக்கவும்.
Nation Plus 2 Consultancy ( Pvt ) Ltd
No. 57, Wa Silva Mawathai, Wellawatta, Colombo 06.
0777005055 / 0115814500
Email: Nationplus171@gmail.com
**Branches**
தொடர்புகளுக்கு: **Vavuniya / Jaffna 0777302224**

## வீடு வாடகைக்கு

மந்திகை வைத்தியசாலையில் இருந்து 500 மீற்றறில் பருத்தித்துறை வீதியில் சகல வசதியுடன் உள்ள வீடு வாடகைக்கு விடப்படும். அரசாங்க ஊழியர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**தொடர்புகளுக்கு : 077 407 6540**

## Study in Canada, UK,Ireland, Schengen Countries

**GCE (O/L)** அடிப்படைத் தகுதியுடன்
**Colleges/Universities**
அனுமதியை பெற்றுக்கொள்ள. குறைந்த செலவில் வெளிநாட்டில் உயர்கல்வி. VISA கிடைத்த பின் College கட்டணம்.
Executive training programmes in the heart of London College IELTS not required. conditioned apply

No: 36 1/1 Station Road, Colombo - 06
Phone: 0773547049
Website: www.lifetimencl.com,
www.srilanka.eie-group.com

## St. Patrick's College, Jaffna
## புனித பத்திரிசியார் கல்லூரி
யாழ்ப்பாணம்
## புதிய அனுமதி - 2022

2022ம் ஆண்டுக்கான தரம்1 புதிய அனுமதி விண்ணப்பப்படிவங்களை கல்லூரி நாட்களில் காலை 8.00 மணியிலிருந்து பிற்பகல். 3.30 மணிவரை பிரதான அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

- ❖ தரம் 1ற்கு அனுமதி கோரும் மாணவர்கள் 01.02.2016 - 31.01.2017 இற்கும் இடையில் பிறந்திருக்க வேண்டும்.
- ❖ பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் பிறப்புச் சான்றுப் பத்திரங்களுடன் நேரில் வந்து ஒப்படைக்கவும். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளும் கடைசி நாள் 03.05.2021.

அதிபர்

## உறுதிக்காணி உடன் தேவை

கால் நடை பண்ணை மற்றும் தீவனம் வளர்க்கக்கூடிய உறுதிக் காணி உடன்தேவை. வாகனம் வந்து போகக் கூடிய பாதை மற்றும் தண்ணீர் வசதி முக்கியம் A9 வீதிக்கு அருகில் விரும்பத்தக்கது. குறைந்தது 10 ஏக்கர் உள்ள காணி உரிமையாளர் மட்டும் தொடர்பு கொள்ளவும்.
(விலை பேசித்தீர்மானிக்கலாம்.)

**தொடர்புகளுக்கு : 077 056 7256**

## மரண அறிவித்தல்



மண்ணில் 05.08.1941
விண்ணில் 19.03.2021

திருமதி
## அருள்நாயகம் பிலோமினா
(தங்கச்சியம்மா)

**நீதிமான்களின் ஆன்மாக்கள் கடவுளின் கைகளில் உள்ளன. (ச.ஞா: 13)**

யாழ்ப்பாணம் சுண்டிக்குளி தூயதிருமுழுக்கு யோவான் ஆலய பாங்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டு கொழும்பு வத்தளையை தற் காலிக வசிப்பிடமாக வும் கொண்ட திருமதி அருள் நாயகம் பிலோமினா (தங்கச்சியம்மா) 19.03.2021 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைத்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சொல மன் பிறாண்சிஸ் துரையப்பா - றோசலின் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற திரு.திருமதி மோறாயஸ் திருச்செல்வம் - றோசம்மா தம்பதிகளின் அன்பு மருமக ளும் காலஞ்சென்ற திருச்செல்வம் அருள்நாயகம் (தபால் தந்தி திணைக்களம்) அவர்களின் பாசமிகு மனைவியும், திரு. அன்ரன் சேவியர் தேவநாயம் (லண்டன்), திருமதி யூலியற் மரினா, அனற் ஜெயந்தி (கொழும்பு), சேவியர் துரைநாயகம் (சுவிஸ்), ஈழராணி (சுவிஸ்), பசில் செல்வ நாயகம், தனிநாயகம் (இத்தாலி), ஜெயநாயகம் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தாயும், கிறிஸ்துராசா, ஜோட்சன், சியாமளா, நிமால், புஸ்பா, நிரோஜினி, கவிதா, சர்மினி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற திருமதி செ.எலிசபெத் து.மைக்கல், எ.திரேசம்மா, துரை, ஆரோக் கியதாசன், சீ.பாபறா அருட் சகோதரி மைக்டலின் பிரான் சிஸ் (நல்லாயன் கன்னியர்) ஆகியோரின் அன்பு சகோதரி யும், கீர்த்திகா, லக்சிகா, நிரோஜினி, கலிஸ்ரா, நிசாந்தினி, நிலாந்தினி, அனித்தா, அஞ்சனா, அருண், அருளாளன், காசினி, சிரோன், சிரோமா, ஜெயிலன், தமிழவன் ஆகியோ ரின் அன்பு பேர்த்தியும், அலோசன், றோய், சர்வின் ஆகி யோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு கொழும்பு வத்தளை மலர் சாலையில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று (21.03.2021) ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணிக்கு இறைவழிபாட்டுடன் மாதம் பிட்டி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி நிமால் ஈழராணி
மகள் (சுவிஸ்)

## வேலைவாய்ப்பு

பொருட்களை விநியோகிக்கும் வாகனத்திற்கு (Delivery Vehicle)

- **பணம் வசூலிப்பவர்** - Cash Collector
  **(30 வயதுக்கு மேற்பட்டோர்)**
- **வாகன உதவியாளர்** (Porter) **தேவை.**

**கவர்ச்சிகரமான சம்பளமும் இதர படிகளும் வழங்கப்படும்.**

**இடம் :-** Lemon Tree உணவகம்.
நல்லூர் பின் வீதி.
369, Point Pedro Road, Jaffna.
நேரில் வரவும்.

**காலம்:-** 21.03.2021 (2PM- 5PM)
22.03.2021 (10.00AM - 4PM)

**மேலதிக தொடர்புகளுக்கு:** 077 437 1539

**குறிப்பு:-**
நல்லூர். திருநெல்வேலி. கொக்குவில். கோண்டாவில். உரும்பிராய். நீர்வேலி. கல்வியங்காடு. கோப்பாய். அச்சுவேலி. சிறுபிட்டி போன்ற இடங்களில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

## மரண அறிவித்தல்

### சண்முகக் குருக்கள் பரமேஸ்வரக் குருக்கள்

அளவெட்டி தெற்கு, பெருமாள் கடவையினை பிறப்பிடமாகவும் அளவெட்டி தெற்கு அறுகம்பற்று பிள்ளையார் கோவிலடியை வதிவிடமாகவும் கொண்ட பரமேஸ்வர குருக்கள் அவர்கள் நேற்று (20.03.2021) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.03.2021) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, நண்பகல் 12 மணியளவில் தகனக்கிரியைக்காக தம்பளை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அறுகம்பற்று பிள்ளையார் கோவிலடி,**
**அளவெட்டி தெற்கு,**
**அளவெட்டி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 626 3324**

## மரண அறிவித்தல்

தோற்றம் 08 . 08 . 1932



மறைவு 20 . 03 . 2021

### காசிப்பிள்ளை முத்துராசா

கொக்குவில் கிழக்கு குளப்பிட்டியை பிறப்பிடமாகவும் நவாலி வடக்கு நாச்சிமார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட காசிப்பிள்ளை முத்துராசா அவர்கள் நேற்று (20.03.2021) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற காசிப்பிள்ளை சுபத்திரை தம்பதியரின் மகனும். இராசையா செல்லம்மா தம்பதியரின் மருமகனும். இராசலட்சுமியின் (கமலா) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம். பரமேஸ்வரி. நடேசு ஆகியோரின் அன்புச் சகோதரனும். கோபிதாசன் (சுவிஸ்). குகதாசன் (ஜேர்மன்). சிவதாசன் (சுவிஸ்). வாசுகி (கனடா). வசந்தினி (ஜேர்மன்). ஆகியோரின் பாசமிகு தந்தையும். புஸ்பலதா (சுவிஸ்). பாமினி (ஜேர்மன்). பரஞ்சோதி (கனடா). கணேசாஜினி (சுவிஸ்). குபேந்திரன் (ஜேர்மனி). ஆகியோரின் மாமனாரும். கோபிநாத். விதுஸ்நாத். சங்கவி. ராகவி. கீர்த்திகா. தர்சிகன். தனோஜா. திவ்வியன். கவீனா. சபீனா. சகானா. மேகலன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.03.2021) ஞாயிற்றுக்கிழமை மதியம் 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் ஆரியம்பதி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**நாச்சிமார் கோவிலடி,**
**நவாலி வடக்கு, மானிப்பாய்.**

**தகவல்:**
**மனைவி.**

## நினைவலைகள்

### 34 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 14.11.1939



இறப்பு 11.10.1987

திதி: சதுர்த்தசி

### 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 04.05.1942



இறப்பு 27.03.2015

திதி: அட்டமி

### சின்னத்தம்பி தியாகராஜா | தியாகராஜா அம்பிகையம்மா (கண்ணகி)

(நயினாதீவு – 5ஆம் வட்டாரம்)

நெஞ்சமதில் நிலைத்து நின்று எண்ணமதில் என்றும் நிலைத்து
வண்ணமலர் வாசமாக மனதில் நின்றீர்
கண்ணிமைக்கும் காலத்துள் காலனுமைக் கவர்ந்து சென்ற
கொடுமையை எண்ணிக் கலங்குகின்றோம்
முப்பத்திநான்கு ஆண்டுகள் சென்ற பின்னும் என்றும் அழியா நினைவுகள்.

நாள்கள் பல நூறு ஓடி மறைந்தாலும் - எம்
நெஞ்சில் நிலைத்திருக்கும்
பாசதீபம் - உங்கள் நினைவுகள்
என்றும் அழியாது கண்ணின் இமைபோல எமைக் காத்த அம்மா
உங்கள் கனவுகள் யாவும் நிறைவேறும்.

**அம்மன் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.**

(CS/24656)(11.17)

**குடும்பத்தினர்.**

# அரசுக்கு சேறுபூச ஒருதரப்பு முயற்சி

## சூழ்ச்சியை வெளிப்படுத்துவேன் என்கிறார் கோத்தா

கொழும்பு, மார்ச் 21

எமது அரசுக்கு எதிராக பல்வேறு சேறு பூசும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதற்காக சிலர் பெருந்தொகை யான பணத்தைச் செலவிட்டு வருவகின்றனர். இந்த சூழ்ச்சியை விரைவில் மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்தார்.

பௌத்த ஆலோசனை சபைக் கூட்டம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

தற்போதைய அரசை அதிகாரத்துக்குக் கொண்டு வருவதற்காக பெரும்பாலான மக்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டனர். மக்கள் அங்கீகரித்த அந்தக் கொள்கைகள் எப்போதும் பாதுகாக்கப்பட வேண்டும். எம்மைப் பாதுகாப்பதன்றி மக்கள் அங்கீகரித்த கொள்கையைப் பாதுகாப்பதே அவசியமாகும். - என்றார். (க-இ)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை நவாலி வீதி, மூத்த விநாயகர் கோவிலடி மெயின் றோட்டுடன் 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. பிரித்து கொடுக்கப்படும். 1 1/2 பரப்பாக. (தரகர் தேவையில்லை)

காணி பார்வையிடும் நேரம் : காலை 9.00 - மாலை 6.00 வரை

குரு

077 468 3354

077 288 0152

## காணி வீடு விற்பனைக்கு

01. திருநெல்வேலி, புதிய சிவன் வீதியில் குடியிருப்புக்கு பொருத்தமான வீடு விற்பனைக்கு
2. மணல்த்தரை வீதியில் காணி விற்பனைக்கு
3. உரும்பிராயில் காணி விற்பனைக்கு
4. சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கு முன்பாக வீட்டுடன் இணைந்த வர்த்தக மற்றும் குடியிருப்புக்கு மிகவும் உகந்த காணி விற்பனைக்கு
5. ஹப்புத்தலையில் அழகிய விருந்தினர் விடுதி விற்பனைக்கு

077 221 5531, 077 227 6173


## கண்ணீர் அஞ்சலி



1960 தொடக்கம் 1977 வரை இலங்கை தமிழ் அரசுக் கட்சியிலும் 1977முதல் 1983வரை தமிழர் விடுதலைக் கூட்டணியிலும் பருத்தித்துறை தொகுதி பாராளுமன்ற உறுப்பினராக இருந்த அமரர் கதிரிப்பிள்ளை துரைரத்தினம் அவர்களது அன்பு மனைவி

### இந்திராணி துரைரத்தினம்

**தோற்றம்: 11.02.1935 மறைவு: 19.03.2021**

அவர்கள் 19-03-2021 அன்று கனடாவில் காலமானார். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு இலங்கை தமிழ் அரசுக் கட்சி சார்பில் ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**இ.த.அ.கட்சியின் நிர்வாகச் செயலாளர்.**
**எஸ்.எக்ஸ்.குலநாயகம்.**


## நாகபூஷணி திருமணசேவை

1). அவுஸ்ரேலியாவில் உள்ள. 1994 பிறந்த டாக்டர் மணமகளுக்கு மணமகனும்,

2). 1984 இல் பிறந்த, அரச உயர் பதவி வகிக்கும் மணமகனுக்கு மணமகளும், எதிர்பார்க்கப்படுகிறது.

நீங்கள் விரும்பும் மணமக்கள் ஜாதகங்கள் மிகப் பொருத்தமாக உடன் தரப்படும்.

021 222 9306, 077 138 7596
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

## காணி விற்பனைக்கு

நல்லூர் செம்மணி வீதியில் நாயன்மார் கட்டில் 4 பரப்புக் காணி விற்பனைக்கு.
2 பரப்பாக பிரித்து கொடுக்கப்படும்.

077 623 4204

## உடனடி வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கும் ஆடைத் தொழிற்சாலைக்கு பின்வரும் வேலைகளுக்கு ஆட்கள் தேவை.

- தையல் (பெண்கள்)
- அலுவலக உதவியாளர்
- நிர்வாக உதவியாளர் (ஓய்வுபெற்றவர்கள் விரும்பத்தக்கது)
- சந்தைப்படுத்தல் அதிகாரி (சாரதி அனுமதிப்பத்திரம் முக்கியமானது)

கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்

தொடர்புகளுக்கு: 077 017 8009, 021 221 3221


# நியமனம் வழங்கும் நிகழ்வு நாளை

யாழ்ப்பாணம், மார்ச் 21

வடக்கு மாகாண தமிழ்மொழி மூல மற்றும் சிங்கள மொழி மூலப் பாடசாலைகளில் நிலவும் ஆரம்பக் கல்வி ஆங்கில பாடத்துக்கு இலங்கை ஆசிரியர் சேவையின் 3ஆம் வகுப்பு I தரப் பதவி வெற்றிடங்களுக்கு ஆங்கில டிப்ளோமாதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான நியமனம் வழங்கும் நிகழ்வு நாளை திங்கட்கிழமை 22ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி செல்வா கலையரங்கில் நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவால் வெளியிடப்பட்ட ஆட்சேர்ப்பு விளம்பரத்துக்கு அமைவாக விண்ணப்பித்தவர்களுக்கு நடத்தப்பட்ட மற்றும் டிப்ளோமாதாரிகளை ஆசிரியர் சேவைக்கு நியமிக்கும் போட்டிப் பரீட்சைப் பெறுபேறுகள் வடக்கு மாகாண கல்வி அமைச்சால் நடத்தப்பட்ட நேர்முகத் தேர்வுடன் இணைந்த பிரயோகப் பரீட்சைக்குத் தோற்றி தகைமை பெற்ற 97 பேர் ஆசிரியர் நியமனத்துக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

எனவே தெரிவு செய்யப்பட்டுள்ள விண்ணப்பதாரர்கள் அன்றைய தினம் காலை 9 மணிக்கு அடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடிய ஆவணத்துடன் வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நியமனத்துக்கு தெரிவு செய்யப்பட்ட டிப்ளோமாதாரிகளின் பெயர், விவரங்களை வட மாகாண சபை இணையத்தளம் www.np.gov.lk மற்றும் www.edumin.np.gov.lk எனும் முகவரியில் பார்வையிட முடியும் என கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (ச)

## பரசூட் பயிற்சியின்போது சிப்பாய் உயிரிழப்பு

பரசூட் பயிற்சியின் போது இடம்பெற்ற விபத்தில் விமானப் படைச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார், மற்றுமொருவர் காயமடைந்துள்ளார் என்று விமானப் படையின் பேச்சாளர் குரூப் கெப்டன் துஷான் விஜேசிங்க தெரிவித்தார்.

அம்பாறை, உகன விமானப்படை முகாமில் நேற்றுக் காலை இந்த விபத்து நடந்துள்ளது. 8 ஆயிரம் அடி உயரத்திலிருந்து கீழிறங்கிய இரு விமானப்ப டைச் சிப்பாய்களது பரசூட்டுக்கள் ஒன்றுடன் ஒன்று சிக்கியே இந்த விபத்து நேர்ந்துள்ளது. இரத்மலானை விமானப்ப டை முகாமைச் சேர்ந்த சிப்பாய் ஒருவரே உயிரிழந்துள்ளார். விபத்தில் காயமடைந்த மற்றைய சிப்பாய் அம்பாறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (க-இ)

## மரண அறிவித்தல்

### கிருஷ்ணர் ஆனந்தகிருஷ்ணன்

(இளைப்பாறிய தபாலதிபர் )



சண்டிலிப்பாய் வடக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய தபாலதிபர் கிருஷ்ணர் ஆனந்த கிருஷ்ணன் நேற்று (20.03.2021) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணர்-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பு-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சிவகெங்கையின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான தவமணி, சீனிவாசகம், மாணிக்கவாசகர், கணேஷர் ஆகியோரின் அன்புத் தம்பியும், கிரிஜா (பூஷணா-கனடா) ராஜா கிருஷ்ணன் (ராஜா-சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவானந்தன் (சிவா-கனடா), பர்வதவர்த்தினி (வதனி-சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜிலோஜினி-Ryan (ஜிலோ-கனடா), விதூரி (சுவிஸ்) ருஷானி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.03.2021) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொட்டுபனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

ராஜா - 647 229 9661
கிரியா - 01141612713408
பகவதி - 0760 671473

சண்டிலிப்பாய் வடக்கு,
சண்டிலிப்பாய்.


## காணி விற்பனைக்கு

உரும்பிராயில் இரண்டு பரப்பு காணி விற்பனைக்குண்டு

தொடர்பு: 077 522 2533

## மணமகள் தேவை

1979.02.07 இல் பிறந்த 5'.6" உயரமுடைய சைவ உயர்குல மிருகசீரிடம் 2ஆம் பாதம் கிரகபாவம் 6 உடைய மணமகனுக்கு அழகிய பொருத்தமான மணமகள் தேவை.

077 330 1798

## காணி விற்பனை

யாழ் அரியாலை பொன்னம்பலம் சந்தி TATA Company என்பவற்றிற்கு அண்மையாக A9 வீதியில் இருந்து 100m இல் 2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை

தொடர்பு: 076 806 3757

## வேலைவாய்ப்பு

கிளிநொச்சியிலுள்ள Hotel மற்றும் Bar(பார்) ஒன்றுக்கு கீழ்வரும் பணியாளர் உடன் தேவை.

- சமையலாளர் (Chef)
- உதவி சமையலாளர்
- வெயிற்றர்
- பூங்கா பராமரிப்பாளர்
- எலக்ரிசியன் மற்றும் பிளம்பர்
- மேற்பார்வையாளர்.

தொடர்பு: 0777 664913

## வேலைவாய்ப்பு

கிளிநொச்சியில் உள்ள பான்சி கடை மற்றும் பியூட்டி பார்லருக்கு கீழ்வரும் பணியாளர் உடன் தேவை.

- விற்பனையாளர்
- Beautician (பியூட்டிசியன்)

தொடர்புகளுக்கு : 0777 660 396

## வேலையாள் தேவை

யாழ் நகரில் உள்ள கடை ஒன்றுக்கு ஆண் பெண் இருபாலாரும் தேவை.

தொடர்பு:-077 937 0000

## பணிப்பெண் தேவை

யாழ் நகரில் உள்ள சிறிய குடும்பம் ஒன்றிற்கு சமையல் வேலை செய்ய 35 வயதிற்கு மேற்பட்ட தங்கி நின்று வேலை செய்யக் கூடிய பெண் தேவை.

077 9370 000

## 200 அடி...

இந்தக் கோர விபத்து நேற்றுக் காலை 6.55 மணிக்கு இடம்பெற்றது. லுணுகலை பிரதான பஸ் நிலையத்திலிருந்து 6.20 மணிக்கு பஸ் புறப்பட்டுள்ளது. 13ஆவது மைல் கல்லருகே, எதிரில் வந்து கொண்டிருந்த பாரவூர்திக்கு வழி விட முயற்சித்தபோது குறித்த பஸ் தடம் புரண்டது. இந்த பஸ் ஒரு வாரமாக தூரப் பயணங்களுக்கான சேவையில் ஈடுபடவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. பஸ்ஸில் பயணித்தவர்களில் 5 பேர் மட்டுமே கொழும்புக்குச் செல்ல வேண்டியவர்கள். ஏனையோர் பசறை, பதுளை ஆகிய இடங்களுக்குச் செல்லும் பயணிகள்.

பஸ்ஸில் 57 பேர் பயணித்துள்ளனர். விபத்தில் நேற்று மாலை வரை 14 பேர் உயிரிழந்துள்ளனர். 43 பயணிகள் படுகாயமடைந்துள்ளனர். 34 பேர் பதுளை அரசினர் மருத்துவமனையிலும், 9 பேர் பசறை அரசினர் மருத்துவமனையிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர். பதுளை அரசினர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் 34 பேரும் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நேற்று நள்ளிரவு கிடைத்த தகவல்களின் படி ராமன் நாகரத்தினம், ஜதுயன் பேபி, சுப்பிரமணியம் ராஜேந்திரன், ஆர்.எச்.எம்.சந்தமாலி, அலி உம்மா, பொன்னழகன் டானியல் அரிகரன், எம்.ஏ.எச்.சத்சரணி, அந்தோனி நோவா, வெள்ளயன் சுப்ரமணியம், பாக்கியநாதன் யோகநாதன், ஆர்.எம்.அசோக பத்மகுமார, சொக்கன் ஆகியோரே உயிரிழந்தவர்கள்.

விபத்தில் காயமடைந்தவர்களை ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம்.முசாம்மில், இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் மற்றும் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.அரவிந்தகுமார் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டனர். (க-இ)

## மாகாண சபை...

அடங்கிய பிரேரணை, இன்னும் இரண்டு வாரங்களுக்குள் அமைச்சரவையில் முன்வைக்கப்படவுள்ளது என்று அரச உயர்மட்ட வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

அமைச்சரவை அனுமதி கிடைக்கப்பெற்ற பின்னர், அதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து, அங்கும் உரிய வகையில் நிறைவேற்றி தேர்தலை நடத்துவதே அரசின் எதிர்ப்பார்ப்பாக உள்ளது. சுமார் 3 ஆண்டுகளாக ஒத்திவைக்கப்பட்டு வரும், மாகாணசபைத் தேர்தலை விரைவில் நடத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு ஏற்கனவே பணிப்புரைகளை விடுத் துள்ளனர்.

இதன்படி விடயதானத்துக்குப் பொறுப்பான அமைச்சர் பூர்வாங்கப் பணிகளை முன்னெடுத்துள்ளார். கட்சித் தலைவர்களுடனும் இது சம்பந்தமாக அவர் விரைவில் பேச்சு நடத்தவுள்ளார். வடக்கு, கிழக்கு உட்பட 9 மாகாண சபைகளுக்கும் ஒரே நாளில் தேர்தல் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-44)

## காணாமல்...

சுயாட்சிக் கழகத்தின் தலைவர் அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சந்திக்கவுள்ளார் என்று அறிவிக்கப்பட்ட நிலையில், அது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அனந்தி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

போர் முடிந்து 11 வருடங்கள் கடந்துள்ள நிலையில் தமிழ் மக்கள் சர்வதேச நீதியை நாடி நிற்கின்றனர். அத்துடன், ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டத்தொடர் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற நேரத்தில், அதுவும் இலங்கைக்கு எதிராகத் தீர்மானம் கொண்டுவரப்படுகின்ற நிலையில் தற்போது காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளைச் சந்திக்க அரசு விருப்பம் கொண்டிருக்கிறது. அப்படியானால், சர்வதேச ரீதியில் நாம் நீதியைத் தேடாமல் உள்நாட்டிலே தீர்க்கக்கூடியதாக காணாமல் போனோரின் உறவுகளைச் சந்தித்துப் பேசுகின்றோம் என்ற ஒரு மாயையை உலகுக்குக் காட்டுவதற்கு இவர்கள் எத்தனிக்கின்றனர் என்றே நாங்கள் பார்க்கின்றோம். உண்மையில், இறுதிப் போரில் சரணடைந்தவர்களுடைய வெளியிடப்படாத பட்டியலை வெளியிடுகிறோம் என்று இதே ஆட்சியாளர்கள் கடந்த ஆட்சிக்காலத்தில் தெரிவித்திருந்ததும், பின்னர் ஒன்றுமே இல்லாத நிலையைக் கொண்டு வந்ததையும் நாங்கள் அறிவோம்.

ஆனால், உள்ளநாட்டுப் பொறிமுறைகள் அத்தனைக்கும் தோற்றியவர்களாக நாங்கள் இருக்கின்ற போது, தற்போது அரசு எங்கள் மீது திடீர்க் கரிசனை கொள்வதன் நோக்கம் என்ன? ஐக்கிய நாடுகள் சபையில் தங்களுக்கு எதிரான நிலைப்பாடுகளை எதிர்கொள்வதற்கு எங்களுடைய மக்களை போலியாகச் சந்திக்கின்ற நிலைப்பாட்டை எடுக்க இருக்கின்றார்கள். அப்படிச் சந்தித்தாலும்கூட, இவர்கள் இறந்தவர்களுக்கான இழப்பீடு என்ற வழியில் தான் போகப்போகின்றனர். கடந்த நல்லாட்சி அரசிலே காணாமல் போனோரின் அலுவலகம் கொண்டு வந்தும் காணாமல் ஆக்கப்பட்ட ஒருவரைக்கூட இவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. இதே ஆட்சியாளர்களின் காலத்தில்தான் பெருமளவான மக்கள் வலிந்து காணாமலாக்கப்பட்டிருக்கின்றார்கள். சரணடையக் கொடுத்தவர்களில் நானும் ஒருத்தியாக இருக்கின்றேன். இவர்கள் உடனடியாக இந்தப் பேச்சுக்களைக் கைவிட்டு, தங்கள் கைவசம் இருக்கின்ற, காணாமலாக்கப்பட்டவர்கள் என்று கூறப்பட்ட அத்தனை பேரையும் உடனடியாக விடுவிக்க வேண்டும். அதன்பின்னர், மக்களுடன் பேசுவதற்கு வரட்டும் -என்றார். (பு)

## காணாமல் ஆக்கப்பட்டோருக்கு..

தேவானந்தா தெரிவித்துள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய பிரச்சினையை அரசு பொருட்படுத்தாத நிலையில், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இந்த விடயம் பேசப்படவுள்ளது. ஐ.நா.வின் 46ஆவது கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிரான தீர்மானங்கள் வலுப்பெற்றுள்ள இந்தச் சூழலில் அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சர் டக்ளஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே இந்திய மீனவர்களுடைய பிரச்சினையைத் தீர்க்க, வடக்கு மீனவருடன் படகில் இந்தியா சென்று பேசுவேன் என்று தெரிவித்திருந்த நிலையில், தற்போது காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய உறவினர்களுக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுக்க முடியும் என்றும் தெரிவித்துள்ளார். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தவுக்கும், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சிலருக்கும் இடையில் நேற்று கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றுள்ளது. அந்தக் கலந்துரை[illegible]வி லேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களுடைய ஒத்துழைப்பு கிடைக்கு மாயின் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் குழு ஒன்றை அமைத்து ஒரு மாதத்தில் தீர்வைப் பெற்றுத்தர முடியும் என அமைச்சர் இதன்போது தெரிவித்துள்ளார். காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களை அமைச்சர் டக்ளஸ் சந்திக்கவுள்ளார் என்று தெரியவந்த போது, அமைச்சரைச் சந்திக்க மறுத்த வடக்கு, கிழக்கு மாகாணங்க ளின் காணாமல் ஆக்கப்டோரின் உறவினர்கள், தமது உறவினர் காணாமல் போனதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் பொறுப்பு என்று கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ப)

## பிரி... நீதிமன்றால்...

டோவுக்குச் சார்பாக நேற்றுமுன்தினம் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

**சம்பவம்**

2018ஆம் ஆண்டு பெப்ரவரி 4ஆம் திகதி இலங்கையின் சுதந்திர நாள் அன்று, பிரிட்டனில் உள்ள இலங்கைத் தூதரகம் முன்பாக தமிழ் மக்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர். இதன்போது இலங்கைத் தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகராகப் பணியாற்றிய மேஜர் ஜெனரல் பிரியங்க பெர்னாண்டோ, போராட்டத்தில் ஈடுபட்ட தமிழ் மக்களை நோக்கி கழுத்தை அறுப்பது போன்று சைகை செய்து அச்சுறுத்தினார்.

**வழக்கு**

இதனையடுத்து பிரிட்டன் வாழ் தமிழ் மக்களால் பிரியங்கவுக்கு எதிராக வெஸ்ட்மினிஸ்டர் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. 2019ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 6ஆம் திகதி வழங்கப்பட்ட தீர்ப்பில், பிரியங்க குற்றவாளி யாக இனங்காணப்பட்டார். அவருக்கு இராஜதந்திர விலக்கு வழங்கவும் நீதிமன்றம் மறுத்திருந்தது.

**மேன்முறையீடு**

வெஸ்ட் மினிஸ்டர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு எதிராக பிரியங்க பிரிட்டன் உயர் நீதிமன்றில் மேன்முறையீடு மேற்கொண்டார். இதன்போது பிரியங்கவின் வாதத்தை ஏற்றுக்கொண்ட மன்று அவரைக் குற்றவாளியாக அறிவித்த தீர்ப்பிலிருந்து விடுவித்தது. அத்துடன் வழக்குச் செலவுகளை புலம்பெயர் தமிழர்களே செலுத்தவேண்டும் என்றும் பணித்துள்ளது. (ஒ.க.இ)

## ஹெரோய்ன்...

அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார். யாழ்ப்பாணம் மார்ட்டீன் வீதி சந்தியில் வைத்து குறித்த சந்தேக நபர் நேற்றுக் காலை 11.30 மணிக்கு கைதுசெய்யப்பட்டார் என்று மதுவரித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். சந்தேக நபரிடமிருந்து 2 லட்சம் ரூபா பெறுமதியான 20 கிராம் ஹெரோய்ன் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் வழங்கிய தகவலின் அடிப்படையிலேயே சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டார் என்று மதுவரித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். சந்தேக நபர் போதைப் பொருளை சிறைக் கைதி களுக்கு விநியோகித்திருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகின்றது. (ம-319)

## வடக்கில்...

ணத்தில் இருவரும் முல்லைத்தீவில் ஒருவரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஆய்வுகூடத்தில் 419 பேரின் மாதிரிகள் இன்று (நேற்று) பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. 3 பேருக்குத் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் தனிமைப்படுத்தல் விடுதியில் கொரோனாத் தொற்று அறிகுறிகளுடன் சேர்க்கப்பட்ட சுண்டுக்குளியைச் சேர்ந்த 37 வயதுடைய ஆண் மற்றும் சாவகச்சேரி மருத்துவமனையில் கொரோனா அறிகுறிகளுடன் சேர்க்கப்பட்ட பெண் ஆகியோரே யாழ்ப்பாணத்தில் தொற்றாளர்களாக அடையாளப்படுத்தப்பட்டவர்கள். முல்லைத் தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பில் பெண் ஒருவருக்குத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர் ஆடைத்தொழிற்சாலையில் பணியாற்றும் தொற்றால் பாதிக்கப்பட்ட ஒருவருடன் தொடர்புடையவர் - என்றார். (ம-26)

## இரண்டு...

குழுவின் தவிசாளர் நிமல் ஜீ.புஞ்சிஹேவா தெரிவித்தார். மாகாண சபைகளுக்கான தேர்தலை இந்த வருடத்துக்குள் நடத்தி முடிக்க முடியுமா என்று எழுப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது.

மாகாண சபைகளுக்கான தேர்தலை பழைய சட்டத்தின் பிரகாரமா அல்லது புதிய சட்டத்தின் பிரகாரமா நடத்துவது என்பது தொடர்பில் முடிவெடுத்து அதற்குத் தேவையான சட்ட வரைவை அரசு நாடாளுமன்றம் ஊடாக மேற்கொள்ள வேண்டும்.

அவ்வாறு மேற்கொண்ட பின்னர் சுகாதார வழிகாட்டல்களையும் கருத்தில் கொண்டு இரண்டு அல்லது இரண்டரை மாதங்களுக்குள் தேர்தலை நடத்த முடியும். ஏற்கனவே ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தல் என்பவை சுகாதார வழிகாட்டல்களுக்கு மத்தியிலேயே நடைபெற்றன. எனவே, இந்தத் தேர்தலை நடத்துவதும் சவாலாக அமையாது. மாகாணசபை பொறிமுறை இயங்கினாலும், மக்கள் பிரதிநிதித்துவம் இல்லை. எனவே, மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட வேண்டும். அதற்காகவே விரைவில் சட்டவரைவைத் தயாரித்துத் தேர்தலை நடத்த வேண்டும் என்ற யோசனையை தேர்தல் ஆணைக்குழுவும் முன்வைத்துள்ளது என்றார். (க-44)

## யாழ். கரப்பந்தாட்ட சங்கத்தின் தொடர் இன்று ஆரம்பமாகிறது!

யாழ்ப்பாணம், மார்ச் 21

உதயன் ஊடக அனுசரணையில் யாழ்ப்பாணம் கரப்பந்தாட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில் 'ஜெ.வி.எல்.' கரப்பந்தாட்டத் தொடர் இன்று ஆரம்பமாகின்றது.

இந்தத் தொடருக்கான வீரர்கள் ஏல முறையில் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர். 10 அணிகள் தொடரில் பங்குபற்றுகின்றன. இன்று காலை 8.45 மணியளவில் தொடருக்கான ஆரம்ப விழா இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் நீர்வைப் பசங்க அணியை எதிர்த்து சங்கானை மக்கள் ஒன்றிய சலஞ்சர்ஸ் அணி மோதுகின்றது. இரண்டாவது ஆட்டத்தில் மட்டுவில் ஸ்பைகஸ் அணியை எதிர்த்து உதிக்கும் தீவகம் அணி மோதவுள்ளது. மூன்றாவது ஆட்டத்தில் ஆவரங்கால் கிங்ஸ் அணியை எதிர்த்து சென்றல் ஸ்பைகஸ் அச்சுவேலி அணி மோதவுள்ளது. நான்காவது ஆட்டத்தில் அரியாலை கில்லாடிகள் அணியை எதிர்த்து வல்வையூர் வாரியர்ஸ் அணி மோதவுள்ளது. (ம-320,319)


24
SINGER
“ குளிர்ச்சியும்
ஆரோக்கியமும்
மகிழ்ச்சியும் ”
10
இலவசம்
3
Split Type குளிரூட்டிகள்
24BTU வரை
ரூ. 18,000/-
பணக்கழிவு
Inverter குளிரூட்டிகள்
12BTU இலிருந்து 24BTU வரை
ரூ. 96,999/-
ரூ. 11,000/-
பணக்கழிவு
Ceiling Mounted குளிரூட்டிகள்
36BTU இலிருந்து 60BTU வரை
ரூ. 289,999/-
ரூ. 15,000/-
பணக்கழிவு
Floor Standing குளிரூட்டிகள்
36BTU இலிருந்து 60BTU வரை
ரூ. 381,899/-
ரூ. 15,000/-
பணக்கழிவு
60 மாதங்கள் வரை வட்டி இன்றி
HNB HSBC NDB
SINGER HITACHI
நிபந்தனைகளுக்குட்பட்டது
011 5 400 400 www.singer.lk
SINGER

பக்கங்கள்: 24

# சஞ்சீவி

Registered as a Newspaper

மலை 33: வள்ளுவர் ஆண்டு : 2051 பங்குனி 8 ஞாயிற்றுக்கிழமை (21.03.2021) சிகரம் : 40

நாங்கள் வந்தால் நாலே நாளில் நாட்டில்
பாங்காக மாறுமுங்கள் வாழ்வெல்லாம் – வாங்கோ
வாக்களிச்சு பதவியில ஏத்துங்கோ எண்டவர்
நாக்கை மாத்தி கறுவாச் சுருட்டடிக்கும் அழகைப் பாரீர்!

*ஒட்டுக்குழு சுவாமிகள்*



# மூன்று பிள்ளை நல்லதங்காள்!

## பிறந்தநாளில் சாகத் துணிந்த பெண்

## ஏன் குதித்தார்கள் கிணற்றுக்குள்?



## பறிபோன பிஞ்சுகளின் உயிர்

உளவாளி

ஐயோ..! ஆராவது காப்பாத்துங்கோ... காப்பாத்துங்கோ'

ஒரு பெண்ணில் அலறல்.

அந்தப் பக்கத்தால் வயலுக்கு வேலை செய்யச் சென்றுகொண்டிருந்தவர் இந்த அலறலைக் கேட்டு சுற்று முற்றும் பார்த்தார். எவருமில்லை. திரும்பவும் அதே கதறல்.

இப்போது கோயிலடியில் படித்துக்கொண்டிருந்துவிட்டு வந்த மாணவனின் காதிலும் அந்த அலறல் கேட்க, இருவரும் இணைந்து சத்தம் வரும் இடத்தைக் கண்டுபிடிக்க முனைந்தனர்.

மீண்டும் அலறல்...

அந்த அலறல் கோயில் கிணற்றுக்குள் இருந்து வருவதை இருவரும் கண்டறிந்தனர். உடனேயே ஓடிச்சென்று பார்த்தனர். அங்கே சிறுவன் ஒருவனின் சடலம் மிதந்துகொண்டிருக்க, படியைப் பிடித்தவாறு ஒரு பெண் அலறிக்கொண்டிருந்தாள். அதுவும் அவர்களுக்கு நன்கு பரிச்சயமான பெண்.

விடயம் ஒரேநொடியில் வட்டக்கச்சி முழுதும் பரவிவிட, கிணற்றைச் சுற்றிப் பெருங்கூட்டம். வந்தவர்கள் எவரும் வெறுமனே வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கவில்லை. கயிற்றின் துணையோடு கிணற்றுக்குள் இறங்கிய ஒரு இளைஞன், அந்தப் பெண்ணையும், மிதந்து கொண்டிருந்த குழந்தையையும் வெளியே மீட்டெடுத்து வந்தான்.அதற்கிடையில் சம்பவம் குறித்து பொலிஸுக்கும், அம்புலன்ஸுக்கும் அறிவிக்கப்பட்டிருந்தது.

“ஐயோ..! எனக்கு ஏதோ செய்யுது. கொஸ்பிற்றலுக்கு கூட்டிக்கொண்டு போங்கோ” என்று கதறிய அந்தப் பெண் ( அவள்), அசைவற்றுக் கிடந்த சிறுவனை கட்டி அணைத்து “தம்பி தம்பி” என தேம்பியழத் தொடங்கினாள். அவள் கிணற்றுக்குள் விழுந்த தகவல் அறிந்து, அந்த இடத்துக்கு ஓடி வந்தார் அவளின் தாய்.

22



> கடந்த பதினொரு ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ் மக்கள் மத்தியில் நடந்த எந்த ஒரு போராட்டமும் ஏன் இறுதி வெற்றியைப் பெறவில்லை என்ற கேள்விக்கு தமிழ் அரசியல்வாதிகளும் செயற்பாட்டாளர்களும் கருத்துருவாக்கிகளும் விடைகாண வேண்டும்.

# ஜெனிவா காலத்து போராட்டங்கள்?

O நிலாந்தன்

சில வாரங்களுக்கு முன் 'சூம்' செயலியின் மூலம் நிகழ்ந்த ஒரு மெய்நிகர் கருத்தரங்கில் புலம்பெயர்ந்து வாழும் சிங்கள புலமைச் செயற்பாட்டாளரான கலாநிதி யூட் லால் பெர்னாண்டோ ஒரு விடயத்தை அழுத்தமாகச் சொன்னார் "கடந்த 11 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ் மக்கள் குறிப் பிட்டுச் சொல்லக் கூடிய வெற்றி எதையும் பெறவில்லை" என்று.

அவர் கூறியது உண்மையே என்பதைத் தான் கடந்த வாரம் பிரித்தானியாவில் முடித்து வைக்கப்பட்ட உண்ணாவிரதம் நிரூபித்திருக்கிறதா?

பிரித்தானியாவில் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்த பெண்மணி தனது உண்ணாவிரதத்தை இடையில் நிறுத்திக் கொண்டார். அவருடைய பசியை இந்தக்கட்டுரை மதிக்கிறது. எனினும் அவருடைய கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டுவிட்டன என ஏற்பாட்டாளர்கள் கூறுவது உண்மையல்ல. அவருடைய பிரதான கோரிக்கைகள் எவையும் பெரும்பாலும் நிறைவேற்றப்படவில்லை என்பதே உண்மை. ஒரு கோரிக்கை மட்டும் ஓரளவுக்கு நிறைவேற்றப்படக் கூடும் என்ற தோற்றம் உத்தேச ஜெனிவா தீர்மான வரைபில் காணப்படுகிறது. சாட்சிகளையும் ஆதாரங்களையும் திரட்டுவதற்கான ஒரு பொறிமுறை பற்றி அதில் கூறப்படுகிறது. ஆனால் அங்கேயும் கூட பிரச்சினை உண்டு. சிரியாவில் உருவாக்கப்பட்ட அத்தகைய ஒரு பொறிமுறை ஐநா. பொதுச்சபையில் கீழ்தான் உருவாக்கப்பட்டது. ஆனால் இங்கேயோ இலங்கைத் தீவில் அப்படி ஒரு பொறிமுறை எப்படி அமையும் என்பதைப் பற்றிய தெளிவான சித்திரம் கிடைக்கவில்லை. அது பெருமளவுக்கு மனித உரிமைகள் சபையின் கீழ்தான் அமையலாம் என்று விளங்கிக் கொள்ளப்படுகிறது.

கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக ஈழத்தமிழர்கள் மத்தியில் ஏற்பாடு செய்யப்பட்ட சாகும் வரையிலான உண்ணாவிரதங்களில் அநேகமானவை இப்படித்தான் முடிவடைந்தன. அந்த உண்ணாவிரதங்களை முன்னெடுத்த அநேகர் இறுதிவரை போராடி சாகத் தயாராக இருக்கவில்லை. அதற்காக இந்தக்கட்டுரை உண்ணாவிரதிகள் சாக வேண்டும் என்று கேட்கவில்லை. சாகும் வரை உண்ணாவிரதம் எனப்படுவது ஒரு கடைசி ஆயுதம். அதை கையில் எடுப்பவர்கள் அந்தப் போராட்டத்தை இறுதிவரை கொண்டு போகக்கூடிய துணிச்சலும் திடசங்கற்பமும் மிக்கவர்களாக இருக்க வேண்டும். இல்லையென்றால் தமிழ் மக்களின் போராட்டங்களை உலகம் பகிடியாகவே பார்க்கும்.

அதேசமயம் அந்தப் போராட்டத்தின் முடிவு தமிழ் மக்களுக்கு ஒரு மிகப்பெரிய வெற்றிடத்தை உணர்த்தியிருக்கிறது. எனது கடந்த வாரக் கட்டுரையில் கூறியதுபோல, தமிழ் மக்களுக்கு யார் பொறுப்பு என்ற கேள்வியை அது புதுப்பித்திருக்கிறது. தமிழ் மக்களின் நீதிக்கான போராட்டத்தை முழு உலகத்தின் கவனத்தையும் இலங்கை அரசாங்கத்தின் கவனத்தையும் ஈர்க்கத்தக்க விதத்தில் முன்னெடுப்பதற்கு ஒரு பொருத்தமான பொதுக் கட்டமைப்பு தமிழ் மக்கள் மத்தியில் இல்லை. அவ்வாறான ஒரு கட்டமைப்பு இல்லாத வெற்றிடத்தில்தான் யார்யாரோ தமிழ் மக்களை தத்தெடுக்கிறார்கள். யார், யாரோ தன்னார்வமாக போராடுகிறார்கள். யார், யாரோ மக்கள் போராட்டங்களுக்கு உரிமை கோருகிறார்கள். அரசற்ற தமிழ் மக்களுக்கு உலகம் முழுவதும் எத்தனை அம்பாசிடர்கள்?

இதுதான் பிரச்சினை. இந்த வெற்றிடத்தைத்தான் இடையில் நிறுத்தப்பட்ட மேற்படி உண்ணாவிரதமும் நிரூபித்திருக்கிறதா? எனவே கடந்த பதினொரு ஆண்டுகளுக்கும் மேலாக நடத்திய போராட்டங்கள் குறித்து தொகுத்துப் பார்க்க வேண்டிய ஒரு கட்டாயம் இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. இந்த உண்ணாவிரதம் மட்டுமல்ல, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் முன்னெடுத்த உண்ணாவிரதம்; சிறைச்சாலைகளில் அரசியல் கைதிகள் முன்னெடுத்த உண்ணாவிரதம் ஆகியவை உள்ளடங்கலாக கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக தமிழ் மக்கள் போராடி வருகிறார்கள். இந்தப் போராட்டங்களில் பெரும்பாலானவை ஜெனிவா கூட்டத்தொடரை மையமாகக் கொண்டவை. ஆனால் இந்தப்போராட்டங்களின் விளைவாக ஜெனிவா தீர்மானங்க ளில் தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் திருப்திகரமான மாற்றங்களை ஏற்படுத்த முடியவில்லை மட்டுமல்ல, இப்போராட்டங்களின் விளைவாக அரசியல் கைதிகளையும் விடுவிக்க முடியவில்லை; காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கும் நீதி கிடைக்கவில்லை; இழப்பீடும் கிடைக்கவில்லை.

காணிகளுக்கான போராட்டம் தொடக்கத்தில் சில வெற்றிகளைப் பெற்றது. கேப்பாபிலவில் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் காணிகளை விடுவிப்பதற்கான போராட்டத்தில் சில தொடக்க வெற்றிகள் கிடைத்தன. ஆனால் அதற்குப்பின் போராட்டங்களும் சோர்ந்துவிட்டன. அதுமட்டுமல்ல இப்பொழுது நில ஆக்கிரமிப்பு புதிய வடிவத்தில் புதிய வேகத்தில் முன்னெடுக்கப்படுகிறது. அதைப்போலவே காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டமும் தெருவோரங்களில் கவனிக்கப்படாத ஒன்றாக மாறியிருக்கிறது. அரசியல் கைதிகள் தொடர்ச்சியாக போராடி வருகிறார்கள். ஆனால் அரசாங்கம் வழமையான நீதிமன்ற நடைமுறைகளின் படிதான் சில கைதிகளை விடுதலை செய்திருக்கிறது.

எனவே தொகுத்துப் பார்த்தால் கடந்த பதினொரு ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ் மக்கள் மத்தியில் நடந்த எந்த ஒரு போராட்டமும் ஏன் இறுதி வெற்றியை பெறவில்லை என்ற கேள்விக்கு தமிழ் அரசியல்வாதிகளும் செயற்பாட்டாளர்களும் கருத்துருவாக்கிகளும் விடை காண வேண்டும்.

மேலும் கெடுபிடி போருக்குப் பின்னரான தகவல் புரட்சியின் விளைவாக ஏற்பட்டிருக்கும் சமூகவலைத் தளங்களின் காலத்தில் மக்கள் போராட்டங்கள் உலகம் முழுவதும் எவ்வாறு முன்னெடுக்கப்படுகின்றன? அவற்றில் வெற்றி பெற்றவை எத்தனை? வெற்றி பெறாதவை எத்தனை? என்பவை குறித்தும் ஒரு தொகுக்கப்பட்ட பார்வை அவசியம். 2011ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதத்திலிருந்து அமெரிக்காவின் வோல் ஸ்ட்ரீட்றை முற்றுகை யிட்டு ஒரு போராட்டம் முன்னெடுக்கப் பட்டது. மாதக்கணக்காக நடந்த அந்த போராட்டம் முழு வெற்றி பெறவில்லை. மாதக்கணக்கில் நீண்ட போராட்டம் ஒருகட்டத்தில் சோர்ந்துபோய் தேங்கி விட்டது.

அப்படித்தான் இப்போது டெல்லியில் போராடிக்கொண்டிருக்கும் விவசாயி களும் அவர்களுடைய கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத ஒருநிலையில் போராட்டக்களத்துக்கு அருகே நீண்ட காலம் தங்கியிருந்து போராடத்தக்க ஏற்பாடுகளை செய்யத் தொடங்கியிருக்கிறார்கள். தமக்குரிய தற்காலிக வீடுகளை அவர்கள் கட்டி வருவதாக கடந்த வாரம் செய்திகள் கிடைத்தன. ஒரு படை நடவடிக்கையில் யுத்த களத்தில் கைப்பற்றிய இடங்களில் படைத்தரப்பு தற்காலிகமான வசிப்பிடங்களை ஏற்படுத்தி தரித்து நிற்பதை போல சாத்வீக போராட்டங்களிலும் அவ்வாறு தற்காலிக வசிப்பிடங்களை ஏற்படுத்தி தங்கியிருந்து போராட வேண்டிய ஒரு காலகட்டம் உருவாகி விட்டதா?

வோல் ஸ்ட்ரீட் போராட்டம், டெல்லி விவசாயிகளின் போராட்டம் இரண்டிலும் ஒரு விஷயத்தை கற்றுக் கொள்ள வேண்டும். போராட்டக்காரர்களை அரசாங்கங்கள் மூர்க்கமாக தடுத்து நிறுத்தவோ நசுக்கவோ பெருமளவுக்கு முயற்சிக்கவில்லை. போராட்டங்களை அவற்றின் பாட்டிலேயே கண்டுகொள்ளாமல் விட்டுவிடுகின்றன. அவை தாமாக சோர்ந்து விடும் என்று அரசுகள் நம்புகின்றன. ஒரு போராட்டத்தை நசுக்க நசுக்க அது மேலும் வேகம் கொள்ளும், வீரியம் பெறும். அதற்கு உலகக் கவனிப்பும் ஊடக கவனிப்பும் கிடைக்கும். அதுதான் கொவிட் 19 சூழலுக்கு சற்றுமுன் நடந்த ஹொங்கொங் போராட்டத்துக்கு நடந்தது.

ஆனால் அரசியல் போராட்டங்களை நசுக்க முற்படாமல் கண்டும் காணாமல் விட்டால் போராட்டங்களுக்கு என்ன நடக்கும்? ஒருகட்டத்தில் தாமாக சோர்ந்துவிடும் என்று அரசுகள் நம்புகின்றனவா?

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான போராட்டங்கள் அப்படி ஒரு கட்டத்தைத்தான் அடைந்துவிட்டன. இடைக்கிடை கவனவீர்ப்பு போராட்டங்களை அன்னையர் முன்னெடுக்கிறார்கள். ஆனாலும் தெருவோரங்களில் ஆண்டுக்கணக்கில் குந்திக் கொண்டிருக்கும் அன்னையரை அரசாங்கமும் கண்டுகொள்ளவில்லை. உலகமும் கண்டுகொள்ளவில்லை. இவை எல்லாவற்றையும் விட கொடுமையானது. அவர்களுடைய சொந்தமக்களும் கண்டு கொள்ளவில்லை என்பதுதான். இந்தப்போராட்டங்கள் அவற்றின்பாட்டில் போய்க்கொண்டேயிருக்கின்றன. தமிழ் மக்கள் தங்கள் பாட்டில் போய் கொண்டேயிருக்கிறார்கள். இப்போராட்டங்களை அரசாங்கம் பெருமளவுக்கு தடுக்கவில்லை. இதன் மூலம் அவை ஒரு கட்டத்தில் தாமாகவே சோர்ந்து விடும் அல்லது வயதான பெற்றோர் படிப்படியாக இறந்துபோக போராட்டம் கைவிடப்பட்டுவிடும் என்று அரசாங்கம் நம்புகின்றதா?

எனவே இதுபோன்ற போராட்டங்களில் இருந்து தமிழ் மக்கள் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும். அதேசமயம் கொவிட் 19 சூழலுக்கு முன்னதாக ஹொங்கொங்கில் மக்கள் தெருக்களில் திரண்டு நின்று போராடினார்கள். ஆனால் மேற்கத்திய ஊடகங்கள் அந்த போராட்டத்தை நோக்கி பெருமளவுக்கு கவனத்தை குவித்தன. ஆனால் கொவிட் 19 பெருந் தொற்றோடு அப் போராட்டம் பின் தள்ளப்பட்டுவிட்டது. அதிலிருந்தும் தமிழ் மக்கள் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும்.

> ஒரு போராட்டத்தை நசுக்க நசுக்க அது மேலும் வேகம் கொள்ளும், வீரியம் பெறும். அதற்கு உலகக் கவனிப்பும் ஊடக கவனிப்பும் கிடைக்கும். அதுதான் கொவிட்-19 சூழலுக்கு சற்று முன் நடந்த ஹொங்கொங் போராட்டத்துக்கு நடந்தது. ஆனால் அரசியல் போராட்டங்களை நசுக்க முற்படாமல் கண்டும் காணா மல் விட்டால் போராட்டங்களுக்கு என்ன நடக்கும்? ஒருகட்டத்தில் தாமாக சோர்ந்துவிடும் என்று அரசுகள் நம்புகின்றனவா?

(08ஆம் பக்கம் பார்க்க)

# பிரிட்டன் நாடாளுமன்றில் ஒலித்த இன அழிப்புக்கான சர்வதேச நீதி





O அ.நிக்ஸன்

ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் வாக்கெடுப்புக்கு வரப்போகும் இலங்கை நிலைமை தொடர்பான தீர்மான வரைபில் மாற்றங்களை மேற்கொள்வதற்கான இறுதித் தவணையும் முடிந்து இரண்டு நாள்களின் பின்னரே பிரித்தானிய நாடாளுமன்றில் வியாழனன்று விவாதம் வந்தது. இதனால் உடனடிப் பலன் இல்லாவிடினும் ஈழத்தமிழர்கள் தொடரவேண்டிய இன அழிப்பு நீதிக்கான போராட்டத்தின் திசை எது என்பது நிரூபணமாகியுள்ளது. இது உலகளாவிய ஈழத்தமிழருக்கு நம்பிக்கை தரும் ஒரு படிப்பினை. இரண்டு தரப்புகளும் புரிந்த போர்க்குற்றம் மற்றும் மானுடத்துக்கெதிரான குற்றங்கள் என்ற போர்வையிலேயே இலங்கை மனித உரிமை விவகாரத்தை அணுகவேண்டும் என்ற மாயையை சர்வதேச இணக்க அரசியல் ஈழத்தமிழர்களுக்குள் கடந்த 12 வருடங்களாகப் படிப்படியாக விதைத்து விட்டிருந்தது.

இந்த மாயையைப் போக்க ஒரு போராட்டம் ஈழத்தமிழர்களுக்குத் தேவைப்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் தான் புலம்பெயர் ஈழத்தமிழ்ப் பெண்மணி அம்பிகை தனது உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கினார்.

அம்பிகை தொடர்பாக சமூக வலைத்தளங்களில் வெளிப்படும் தனிப்பட்ட வாதப் பிரதிவாதங்களுக்கும், போராட்டத்தை முடித்துவைத்தவர்கள் இறுதியில் மேற்கொண்ட இணக்க அரசியல் அறிக்கை தொடர்பான விமர்சனங்களுக்கும் அப்பால், அவரது போராட்டம் ஒரு திசையைத் துல்லியமாகக் காட்டுவதில் வெற்றி பெற்றிருக்கிறது. ஈழத் தமிழர்களுக்கு போராட்ட அரசியல் தொடர்பான நம்பிக்கையைப் புதுப்பித்திருக்கிறது.

**புலம்பெயர் தமிழர்களின் அடுத்த நகர்வு என்ன?**

பதினேழு நாளகளாக அம்பிகை துணிச்சலாக முன்னெடுத்திருந்த உணவு தவிர்ப்புப் போராட்டம் ஏற்படுத்தியிருந்த எழுச்சி பிரித்தானியாவில் இணக்க அரசியலுக்குள்ளும் இராஜதந்திர மாயைக்குள்ளும் செத்துக்கிடந்த புலம்பெயர் அமைப்புகளை மீண்டும் 2009ஆம் ஆண்டு காலகட்டத்தைப்



போன்று தட்டி எழுப்பி நிறுத்தியுள்ளது என்பது வியாழனன்று நிரூபணமாகியுள்ளது. ஏற்பட்டுள்ள எழுச்சியானது ஒரு தனிமனித முயற்சியின் விளைவு மாத்திரம் அல்ல. ஈழத்தமிழரிடையே பிரித்தா னிய அரசு தொடர்பாக நீறு பூத்த நெருப்பாக இருந்த கோபமே வெளியான பூச்சியவரைபோடு சுவாலையாக மாறி வெளிப்பட்டிருக்கிறது. ஜெனிவாவில் நடைபெறும் தற்போதைய அமர்வுடனும் நடந்தேறியிருக்கிற உடனடிப் பயனற்ற நாடாளுமன்ற விவாதத்தோடும் இந்த எழுச்சி அடங்கிப்போய் மீண்டும் நீறு பூத்துவிடக் கூடாது.

அதை விடவும் இன அழிப்பு நீதிக்கான அறம் சார்ந்த போராட்ட அரசியலையே ஈழத்தமிழர்கள் முன்னிலைப்படுத்தவேண்டும் என்பதே பொருத்தமான அணுகுமுறை என்பது ஐயந்திரிபற வெளிப்பட்டிருக்கிறது. புலம்பெயர் ஈழத்தமிழரிடையே ஏற்பட்டிருக்கும் எழுச்சியை அடுத்த பதினைந்து மாதங்களுக்குள் பிரித்தானியாவில் அறிவுபூர்வமாக ஆற்றுப்படுத்துவதற்கான ஆற்றல் அவரது போராட்டத்தை நெறிப்படுத்தியவர்களிடம் இருக்கிறதா என்பது கேள்விக்குறியே. அறத்தின் பாற்பட்ட இந்தக் கோபத்தை அறிவு பூர்வமாக பிரித்தானிய அரசியலுக்குள் எவ்வாறு ஆற்றுப்படுத்துவது என்பதே அடுத்த கட்ட நகர்வுக்கு வழிவகுக்கும்.

வியாழனன்று பிரித்தானிய நாடாளுமன்றில் தமிழ் இன அழிப்புக்கு நீதி கோரும் குரல்களை எதிர்க்கட்சி உறுப்பினர்களிற் பலர் எழுப்பியுள்ளனர். தொழிற்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சோபெய்ன் மக்டொனா இந்த விவாதத்தைக் கொண்டுவந்திருந்தார்.

**பிரிட்டன் நாடாளுமன்றத்தில் நம்பிக்கைக்கான சிறு ஒளி!**

பிரித்தானியாவில் வதியும் அரை மில்லியன் வரையான புலம்பெயர் தமிழர்கள் இலங்கைத்தீவில் தமக்கு நடைபெற்றது இன அழிப்பு என்ற குற்றச்சாட்டை போர் முடிந்து 12 வருடங்களின் பின்பும் தொடர்ந்தும் வலிமையாக முன்வைத்துவருகிறார்கள் என்றும் அதற்கான சர்வதேச விசாரணையை அவர்கள் வலியுறுத்துகிறார்கள் என்பதையும் மக் டொனா உணர்வுபூர்வமாக முன்நிறுத்தி உரையாற்றினார். அவரின் கருத்தை பல எதிர்க் கட்சி உறுப்பினர்கள் ஆமோதித்து உரையாற்றினர்.

பதில் சொல்லவேண்டிய ஆளும் கட்சியான கொன்ஸர்வேடிவ் கட்சியின் வெளிநாட்டமைச்சரோ அல்லது பொது நலவாயத்துக்கும் தென்னாசியாவுக்குமான இராஜாங்க அமைச்சரான விம்பிள்டன் பிரபு அஹ்மத்தோ சமுகமளித்திருக்கவில்லை. எனினும் பிரித்தானியாவின் ஆசியாவுக்கான இராஜாங்க அமைச்சரும் வேல்ஸ் பகுதிக்கான கொன்ஸவேடிவ் கட்சி பாராளுமன்ற உறுப்பினருமான நைஜல் அடம்ஸ் எழுப்பப்பட்ட கேள்விகளில் சிலவற்றுக்கு மட்டும் பதில்களை வழங்கினார்.

ஆளும் கட்சி உறுப்பினர்களிற் சிலர் பெப்ரவரி மாதப் பூச்சிய வரைபிலிருந்து மார்ச் 12ஆம் திகதி முன்வைக்கப்பட்டுள்ள இறுதி வரைபில் கணிசமான முன்னேற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக வாதிட முற்பட்டனர். குறிப்பாக குற்றங்கள் தொடர்பான ஆதாரங்களைச் சேகரிப்பது என்ற விடயத்தில் முன்னேற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக வாதிட்டனர்.

எனினும் இது எதிர்பார்க்கப்பட்ட சிரியா தொடர்பான சர்வதேச சுயாதீனப் பொறிமுறை போன்ற ஒன்று அல்ல, வெறும் உயர்ஸ்தானிகரின் அலுவலகப் பொறிமுறை மட்டுமே. கேட்டது வேறு, கிடைப்பது வேறு என்று எதிர்க் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் தமது கருத்தை ஈழத்தமிழர்கள் சார்பாக உரத்து ஒலித்தனர். முள்ளிவாய்க்கால் இன அழிப்பு என்று உச்சரிப்புத் தவறாமல் பலர் அழுத்தமாகத் தமது கருத்தை வெளியிட்டமை ஈழத்தமிழர் பலருக்கு மன ஆறுதலைத் தந்திருக்கிறது என்று பிரித்தானியா வாழ் செயற்பாட்டாளர்கள் சுட்டுகின்றனர்.

இலங்கையில் ஒற்றை ஆட்சித் தன்மையைத் தனது காலனித்துவ காலத்தில் திணித்துவிட்ட பிரித்தானியாவுக்கு இலங்கைத் தீவில் நடந்தேறியுள்ள குற்றங்களுக்குச் சர்வதேச நீதியை நிலைநாட்டுவதில் பெரும் பங்கு உண்டு என்று ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் எடுத்தியம்பினார். இலங்கையில் உள்ள தூதரலாயத்தில் ஏன் இன்றும் பிரித்தானியா பாதுகாப்பு ஆலோசகர் ஒருவரை வைத்திருக்கிறது. அவர் உடனடியாகத் திருப்பி அழைக்கப்படவேண்டும் என்று இன்னொரு நாடாளுமன்ற உறுப்பினர் குரலெழுப்பினார். உண்ணாவிரதம் மேற்கொண்ட அம்பிகையின் பெயரைப் பலரும் குறிப்பிட்டனர்.


ஐ.நா. மன்று ஊடாக குற்றவியல் நீதிக்கான ஆதாரங்களைத் தொகுக்கும் சர்வதேச சுயாதீனப் பொறிமுறையைக் கொண்டுவருவது சிரமம் என்றால் பிரித்தானியாவே அதற்கான முன்னெடுப்பை ஐ.நா. பொறிமுறைக்கு வெளியில் ஏன் முன்னெடுக்கமுடியாது என்றும் ஒருவர் கேள்வி எழுப்பினார். தமிழர்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படவேண்டும் என்ற குரலும் எழுந்தது. பலரும் தமிழ் முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் இன, மத ரீதியான அடக்குமுறைகளைச் சுட்டிக்காட்டினார்கள். ஐ.நா. மனித உரிமைப் பொறிமுறை தவறியதாக வரலாறு எழுதப்படக்கூடாது என்றார் ஒருவர். இலங்கையில் போர்க் குற்றமிழைத்த தளபதிகள் அரச பதவிகளில் இருக்கிறார்கள் என்பதும் ஜனாதிபதியே குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவர் என்பதையும் பலரும் எடுத்துரைத்தனர். சவேந்திர சில்வா, கமல் குணரட்ண ஆகியோரின் பெயர்கள் பலரிடம் இருந்து வெளிப்பட்டன.

ஐ.நா. அமைதிப்படைப் பணியில் இருந்து இலங்கை இராணுவத்தினர் புறக்கணிக் கப்படவேண்டும் என்றனர் சிலர். மேலும் சிலர் பொருளாதார மற்றும் வாணிபத் தடைகளை பிரித்தானியா இலங்கை மீது விதிக்கவேண்டும் என்று வாதாடினர்.

புவிசார் அரசியலின் தாக்கத்தைச் சுட்டிக்காட்டிய ஒருவர் இலங்கைத் தீவில் தமிழர்கள் இன அழிப்புக்குள்ளாயிருப்பதை சீனாவின் உயிகுர் முஸ்லிம்களின் நிலையுடன் ஒப்பிட்டுப் பேசினார். தமிழ் அகதிகள் திருப்பி அனுப்பப்படக்கூடாது என்றார் ஒருவர்.

இந்தக் கேள்விகளுக்குப் பதிலளிப்பதற்கு தென் ஆசியாவுக்கான இராஜாங்க அமைச்சர் சபையில் சமுகமளித்திருக்கவில்லை. எனினும் அவர் சார்பாகப் பதிலளித்த ஆசியாவுக்கான இராஜாங்க அமைச்சர் நைஜல் அடம்ஸ் இலங்கையைத் தொடர்ந்தும் மனித உரிமைப் பேரவையின் அட்டவணைக்குள் வைத்திருப்பதற்கே தாம் பெரும்பாடு படவேண்டியிருப்பதாகக் கூறிய அதேவேளை விடுதலைப் புலிகளைப் பயங்கரவாத இயக்கம் என்றும் வர்ணித்தார். இலங்கை பிரித்தானியாவின் நட்பு நாடு என்றும் அவர் வர்ணித்தார். அதேவேளை பொறுப்புக்கூறலும் முக்கியமானது என்றார் அவர். இலங்கைத் தரப்புகள் தொடர்பான தடைகள் பரிசீலிக்கப்படும் என்றும் கூறினார்.

விவாதத்தை ஆரம்பித்து வைத்திருந்த மக் டொனா இறுதியாகவும் இரண்டு நிமிடங்கள் உணர்வுபூர்வமாக உரையாற்றினார். கொண்டுவரப்பட்டிருக்கும் மாற்றங்கள் போதாது என்பதைச் சுட்டிக்காட்டிய அவர் இலங்கை அரசு கடும் நடவடிக்கைளை மட்டுமே விளங்கிக்கொள்ளும் என்று இடித்துரைத்தார். பிரித்தானியாவில் கட்சி அரசியலை ஈழத்தமிழரின் போராட்ட அரசியல் மீண்டும் ஒருதரம் உலுப்பியிருக்கிறது. எனினும், பூச்சிய வரைபின் குறைந்த மாற்றங்களின் போதாமை குறித்த கோபத்தையும் எழுச்சியையும் பொருத்தமாக ஆற்றுப்படுத்துவது காலத்தின் தேவையாகிறது.



# முருங்கையில் வேதாளம்!

○ ஆர்.பிரகாஷ்

ட்ரம்பின் ஆட்சிக்காலத்தில் சற்று ஓய்வுக்கு வந்திருந்த அமெரிக்கா - ரஷ்யா மோதல் பைடனின் ஆட்சிக்காலத்தில் மீண்டும் முருங்கைமரமேறி இருக்கின்றது. ஒபாமா எங்கு விட்டுச்சென்றாரோ அங்கிருந்து தன் நகர்வை ஆரம்பித்துள்ளார் பைடன்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் உலகமெங்கும் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்துவதுண்டு. அமெரிக்கா 'உலகப்பொலிஸ்' என்ற தோரணையைச் சொல்லாமல் சொல்லிநிற்பதில் அந்த நாட்டில் நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலுக்கும் கணிசமான பங்குண்டு. ஆக, அமெரிக்காவில் எவர் ஆட்சிப்பீடம் ஏறுகின்றாரோ அதற்கேற்பதான் அமெரிக்காவின் அடுத்த நான்கு வருட நகர்வுகளும் அமையும். இதனால், இந்தத் தேர்தலில் தாம் விரும்பும் நபரை வெற்றிபெற வைப்பதற்கு அமெரிக்காவுக்குப் போட்டியான இதர வல்லரசு நாடுகள் தலையீட்டைச் செலுத்துவதற்கு எத்தனிப்பதுண்டு. அதிலும் குறிப்பாக ரஷ்யா இந்த வகை அத்துமீறலை மேற்கொள்ளும் என்பது எழுதப்படாத விதியாகவே ஆகிவிட்டது.

அமெரிக்காவில் ஒவ்வொரு ஜனாதிபதித் தேர்தலின் பின்னரும் ரஷ்யாவின் தலையீடு இருந்ததா? என்று ஆராய்வதற்கு அமெரிக்கப் புலனாய்வுத்துறையால் தனிக்குழு அமைக்கப்படும். இந்தக் குழு கடந்த வருடம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ரஷ்யாவின் தலையீடு மிகையாக இருந்தது என்றும், குறிப்பாக ட்ரம்பை ஆட்சிப்பீடம் ஏற்றுவதில் புடின் தீவிரமாக இருந்தார் என்றும் அறிக்கையிட்டுள்ளது. இதையடுத்துத்தான் அமெரிக்கா - ரஷ்யா முறுகல் மீண்டும் சூடுபிடித்துள்ளது.


ட்ரம்பை ஆட்சிப்பீடம் ஏற்ற ரஷ்யா விரும்பியது என்ற தகவல் வெளியானதையடுத்து, 'புடின் ஒரு கொலையாளி' என்று விமர்சித்தார் அமெரிக்க அதிபர் பைடன். இதையடுத்து பைடனின் கூற்றுக்குக் கடும் கண்டனம் தெரிவித்த ரஷ்யா, அமெரிக்காவுடனான இராஜதந்திர உறவை முறித்துக்கொள்ளும் வகையில் வொஷிங்டனில் முகாமிட்டிருந்த அமெரிக்காவுக்கான ரஷ்யத் தூதர் அனடோலி அன்டோனோவை மொஸ்கோ திரும்புமாறு உத்தரவிட்டுள்ளது. இதையடுத்து, 'இதற்கான விலையை புடின் கொடுப்பார்' என்றுள்ளார் பைடன்.

## எதிர்பார்த்ததே?




பைடன் ரஷ்ய எதிர்ப்புக் கொள்கையுள்ளவர். அமெரிக்காவின் துணை அதிபர் உள்ளிட்ட முக்கியப் பொறுப்புக்களில் அவர் இருந்த போதெல்லாம் ரஷ்ய எதிர்ப்புக் கொள்கையை தீவிரமாகப் பின்பற்றிவர். அத்துடன், ஒபாமாவின் ஆட்சிக்காலத்தில் ரஷ்யாவுக்கு எதிராகக் கொண்டிருந்த கடும் போக்குக்கும் விதிக் கப்பட்ட பொருளாதாரத் தடைகளுக்கும் பைடன்தான் முதுகெலும்பு என்றும் சொல்லப்படுவதுண்டு. இதனால் பைடன் அதிபரானால் ரஷ்யாவுக்கு எதிரான போக்கு மீண்டும் நடைமுறைப்படுத்தப்படும் என்பது பொதுவான கணிப்பாக இருந்தது. இந்தக் கணிப்புகள் வெறும் கணிப்புகளாகவே இருந்துவிடாமல் அவற்றுக்குத் தற்போது உயிர்கொடுத்துள்ளார் பைடன்.

இனி, ரஷ்யாவுக்கு எதிரான பொருளாதாரத் தடைகள் பைடனால் இறுக்கப்படும். ரஷ்ய ஆதரவு நாடுகளுடன் அமெரிக்கா கொண்டிருக்கும் பகையுணர்வு மேலும் காரசாரமாகும். ட்ரம்பின் ஆட்சிக்காலத்தில் வடகொரியாவுடன் கொண்டிருந்த சமாதானப் போக்கு மீண்டும் முறிக்கப்பட்டு ஒபாமா விட்டுச் சென்ற இடத்தில் இருந்து அது தொடங்கப்படும். ட்ரம்பின் ஆட்சிக்காலத்தில் எவ்வாறு 'அமெரிக்க ஈரான்' மோதல் உச்சம் பெற்றிருந்ததோ அதேபோக்குஇனி 'அமெரிக்கா - ரஷ்யா' இடையே இருக்கும்.






○ மாயன்

தீபவர்மனும், பவளராணியும் தங்கள் பழைய வாழ்வை மீண்டும் அடைய காலச்சக்கரமே ஒரே வழி என முடிவெடுத்தபின், அங்கிருந்த எல்லோரும் ஒன்றாக இணைந்து அதனை அடைவது எப்படி என்று தீவிரமாகச் சிந்திக்கத் தொடங்கினர்

அப்போது காக்கை குப்தன்அ தன் இடுப்பில் இருந்த சுருக்குப் பையை அவிழ்த்தான். அதற்குள் இருந்து நைந்து போன நிலையில் இருந்த தோலால் உருவாக்கப்பட்ட வரைபடமொன்றை எடுத்தான். அதில் பல வர்ணங்களில் வெவ்வேறு விதமான உருவங்கள் வரையப்பட்டிருந்தன. எவருக்கும் அந்த வரைபடம் என்ன சொல்கிறது என்று புரியவில்லை.

" என்ன காக்கை குப்தரே, சிறுபிள்ளைகள் வரைந்து விளையாடியதா?" என்று கொஞ்சம் எள்ளலோடு கேட்டான் பரிவழுதி. அவனை செல்லமாக முறைத்துப் பார்த்துவிட்டு காக்கை குப்தன் அந்த வரைபடத்தை அப்படியே கீழே விரித்தான். பின்னர் மீண்டும் சுருக்குப் பையில் கையை விட்டு எடுத்தான். இப்போது அவனது பச்சை நிறப் பொடி. அதை அப்படியே அந்தத் தோலின் மீது தூவினான். இப்போது வரைபடத் தோலில் கட்டடங்களும், பாதைகளும், மலைகளும், காடுகளும், ஆறுகளும், விலங்குகளும் முப்பரிமாண வடிவில் தென்பட்டன.

எல்லோருக்கும் பேராச்சரியம்.

" காக்கைகுப்தரே, உம்மை சாதாரண ஆளென்றுதான் நினைத்தோம். ஆனால் இப்படி மாயம் செய்து மலைக்க வைத்து விட்டீர்களே" என்று இளஞ்சந்திரன் கூறினான்.

" இந்தப் புகழாரங்களையெல்லாம் பிறகு வைத்துக் கொள்வோம். இப்போது காரியத்தைக் கவனிப்போம்" என்று சொல்லிவிட்டு, வரைபடத்தைச் சுட்டிக்காட்டி, காலச்சக்கரம் இருக்குமிடத்தை அடையாளப்படுத்தினான் காக்கைகுப்தன்.

" இதோ இந்த நாகமலையில் தான் காலச்சக்கரம் ஒளித்து வைக்கப்பட்டுள்ளது. இந்த மலையை அவ்வளவு எளிதில் அடைய முடியாது. ஏனெனில் அதற்கு முன்னால் ஓடும் ஆற்றில் ஆயிரம் தலையுள்ள நாகங்கள் உள்ளன. அவற்றைத் தாண்டித்தான் மலைக்கு போக முடியும்.மலையை ஒரு வட்டமடித்து வந்தால் தான், அதில் இருக்கும் இரகசியப்பாதை திறக்கும்"

"அதற்கென்ன வட்டமடிப்பது பெரிய வேலையா? நாகங்களையும் எங்கள் வாள்கள் பார்த்துக்கொள்ளும்" என்று தீபவர்மன் இறுமாப்போடு சொன்னான். அவனைப் பரிதாபமாகப் பார்த்த காக்கைகுப்தன்,

" அவ்வளவு எளிதாக அந்த நாகங்களைக் கொல்லவோ அடக்கவோ முடியாது. தவிர மலையை வட்டமடித்து சுற்றி வரும்போது, நான்கு திசைகளிலும் நான்கு பூதங்கள் இருக்கும்.அவை எவராலும் அவிழ்க்க முடியாத புதிரைச் சொல்லி தலையைச் சிதறடிக்கச் செய்தால் எப்படி காலச்சக்கரத்தை அடையமுடியும்?" என்று கேட்ட போதுதான் , காலச்சக்கரத்தை அவ்வளவு எளிதில் அடைய முடியாது என்பது எல்லோருக்கும் புரிந்தது.

" சரி நாகங்களையும், நான்கு பூதங்களையும் ஏதோ ஒரு வகையில் வென்று இரகசியப்பாதையில் சென்றால் காலச்சக்கரத்தை அடையலாமா?" என்று ஆர்வத்தை அடக்கமாட்டாதவனாகக் கேட்டான் துவாரகன்.

"அதுதான் இல்லை. அங்கே ஐந்தாவது பூதம் காத்திருக்கும். அது புதிரோடு சண்டைக்கும் அழைக்கும். என்னவிதமான சண்டை என்று எவருக்கும் தெரியாது. அதில் வென்றாலும் காலச்சக்கரம் எங்கே இருக்கின்றது என்பதைக் கண்டு பிடிக்க வேண்டும். அதைவிட இன்னொரு விடயம் அந்தப் பூதமலையில் பத்து நாழிகைகள் மாத்திரமே நிற்க முடியும். அதற்குள் அங்கிருந்து மீளாவிட்டால், மரமாக மாறிவிடு வீர்கள்" என்று முழு விபரத்தையும் சொன்ன பின்பே ஒளிந்திருக்கும் ஆபத்து என்னவென்பது எல்லோருக்கும் புரிந்தது.

( புதிர்கள் தொடரும்)



# வடக்கின் பண்பாட்டுச் சுற்றுலாவும் காலனிய கட்டட மரபுரிமையும்





## மரபுரிமைகளைப் பறைதல்

- வேண்டான் நம்பி

பண்பாட்டுச் சுற்றுலா (cultural tourism) எனப்படுவது குறித்த ஒரு பிராந்தியத்தின் பண்பாட்டுச் சொத்துக்கள் மீது கவனத்தைக் குவித்துள்ள சுற்றுலா ஆகும். அது குறிப்பிட்ட பிராந்தியம் அல்லது குறிப்பிட்ட மக்கள் கூட்டத்தின் பௌதீகச் சொத்துக்கள், வழக்காறுகள் பயில்வுகள் நம்பிக்கைகள் என்பனவற்றின் மீது கவனத்தைக் கோருகின்ற கொண்டாடுகின்ற பண்பாட்டு மேம்பாட்டு முறையாகும். அது பல்வேறுபட்ட உப களங்களைக் கொண்ட ஒரு பரந்த பரப்பாகும். இன்று இலங்கைச் சுற்றுலாத் துறையின் புதிய அல்லது மீளக்கண்டு பிடிக்கப்பட்ட ஒரு பரப்பாக வட இலங்கைச் சுற்றுலாவும் அமைந்துள்ளது. பரந்த பின்னணியில் கூறினால் இது 'வடக்கின் வசந்தம்' என்று முன்பு பெயரிடப்பட்ட எண்ணக்கருவின் நீட்சியுமாகும்.

அவ்வகையில் வடக்கை மையப்படுத்தி இரண்டு சுற்றலாத்துறைகள் இயங்குகின்றன. அல்லது இலங்கைத் தீவில் மாகாண மற்றும் மத்திய சுற்றலாத்துறைகள் இயங்குகின்றன. இது அடிப்படையில் சுற்றுலாத்துறையை முன்னேற்றுதற்கான சிறந்த வழிபோல தென்பட்டாலும் இலங்கை அரசக் கட்டமைப்பில் ஒரு கையால் மாகாணங்களுக்கு அதிகாரங்களைக் கொடுத்து மறு கையால் அதனைத் தடுக்கும் அல்லது குழப்பும் பொறிமுறைக்கான அடிப்படை ஏற்பாடுகளில் ஒன்றே இது என்பதை அவற்றுக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரங்கள், நடைமுறைகளை கவனிக்கும் எவரும் புரிந்து கொள்ள முடியும். இது ஏற்கனவே அதிகார மமதை நிரம்பப்பெற்ற அரச அதிகாரிகள் என்ற வர்க்கத்திடையே மத்தி மற்றும் மாகாணம் என்ற பெரும் போட்டியை அல்லது அதிகாரத்தில் மேலும் முன்னேறிப் போவதற்கான தந்திரோபாய விட்டுக்கொடுப்புக்களை உருவாக்கியுள்ளதை அவதானிக்க முடிகிறது. இதில் நிகழும் உச்சமான கவலைக்கிடமான விடயம் யாதெனில் விடய அறிவுள்ள திணைக்களங்களது இரண்டாம் மூன்றாம் நிலை உத்தியோகத்தர்கள் பின்தள்ளப்படுவதில் இருந்து குறிப்பாக நிபுணத்துவ ஆலோசனைகள் துறைசார் சிறப்புத் தேர்ச்சியுடையோரை உள்ளீர்க்காது விடுதல் அவர்களை அத் திட்டங்களில் இருந்து வெளியேற்றுதல் வரை இது நிகழ்கிறது. இன்னொரு புறம் திணைக்களங்களது உயர் அதிகாரிகள் மேலதிகாரிகள் என்போர் எந்தத் துறைசார் பின்புலமும் அற்று அதேசமயம் அவர்கள் விரும்பும் ஜனரஞ்சக விடயங்களைச் செய்துகொடுக்கத் தயாராக இருக்கும் துறைசார் பட்டயம் உடைய 'நிபுணர்கள்'(?) என்போரைத் தேடியலைந்து அவர்களிடம் அவற்றை ஒப்படைத்து அவற்றை அவற்றின் உச்சப் பெறுபேற்றை அடைய விடாமற் தடுத்து அழித்தல் செய்தலாகும். இதன் மூலம் தமது சொந்த மக்களையும் அவர்களது பண்பாட்டையும் இத்தகையவர்கள் தொடந்து தோற்கடிக்கிறார்கள் அல்லது தோற்கடிக்க முனைவோரது முகவர்களாகிறார்கள்.

இன்றைய அல்லது தொடர்ந்து வருகின்ற இந்த வகையான பொதுப் பின்னணிக்குள்; சிக்குண்டு அழிந்து கொண்டிருக்கும் பலவற்றுள் ஒன்று வடக்கு இலங்கைத் தீவின் காலனிய கட்டட மரபுரிமைச் சொத்துக்களாகும். எவ்வாறு வன்னியை ஒரு சூழல் சுற்றுலாவின் பெரு மையமாக்க முடியுமோ அவ்வாறே மன்னார் யாழ்ப்பாணம் ஆகியவற்றில் காணப்படும் அதே சமயம் அழிந்தும் வரும் அல்லது சரியான முறையில் கூறினால் அழிக்கப்பட்டு வரும்; காலனிய கட்டக்கலை மரபுரிமை வெளிப்பாடுகளை உரிய முறையில் காப்புச் செயற்பாடுகளுக்கு உள்ளாக்கிப் (conservation) பாதுகாத்து அதனை அபிவிருத்திக்கான தனித்துவமான முதலீடாக்குதல் ஆகும். அவ்வகையில் அவற்றை வட இலங்கையின் பண்பாட்டுச் சுற்றுலாவின் பகுதியாக்கலாம். சம்பந்தமற்ற மேற்குலகச் சுற்றுலா முறைகளை விழுங்கி அதனை உள்ளூரில் வாந்தி எடுக்கும் சுயத்துவமற்ற முறைகளைக் கைவிட்டு வேரிலிருந்து சிந்திக்கவேண்டும். அவற்றில் ஒன்றாக எமக்கே தனித்துவமானதும் ஒரு காலகட்ட சமூக பண்பாட்டை வெளிப்படுத்தக்க சான்றாதாராமாயும் உள்ள காலனிய கட்டங்களைக் கொண்டுவருதல் வேண்டும்.







அந்தவகையில் கோட்டைகள் முதலான காலனிய இராணுவக் கட்டுமானங்கள் இறங்குதுறைகள் பாலங்கள் வெளிச்ச வீடுகள் முதலான போக்குவரத்துசார்ந்த கட்டுமானங்கள் பண்டகசாலைகள் நீதிமன்றங்கள்; கச்சேரி முதலான பொதுக் கட்டங்கள்காலனிய காலகட்டத்துக்குரிய சைவக் கோயில்கள் கிறிஸ்தவ தேவாலயங்கள் இஸ்லாமிய மசூதிகள் உட்பட பலவிதமான மதக் கட்டுமானங்கள் மற்றும் காலனியகால பல்வகை வீட்டுக் கட்டுமானங்கள் என்பனவற்றை உட்படுத்திய காலனிய கட்டடமரபுரிமைச் சுற்றுலா (Colonial architectural heritage tourism) வடிவமைக்கப்படலாம்.

இவை தொடர்பில் குளிரறையில் அமர்ந்து பேசிப்பேசி பல வருடங்கள் முடிந்துவிட்டன. இதுவரை எந்த விதமான ஆக்கபூர்வமான முயற்சிகளும் இல்லை. திணைக்களங்களில் பெருகிச் செல்லும் வெற்றுக் கோப்புகளைத் தவிர. சுற்றுலாத்துறை தவிர பண்பாட்டு அமைச்சு அதன் கீழ் நூற்றுக் கணக்கான பண்பாட்டு அலுவலர்கள் பண்பாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் மிகப் பெரிய தொழிற்படை. ஆனால் அத்தனையும் இலக்கற்ற வேலைத்திட்டங்களில் வீணடிக்கப்படுகின்றன. இந்த இரு தசாப்பத கால மரபுரிமைக்களுக்கான குரல் கொடுப்பில் அவர்களுக்கான சரியான வேலைத்திட்டங்கள் அளிக்கப்பட்டிருந்தால் மிகக் குறைந்த பட்ச பாதுகாப்புக்காக நடவடிக்கை எதையாவது செய்திருக்கலாம்.

'உண்மைதான. இது பற்றி ஒரு கூட்டம் கூட்டிப் பேசுவோம்' என ஒரு மேலதிகாரி சொல்வதற்கிடையில், மிஞ்சிக் கடைசிக்கட்டத்தில் உயிர்வாழும் கட்டங்கள் உடைக்கப்பட்டுவிடும். இன்றைய யாழ்ப்பாணத்தின் மிகப் பெரிய தொழில்களில் ஒன்று பண்டைய கட்டடங்களை இடித்து விற்றல் என்பது யாருக்குமே தெரியாதா என்ன? என்ன கண்காணிப்பு அல்லது யதார்த்தமான தடுப்புச் செயற்பாடுகள் செய்யப்படடு;ள்ளனவா? அல்லது அப்படிச் செய்யவே முடியாதா? இவற்றில் பெரும்பகுதி தென்னிலங்கைக்கு ஏற்றி அனுப்பப்படுகிறதே? 'இன அடையாளம்' - 'பண்பாடு' என மேடை மேடையாக ஒலிவாங்கியே அஞ்சும் அளவுக்குக் கத்துபவர்களே எங்கே உங்கள் யாரையும் காணோமே?

குறைந்த பட்சம் மாகாண சபையின் வெவ்வேறு அமைச்சுக்கள் ,தமிழ் அரசியற்கட்சிகள் இத்தகைய கட்டடங்களை வாங்கியோ அல்லது வாடைக்கெடுத்தோ அதனை பாதுகாக்கலாமே? 'மேடைக்கு மட்டும்தான் யாவும் என்கிறீர்களா'? நான் அறிந்தவரை திருவாளர் ஐங்கரநேசன் மட்டும் தான் ஒரு பழைய நாற்சார வீட்டை தன் அலுவலகமாக வைத்திருக்கிறார்.

அவ்வகையில், 2009ஆம் ஆண்டு தமிழர்களது ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்ட பின்பு சுற்றுலா உட்பட அபிவிருத்தியின் பெயர் தரித்த அநேக நிகழ்ச்சித்திட்டங்கள் தமிழர் அதிகம் செறிந்து வாழும் பகுதிகளுக்கு எடுத்துவரப்பட்டன - எடுத்துவரப்படுகின்றன. இவற்றில் அநேகமானவை தோற்றத்திலும் அவற்றின் உடனடியான விளைவுகளின் வழியிலும் முன்னேற்றகரமானவை போலத் தென்பட்டாலும் ஆழமான அர்த்தத்தில் இவை நீண்ட கட்டமைப்பு ரீதியான இனத்துவ அழிப்பை உள்நோக்கமாகக் கொண்டவை என்பதை எமது அப்பாவித்தனம் காட்டிக் கொடுப்பதில்லை. அதேவேளை அதனைப் பற்றிச் சிந்திப்பதற்கு தமிழ் மக்களின் தொழில்முறைப் பிரதிநிதிகளாகக் கூறிக்கொள்ளும் எமது அரசியல் தலைவர்கள் எனக் கூறப்படுகின்ற கூட்டத்தினருக்கும் சிற்றளவிலேனும் அக்கறைகொள்வது இல்லை: அவர்களுக்கு நேரமும் இல்லை என்பதைத்தான் கடந்த ஒரு தசாப்த்திற்கு மேற்பட்ட காலம் மிகத் தெட்டத் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளது.

அதேசமயம் எமது புலமையாளர்களுக்கும் பிரையோக ரீதியான மக்கள் மயப்படுத்தப்பட்ட சமூக ரீதியான அறிவியல் உற்பத்திப் பணிகளில் அக்கறை கொள்வது இல்லை. அல்லது அக்கறை உள்ள மிகமிகச் சிலரும் தமிழ் சமூகத்தின் பல்வேறுபட்ட அதிகாரத் தரப்புக்களால்; தோற்கடிக்கப்பட்டு அவற்றில் இருந்து மனநோவுடன் ஒதுங்கிக் கொள்கிறார்கள். இன்னும் சிலருக்கு ஓய்வுபெற்ற பின்பு இனி இழப்பதற்கு ஏதுமில்லை என்ற காலத்தில் தான் இது பற்றிய ஞானோதயம் சித்திக்கிறது. அத்துடன் ஆனாலும் புதிய தேசிய அங்கீகாரங்களும் மேடை மரியாதைகளும் கூடக் கிடைத்துவிடுகின்றன. ஏதாவது பொதுநன்மை அதனால் கிட்டும் என்றால் அது கூடப் பறவாயில்லைத்தான்.

இத்தகைய பின்னணியில் காலனிய கட்டட மரபுரிமையை பாதுகாத்தல், அதனை சமூக பண்பாட்டு மேம்பாட்டுக்கான கருவியாக முன்மொழியாது விட்டால் மிகப்பெரிய வரலாற்று வறுமையையும் பண்பாட்டு வறட்சியையும் அடைவோம். அதேசமயம் பாதுகாத்தலின் பெயரால் நிபுணத்துவ ஆலோசனைகள் அற்று நிகழும் காத்தல் திருத்துதல் அனைத்துச் செயற்பாவை உறுதி செய்யும் என்பதை மறந்து விடக்கூடாது .

அதேசமயம் பல பண்டைய கட்டுமானங்கள் அவற்றின் உருக்கெட மாற்றி அமைக்கப்படுகின்ற அழித்தலின் வேறொரு வடிவமும் அரங்கேறிக் கொண்டிருக்கிறது.

இப்போது தந்தை செல்வா கூறியது போல 'தமிழர்களை கடவுள் தான் காப்பாற்ற வேண்டுமா'? அல்லது இப்போது கிறிஸ்தவர்களது தவக்காலம்; தவக்காலத்து பெரியவெள்ளியில் படிக்கப்படும் பசாமில் அடிக்கடி வருமே 'ஐயோ கிறிஸ்தவர்களே' என்று அதனைச் சற்று மாற்றி 'ஐயோ தமிழர்களே' என்று அழுது புலம்புவதா?

# மீண்டு(ம்) வந்த ஆனந்தன்(ம்)



ஆனந்தன்

O மையலோன்

**தி**ரைப்படங்களில் காட்டப்படும் காட்சிகள், சம்பவங்கள் என்பவை சிலரின் நிஜ வாழ்க்கையிலும் நடப்பதுண்டு. சில மகிழ்ச்சி தருபவை. சில நெஞ்சை நெகிழ வைப்பவை. அப்படி நடந்த ஒன்றுதான் ஆனந்தனின் வாழ்வும்.

கிழிந்த அழுக்கான ஆடைகள், மெலிந்த தோற்றம். வீதியோரங்களில் பழைய காகிதங்களைச் சேகரித்துக் கொண்டு வெறித்த பார்வை. மனிதர்களிடம் இருந்து விலகி ஓடும் விரக்தி. தமிழகம் நாகர்கோயில் கடந்த 2 ஆண்டுகளாக இந்த உருவம் அனைவருக்கும் பழக்கம். அங்குள்ள மாவட்ட பொலிஸ் கண்காணிப்பு அலுவலகத்துக்கு அருகில் அவரை அதிகம் காண முடியும்.

இவர் யார் என்பது அங்குள்ள எவருக்கும் தெரியாது. ஆனால் நல்லுள்ளம் கொண்ட அந்தப் பகுதி வர்த்தகர்கள் தினமும் கொடுக்கும் உணவில் உயிரைத் தக்க வைத்துக் கொண்டிருந்தது அந்த உருவம்.

> புதுச்சோயைச் சேர்ந்தவர் ஆனந்தன். அவர் அங்குள்ள பெண் ஒருவரை உயிருக்குயிராகக் காதலித்தார். அந்தப் பெண்ணும் ஆனந்தனைக் காதலித்தார். ஆனால் காதல் என்றாலே சோதனைகள் வரும்தானே.



## காதல் திரைப்படம்

2004 ஆம் ஆண்டு வந்த "காதல்" எனும் திரைப்படம் அனைவரையும் அழ வைக்கும் அளவுக்கு இருந்தது. அந்தத் திரைப்படத்தில் சந்தியாவைக் காதலிக்கிறார் பரத். ஆனால் இறுதியில் சந்தியாவின் உறவினர்களால் தாக்கப்பட்ட பரத் இறுதியில் மனநலம் பாதிக்கப்பட்டு வீதியில் திரிவார் என்பதாக அந்தப் படம் முடிவடையும். கிட்டத்தட்ட ஆனந்தனின் கதையும் அப்படித்தான்.

புதுச்சேரியைச் சேர்ந்தவர் ஆனந்தன். அவர் அங்குள்ள பெண் ஒருவரை உயிருக்குயிராகக் காதலித்தார். அந்தப் பெண்ணும் ஆனந்தனைக் காதலித்தார். ஆனால் காதல் என்றாலே சோதனைகள் வரும்தானே. ஆனந்தனின் காதலிக்கு அவரின் வீட்டார் வேறொரு இடத்தில் சம்பந்தம் பேசினர். இதை அறிந்ததும் உடனே காதலியின் வீட்டுக்குச் சென்ற ஆனந்தன், தங்கள் காதல் விடயத்தைக் கூறி தங்களுக்குத் திருமணம் செய்து வைக்குமாறு கேட்டார். ஆனால் வசதி மிக்கவர்களான பெண் வீட்டார் தங்கள் மகளை ஆனந்தனுக்கு திருமணம் செய்து வைக்க விரும்ப வில்லை.

ஆனந்தனை அங்கிருந்து அடித்து விரட்டினர். பலர் சேர்ந்து நடத்திய மோசமான தாக்குதலில் ஆனந்தனின் தலையில் பலத்த அடி விழுந்தது. அதில் அவரது சித்தம் பேதலித்தது. கால் போன போக்கில். ஆனந்தன் நடக்கத் தொடங்கினான். அன்றிலிருந்து ஆனந்தனை அவரது குடும்பத்தி னர் காணவில்லை.

## உதவிய கொரோனா

கொரோனா முடக்க காலத்தில் வீதியோரம் வாழுவோர் உணவுக்குக்காக என்ன செய்வார்கள்?. சமூக அக்கறை கொண்ட தினேஷ் என்பவரின் மனதில் ஓடிய சிந்தனை இது. எண்ணியதோடு நிற்காது செயலில் இறங்கினார் அவர். உணவு தயாரித்துப் பொதி செய்து வீதியோரம் வாழ்வோருக்குக் கொடுக்கத் தொடங்கினார்.

நாகர்கோயில் பகுதியில் உள்ளவர்களுக்கும் இவர் பொதி செய்த உணவுகளை வழங்கினார். அந்தக் காட்சிகளைப் பதிவு செய்து இந்த மாத ஆரம்பத்தில் சமூக வலைத்தளங்களிலும் பதிவிட்டார். அந்தக் காட்சிகளைச் சமூக வலைத் தளங்களில் பார்த்த ஆனந்தனின் உறவினர்களுக்கு அதிர்ச்சி.

நாகர்கோயிலில் கிழிந்த ஆடைகளுடன் ஆனந்தன் உணவு பெற்றுச் செல்லும் காட்சிகளே அதற்குக் காரணம்.

## அலைந்து திரிந்த ஆனந்தன்

காதலியின் உறவுகளால் தாக்கப்பட்டு சித்தம் பேதலித்த ஆனந்தன், கடந்த இரண்டு ஆண்டுகளாக ஊர் ஊராகத் திரிந்திருக்கிறார். அவரின் உறவினர்களும் அவரைத் தேடாத இடமில்லை. ஆனால் ஆனந்தனைக் கண்டுபிடிக்க முடியவில்லை. சரியான உணவின்றி, தங்குமிடம் இன்றி ஆனந்தனின் கோலமும் மாறிப் போனது. கிடைக்கும் உணவை உண்டு, அலைந்து திரிந்த ஆனந்தன் கடைசியாக நாகர்கோயிலுக்கு வந்தார். அங்குள்ள மாவட்ட கண்காணிப்பு அலுவலகத்துக்கு அருகில் உள்ள பாவனையற்ற இடம் ஒன்றைத் தனது தங்குமிடமாக்கிக் கொண்டார்.



## புது வாழ்வு

சமூக வலைத்தள காணொலி மூலம் ஆனந்தனை அடையாளம் கண்டுகொண்ட உறவினர்கள், உடனடியாகத் தினேஷ்டன் தொடர்பு கொண்டனர். தினேஷ் அவர்களை ஆனந்தன் இருக்கும் இடத்துக்கு அழைத்துச் சென்றார்.


கிழிந்த ஆடைகளுடன், புத்தி பேதலித்த நிலையில் தனது மகனைக் கண்ட ஆனந்தனின் தாய் கண்ணீர் விட்டுக் கதறினார். ஆனால் தன் தாயை அடையாளம் தெரியாத ஆனந்தன் தாயைக் கண்டு ஒதுங்கிச் சென்றது அங்கிருந்தவர்களின் கண்களின் கண்ணீரை வரவழைத்தது. தனது மகனை இழுத்து அணைத்து உச்சிமுகர்ந்து தாய் ஆனந்தக் கண்ணீர் வடித்தது அனைவரையும் நெகிழ வைத்தது.

ஆனந்தனை உடனடியாக குளிப்பாட்டி, புது ஆடைகள் அணிவித்து தங்கள் சொந்த ஊருக்கு அழைத்துச் செல்ல உறவினர்கள் முடிவு செய்தனர். நாகர்கோயில் மாவட்ட பொலிஸ் கண்காணிப்பு அலுவலகத்தில் உள்ள பொலிஸாரும் அதற்கு உதவி செய்தனர்.

## தாயின் மகிழ்ச்சி

இரண்டு ஆண்டுகளின் பின்னர் தனது ஆனந்தனைக் கண்ட தாயின் ஆனந்தத்தைக் கண்டு அந்த இடமே நெகிழ்ந்தது. தனது மகனைக் கண்டுபிடிக்க உதவிய தினேஷின் காலில் விழுந்து, ஆனந்தனின் தாய் அழுதபோது அங்கிருந்த அனைவருமே கண்ணீர் வடித்தனர். அவர்களைக் கையெடுத்துக் கும்பிட்டவாறு, தனது 'ஆனந்தத்தை' அழைத்துக் கொண்டு அங்கிருந்து சொந்த ஊருக்குப் புறப்பட்டார் அந்த அன்னை. தற்போது சிகிச்சையில் சேர்க்கப்பட்டிருக்கும் ஆனந்தன் விரைவில் பழையபடி மாறுவான் என்று அவனது குடும்பத்தினர் காத்திருக்கின்றனர்.

---





O இ.சு.முரளிதரன்

8

சுரோடிங்கர் என்ற பௌதிகவியல் அறிஞர் இருப்பும் இன்மையும் கலந்த இருமைப் பண்பை பூனைக் கோட்பாடு ஒன்றின் ஊடாக வெளிப்படுத்தியுள்ளார். இரும்புப் பெட்டி ஒன்றிலே பூனையை வைத்துப் பூட்டி விடுவோம். அப்பெட்டியினுள் ஐதரே சயனைற் (HCN) குடுவை ஒன்றையும், சுத்தியல் ஒன்றையும் கதிரியக்கத் தன்மை கொண்ட பொருள் ஒன்றையும் வைப்போம். கதிரியக்கத் தன்மையுள்ள பொருளில் ஓர் அணு சீர்குலைந்தாலும் சுத்தியல் குடுவையைத் தாக்கி ஐதரே சயனைற் வெளிப்பட்டு பூனை இறந்துவிடும். எனினும் குவாண்டம் இயங்கியலின் நேரடுக்குப் பண்பின்படி (நாம் பெட்டியைத் திறந்து பார்க்காத வரையில்) பூனை உயிரிடனும் உயிரற்றும் இருநிலைகளும் கலந்த நிலையில் உள்ளதான முரண்தரு முடிவக்கே வருகின்றோம். பெட்டியைத் திறப்பின் குவாண்டம் இயங்கியல் விதியின் நேரடுக்குப் பண்பு பாதிக்கப்படும். இக்கோட்பாடு இருமைநிலை இருப்பினை வெளிப்படுத்துகின்றது.

"விருந்தோம்பலை நிகழ்த்தாத, இருப்பினும் இன்மை என்னும் பேதைப் பண்பானது அறிவற்றவர்களிடமே உள்ளதாக 89 ஆவது குறட்பாவிலே திருவள்ளுவர் தெளிவுபடுத்துகின்றார். விருந்தோம்பலைச் செய்யாதவனது செல்வமானது சுரேடிங்கரின் பூனையைப் போல் இருப்பும் இன்மையும் கலந்த இருமைநிலையிலே அமைந்து விடுகின்றது.

**"உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா**
**மடமை மடவார் கண் உண்டு"**



சுரோடிங்கரின் பூனை



# நீதிக்காக ஏங்கி கொண்டிருக்கிறோம்!

நேர்காணல் பொ.சோபிகா

**பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தற்போது தும்பறை சிறையில் ஆயுள் தண்டனை அனுபவித்து வருபவர் தமிழ் அரசியல் கைதியான அப்துல் கமீத் உமர் கதாப். தனது கணவர் கைது செய்யப்பட்ட பின்னர் தான் அனுபவித்த துயர் கனக்கும் வாழ்வை வவுனியாவில் வசிக்கும் அவரது மனைவியான, வேகு முகைதீன் நூர்ஜான் உதயன்-சஞ்சீவி வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறார்.**

நானும் எனது கணவரும் ஒரு குடிசையில் வாழ்ந்து வந்தோம். எமக்கு இரு பிள்ளைகள் . 2008 ஆம் ஆண்டு நிறைமாத கர்ப்பிணியாக இருந்தேன். கணவர் வியாபாரம் செய்து வந்தார். சிறுகச் சிறுக பணம் சேர்ந்து ஒரு வீட்டைக் கட்டுவதற்கு ஆரம்பித்திருந்தோம்.

2008 ஆம் ஆண்டு நவம்பர் மாத இறுதிப்பகுதியில் வவுனியா செட்டிக்குளம் வீரபுரம் இராணுவ முகாமில் இருந்து எமது கிராமத்துக்குள் வந்த இராணுவத்தினர் எமது வீட்டை சோதனை செய்யப்போகிறோம் எனக் கூறினர்.

எனது அடையாள அட்டையைத் தருமாறு கேட்டனர். பின்னர் எனது கணவர் எங்கே என்று கேட்டனர். அவர் வெளியில் சென்றுவிட்டார் எனக் கூறினேன். கணவர் வந்த பின்னர் அவரைச் சோதனை செய்த இராணுவத்தினர், அவருடைய அடையாள அட்டையில் தமிழ்ப் பெயர் இருப்பதைப் பார்த்து விசாரணை செய்தனர். அவர் முதலில் இந்துவாக இருந்து பின்னர் இஸ்லாம் மதத்துக்கு மாறியிருந்தார். அவரிடம் இஸ்லாம் மதத்துக்கு மாறியதற்கான ஆதாரங்களையும் வேறு சில ஆவணங்களையும் கேட்டனர். குறித்த ஆவணங்கள் எனது கணவரின் தந்தையினுடைய வீட்டில் அனுராதபுரத்தில் இருக்கின்றன எனவும் பின்னர் எடுத்துவந்து தருகிறேன் எனக் கணவர் கூறினார். அன்றில் இருந்து சில நாள்கள் தொடர்சியாக எமக்கு தொலைபேசி அழைப்பை இராணுவத்தினர் மேற்கொண்டனர்.

பின்னர் ஒருநாள் இரவு, கணவருக்கு அழைப்பை எடுத்தவர்கள், வீரபுரம் முகாமுக்கு தனியாக , எவருக்கும் இதுதொடர்பாக தெரிவிக்காமல் அங்கு வருமாறு கூறினர். அன்றைய நாள்களில் வீரபுரம் முகாமுக்கு விசாரணைக்கு அழைக்கப்படுபவர்கள் திரும்பி வருவதில்லை. இதனால் நாங்கள் மிகவும் அச்சமடைந்தோம்.

எனவே உயிருக்குப் பயந்து நாம் அவரை கொழும்புக்கு அனுப்பி வைத்தோம். அவர் அங்கு சென்று ஒரு வாரத்தில் எனக்கு குழந்தை பிறந்து விட்டது. கொழும்பில் ஒரு மாத காலமாக அவர் தலைமறைவாகி இருந்தார்.

அவர் கொழும்புக்குச் சென்ற நாள் முதல் நான் கைக்குழந்தையுடன் சொல்ல முடியாத துயரங்களை அனுபவித்தேன். ஒவ்வொரு நாளும் எமது வீட்டுக்கு இராணுவத்தினர் வந்து சோதனைகளை மேற்கொண்டனர்.எனது கணவரை பற்றியும், அவர் விடு தலைப்புலிகளுடன் தொடர்பு எனவும் பல் வேறு கதைகள் ஊரில் உலாவத்தொடங்கின. அதன் பின்னர் எனக்கு தொலைபேசி மிரட்டல்கள் கூட வந்தன. பெரும் மன உளைச்சலுக்குள்ளானேன்.

பின்னர் சில நாள்கள் கழித்து ஒருநாள் எனது கணவர் எனக்கு தொலைபேசி அழைப்பை எடுத்தார். அவர் அதிக நேரம் அழுதார். தன்னால் இந்தத் துன்பத்தில் இருந்து மீண்டு வர முடியுமோ தெரியாது எனத் தெரிவித்தார். பிள்ளைகளைக் கவனமாகப் பார்க்கும் படி கூறினார். நான் இங்கு நடக்கும் விடயங்கள் அனைத்தையும் கூறினேன். அவர் எங்கு இருந்து அந்த அழைப்பை எடுத்தார் என எனக்குத் தெரியாது. மிகவும் பயத்தோடு தான் கதைத்தார். பின்னர் அழைப்பைத் துண்டித்துவிட்டார். அதன் பின்னர் அவரிடம் இருந்து எந்தத் தொடர்பும் இல்லை.

15 நாள்கள் கழித்து, 2009 ஜனவரி 29 ஆம் திகதி எனது கணவர் குற்றப்புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுவிட்டார் என மதவாச்சிப் பொலிஸார் எனக்கு அறிவித்தார்கள்.

பின்னர் விசாரணைக்காக என்னை பலமுறை அனுராதபுரத்துக்கு அழைப்பார்கள். கைக்குழந்தையுடன் நான் அலைந்து திரிந்தேன். வீட்டில் ஆயுதம் இருப்பதாக கூறி சோதனைகளை மேற்கொண்டார்கள். இவ்வாறு சொல்ல முடியாத பல வேதனைகளை எனது குழந்தைகளும் நானும் அனுபவித்தோம்.

மீண்டும், 3 மாதங்களின் பின்னர் நான்காம் மாடியில் இருந்து அனுராதபுரம் சிறைச்சாலைக்கு எனது கணவர் மாற்றப்பட்டார். அப்போது தான் எனது கணவரை சிறையில் பார்த்தேன்.

அப்போது அவர் கூறினார், " நான் அனுராதபுரத்தில் இராணுவத்துக்கு எதிராக இடம்பெற்ற ஒரு தாக்குதல் சம்பவத்துக்கு உதவினேன் என என் மீது வழக்கு பதிவு செய்துள்ளார்கள். என்னுடன் சேர்த்து10 பேரையும் கைது செய்தார்கள், அதில் 8 பேர் விடுதலையாகிவிட்டனர். என்னுடன் இணைந்து மேலும் ஒருவர் மீது வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது" எனத் தெரிவித்தார். அப்போது தான் இந்த விடயம் தொடர்பாக நான் தெரிந்துகொண்டேன்.

நான் எனது கணவருக்காக வாதாடுவதற்கு பல சட்டத்தரணிகளிடம் சென்று உதவி கோரினேன். எவரும் அந்த வழக்கில் ஆஜராக முன்வரவில்லை. தமிழ்ச் சட்டத்தரணிகள் அனைவரும் பின்வாங்கிவிட்டார்கள். இருவருடங்களாக சட்டத்தரணிகள் எவரும் கிடைக்கவில்லை. அரச தரப்பால் சட்டத்தரணியை தருகிறேன் என நீதிபதி கேட்டிருந்தார். ஆனால் அதனை எனது கணவர் அதை விரும்பவில்லை. இறுதியாக ஒரு பெரும்பான்மையினத்தை சேர்ந்த சட்டத்தரணி தான் இந்த வழக்கில்தான் முன்னிலையாகிறேன் எனக் கூறினார். ஆனால் அதிக பணத்தை எதிர்பார்த்தார்.

ஆனால் பொருளாதார பலம் எம்மிடம் இருக்கவில்லை. மீண்டும் தமிழ் சட்டத்தரணிகளிடம் (தற்போது நாடாளுமன்ற உறுப்பினர்களாக உள்ள சட்டத்தரணிகளிடமும் ) சென்று அந்த நேரம் உதவி கோரினோம். ஆனால் அவர்கள் முடியாது என மறுத்து விட்டனர்.

வவுனியாவில் இருந்த ஒரு சட்டத்தரணி, குறித்த வழக்கை வவுனியாவுக்கு மாற்றினால் தான் வாதாட முடியும் எனக் கூறினார். ஆனால் மொழி பிரச்சினையை காரணம் காட்டி அந்த வழக்கை அனுராதபுரத்தில் இருந்து மாற்ற முடியாது எனத் தெரிவித்து அரசாங்கம் வழக்கை மாற்றவில்லை. அதன் பின்னர் கொழும்பில் உள்ள ஒரு அமைப்பின் ஊடாக அந்த பெரும்பான்மையினத்தை சேர்ந்த சட்டத்தரணியையே நாம் 2011 ஆம் ஆண்டு நியமித்தோம். அதற்கான பண உதவியை புலம்பெயர் தேசத்தில் உள்ள தமிழ் உறவுகள் வழங்கியிருந்தனர். வழக்குத் தொடர்ந்தது. சாட்சிகள் விசா ரிக்கப்பட்டனர், எனது கணவர் விடுதலைக்கான எதிர்பார்ப்புடன் இருந்தார். இறுதி நேரத்தில் ஏமாற்றமே அடைந்தார். சற்றும் எதிர்பார்க்காத வகையில் கடந்த 2019 ஆம் ஆண்டில் ஆயுள் தண்டனை தீர்ப்பு கிடைத்தது. இறுதி நேரத்தில் தனக்கு எங்கோ சதி நடந்துள்ளது என எனது கணவர் என்னிடம் தெரிவித்தார்.

அனுராதபுரம், கொழும்பு சிறைச்சாலைகளில் அவர் இருந்தார். அனுராதபுரத்தில் இருந்த போது இரண்டு கிழமைக்கு ஒருதடவை நான் அவரைப் பார்க்கச் செல்வேன். கொழும்புக்கு மாற்றப்பட்ட பின்னர் போவதில்லை. பொருளாதார நெருக்கடி காரணமாகச் செல்ல முடியவில்லை.

எனது கணவர் கைதுசெய்யப்பட்ட பின்னர் எமது உறவினர்கள் கூட எம்மிடம் பயத்தின் காரணமாக வருவதில்லை. எனது கணவரின் மாமனார் வழக்கு விடயங்களை ஒழுங்கு செய்வதற்கு எனக்குப் பெரும் உதவியாக இருந்தார். அவரும் 2012 ஆம் ஆண்டில் இறந்துவிட்டார்.

அதன் பின்னர் யாருடைய துணையும் எமக்கு இல்லை. 3 பிள்ளைகளையும் வளர்ப்பதற்கு மிகவும் சிரமப்பட்டேன். கூலி வேலைக்கு சென்று பிள்ளைகளைப் படிக்க வைத்தேன். தற்போது சுயமாக தொழில் ஒன்றை ஆரம்பித்து எமது வாழ்க்கையை கொண்டு செல்கிறோம்.

வழக்கு விடயத்தைத் தவிர வேறு எங்கும் எனது கணவரின் விடுதலையைக் கோரி நான் செல்லவில்லை. யாரும் இந்த விடயத்தில் தலையிட விரும்பாதபோது நான் யாரிடம் சென்று நீதி கேட்பது? தற்போது மேன்முறையீடு செய்துள்ளோம். 3 தவணைகள் சென்றுள்ளது. எதிர்வரும் ஜூலை மாதம் வழக்கு தொடர்பான விவாதம் இடம்பெறவுள்ளது எனக் கூறியுள்ளார்கள். இதன்போதாவது எனது கணவருக்கு நீதி கிடைக்குமா என ஏங்கிக் கொண்டிருக்கிறோம். எனது கணவர் விடுதலையாவது தான் எனது ஆசையும் வெற்றியும். அதைவிட வேறு எதையும் நான் கேட்கவில்லை.

எனக்கும் அவருக்கும் மனம் வெறுத்துப் போயுள்ளது. ஒவ்வொரு முறையும் கைதிகள் தொடர்பான செய்திகளைப் பார்க்கும் போது, அவர் மிகவும் எதிர்பார்ப்புடன் தனக்கு விடுதலை கிடைத்து விடும் என்ற நம்பிக்கையுடன் இருப்பார். பின்னர் அந்த விடயம் ஒன்றுமில்லாமல் போனதும் ஏமாற்றம் அடைந்துவிடுவார். புனர்வாழ்வு அல்லது பொதுமன்னிப்பு என்ற வகையில் ஒரு தீர்வு கிடைக்கும் என முழுமையாக நம்பிக்கையுடன் தனது வாழ்வை சிறையில் அவர் கழிக்கிறார். எமது வாழ்க்கைக்கு தீர்வு எனது கணவாரின் விடுதலை தான், ஏதோ ஒருவழியில் அது புனர்வாழ்வென்றாலும் சரி, பொது மன்னிப்பு என்றாலும் சரி இந்த அரசாங்கம் அவரை நம்பியிருக்கும் எங்களின் நிலையை உணர்ந்து எனது கணவரை விடுவிக்க வேண்டும். இது மட்டுமே எங்களுக்கு உள்ள ஒரே கோரிக்கை!





# மௌன மொழி

39 இற்கான கவிதைகள்

ஆற்று அருகின் ஓரமாய்
இரு தாய்மாரின்
குழந்தைகளாய்
மணலில் கோட்டை கட்டி
அதில் எம் தமிழர் கொடி பறக்க
எம் தாயகத்தை எம்
தலைமுறையிலாவது
வெற்றி காண்போம்

**எ.பிறினிடா**, பருத்தித்துறை

மணல் வீடு கட்டும் மழலைகள்
மனதில் அடுக்கு மாடி போல
குடியிருக்கிறது மட்டற்ற மகிழ்ச்சி
பழமையான நினைவுகளை
மீட்டுகிறார்கள் பண்புள்ள சிறுவர்கள்

**த.அமல்ராஸ்**, வரணி

மண்ணிலே கோட்டை கட்டி
மகிழ்ச்சி கொள்ளும் சிறுவரே
கண்ணிலே கற்பனை அழகுடன்
நாட்டினீர் வெற்றியின் கொடி
எண்ணிய சிந்தனை சிறந்ததே
ஏற்றம் காண்பீர் உம்வாழ்வில்.

ஔவை. கொடிகாமம்.

**அலையடித்து அழிந்துவிடும்
என தெரிந்தும்
மழலைகளின் மகிழ்ச்சியின்
அவதாரமாக மணலில்
உருவாகிறது மாட மாளினை...**

த.சங்கீதன், வரணி

**பரிசு பெறும் கவிதை**

மகிழ்ச்சிக் களிப்போடு,
மணலை மலையாக்கி
மகுடத்தில் கொடியேற்றும்
இந்த மழலைகள்
உணர்வலைகளில்....
தணலில் வெந்து,
தவித்துப் போன எம்
தாயக மண்ணின்
தா(க்)கத்தின்
ஏக்கமோ.....!?

**மானியூர் ரட்ணேஸ்**

**அண்ணன் தங்கை இணைந்த பாசமாய்
அன்னை மடியில் மலர்ந்த நேசமாய்
சின்னச் சிட்டு சிறகின் கரங்களால்
மண்ணில் வடித்த சிகரச் சிற்பமாய்
வண்ணக் கொடியும் வானில் அசைந்திட
மின்னும் வண்ண எழில் கோலமாய்
எண்ணத்தில் கனவுகள் காண்போம்
சிறகுகள் விரியும் சிகரம் தொட**

**மதுசுதன்**, வற்றாப்பளை

தச்சன் வேண்டாம்..
கொத்தனும் வேண்டாம் ..
மண்ணிலே கோட்டை கட்டி
கொடியும் ஏற்றிடுவோம்
சிறுவரெம் இராச்சியத்தில்
நானே இராசா..நீயே மந்திரி
கோட்டை இப்போதெங்கள்
கைகளில்....

**த.சிவா**, அல்வாய்.

அன்று கற்கள் கொண்டு
பிரமிற்கட்டி அதிசயிக்க
வைத்தனரேஇன்று
எம் சிறுவர்கள் மணல் கொண்டு
பிரமிற் கட்டி கொடி யேற்றி
பிரமிக்க வைக்கின்றார்களே

**கனிவிழி காந்தரூபன்**
*வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை*

மண்ணிலே கோட்டை
மனதிலே உறுதியுடன்
கண்ணில் தெரிகிறதே
கனவுகள் நிறைந்தே
வெற்றிக் கொடி
வாழ்வில் நிச்சயமே
புதுமை படைக்கவே.

இரா.கௌரிபாலா, வதிரி

நிர்ப்பந்தத்தின் நிர்க்கதியில்
ஓர் நொடியில்
சிதைந்துவிடும்
எனத் தெரிந்தும்
குறும்புகளின் கரங்களின்
வடிவமைப்புக்குள்
கட்டுண்டு கிடக்கும்
மணல் வீடும் பேரழகு தான்!!!

**சிவறஞ்சன் கனிஸ்ரா**




**உங்கள் கவிதைகள் எங்கள்
கதவைத் தட்ட
வேண்டிய கடைசி நாள்:**

**27.03.2021**


*அனுப்ப வேண்டிய முகவரி:*

**உதயன் சஞ்சீவி**

**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

மின்னஞ்சல் முகவரி: *sanjeevi@uthayan.com*

0773165555



# பரிதவிப்பு

வீசிக்கொண்டிருந்த
மென் காற்றில்
புயல் வந்தது போல்
எம் நாட்டிலும்
கண்ணுக்கு புலப்படாமல்
காற்றில் கலந்து
இன்னிசை பாடி
மக்கள் மனதில்
முகாரி ராகம் பாட வைத்து
முகக் கவசம் போட வைத்து
சமூக இடைவெளியைப் பேண வைத்து
வேலையும் இல்லாமல்
வேதனமும் இல்லாமல்
வேதனையில்
வாழ வைக்கும் கொரோனா

க.செல்வமலர்
இடைக்காடு

# ஜெனிவா....

*(02ஆம் பக்கத் தொடர்ச்சி)*

மேலும்,தமிழ் மக்கள் கடந்த சில மாதங்களுக்குள் நடந்த அரசியல் நிகழ்வுகளில் இருந்தும் கற்றுக் கொள்ள வேண்டும். கடந்த பெப்ரவரி மாதம் நடந்த பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலுமான ஊர்வலம் ஒப்பீட்டளவில் குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற்றது. ஆனால் அதற்குப்பின் நடக்கும் சுழற்சி முறை உண்ணாவிரதப் போராட்டங்கள் ஊர்வலங்கள் போன்றவை வழமைபோல கவனயீர்ப்புப் போராட்டங்களாக குறுகக் காரணம் என்ன? அதேசமயம் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி பேரணிக்குக் கிடைத்த வெற்றிக்கு காரணம் என்ன? ஏற்கனவே இல்லாத ஒரு சிவில் அமைப்பு அதைத் தொடங்கிய சில நாட்களிலேயே முன்னெடுத்த ஒரு போராட்டம் அவ்வாறு எதிர்பாராத வெற்றியைப் பெறக் காரணம் என்ன? இது தொடர்பில் ஏற்கனவே எனது கட்டுரைகளில் நான் எழுதியிருக்கிறேன். தமிழ் மக்கள் போராடத் தயாராக இருக்கிறார்கள். பொருத்தமான அரசியல் தரிசனத்தோடு சரியான போராட்ட வடிவத்தை முன்வைத்து பொருத்தமான தலைமைகள் துணிந்து முன்வந்தால் தமிழ் மக்கள் பின்னே வருவார்கள்.

ஆனால் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை பேரணிக்கு பின்னரும் அப்படிப்பட்ட கட்டமைப்புக்கள் எதுவும் உருவாக்கப்படவில்லை. பேரணியை முன்னெடுத்த சிவில்சமூக செயற்பாட்டாளர்கள் அந்தப் பேரணியின் பெயரால் ஒரு மக்கள் இயக்கத்தை உருவாக்கப் போவதாக பிரகடனம் செய்தார்கள். ஆனால் அப்படி ஒரு அமைப்பு இன்றுவரையிலும் கட்டி எழுப்பப்படவில்லை.ஆனால் அறிக்கைகள் வருகின்றன. அந்த அமைப்பைக் கட்டியெழுப்புவதற்கான பொருத்தமான நடவடிக்கைகள் எவையும் ஏன் இதுவரையிலும் முன்னெடுக்கப்படவில்லை? அதிலிருந்தும் தமிழ் மக்கள் கற்றுக்கொள்ளவேண்டும்.

எனவே கடந்த 12 ஆண்டுகால தாயகம் மற்றும் டயஸ்போரா, தமிழகம் ஆகிய மூன்று பரப்புக்களின் அனுபவங்களை தொகுத்து ஆராய வேண்டும். இது தொடர்பில் ஒரு சுயவிசாரணை அவசியம்.அதைவிட முக்கியமாக 2009இல் ஆயுதப் போராட்டம் ஏன் தோற்கடிக்கப்பட்டது என்பதிலிருந்தும் கற்றுக்கொள்ள வேண்டும்.ஆயுதப்போராட்டம் ஏன் தோற்கடிக்கப்பட்டது என்பதை காய்தல் உவத்தலின்றி ஆராய வேண்டும்.ஆயுதப் போராட்டம் ஏன் தோற்கடிக்கப்பட்டது என்பதிலிருந்து கற்றுக்கொள்ளாத ஒரு வெற்றிடத்தில் அகிம்சைப் போராட்டங்களை முன்னெடுப்பதும் கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக வெற்றி பெறத் தவறியதற்கு ஒரு காரணமா?

# காலை வாருவாரா சம்பிக்க?



ஐக்கிய மக்கள் சக்தியின் முதலாவது மாநாடு அந்தக்கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் கடந்த 15 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்றது. இம்மாநாட்டில் உரையாற்றிய அரசியல் பிரமுகர்கள், தற்போதைய அரசின் செயற்பாடுகளை சரமாரியாக விமர்சித்ததுடன், 2024 இல் ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சி மலரும் எனவும் நம்பிக்கை வெளியிட்டனர். '43' எனும் அரசியல் இயக்கத்தை ஆரம்பித்துள்ள சம்பிக்க ரணவக்கவும் மாநாட்டில் பங்கேற்று ராஜபக்சக்களை தனக்கே உரிய பாணியில் கடுமையாக விளாசித் தள்ளினார்.

ஐக்கிய மக்கள் சக்தியுடன் சங்கமிக்கும் நோக்கிலேயே ஜாதிக ஹெல உறுமயவிலிருந்து சம்பிக்க ரணவக்க தனது சகாக்களுடன் வெளியேறினார். எனினும், அவர் இன்னும் உறுப்புரிமை பெறவில்லை. ராஜித சேனாரத்ன, குமார வெல்கம ஆகியோர் ஐக்கிய மக்கள் சக்தியில் உறுப்புரிமையை பெற்றிருந்தாலும் சம்பிக்க விவகாரமே இன்னும் இழுபறியில் இருக்கின்றது.

முதலாவது மாநாட்டுக்கு முன்னர் இப்பிரச்சினைக்கு முடிவு காணப்படும் என அறிவிப்புகள் வெளியாகியிருந்தாலும், குழப்பநிலை நீடிப்பதை அவதானிக்க முடிகின்றது.

குறிப்பாக சம்பிக்க ரணவக்கவுக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதித் தலைவர் பதவியை வழங்குவதற்கு அக்கட்சியின் உறுப்பினர்கள் சிலர் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். மறுபுறத்தில் அதிகாரமற்ற பதவியை ஏற்பதற்கு சம்பிக்கவும் தயாரில்லை. இவ்வாறானதொரு பின்புலத்திலேயே அவர்' 43 'எனும் இயக்கத்தை ஆரம்பித்துள்ளார்.

ஆக சஜித்துக்கு எதிராக சம்பிக்க ஜனாதிபதி வேட்பாளராக 2024 இல் களமிறங்கப்போகின்றாரா என்ற வினாவும் பரவலாக எழுந்துள்ளது.



## கூடிக்குலாவும் கீரிகளும், பாம்புகளும்!

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும், தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்சவுக்குமிடையில் விசேட கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள்ளது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸின் வீட்டிலேயே மேற்படி சந்திப்பு இடம்பெற்றுள்ளது என தகவல் வெளியாகியுள்ளது.

இச்சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பில் அதிகாரபூர்வமான தகவல்கள் வெளியாகாத போதிலும், அடுத்த கட்ட அரசியல் நகர்வுகள் சம்பந்தமாக பேசப்பட்டுள்ளன என்று அறியமுடிகின்றது.

அமைச்சர் விமல் வீரவன்சவுக்கு எதிராக மொட்டுக் கட்சிக்காரர்கள் கடும் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர். அரசியிலிருந்து வெளியேறுமாறும் வலியுறுத்திவருகின்றனர். இவ்வாறானதொரு பின்புலத்தில் இத்தகையதொரு சந்திப்பு இடம்பெற்றுள்ளமை தெற்கு அரசியலில் திருப்பமாகவே பார்க்கப்படுகின்றது.

அதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிலீப் வெதஆராய்ச்சியின் மகளின் திருமணம் கொழும்பிலுள்ள நட்த்திர ஹோட்டலொன்றில் நடைபெற்றது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ச, முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச, சரத் பொன்சேகா உள்ளிட்ட அரசியல் பிரமுகர்களும் பங்கேற்று மணமக்களை வாழ்த்தினர். குறித்த சுப நிகழ்வில் பங்கேற்ற மஹிந்தவும், பொன்சேகாவும் மனம்விட்டு நீண்டநேரம் உரையாடியுள்ளனர் எனவும் தெரியவருகின்றது.

இப்படி கீரியும் பாம்புமாக இருந்தவர்கள் கூடிக் கதைத்திருப்பது கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பெரும் பரபரப்பைக் கிளப்பியுள்ளது.



# அறிந்தும் அறியாமலும்

○ சுழியன்

## புரட்சி செய்யும் மைத்திரி!

அரசின் செயற்பாடுகள்மீது கடும் அதிருப்தியில் இருக்கும் ஆளுங்கட்சி அரசியல் பிரமுகர்கள் சிலர், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இரகசியச் சந்திப்பொன்றை நடத்தியுள்ளனர் என தகவல் வெளியாகியுள்ளது.


அரசின் தற்போதைய போக்கு மற்றும் அரச கூட்டுக்குள் அரங்கேறும் வெட்டுக்குத்து உட்பட சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் இதன்போது விரிவாக அலசி ஆராயப்பட்டுள்ளன.

அத்துடன், விரைவில் தேர்தலொன்று நடத்தப்படும்பட்சத்தில் சுதந்திரக்கட்சி தலைமையில் அரசியல் கூட்டணியொன்றை கட்டியெழுப்பி போட்டியிட வேண்டும் என அந்தச் சந்திப்பில் பங்கேற்ற உறுப்பினர்கள் சிலர் யோசனை முன்வைத்துள்ளனர். இது தொடர்பில் எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறும் சுதந்திரக்கட்சி யின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் ஆராயப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தனது தலை குறிவைக்கப்படும்பட்சத்தில் மௌனத்தைக்கலைத்து, மைத்திரி அதிரடிக்காட்டக்கூடும் எனவும் கதை அடிபடுகின்றது.

## தூதுவர் பதவிகளில் மாற்றம்

தமிழ், சிங்கள புத்தாண்டுக்கு பின்னர் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச முக்கிய சில மறுசீரமைப்புகளை மேற்கொள்ளவுள்ளார். இதன்படி அரச நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு சேவைகளில் சிற்சில மாற்றங்களை ஏற்படுத்துவார் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது. சில நாடுகளில் தூதுவர் பதவியை வகிக்கும் நபர்கள் நாட்டுக்கு அழைக்கப்பட்டு, அவர்களுக்கு அரச நிறுவனங்களில் உயர் பதவி வழங்கப்படக்கூடும் எனவும், புதிய சிலருக்கு தூதுவர் கள் பதவிகள் வழங்கப்படவுள்ளது எனவும் அறியமுடிகின்றது. அதேபோல அரச நிறுவனங்களில் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியுள்ளனர் எனக் கருதப்படும் சில அதிகாரிகள் அப்பதவியில் இருந்து நீக்கப்பட்டு, சிறப்பாக செயற்படக்கூடியவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படவுள்ளது. சில இராஜாங்க அமைச்சர்களின் விடயதானங்களும் கைமாற்றப்படக்கூடும் எனவும் எதிர்வுகூறப்பட்டுள்ளது.



## தலைவராகிறார் ஜீவன்

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் புதிய தலைவர் எதிர்வரும் மே மாதத்துக்குப் பிறகு நியமிக்கப்படவுள்ளார் என அக்கட்சி வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவராக இருந்த ஆறுமுகன் தொண்டமான் உயிரிழந்து 10 மாதங்கள் கடந்துவிட்டன. ஆனாலும் இ.தொ.காவின் தலைமைப்பதவி இன்னும் வெற்றிடமாகவே உள்ளது.

தொண்டமானின் மறைவின் பின்னர் தலைமைத்துவம் தொடர்பில் இ.தொ.காவுக்குள் மோதல் ஏற்பட்டது. கட்சி பிளவுபடுவதை தடுப்பதற்காக தலைவர் பதவிக்கு எவரும் நியமிக்கப்படவில்லை. தொண்டமானின் மகனான ஜீவன் தொண்டமானுக்கு பொதுச்செயலாளர் பதவி வழங்கப்பட்டது. அமரர் ஆறுமுகன் தொண்டமான் உயிரிழந்து எதிர்வரும் மே மாதத்துடன் ஓராண்டு பூர்த்தியாகின்றது. அதன்பின்னரே புதிய தலைவர் நிய மிக்கப்படக்கூடும் என உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. பெரும்பாலும் ஜீவனுக்கே தலைமைப்பதவி வழங்கப்படலாம் எனவும் அந்த உள்ளகத் தகவல்கள் சொல்கின்றன.

ஐவர் கங்கர்

ஐவன் கங்கர் (1876– 1918) அன்றைய ஆஸ்திரிய அங்கேரியின் ஒரு புலத்தில் (இன்றைய சிலொவேனியா வில்) பிறந்தவர், கவிஞர், நாவலாசிரியர், நாடகாசிரியர், மெய்ம்மை இலக்கியத்தில் வேட்கை கொண்டவர். போர், அடக்குமுறை, ஏற்றத்தாழ்வு, பாரபட்சம் என்பவற்றுக்கு எதிராக எழுதியவர், பேசியவர், வாழ்ந்தவர்.

தமிழாக்கம்: மணிவேலுப்பிள்ளை



# குழந்தைகளும் வளர்ந்தவர்களும்

சிறுகதை

ஒவ்வொரு நாளும் இரவு படுக்க முன்னர் அந்தக் குழந்தைகள் கூடிப்பேசுவது வழக்கம். அகன்ற புகட்டில் அமர்ந்து உள்ளத்தில் பட்டதை அவர்கள் கதைப்பார்கள்.

மாலைவெயில் அதன் கனவுசுமந்த விழிகள் கொண்டு, மங்கிய பலகணி ஊடாக அறைக்குள் எட்டிப் பார்க்கும் எல்லா மூலைகளிலும் இருந்து அமைதி படர்ந்த நிழல்கள் புதினமான கதைகளுடன் கிளம்பிவரும். மலர்த்திரையின் பின்னே ஏதோ ஒரிடத்தில் சிமிட்டித் துடிதுடிக்கும் வாழ்வு முழுவதும் ஓர் ஒளியிலிருந்து மறு ஒளியினுள் பாயும். குழந்தைகளின் உள்ளத்தில் பட்டதெல்லாம் அன்பும், நம்பிக்கையும், இளவெயிலும், வெதுவெதுப்பும் பின்னிப்பிணைந்த இனிய கதைகளே. அவர்களைப் பொறுத்தவரை எதிர்காலம் என்பது ஒளிகாலும் நீண்ட விடுமுறை. நாற்பதுநாள் நோன்பு காக்காமல் திளைக்கும் காலம் அது!

அவர்கள் சொற்களை முணுமுணுப்பார்கள். அவற்றை அரைக்கரைவாசி புரிந்து கொள்வார்கள். ஒரு கதைக்கும் அடியோ, முடியோ, உறுதியான உருவமோ இருக்காது. சில வேளைகளில் நாலு குழந்தைகளும் ஒருவரை ஒருவர் குழப்பாமல் ஒரே சமயத்தில் கதைப்பார்கள். எழில் ததும்பும் விண்ணொளியை மெய்மறந்து நோக்குவார்கள். ஒவ்வொரு சொல்லும் அந்த ஒளியில் தெள்ளத்தெளிவாக மெய்யாகும். ஒவ்வொரு கதைக்கும் தெள்ளத் தெளிவான உயிர்முகமும் மாண்புறு முடிவும் உண்டு.

நாலு குழந்தைகளும் ஒரே அச்சில் உருக்கி வார்த்த மாதிரி இருந்தார்கள். அவர்களுள் இளைய தொஞ்சிகனுக்கு நாலு வயது. மூத்த இலைசிக்காவுக்கு பத்து வயது. எனினும் மங்கிய மாலை வெயிலில் இருவரின் முகங்களையும் வேறுபடுத்திப் பார்க்க முடியாது. எல்லோருக்கும் மெல்லிய, ஒடுங்கிய முகங்கள். அகன்று திறந்த பெரிய விழிகள் அகம் நோக்கும் விழிகள்.

அன்று மாலை அவர்களுக்குத் தெரியாத இடத்திலிருந்து, அவர்களுக்குத் தெரியாத ஏதோ ஒன்று வன்மையுடன் வந்து அந்த விண்ணொளியுள் புகுந்து அவர்களது விடுதலை நாள்களையும், கதைகளையும், புனைவுகளையும் ஈவிரக்கமின்றித் தாக்கியது. அப்பா இத்தாலிக் களத்தில் வீழ்ந்துபட்ட சேதி பொதிந்த மடல் கிடைத்த நாள் அது!

அவர்களுக்குத் தெரியாத, புதிதான, புதினமான, அறவே புரியாத ஏதோ ஒன்று அவர்களின் முன்னே எழுந்து, உயர்ந்து, பரந்து நின்றது. அதற்கு முகமோ, விழியோ, வாயோ இல்லை. தங்கிடம் இல்லை. தேவாலய முன்றலில் எழும் ஆரவாரப் பிழைப்பிலோ, தெருவிலோ, வெதுவெதுப்புடன் புகட்டைச் சூழும் மாலை வெயிலிலோ, கதைகளிலோ அது தங்கியிருக்கவில்லை.

அது இறந்துவிட்டது. ஆனபடியால் அது இன்பமானதோ, தனிப்பட்ட முறையில் துன்பமானதோ அல்ல. அதற்கு விழிகள் இல்லை. சொற்களால் புரிய வைக்க, எங்கேயிருந்து ஏன் போனது என்பதைப் புலப்படுத்த வாய் இல்லை. அசையாது நிற்கும் பெரிய கருஞ்சுவர் போன்ற பென்னாம் பெரிய பேயின் முன்னே சிந்தனை என்பது அடங்கி ஒடுங்கி நின்றது. அது சுவரை அணுகும்போது, மூச்சுப் பேச்சின்றி யோசனை செய்தது.

"சரி, அவர் எப்ப திரும்பி வருவார்?" என்று யோசித்து வினவினான் தொஞ்சிகன்.

"அவர் வீழ்ந்துபட்டால் , எப்படித் திரும்பி வரமுடியும்? என்ற பதில் கேள்வியுடன் தொஞ்சிகனை முழங்கையால் இடித்து, ஒற்றத்துடன் பார்த்தாள் இலைசிக்கா. குழந்தைகள் எல்லோரும் அமைதி அடைந்தார்கள். பெரிய கருஞ்சுவரின் முன்னே நின்ற குழந்தைகளால் சுவருக்கு அப்பால் பார்க்க முடியவில்லை.

"நானும் போருக்குப் போகப்போகிறேன்" என்று எதிர்பாராவிதமாக அறிவித்தான் ஏழுவயது மதிசன். அந்த வேளைக்கேற்ற சரியான எண்ணம் தனக்கே வேகமாய்ப் பிறந்தது என்ற நினைப்புடன் அவன் அப்படி அறிவித்தான். அந்த அறிவிப்பில் எல்லாம் அடங்கியிருப்பது போலவே அவனுக்குத் தென்பட்டது. ஆதலால்தான் அவன் அதை அப்படி அறிவிக்க வேண்டியிருந்தது.

"நீ வெறும் சின்னப் பையன்!" என்று நாலுவயது தொஞ் சிகன் ஆழ்ந்த குரலில் கடிந்துகொண்டான். தொஞ்சிகன் ஒற்றையுடை அணிந்த வெறும் குழந்தை!

குழந்தைகளுள் மிகவும் மெலிந்து வயக்கெட்ட மில்லிகா, அம்மாவின் கழுத்தாடைக்குள் பொதியுண்டு, ஒரு வழிப்போக்கரின் பொட்டலம் போல் தென்பட்டாள். அறையினுள் படிந்த நிழலினுள் மறையுண்ட மில்லிகா தனது மெல்லிய, மிருதுவான குரலில் "போர் என்ன மாதிரி இருக்கும்? மதிசன் அந்தக் கதையைச் சொல்லு!" என்று கேட்டாள்.

"சரி!" மதிசன் விளக்கமளித்தான். "போர் இந்த மாதிரித்தான் இருக்கும். ஆள்கள் ஆளை ஆளை கத்தியால் குத்துவார்கள். ஆளை ஆள் வாளால் வெட்டிச் சரிப்பார்கள். ஆளை ஆள் துவக்கால் சுடுவார்கள். எவ்வளவு தூரம் குத்தி, வெட்டிச் சரிக்கிறீர்களோ அவ்வளவு தூரம் நல்லது. எவரும் உங்களிடம் எதுவும் சொல்ல மாட்டார்கள். ஏன் அது அப்படித்தான் நடக்கவேண்டி இருக்கிறது. அதுதான் போர்!"

ஆனாலும் , அவர்கள் ஏன் ஆளை ஆள் குத்தி, வெட்டிச் சரிக்கிறார்கள்? என்று மில்லகா விடாப்பிடியாகக் கேட்டாள்.

"மாமன்னருக்காக!" என்றான் மதிசன். ஒருவரும் வாய் திறக்கவில்லை. மகிமையின் பளபளப்புடன் மினுங்கும் வல்லூறு ஒன்று தொலைவில் நடமாடுவது அவர்களது தூக்க விழிகளுக்கு புலப்பட்டது.

தேவாலயத்தில் ஆசி பெறும்.போது ருப்பதுபோல் அவர்கள் அசையாமல், மூச்சுப்பேச்சில்லாமல் அமர்ந்திருந்தார்கள்.

மதிசன் மீண்டும் தனது எண்ணங்களை விரைந்து ஒருங்குதிரட்டி "நானும் எதிரியை எதிர்த்துப் போருக்குப் போகிறேன் என்றான். அவர்களை அமுக்கிய அமைதியைக் குலைக்கும் நோக்குடன் அவன் அப்படிச் சொல்லியிருக்கலாம்.

எதிரி என்ன மாதிரி இருப்பான்? அவனுக்கு கொம்பு முளைத்திருக்குமா? தனது மெல்லிய குரலில் திடீரென வினவினாள் மில்லிகா.

"ஓம், கொம்பு முளைத்திருக்கும்தானே? மற்றும்படி அவன் எப்படி எதிரியாய் இருக்க முடியும்?" என்று கருத்தூன்றி, கிட்டத்தட்ட சீற்றம் கொண்ட மாதிரி இடித்துரைத்தான் தொஞ்சிகன்.

இப்பொழுது மதிசனுக்கு கூட சரியான மறுமொழி தெரியவில்லை. "அவனுக்கு அது முளைத்திருக்கும் என்று நான் நினைக்க வில்லை" என்று அவன் சுணங்கிச் சுணங்கி, நிறுத்தி நிறுத்திச் சொன்னான்.

"அவனுக்கு எப்படி கொம்பு முளைக்கும்? அவனும் எங்களை மாதிரி ஓர் ஆள் தானே!" என்று நாட்டமின்றிக் கூறினாள் இலைசிகா. பிறகு மறுபடி எண்ணிப் பார்த்துவிட்டு, "ஆனால் அவன் இதயமற்றவன்" என்றாள். நெடுநேர அமைதிக்குப் பிறகு "ஆனாலும் ஒரு ஆள் போரில் வீழ்த்தப்படுவது எப்படி? "இப்படி மல்லாந்தா?" என்று தொஞ்சின் கேட்டான். அவன் மல்லாந்து விழுந்து காட்டினான்.

"அந்த ஆளை அவர்கள் சாக்காட்டுவது தான் அது!" என்று அடக்கமாக விளக்கினான் மதிசன்.

"எனக்கொரு துவக்கு கொண்டு வருவதாக அப்பா சொன்னாரே!"

"அவர் வீழ்த்தப்பட்டால், எப்படி உனக்கொரு துவக்கு கொண்டுவர முடியும்?" என்று கடிந்து பதில் கேள்வி கேட்டாள் இலைசிகா.

"அவர்கள் அவரைச் சாக்காட்டிப் போட்டார்கள், அப்படித்தானே?"

"அமைதியும் கவலையும் அடைந்த குழந்தைகள் அகலவிரிந்த தமது பிஞ்சுவிழிகளின் ஊடாக தம்மை எதிர்கொண்ட இருளினுள் உற்று நோக்கினர்; தமக்குத் தெரியாத ஏதோ ஒன்றினுள் உற்று நோக்கினர்; தம்மால் உணரமுடியாத இதயத்துள் உற்று நோக்கினர்; தம்மால் உணரமுடியாத உள்ளத்துள் உற்று நோக்கினர்.

அதேவேளை அந்தக் குடிசையின் முகப்பில் இருந்த வாங்கின் மீது தாத்தாவும் பாட்டியும் அமர்ந்திருந்தார்கள். பகலவனின் இறுதிச் செங்கதிர்கள் கொல்லையில் தெரிந்த தடித்த இலைதழைகளின் ஊடே பளபளத்தன. தொழுவத்திலிருந்து நெடுநேரமாக, கரகரத்த குரலில் திணறித் திணறி எழுந்த விம்மலைத் தவிர அந்திவேளை அமைதியில் தோய்ந்தது. அது ஆடுமாடுகளை எட்டிப்பார்க்கச் சென்ற அந்த இளந்தாயின் ஓலமாய் இருக்கலாம்.

எவ்வளவோ காலத்துக்குப் பிறகு தாத்தாவும் பாட்டியும் அருகருகே அமர்ந்து கூனிக்குறுகி ஒருவர் கையை ஒருவர் பற்றிக்கொண்டார்கள். வாய்பேசாமல், வற்றிய விழிகளை மிதத்தி அந்திமாலை ஒளியை அவர்கள் ஊடுருவிப் பார்த்தார்கள். ■

> குழந்தைகளின் உள்ளத்தில் பட்டதெல்லாம் அன்பும், நம்பிக்கையும், இளவெயிலும், வெதுவெதுப்பும் பின்னிப்பிணைந்த இனிய கதைகளே. அவர்களைப் பொறுத்தவரை எதிர்காலம் என்பது ஒளிகாலும் நீண்ட விடுமுறை. நாற்பதுநாள் நோன்பு காக்காமல் திளைக்கும் காலம் அது!



# சொற்சிலம்பம் போட்டி 39

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | ■ | 4 | | 5 | 6 |
| 7 | | | 8 | | ■ | 9 | |
| 10 | | | | ■ | 11 | | ■ |
| ■ | 12 | | ■ | 13 | | | 14 |
| 15 | | ■ | 16 | | | ■ | |
| | ■ | 17 | | | ■ | 18 | |
| 19 | 20 | | | ■ | 21 | | |
| 22 | | ■ | 23 | | | | |

அனுப்புபவர் பெயர்:.......................................................

முழுமையான தபால் விலாசம்: ...............................

..............................................................

கையொப்பம்:..............................................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

## இடமிருந்து வலம்

1. இவர் ஒரு முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி 4. தலைமுறை 7. புராணத்தில் சத்தியவானது உயிர்காத்த அவன் மனைவி 9. சவுக்கு 10. தென் மாகாணத்தின் ஒரு மாவட்டம் 11. பாரமான 12. கட்டு 13. வயலுக்குள் நீரைத் தேக்கி வைப்பதற்காக அமைக்கப்படுவது 15. தடுத்து நிறுத்துவதற்கான ஏவல் சொல் 16. மனது 17. வாத்திய வகைகளுள் ஒன்று 18. உழுவதற்காக இந்தப் பொறி காளைகளைப் பயன்படுத்தி இயக்கப்படுவது. 19. கிரீடம்/ முடி 21. அருந்த / குடிக்க 22. செல்வத்துக்கு இதுவும் ஒரு பெயர் 23. இணைதல்/ ஒன்று சேருதல்/ உடலால் கூடுதல்

## மேலிருந்து கீழ்

1. உலகை அதிர வைத்த தீவிரவாதத் தலைவன் ஒருவனது பெயரின் முற்பாதி. 2. பயன்படுத்துதல் 3. மத்திய மாகாணத்து மாவட்டமொன்று 4. நிமிர்ந்த அல்லது செங்குத்தான நிலையிலுள்ள பொருளை ஒரு பக்கமாக சாய்க்குமாறான ஏவல் சொல் 5. எரியும் நிகழ்வு 6. திக்கு 8. வரி 11.கை 13. செழுமை/ சீர்ப்பொலிவு 14. விடிதல் 15. வாழ்க்கையில் இது கிடைப்பதென்பது அபூர்வம் 16. தேகம்/உடல் 17. தாண்டுமாறான ஏவல் 18. பிடிக்க / தாங்கிக் கொள்ள 20. சிஷ்யனுக்கு வழிகாட்டி. 21. நெஞ்சு/மார்பு

### சொற்சிலம்பம் போட்டி 37 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1. சிவப்பு 4. கமுகு 7. மிகை 8. ராஜா 10. தலை 11. புணர்தல் 13. கிரகம் 16. கல் 17. அதிபன் 19. மசி 20. துணை 21. கன 22. சயனம் 23. சர்வ 24. கும் 25. பிதாமகர்

**மேலிருந்து கீழ்**

1. சிமிக்கி 2. வகை 3. புராணம் 5. முதல் 6. குலை 9. ஜார் 11. புகல் 12. தந்தி 14. ரகசியம் 15. மன்னவர் 17. அணை 18. பகர்க 19. மசகு 20. தும்பி 23.சம

**சொற்சிலம்பம் போட்டி இல.39**
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
என்னும் முகவரிக்கு
27.03.2021 இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

**போட்டி இலக்கம் 37 இல் வெற்றி பெற்றோர் விபரம்**

**1 ஆம் பரிசு**
**கே.கே.வேகாவனம்,**
வித்தியானந்தாக் கல்லூரியடி,
முள்ளியவளை.

**2 ஆம் பரிசு**
**சி.கிருஷ்ணவேணி,**
அலுக்கை ஞானவைரவர் கோவிலடி,
அளவெட்டி கிழக்கு, அளவெட்டி.

**3 ஆம் பரிசு**
**றொ.பரிதிகா,**
70/19 ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.

**4 ஆம் பரிசு**
**கு.ஜெனகன்,**
4ம் கட்டை, பூநகரி.

**5 ஆம் பரிசு**
**ப.சின்னத்துரை,**
A/9 164ஆம் கட்டை,
பாடசாலை வீதி, உமையாள்புரம்



# குரு(தி)ஷேத்திரக் கதை

○ மௌனா

பாரதப் போர் முடிந்து பேரமைதிச் சூழலில் மூழ்கியிருந்தது குருஷேத்திரம். மரண வலிகளுடன் கூடிய ஓல ஒலியாக ஆக்கிரமிக்கப்பட்ட போர்க்களத்தை இருட்டுப் போர்வை மூடி இருந்தது.

சமர் ஓய்ந்து சாக்களை நிறைந்த களப் பிரதேசத்தில் குற்றுயிராக காலம் சுமந்து கிடப்போரின் வலிதாங்கா அவல ஒலிகள் மரண உச்சம் தொட்டு மீண்டும் மீண்டும் ஒலித்துக்கொண்டிருந்தன.

வேதனை, விசும்பல், விம்மல், அழுகை, ஓலம் என அனைத்துவகை துயரோசையும் கலந்த சூழலைக் கிழித்தபடி, தூரத்தே ஆங்காங்கே இருந்த பாண்டவர் பாசறைகளிலிருந்து ஜெயபேரிகையும், வெற்றி வெறி ஓசைகளும் கேட்கத் தவறவில்லை.

களமுனையில் ஓங்கி நின்ற ஒரு மரத்தடியில் வானத்தை நோக்கிய வெறித்த பார்வையுடன் தனிமையில் மறைவாக ஒதுங்கி நின்ற பரந்தாமனிடமிருந்து ஒரு பெருமூச்சு எழுந்தது.

"ஐந்து பேருக்காக நீதியைப் பெற்றுக்கொடுக்க நூறு தலைகளை மண்ணில் உருள வைத்து, கீழைத்தேச நியாயம் பேசி, பல்லாயிரக்கணக்கானோரை கொன்று குவிக்கச் செய்துள்ள இந்த குருஷேத்திர பாதையை தேர்ந்தெடுத்துக் கொடுத்ததுடன், போரை குயுக்தியாக நெறிப்படுத்திக் கொடுத்த குற்ற உணர்வின் வெளிப்பாடா அது?

தர்மர் வென்றுவிட்டார்.

அருச்சுனன் உட்பட பஞ்சபாண்டவர்கள் காப்பாற்றப்பட்டுவிட்டனர். திரௌபதி கூந்தலை முடிந்துவிட்டாள்.......

இனியென்ன?

இவ்வளவும் தானா?"

## மணிக்கதை

குருஷேத்திரப் போரின் சாதனை இவை மட்டும் தானே...!

வெறுமை ஆக்கிரமித்த மனோ நிலையில் பரந்தாமன் தூரத்தே ஆர்ப்பாட்ட ஆரவாரம் எதுவுமில் லாது அந்தகார அமைதியுடன் இருந்த ஒரு பாசறைக் கூடாரத்தை நோக்கி நடந்தான்.

"ஏன் இந்தப் பாண்டவர் பாசறையில் மட்டும் இவ்வளவு அந்தகார அமைதி?" உள்ளே எட்டிப் பார்த்தான்.

உள்ளே பாண்டவர்கள், பாஞ்சாலி, குந்தி மாதா அனைவரும் முகங்கள் நிலம் நோக்க துயர மௌனத்தில் உறைந்திருந்தனர். பரந்தாமனின் நுழைவு அவர்களுக்கு எதிர்பாராத ஒன்று....!

"என்ன, இனியும் என்ன துயரம்.....? பாஞ்சாலியின் சபதம் நிறைவேறிவிட்டது. ... கௌரவர்கள் அழிக்கப்பட்டு விட்டனர்...." கண்ணன் சொல்லிக் கொண்டே போனான்.

"என்னை வெல்ல வைக்க இவ்வளவு அவலத்தை ஏற்படுத்தி விட்டாயே....? இது தர்மமா?" இது தருமரின் குரல்.

"உன்னால் என் புதல்வன் அபிமன்யுவை காப்பாற்ற முடியவில்லையே..". இது அருச்சுனன்.

"துரியோதனனாகியோருடன் எங்கள் கர்ணனையும் கொன்றொழிக்க உனக்கு எப்படி மனசு வந்தது?" இது குந்தி மாதாவின் அழுகுரல்.



"நீ உன் தங்கையின் சபதத்தை நிறைவேற்றி வைக்க குருஷேத்திரத்தை குருதியால் குளிப்பாட்ட வேண்டுமா?" இது வீமன்.

"எல்லாம்தெரிந்துகொண்டுதான்செய்தாயா? அல்லது புரியாமல் தான் செய்தாயா?" இது நகுலனின் வினா.

கண்ணன் ஞானியான சகாதேவன் பக்கம் திரும்பினான். சகாதேவன் நிமிர்ந்து பார்த்தனான்.

"கர்ணனை அழித்து, தர்ம தேவதையை அழவைத்து அனைத்தையும் எங்கள் ஐந்து பேருக்கும் நியாயம் பெற்றுக் கொடுக்கத்தான் செய்ததாக நிரூபித்து அதன் மூலம் உன் கீதா உபதேசத்தை நியாயப்படுத்தத் தானே இவற்றையெல்லாம் செய்தாய்?"

பரந்தாமன் திரும்பினான்.

"சுயநலம் பேசுபொருளாகும்போது, பொதுநலம் பேசாப்பொருளாகிவிடும்..." தனக்குள் முணுமுணுத்தபடி குருஷேத்திர அவல இருட் சூழலில் மறைந்தான். ■






# அவளும் இப்போது பட்டதாரி

கதிர்

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் 35 வது பட்டமளிப்பு விழா. பல்கலைக்கழகச் சூழலே விழாக்கோலம் பூண்டிருந்தது. கொரோனா பற்றிய பயங்களை தூர எறிந்துவிட்டு, சுகாதாரக் கட்டுப்பாடுகளோடு பட்டம் பெறப்போகும் மாணவர்கள், அந்த வளாகமெங்கும் பட்டாம் பூச்சிகளாக கறுப்பு அங்கிகளோடு வளைய வந்து கொண்டிருந்தார்கள்.

எத்தனையோ தடைகளையும், துன்பங்களையும், துயரங்களையும் கடந்து தங்கள் பட்டப் படிப்பெனும் பெருங்கடலை நீந்தி முடித்த சந்தோஷம் அத்தனை பேரின்முகங்களிலும் ஒட்டியிருந்தது. செல்ஃபிகளுக்கும், 'கப் கலெச்சக்சனுக்கும்' குறைவிருக்கவில்லை.

பட்டமளிப்பு அமர்வுகள் ஆரம்பித்தன.

மாணவர்களின் பெயர்கள் ஒழுங்குமுறைப்படி வாசிக்கப்பட, உரியவர்கள் மேடையில் ஏறி, வேந்தர் அல்லது துணைவேந்தரால் வழங்கப்படும் பட்டச் சான்றிதழையும், பதக்கத்தையும் ஏந்திக் கொண்டு வெற்றிக் களிப்போடு விரைந்து கொண்டிருந்தார்கள்.

அப்போதுதான் அந்தப் பெயர் வாசிக்கப்பட்டது!

"சகாயதாசன் மேரிடயானா ...!"

அரங்கில் ஒரு யுவதி அரங்கேறி, தன் பட்டத்தைப் பெறுவார் என நினைத்தவர்களுக்கு ஆச்சரியம். கவலையில் தோய்ந்த முகத்தோடும், தளர் நடையோடும் மேடையில் ஏறினார் அந்த மனிதர். மேடையில் கால் பட்ட மறுநொடியோ, அவர் நீண்டகாலமாக அடக்கி வைத்திருந்த அழுகை பெரும் விம்மலாக வெடித்தது.

பொங்கிவரும் கண்ணீரை துடைக்கவும் மனமின்றி, நடந்து சென்று பட்டப்படிப்பை நிறைவு செய்தமைக்கான சான்றிதழையும், பதக்கத்தையும் பெற்றுக்கொண்டார். உண்மையில் அந்தப் பெயருக்குரியவர் அவரது மகள் தான். ஆனால் அவளுக்குப் பதிலாக (மேரி டயானாவுக்குப் பதிலாக) அவளது தந்தையான சகாயதாசனே பட்டத்தைப் பெற்றுக் கொண்டார்.

அப்படி ஏன் மகளுக்கான பட்டத்தை தந்தை பெற்றுக்கொண்டார்? அவர் மகளுக்கு பட்டத்தைப் பெற்றுக்கொள்ளமுடியாத அளவுக்கு என்ன நடந்தது?

நாவாந்துறையில் 09.02.1993 பிறந்தவள் தான் சகாயதாசன் மேரிடயானா.

ஆரம்பக் கல்வி தொடக்கம் சாதாரணதரம் வரை யாழ். நாவாந்துறை கத்தோலிக்க வித்தியாலயத்தில் கல்வி கற்கும்போதே படிப்பில் படு சுட்டி. சாதாரண தரத்தில் 3A, 2B, C, 3S பெறுபேறு பெற்றவள், குருநகர் புனித ஜேம்ஸ் மகளிர் கல்லூரியில் உயர்தரத்தில் கலைப்பிரிவைத் தேர்வு செய்தாள். உயர்தர பரீட்சை முடிந்ததும் திருக்குடும்ப கன்னியர் சபையில் இணைந்து கன்னியாஸ்திரி பயிற்சியிலும் இணைந்தாள். உயர்தரப் பரீட்சையிலும் சாதித்த மேரி டயானாவுக்கு பல்கலைக்கழக அனுமதி கிடைத்தபோது, பெற்றோரும், உற்றவரும், ஊரவரும் பெருமகிழ்வெய்தினர்.

கன்னியர் மட நிர்வாகமும் மேரி டயானாவின் பல்கலைக் கழக கல்விக்கு பச்சைக்கொடி காட்டியது. திருநெல்வேலியில் உள்ள 'திருவருள் இல்லம்' எனும் கன்னியாஸ்திரி மடத்திலிருந்தபடியே தனது பல்கலைக்கழக கல்வியை தொடர்ந்தாள் அவள். அடுத்த வருடமே அவளின் இளைய சகோதரனும் பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகியமை, அவளின் மகிழ்ச்சியை அதிகரித்தது.

"எமது ஊரில் முதல் முதலாக ஒரே குடும்பத்தி லிருந்து இரண்டு சகோதரர்கள் பல்கலைக்கழக கல்விக்கு தெரிவாகியிருப்பது இப்போதுதான் என்று அடிக்கடி பெருமையாகச் சொல்லிக்கொள்வாள். விடுமுறை நாட்களில் மேரி டயானா வீட்டுக்கு வரும்போது வீடு களைகட்டும். டயானாவுக்கு பிரான்ஸிலுள்ள 'ஈபிள் கோபுரத்தை' ஒரு முறையாவது அங்கு சென்று பார்த்து படமெடுக்க வேண்டும் என்பதே கனவாக இருந்தது.பிரான்ஸில் உள்ள உறவினர் ஒருவரிடம் ஈபிள் கோபுர புகைப்படங்களை கேட்டு வாங்கி,வீட்டு சுவரெங்கும் அந்தப் படங்களை ஒட்டியிருந்தாள்.அந்தளவுக்கு ஈபிள் கோபுர ரசிகையாக மாறியிருந்தாள். ஈபிள் கோபுரமும், பட்டம் பெறுவதுமே அவளின் இரு ஆசைகள்.

யாழ்.பல்கலையில் கிறிஸ்தவ நாகரிகத்துறையை சிறப்புப் பாடமாகக் கற்று முடித்தாள் அவள். இனி பட்டமளிப்பு விழா மட்டுமே. எனவே மீண்டும் கன்னியாஸ்திரி வகுப்புகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டாள். இந்த நிலையில் தான் அந்த நாள் வந்தது.

**24.07.2017**

நாவாந்துறை பரலோக மாதா கோயிலின் 75 வது ஆண்டு பவளவிழாவில் கலந்துகொள்வதற்காக டயானா தன் வீட்டுக்கு வந்திருந்தாள்.

அன்று காலை உறவினர்கள்எல்லோருமாகச் சேர்ந்து கடலுக்குள் இருக்கும் குருசடித்தீவு புனித அந்தோனியார் ஆலயத்துக்கு இரண்டு படகுகளில் சென்றனர். இந்தக் கோவிலுக்கு அவ்வூர்வாசிகள் அடிக்கடி செல்வதும் ,மதிய உணவை அங்கேயே சமைத்து உண்டுவிட்டு மாலையில் வீடு வருவதும் வழக்கம். அன்றும் அவ்வாறே காலை சென்று மதிய உணவைச் சமைத்து உண்டுவிட்டு, பண்ணைப் பாலத்துக்கு மறு பக்கத்தில் உள்ள சிறுத்தீவு லூர்து மாதா கோயிலுக்குச் செல்ல எண்ணினர்.



மாலை இரண்டு படகுகளும் சிறுத்தீவு நோக்கி விரையத் தொடங்கின.

சிறுத்தீவுக்குச் செல்லவேண்டுமாயின், பண்ணைப்பாலத்தின் கீழாகவுள்ள ஆழமான பகுதியூடாகவே கடக்கவேண்டும். அப்படி அன்றும் அப்படி பாலத்தின் கீழ்ப் பகுதியில் படகு நுழைந்த போது, திடீரென எதிர்பாராமல் தோன்றிய சுழி, படகை அப்படியே இழுத்துச் சுழற்றியது.

படகோட்டி எவ்வளவோ முயன்றும், படகு புரள்வதைத் தடுக்க முடியவில்லை. அப்படியும் படகோட்டி, தளரவில்லை. தன்னால் முயன்றளவு கடலோடு போராடி, சிலரை மீட்டுக் கரைக்கு கொண்டு வந்துவிட்டு , இன்னும் தத்தளித்துக் கொண்டிருப்பவர்களை காப்பாற்ற கடலுக்கே திரும்பிச் சென்றார். தன்னுயிரைத் துச்சமாக மதித்த அந்தப் படகோட்டி அதன் பின்னர் கரை சேரவில்லை. உடனடியாக அங்கு திரண்டவர்கள் மீட்புப்பணியில் குதித்தனர். எஞ்சியோரைக் காப்பாற்ற அவர்களும் போராடினார். இரு மணித்தியாலயத் தேடுதலின் பின்னர் படகோட்டி சடலமாக மீட்கப்பட்டார். அந்தப் படகில் இருந்த மேரி டயானாவும் மீட்கப்பட்டு, மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டாள். ஆயினும் என்னதான் சிகிச்சையளித்தும் எவராலும் அவளைக் காப்பாற்ற முடியவில்லை. 30.07.2017 அன்று மேரி டயானாவின் உயிர் பிரிந்தது.

கிட்டத்தட்ட மூன்று வருடங்களாக அவளின் இழப்பைத் தாங்கமுடியாமல் தவித்த, மேரி டயானாவின் குடும்பத்தினர் அவளில்லாவிட்டாலும் , அவளின் இறுதி ஆசைகளையாவது பூர்த்தி செய்ய நினைத்தனர். ஈபிள் கோபுரத்தைப் பார்க்க வேண்டுமென்ற அவளின் ஆசையை நிறைவேற்ற முடியாவிட்டாலும், பட்டம் பெற வேண்டுமென்ற ஆசையையாவது நிறைவேற்ற முடிவெடுத்தனர். ஏற்கனவே அவள் சகல பரீட்சைகளும் முடிவடைந்து, டயானா அவற்றில் சித்தியடைந்துவிட்டதால், அவள் பட்டம் பெறுவதில் எந்தத் தடையுமில்லை. நிலைமையை துணை வேந்தருக்கு விளக்க, அவரும் இம்முறை (2021) பட்டமளிப்பு விழாவின் போது, மேரி டயானாவுக்கும் பட்டம் வழங்க சம்மதித்தார்.

யாழ்.பல்கலைக்கழக வரலாற்றில் முதற் தடவையாக, உயிர் பிரிந்த தன் மகளின் பட்டத்தை அவள் சார்பாகக் கண்ணீர் மல்கப் பெற்றுக் கொண்டார் மேரி டயானாவின் தந்தை. இப்போது மேரி டயானாவின் வீட்டில், அவளின் புகைப்படத்தை அவளின் இறுதி ஆசைகளில் ஒன்றான பட்டதாரிகளுக்கான பதக்கம் அலங்கரித்தபடி இருக்கின்றது. அந்தப் பதக்கத்தில் பட்டுத் தெறிக்கும் ஒளியில் தெரிகின்றது மேரி டயானாவின் புன்னகை.



அவசரமா ஒரு கடுதாசி

# இலங்கை பாரதிய ஜனதா கட்சியின் தலைவருக்கு...

**அண்ணைக்கு வணக்கம்.**

தண்ணீக்கை வாற குமிழிபோலை திடீரெண்டு வந்தியள். உடனேயே படுபிரபலமா விட்டியள். நீங்கள் கட்சி துவங்கினதுக்குப் பின்னாலை யாழ்ப்பாணத்திலை வைச்சியளே ஊடகச் சந்திப்பு... அதுக்குப்பிறகுதான் நீங்கள் கடும் பேமஸ். குஞ்சு குருமான் கூட அந்த வீடியோவிலை உங்களைக் காட்டி ஆரெண்டு கேட்டால் அதுகள் யோசியாமல் பட்டெண்டு "முத்துசாமி அப்பு" எண்டு சொல்லுங்கள். அவ்வளவுக்குப் பேர் எடுத்திட்டியள். உதோடை வடிவா எலக்சன் கேக்கலாம். ஆனால் நீங்கள் "இப்ப துவங்கின கட்சிக்கையோ அல்லது அதுக்குப் பின்னாலையோ அரசியல் இல்லை...அதோடை அரசியலுக்கை வாற நோக்கம் இப்ப எங்களுக்கு இல்லை "எண்டு கற்பூரம் கொளுத்தி அடிச்சுச் சத்தியம் பண்ணிறியள். நம்ப வேண்டிக் கிடக்கு. நம்புறம்.....! அதாலைதான் பல வழியிலும் யோசிக்க வேண்டி இருக்கு.

இப்ப இரண்டு நாளைக்கு முன்னம் எனக்குப் பொழுது போகேல்லை எண்டு வீட்டு முற்றத்திலை கிடந்த சாக்குக் கட்டிலிலை படுத்திருந்தாப் போலை கண்ணயர்ந்து போனன். அண்டு கனவிலை நீங்கள் வந்தியள். அப்ப நான் உங்களைக் கேட்டன் "இந்தியாவின்ரை உள் துறை அமைச்சர் அமித்ஷா இந்தியாவிலை உள்ள அனைத்து மாநிலங்களிலையும் மட்டுமில்லை இலங்கை உள்ளிட்ட அண்டை நாடுகளிலையும் பாஜகவின் ஆட்சி அமைக்க திட்டமிடுகிறார் எண்டு செய்தி வந்தது. அதுக்கும் இதுக்கும் ஏதாவது தொடர்பு இருக்கோ?" எண்டு.

அதுக்கு நீங்கள் ." இல்லை. அது பச்சைப் பொய். அவர் அப்பிடி அங்கை பேசினது எங்களுக்குத் தெரியாது. காகம் இருக்கப் பனம் பழம் விழுந்த கதைதான் இது. அவர் இதைச் சொல்ல முன்னமே நாங்கள் கட்சியைத் துவங்கிவிட்டம். இலங்கையிலை தமிழ்ஆக்கள் உள்ள கட்சியள் கனக்க இருந்தாலும் தமிழருக்கெண்டு ஒரு கட்சியும் இல்லை. எல்லாரும் ஆளுக்காள் கொழுத்தாடு பிடிச்சபடி அந்நியரிட்டை விலை போயிட்டினம். அது மட்டுமில்லை அவையள் எல்லாரும் தமிழ் மக்களின்ரை அடிப்படை உரிமையளைக் கதைக்கிறதை விட்டிட்டு தங்கடை தனிப்பட்ட நோக்கங்களை முன்னுக்கு வைச்சுத்தான் செயற்படுகினம். அதாலை இப்ப தமிழ் மக்கள் அவையளை நம்பத் தயாரில்லை, . எனக்கு கனவிலை காந்தி வந்து சொன்னவர். அதுக்குப் பிறகு அந்தக் கனவைப் பற்றி நான் பத்துப்பேரிட்டைச் சொல்ல அது பத்து நூறாகி பிறகு ஆயிரமாகி...இப்ப பெருகிப் போச்சுது.மற்ற கட்சிகள் போல பொய் சொல்லாமல் தமிழ் மக்களுக்குரிய கல்வி, பொருளாதார மேம்பாடு, விளையாட்டு, கலாசார மேம்பாட்டுத் திட்டங்களிலைத்தான் அதிகம் கவனிக்கப் போறம். இலங்கை பாரதிய ஜனதா கட்சி எல்லாச் சமுதாயத்தைச் சேர்ந்த ஆக்களையும் உயர்த்திற கட்சியாகச் செயல்படும்." எண்டு சொன்னியள்.

"அப்ப கட்சி பற்றின பிற விபரங்கள் என்ன?" எண்டு ( அதுவும் கனவிலைதான்) கேட்டன்.


"இலங்கை பாரதிய ஜனதா கட்சி எண்ட புது அரசியல்கட்சியைத் துவங்கினதிலை எங்களுக்குச் சந்தோஷம். இலங்கை பாரதிய ஜனதா கட்சி எண்டதை ஆங்கிலத்தில் லங்கா பாரதிய ஜனதா பார்ட்டி எண்டும் சிங்களத்திலை லங்கா பாரதிய ஜனதா பக்சய எண்டும் சொல்லுவம்" எண்டு சொன்னனியள். அதோடை கோயில் மணி கேட்டுது. கண் முழிச்சிட்டன். முத்துசாமி அண்ணை! சொல்லுறன் எண்டு கோவியாதையுங்கோ இப்ப கொஞ்ச நாளா எனக்கு ஒரே மனக் குழப்பமாய்க்கிடக்கு. எங்கடை நாட்டிலை பிடுங்குப்பாடு.ஜெனிவாவிலை குழப்பம். மேற்கு முனையம் ,கிழக்கு முனையம் எண்ட பிரச்சினை. விமல் வீரவன்சவுக்குத் தலையிடி காய்ச்சல். நெடுந்தீவை வாடகைக்கு விடப்போகினம் எண்டு ஒரு பக்கம். சீனாக்காரன் எங்கடை கிணத்துக் கட்டிலை வந்து இருந்து கொண்டு பெண்டுகளைக் குளிக்கவிடாமல் விசிலடிச்சு சீனாச் சினிமாப் பாட்டுப்பாடுறதாக் கனவு வேறை. இதை எல்லாம் மறந்து போய் பண்ணைப் பக்கம் கொஞ்ச நேரம் இருந்திட்டு வரலாம் எண்டு சைக்கிளை எடுத்துக் கொண்டு போனால்... அங்கை முகட்டைத் தொடுகிறமாதிரி நிக்கிற கலாசார மையம் கண்ணுக்கை பட்டிது. எட இஞ்சையும் வந்திட்டானடா. இதுக்கையும் வந்திட்டானேடா... எண்டு யோசிச்சுக் கொண்டு நிக்க ஒரு ஆள் வந்து முதுகிலை தட்டி "என்னண்ணை பாக்கிறியள்? இது இப்ப எங்களுக்குமில்லை.கட்டினவைக்குமில்லை. அவங்கள்தான் வரப் போறாங்களாம். இஞ்சை இருந்துதான் எல்லா விளையாட்டுகளையும் இனிமேல் நடத்தப் போகினமாம். காணி உறுதியளைக் கசசேரியிலை இருந்து அங்காலை கொண்டு போன மாதிரி அங்கை இருந்தும் கொஞ்சப் பயிலுகளை இஞ்சாலை கொண்டு வாற மாதிரியும் திட்டமாம்." எண்டு சொன்னார். நான் விறைச்சுப் போனன்.

"எட சண்டாளரே! கிளியை வளர்த்துக் கடைசியிலை குரங்கின்ரை கையிலை குடுத்திட்டியளே! என்ன நடக்கப் போகுதோ தெரியேல்லை" எண்டு யோசிச்சுக் கொண்டு சைக்கிளை எடுத்துப் பிடிச்சன், ஆனைக்கோட்டைத் தவறணையிலைதான் போய் சைக்கிள் நிண்டிது. இதுதான் இஞ்சை இனி நடக்கப்போகுது. இது ஒரு தகவலுக்காக சொன்னன்.

மற்றது ,"பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்லோணும்" எண்ட ஒரு பழமொழி இருக்கெல்லோ. அதுக்கேத்தபடி நடக்க பாருங்கோ. இல்லாட்டி நீங்கள் புளுகேக்க எல்லாரும் சிரிச்சே உங்களைச் சாகடிச்சிடுவினம். சரி ,உங்கட மறுமொழிக்காக காத்திருக்கிறன்.

இப்படிக்கு,

**அப்பாவி அன்னமுத்து.**



○ கோகுலராகவன்

பாலண்ணை என்கின்ற சிவபாலண்ணை குறும்பு பண்ணுவதில் மிகவும் கெட்டிக்காரர். தான் செய்த குறும்புகளை விலாவாரியாகச் சொல்வதில் அவருக்கு தனித்திறமை உண்டு. முகத்தில் எந்தவிதமான சலனமுமில்லாமல் 'நசுக்கிடாமல்' சொல்லி முடிப்பார். கதை முடியும்போதுதான் எமக்கு சிரிப்பு எழும். ஆனால் அவர் சிரிக்காமல் தான் பார்க்கும் அலுவலைத் தொடர்ந்து பார்த்துக் கொண்டிருப்பார்.

ஒருமுறை என்னிடம் இப்படிக் கேட்டார்.

"தம்பி தானத்தில் சிறந்த தானம் எது?"

"அன்னதானம்"

"இல்லை தம்பி, இரத்ததானம்"

நான் விசாரித்துப் பார்த்ததில் இதில் உண்மை இருப்பதாக உணர முடிந்தது. "தம்பி பாரதப் போரில் கர்ணனின் உயிர் ஏன் பிரியாமல் இருந்தது தெரியுமோ?"

"சொல்லுங்கோ அண்ணை"

"அவன் எல்லாத் தானமும் செய்தவன். ஆனால் இரத்ததானம் செய்யவில்லை. அதனால்தான் உயிர் பிரியவில்லை"

"பிறகு........."

"சாகக் கிடைக்கையில் இரத்ததானமும் செய்த பிறகுதான் உயிர் பிரிந்தது"

"மனிசன் எண்டால் எல்லாத் தானமும் செய்யோணும்" எனக்கு ஆச்சரியமாகப்பட்டது. அவர் ஒரு கூலித் தொழிலாளி. இவ்வளவு விச யங்களையும் எவ்வாறு அறிந்து கொண்டார்? ஒரு நாள் இரண்டு பேரும் மிளகாய்க் கன்றுக்கு பாத்தி இழுத்துக் கொண்டிருந்தோம். அவரது பின்னங்காலில் பழைய தழும்பு ஒன்று இருந்தது.

"என்ன தழும்பண்ணை? பெரிசாக் கிடக்கு..."

"இதோ? இது கறுவல் சுப்பையாண்ணன்ர நாய் கடிச்சுப் புடுங்கினது."

ஆள் பலமான ஆள். நாம்பன் மாட்டை பின்னங்காலில் எட்டிப் பிடித்து கட்டக்கூடியவர். நாயைக் காலால் அடித்து விடக் கூடியவர்.

"என்னெண்டு கடிச்சது?"

"அது சரியான கடியன் நாய். சுப்பையன் பாலுக்கை கொள்ளி எறும்பு போட்டு வளர்த்தவன்"

"நீங்கள் காலால் வெளுத்துப் போடுவியளே"

"அது பின்னாலே வந்து கடிச்சுப் போட்டுது"

"நாய்க்கு இரண்டு போடாமல் விட்டனியளோ"

"விடுவனே? பிறகொரு நாள் சுப்பையா விட்டை போனனான். எட்ட நிண்டு கூப்பிட்டுப் பாத்தன். ஆக்களின்ர சிலவனில்லை"கோயிலுக்கு போட்டினம். நாயைப் பார்த்தன். ஆளை நல்ல சங்கிலியாலை கட்டிக் கிடக்கு. இதுதான் சமயம் எண்டு கிட்டப் போய் பாத்தன். சிங்கம் மாதிரிப் பாயுது. பக்கத்திலை நல்ல கிளுவம் கதியால் கிடந்தது. முறிச்சு குழறக் குழற, அடியெண்டால் செம அடி"

"அண்ணை செத்துப் போகும் எல்லோ"

"செத்தாச் சாகட்டும். அடிச்ச அடியில சலம், மலம் எல்லாம் ஒண்டாய்ப் போச்சுது."

கொஞ்சநேர மௌனத்துக்கு பின்னர் தொடர்ந்தார்.




"பிறகு சுப்பையாண்ணை வீட்ட நான் போனால் நாய் ஒருக்கா எட்டிப் பார்த்திட்டு , சும்மா வேலியைப் பிய்ச்சுக் கொண்டு பறக்கும். அதைக் கண்டு சுப்பையாண்ணைக்கு ஒரே ஆச்சரியம்.

'என்னடா இந்த நாய் பாலனைக் கண்டால் இப்படி ஓடுது' எண்டு கேட்டார். நான் நசுக்கிடாமல்'நாயளுக்கு என்னைக் கண்டால் நாணம் அண்ணை'எண்டு சொல்லிச் சமாளிச்சிட்டன்". எனக்கு சிரிப்பு அடக்க முடியவில்லை. சிரித்துக் கொண்டே இருந்தேன். ■



"சுப்பையாண்ணை வீட்ட நான் போனால் நாய் ஒருக்கா எட்டிப் பார்த்திட்டு , சும்மா வேலியை பிய்ச்சுக் கொண்டு பறக்கும். அதைக் கண்டு சுப்பையாண்ணைக்கு ஒரே ஆச்சரியம்."

இரண்டு தென்னை மரங்களுக்கிடையில் எட்டடி நீளம், நாலடி அகலம், இரண்டடி ஆழத்தில் குழி தோண்டி (8'×4'× 2') , அதனுள் பொச்சுகளின் தும்புப் பக்கம் மேல் இருக்கத்தக்கதாக படைபடையாக அடுக்கி, பின்னர் குழியை மண்ணால் மூடி விடவேணும். இப்பிடி ஒன்றுவிட்ட ஒரு தென்னை மரத்துக்கு செய்யவேண்டும்"

# மண்ஈரத்தை பேணலும் பொச்சுமட்டை குழிகளும்

விதானையார் வீட்டு முற்றம் 10

○ வடகோவை வரதராஜன்



நான் போகும்போது செல்லையரின் தென்னம்தோப்பு ஒரே புகைமண்டலமாக இருந்தது. அந்த புகை மண்டலத்துக்குள் செல்லையரும் சிங்கமும் ஆவிகள் போலத் தெரிந்தார்கள் . புகைபோகிற திசைக்கு எதிர்த் திசையில் மோட்டார் சைக்கிளை நிப்பாட்டினேன்.

என்னைக் கண்டதும் செல்லையர், புகையைக் கைகளால் விலக்கிக்கொண்டும் கமறிக்கொண்டும் ஆவி உலக மனிதன் போல வந்தார்.

"அங்காலை வா, இந்தப் புகையுக்கை இருந்து கதைக்கேலாது" என்றவாறு புகை வராத இடம் ஒன்றுக்கு அழைத்துச் சென்றார்.

"என்ன செய்யிறியள் அண்ணை ?"

" இந்த பொச்செல்லாம் குவிஞ்சு போச்சு, அண்டைக்கு உந்தப் பொச்சுக் குவியலுக்கை ஒரு விளைஞ்ச புடையன்பாம்பு இருந்து சிங்கம் அடிச்சவன். அதுதான் பொச்சுகளை எரிப்பம் எண்டு நெருப்பு வைச்சனான்" என்று இருமியபடி சொன்னார் செல்லையர்.

நான் கொடுப்புக்குள் சிரிப்பதைக்கண்டதும்,

"என்ன சொண்டை நெளிக்கிறாய்? வழக்கம் போல 'உது பிழையான முறை' எண்டு என்னோடை செருகப் போறாய் போல கிடக்கு" என்று கண்ணை காட்டினார்.

"பொச்சை இப்பிடிக் குவிச்சு வைச்சால் பாம்பு பூச்சி வரத்தான் செய்யுமண்ணை. அதே பொச்சை மண்ணுக்குள்ளை புதைச்சு வைச்சால் எங்களுக்குப் பெரிய பிரயோசனமாக இருக்கும்."

"உதென்ன புது வியளம் பறையிறாய்?"

"உண்மைதான் அண்ணை. மண் ஈரத்தைப் பாதுகாக்கிறதிலை பொச்சுக்கு பெரிய பங்கிருக்கு . பொச்சு தன்னைப்போல மூன்று மடங்கு நீரை உறிஞ்சி வைச்சிருக்கும் "

"இதென்ன புதுப் பூராயமாய்க் கிடக்கு . கொஞ்சம் விளப்பமாய் சொல்லன்"

"இரண்டு தென்னை மரங்களுக்கிடையில் எட்டடி நீளம், நாலடி அகலம், இரண்டடி ஆழத்தில் குழி தோண்டி (8'x4'x 2') , அதனுள் பொச்சுகளின் தும்புப் பக்கம் மேல் இருக்கத்தக்கதாக படைபடையாக அடுக்கி, பின்னர் குழியை மண்ணால் மூடி விடவேணும். இப்பிடி ஒன்றுவிட்ட ஒரு தென்னை மரத்துக்கு செய்யவேண்டும்"

"பொறு ! பொறு !, ஏன் பொச்சை மல்லாத்திப் போட வேணும் எண்டுறாய் ?"

"தும்புப்பக்கம் மேலை நிண்டால்த்தான், பெய்யிற மழைத்தண்ணியை தும்பாலை உறிஞ்சிச் சேமிச்சு வைக்கமுடியும்"


" அது சரிதான் . ஏன் ஒவ்வொரு தென்னைக்கும் வெட்டித் தாக்கக் கூடாதே ? "

"செய்யலாம். ஆனால் ஒவ்வொரு தென்னைக்கும் குழி வெட்டக் கூலி கூட முடியுமெல்லே. உங்களால கூலி குடுக்க முடியும் எண்டால் ஒவ்வொரு தென்னை மரத்தின் அடியிலிருந்து ஆறடி தூரம் தள்ளி மூன்றடி நீளம் மூன்றடி அகலம் இரண்டடி ஆழத்தில் (3' x 3' x 2') குழி வெட்டி அதில் பொச்சுகளை முன் சொன்னமாதிரி அடுக்கி மூடிவிடலாம் ."



" முதல் சொன்னமாதிரி ஒண்டவிட்ட தென்னையளுக்கிடையில் குழி வெட்டினால் ரெண்டு தென்னைக்கும் ஈரப்பசை கிடைக்குமே"

"ஓமண்ணை . இடது பக்கம் நிக்கிற தென்னையின் வலதுபக்க வேர்கள் மட்டைக்குழிக்குள் போய் நீரை உறிஞ்சும்.



"வலதுபக்க தென்னையின் இடதுபக்க வேர்களும் மட்டைக்குளிக்குள் போய் நீரை உறிஞ்சும்" "இது செலவு குறைஞ்ச முறைதான். அது சரி பொச்சுகளை, மரத்தைச்சுத்தி வட்டமாய் அடுக்கி விட்டால் என்ன?"

" அப்பிடியும் ஒரு முறை இருக்கண்ணை. மரத்தின் அடியில் இருந்து ஆறடிச் சுற்று வட்டம் முழுவதும் பொச்சின்ர தும்புப் பக்கம் கீழை இருக்கிறமாதிரி மூடி அடுக்கி விடவேண்டும். இது மேல் மண்ணில் இருந்து நீர் ஆவியாகி வெளியேறுவதைத் தடுக்கும்"

" தென்ன வெடிச்சுப்பன் மாதிரி ஒவ்வொருநேரம்ஒவ்வொருகதை பறையிறாய். முதல் பறைஞ்சதை அயத்துப் போனியோ இல்லை என்னை ஒரு விடுபேயன் எண்டு நினைச்சு அடிச்சு விடுகிறியோ? முதல் மல்லாதிப் போட வேணும் எண்டாய். இப்ப கவிட்டு போடவேணும் எண்டுறாய்"

எனக்கு சிரிப்பு பொத்துக் கொண்டுவந்தது. சிரித்தபடி,

" குழிகளில் பொச்சைத் தாக்கேக்கை தும்புப் பக்கம் மேலை நிண்டால்தான் பெய்யிற மழைத்தண்ணியை பொச்சு உறிஞ்சக்கூடிய மாதிரி இருக்கும் . மரத்தைசுத்தி மேல் மட்டத்திலை அடுக்கேக்கை தும்புப்பக்கம் மேலை நிக்கிற மாதிரி அடுக்கிறதெண்டால் சீரான முறையில் அடுக்கேலாது . மற்றது பொச்சு மண்ணைக் கவ்விப்பிடிச்சு நிக்காது ."

"சரி சரி இப்பவிளங்குது . உன்னை மாதிரி வெளிச்ச மண்டையும் ,நிறைஞ்ச புத்தியுமே எனக்கு"என்று எனக்கு ஓர் வஞ்சப் புகழ்ச்சி வைத்து நளினம் விட்டார் செல்லையர் .

பர்வதம் மாமி கனன்று கொண்டிருக்கிற நெருப்புத்தணலில் மரவள்ளிக்கிழங்கை பக்குவமாக சுட்டு , கமுகமடலில் வைத்து கொண்டுவந்து தந்தார் .

தோலை உரித்து கிழங்கைப் பிட்டபோது ஆவி பறந்தது . நல்ல மாப்பிடிப்பான கிராய் கிழங்கின் "மாப்பொருள் மணிகள் கண்ணாடித் துகள்களாகப் பளபளத்தன. அம்மியில் அரைத்த கட்டைச் சம்பலில் தொட்டு வாயில் போட சுவை அள்ளியது .

கதைகளை கேட்டுக்கொண்டிருந்த பர்வதம்மாமி

"ஒருக்காத் தாட்டால் எத்தனை வரியத்துக்கு இது கிடக்கும் விதானையார் ?" எனக் கேட்டார்.

"முதல் ஒண்டவிட்ட ஒரு தென்னைக்கு தாழ்க்க வேணுமெண்டு சொன்னன் எல்லோ ? அடுத்த வருசம் முன்பு வெட்டாத தென்னை களுக்கிடையில் தாழ்க்க வேண்டும். இப்படி ஒவ்வொரு வருசமும் தாழ்க்க வேண்டும்"

" சரி விதானையார் இப்பிடித் தாட்டால் தென்னைக்கு இறைக்கத் தேவையில்லையோ"

"இதாலை இறைப்பை எப்பிடி குறைக்கலாம் , இதாலை என்ன நன்மைகள் எண்டதை அடுத்தகிழமை வந்து சொல்லுறன் " என்றேன் நான்.

"விதானையாருக்கு எப்பவும் பறதி , கொஞ்சம் ஆற அமர இருந்து கதைக்கமாட்டார்"

என்று ஆதங்கப்பட்டார் பர்வதம்மாமி .

" தம்பியைப் போக விடும் , வெயில் ஏறிச்சுதெண்டால் அதுக்குள்ளை போய் நல்லாய் கரிப்பத்திப் போடுவான் "என்று தனது நளினத்தை தொடங்கினார் செல்லையர். ■



# மாணவர் கழகம்



223

**பெயர்:** ம.இசைவாணி,
**முகவரி:** இல. 65, வீட்டுத்திட்டம் முக்கொம்பன்.
**பி. திகதி:** 2007.08.07
**பாடசாலை:** கிளி/முக்கொம்பன் மகா வித்தியாலயம்



224

**பெயர்:** நிஷாந்தன் சிவராம்,
**முகவரி:** புத்தூர் கிழக்கு, புத்தூர்
**பி. திகதி:** 28.07.2013
**பாடசாலை:** யா/புனித ஜோன் பொஸ்கோ.



225

**பெயர்:** பிரதீஸ் டினுஷாந்,
**முகவரி:** சரசாலை தெற்கு, சாவகச்சேரி.
**பி. திகதி:** 2009.06.31
**பாடசாலை:** யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

சஞ்சீவி மாணவர் கழக அங்கத்தவர்களாக இணைய உங்கள் புகைப்படத்துடன் கீழ்காணும் முகவரிக்கோ அல்லது வட்அப், வைபர் எண்ணுக்கோ அனுப்பி அங்கத்தவர்களாக இணையுங்கள்.

சஞ்சீவி
**மாணவர் கழகம்**


1. முழுப்பெயர்: ..........
2. முகவரி: ..........
3. பிறந்த திகதி: ..........
4. கல்வி கற்கும் பாடசாலை: ..........
5. கற்கும் தரம்: ..........
6. தொலைபேசி இலக்கம் : ..........

மாணவர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

0773165555

அனுப்ப வேண்டிய முகவரி:
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
sanjeevi@uthayan.com

# ‘வெள்ளெலிகளுடன் வாழ்தல்’



துவாரகன்

ம.பா. மகாலிங்கசிவம்

தமிழக இலக்கிய வரலாற்றில் நாயக்கர் காலப் பகுதிக்கும் இலங்கையின் தற்போதைய காலப் பகுதிக்கும் இடையே பல ஒற்றுமைகள் உள்ளன. இஸ்லாமியத் தாக்குதல், இந்துக் கோயில்களின் இடித்தழிப்பு எனப் பலவற்றை கூற முடியுமாயினும் பிரதானப்பட்டு நிற்கும் ஒற்றுமை, இரு காலங்களுமே போரின் பாதிப்பை மிக அதிகமாக எதிர்கொண்ட காலங்களாகும் என்பதே. போர்ப் பாதிப்பால் பொருளாதாரம் சரிவு காண, மக்கள் வாழவே முடியாதபடி பஞ்சமும் பட்டினியும் இரு காலப்பகுதியிலும் கோலோச்சுகின்றன. இவ் வறுமையாற் பாதிக்கப்பட்டு வாழ்வதற்கு வழி அற்ற நிலையில் இராமச்சந்திர கவிராஜர் பாடிய ஒரு பாடலை முதலிலே நோக்கலாம்.

**கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான்**
**குடிக்கத்தான் கற்பித்தானா?**
**இல்லைத்தான் பொன்னைத்தான் எனக்குத்தான்**
**கொடுத்துத்தான் இரட்சித்தானா?**
**அல்லைத்தான் சொல்லித்தான் ஆரைத்தான்**
**நோவத்தான் அச்சோ எங்கும்**
**பல்லைத்தான் திறக்கத்தான் பதுமத்தான்**
**புவியில்தான் பண்ணினானே?**

தன்னைப் படைத்த பிரம்மனின் செயலை நொந்து பாடுவதாகப் பாடல் உள்ளது. வறியவன் ஆக என்னைப் படைத்த பிரம்மன் கல்லையோ, மண்ணையோ காய்ச்சி குடிக்க கற்பித்திருந்தால் நான் பட்டினி கிடந்து இருக்க மாட்டேன். வாழ்வதற்கு ஒரு வீட்டையாவது தந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் வீடு கட்டுவதற்கான பொன்னையாவது கொடுத்து இரட்சித்திருக்க வேண்டும். வறுமையில் எனக்கு ஏற்படும் துன்பங்களை யாரிடம் சொல்லி நோவது, செல்லும் எல்லா இடங்களிலும் பணத்தைக் கேட்டுப் பல்லைக் காட்டி இரந்து நிற்கும்படி அவன் படைத்து விட்டானே என்று கலங்குவதாகப் பாடல் உள்ளது.

இனி இன்றைய சூழலுக்கு வந்தால் அரிசி, மா என்று எல்லா பொருட்களுமே அதிஉயர் விலையில் விற்கப்படுகின்றன. சீனியில் கூடக் கை வைத்து விட்டார்கள், இறக்குமதி வேளையில் என்று எதிர்க்கட்சிகள் கூக்குரல் இடுகின்றன. உழுந்து, பயறு எல்லாமே யானை விலை, குதிரை விலை.

இந்த நிலையில் உயிர் வாழ்வதற்கான உணவுப் பொருட்களைப் பெறவும், வசிப்பதற்கான இலவச வீட்டினைப் பெறவும் புதியதொரு வழியைக் கண்டுபிடித்த துவாரகனின் ‘வெள்ளெலிகளுடன் வாழ்தல்’ என்ற கவிதை இன்றைய தேன்கூட்டில் இடம்பெறுகிறது. அவரது ‘மூச்சுக்காற்றால் நிறையும் வெளிகள்’ என்ற கவிதைத் தொகுப்பிலிருந்து பெறப்படுகிறது. துவாரகனின் இயற்பெயர் சுப்பிரமணியம் குணேஸ்வரன் ஆகும். கெருடாவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் கவிதை, கட்டுரை, விமர்சனம், ஆய்வு முதலிய துறைகளில் ஈடுபாடு கொண்டவர். புலம்பெயர் இலக்கியம் தொடர்பான பல ஆய்வுகளை நிகழ்த்தியவர். மூச்சுக் காற்றால் நிறையும் வெளிகள், அம்மாவிடம் சேகரமாகிய முத்தங்கள், என்னும் இரு கவிதைத் தொகுதிகள், அலைவும் உலைவும், உள்ளும் வெளியும், புனைவும் புதிதும் ஆகிய கட்டுரை நூல்களையும் வெளியிட்டவர். இனி வெள்ளெலிகளுடன் வாழ்தல் என்னும் கவிதைக்குள் செல்வோம்.

தேன் கூடு

**‘நாயுருவியும் ஆமணக்கும்**
**சடைத்து நின்ற**
**பற்றை மண்மேட்டில் வாழும்**
**வெள்ளெலியை ஒருமுறை சந்தித்தேன்’**

எனக் கவிதையின் ஆரம்பப்பகுதி வெள்ளெலிகளின் வாழ்விடப் பின்புலத்தை, அதுவும் நாயுருவி ஆமணக்கு என்பவை சடைத்து நிற்கின்ற வளமான பின்புலத்தை வாசகர் மனக்கண் முன் கொண்டு வருகின்றன.

**“எனக்குப் பிடித்த**
**இரத்த நிற நாகதாளிப்பழத்தை**
**முள் நீக்கி**
**நட்சத்திர கொட்டை நீக்கி**
**சாப்பிட்ட நேரம்**
**அந்த வெள்ளெலி**
**என்னை தன் வளைக்கு அழைத்துச் சென்றது.**
**நானும் ஓர் எலியாகிச் சென்றேன்”** எனக் கவிதை தொடர்கின்றது. இன்றைய சிறுவர்கள் அறியாத நாகதாளிப் பழத்தை உண்ணும் பழக்கம் அன்றைய மனிதர்களிடம் இருந்ததைக் கவிஞர் இங்கு பதிவு செய்கின்றார். நாகதாளிப் பழத்துடன் பூநாறிப்பழம், இலந்தைப்பழம், நாவற்பழம் முதலிவற்றையும் சுவைத்த எமது சிறுவர் பராய நினைவுகள் மனதுட் கிளர்ந்து எழுகின்றன. நாகதாளிப் பழத்தை உண்பதற்கான நுட்பங்களும் வர்ணிக்கப்படுகின்றன.



**“அழகான வளைகள்**
**சேமித்த தானியங்கள்**
**புசிப்பதற்குக் கொட்டைகள் கிழங்குகள்**
**கூடிக் குலாவப் பெட்டை எலிகள்**
**ஒரு சோலியும் இல்லை”**

என்னும் பாடற் பகுதி மனித வாழ்வை விட வெள்ளெலிகளின் வாழ்க்கை மிகவும் மேம்பாடானதாகவும், அடிப்படைத் தேவைகள் இலவசமாகவே நிறைவேறுவதாகவும் கவிஞருக்குப் புலனாவதைக் காட்டுகின்றது. வீடற்ற நிலையில், அல்லது வீடுகட்ட போதிய பணம் இல்லாத நிலையில் வாழும் மனிதனை இலவசமாகக் கிடைக்கும் வெள்ளெலிகள் வாழ்க்கை ஈர்க்கின்றது. விலைவாசி விண்ணுயர உயர்ந்து செல்லும் வேளையில் எந்த விலையும் கொடுக்காமல் தானியங்களை சேமித்து வைக்கும் வெள்ளெலிகளது வாழ்க்கை அதிஷ்டம் நிறைந்ததாகக் காட்சியளிக்கிறது. உறையுள், உணவுத் தேவைகள் நிறைவேறினால் அடுத்து எழுவது எது? சிற்றின்ப வேட்கை தான் அதிலும் வெள்ளெலிகள் புண்ணியம் செய்தவை என்பதைக் “கூடிக்குலாவிக் பெட்டை எலிகள்” என்னும் தொடர் மூலம் கவிஞர் விளக்குகிறார். பிறகென்ன? வெள்ளெலி வாழ்க்கை ஒரு சோலியும் இல்லாத வாழ்க்கைதான் உணவுப் பற்றாக்குறைக்கு பக்கத்து மரவள்ளி தோட்டங்களும் மனிதர், பாம்புகளிடமிருந்து பாதுகாப்புக்கு பல வளைகளும் உள்ளமையும் கூறப்படுகிறது. இவற்றால் கவிஞருக்கு வெள்ளெலிகளின் வாழ்க்கை பிடித்து போகின்றது. எனவே

**“நான் இனி**
**வெளியில் வாழ்வதை விட**
**வெள்ளெலிகளுடன்**
**வாழப்போகிறேன்**

என்று கவிஞர் முடிவு செய்கிறார். ஒரு நிமிடம் அமைதியாக சிந்தித்துப் பார்த்தால் சீனியிலிருந்து மத்திய வங்கி பிணை முறிகள் வரை சுரண்டுகின்ற மனித எலிகளை விட வெள்ளெலிகள் மேலானவையகவே அனைவருக்கும் தோன்றும். வெள்ளெலிகளைக் குறியீடாகக் கொண்டு மனித வாழ்வின் அவலங்களையும், இயலாமைகளையும் பேசும் கவிஞனின் கவித்துவமும் கற்பனா சக்தியும் பாராட்டத்தக்கவை.

நாயுருவியும் ஆமணக்கும்
சடைத்து நின்ற
பற்றை மண்மேட்டில் வாழும்
வெள்ளெலியை
ஒருமுறை சந்தித்தேன்

எனக்கு பிடித்த
இரத்தநிற நாகதாளிப்பழத்தை
முள்நீக்கி
நட்சத்திரக் கொட்டை நீக்கி
சாப்பிட்ட நேரம்
அந்த வெள்ளெலி
என்னை, தன் வளைக்கு
அழைத்துச் சென்றது
நானும் ஓர் எலியாகிச் சென்றேன்

அழகான வளைகள்
சேமித்த தானியங்கள்
புசிப்பதற்கு கொட்டைகள் கிழங்குகள்
கூடிக்குலாவ பெட்டை எலிகள்
ஒரு சோலியுமில்லை

எனக்கும்கூட....
புல்லாந்திப்பழம் கோரைக்கிழங்கு
கொவ்வைப்பழம் நன்னாரிவேர்
எல்லாமே பிடிக்கும்
"வசதியென்றால்
பக்கத்துத் தோட்டங்களில்
மரவள்ளிக்கிழங்குகள்
தோண்டியும் தின்னலாம் வா என்றது.
மனிதர்களும் பாம்புகளும் வந்தால்....

ஒளிந்திருக்க
வேறு வளைகளும் உண்டென்று கூறியது.

நான் இனி
வெளியில் வாழ்வதைவிட
வெள்ளெலிகளுடன் வாழப்
போகின்றேன்

பழங்கள்
கொட்டைகள்
கிழங்குகள்
வளைகள்
வெள்ளெலிகள்
எல்லாமே எனக்குப்
பிடித்துப் போயிற்று.

# பிஞ்சு தூரிகைகள்



ய.அட்ஷயா
தரம்-5
யா/ மண்டைதீவு
வித்தியாலயம்.



வ.மதுஜா
தரம்-7
யா/ இந்து மகளிர்
கல்லூரி.



ம.கிரிதரணி
தரம்-7
யா/ தாவடி இ.த.க.
பாடசாலை.




# சாதிப்பதற்கு வறுமை தடையல்ல!

ஓர் ஊரில் கண்ணன் எனும் சிறுவன் இருந்தான். அவனுடைய தந்தை காற்பந்தாட்டக் கழகத்தில் சுத்திகரிப்பு வேலை செய்பவர். ஒருநாள் கண்ணனின் தந்தை மைதானத்துக்கு கண்ணனையும் அழைத்துச் செல்லும்போது அங்கு வீரர்கள் விளையாடும் விளையாட்டைக் கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான். அன்று வீடு திரும்பிய கண்ணன் பிளாஸ்ரிக் போத்தல்களைக் கொண்டு காற்பந்து விளையாடுவதைக் கண்ட கண்ணனின் தந்தை காற்பந்தாட்டக் கழகத்தில் மற்ற மாணவர்களுடன் சேர்ந்து விளையாட அனுமதி பெற்றுக் கொடுத்தார்.

கண்ணனுக்கு காற்பந்தாட்டத்திலேயே அதிக ஆர்வம் என்பதை அறிந்த தாய் கண்ணனை முழு நேரமும் காற்பந்து விளையாட ஆதரவளித்தார். தாயின் ஆதரவே கண்ணனுக்கு பெரிய பலமாக அமைந்தது. இவ்வாறு காலம் கடக்க காற்பந்தாட்ட மைதானத்தையே தெறிக்க விட்ட கண்ணனைப் பார்த்து நிர்வாகத்தினர் வேறொரு கிராமத்துக்கு அழைத்துச் சென்று அங்கு வைத்து கண்ணனுக்கு பயிற்சி அளித்தனர். தினமும் வீட்டு ஞாபகம் வந்தவுடன் கண்ணன் அழ ஆரம்பித்து விடுவான். இந்த நிலைமையைப் பார்த்த நிர்வாகத்தினர் கண்ணனை சொந்த ஊருக்கே அழைத்துச் சென்றனர்.

வீடு திரும்பிய கண்ணனின் கண்களுக்கு வறுமை மட்டுமே தெரிந்தது. “இந்த வறுமையை நீக்க வேண்டுமானால் அதற்கு ஒரு வழி நீ காற்பந்தாட்டம் விளையாட வேண்டும்” என்ற குரல் அவன் காதுக்குக் கேட்கவே அடுத்தநாளே விளையாட்டுக்கழகம் சென்றான். அங்கு அனைத்தையும் மறந்து விளையாட ஆரம்பித்தான். இவ்வாறு உலகம் முழுவதும் கண்ணனின் பெயர் பரவத் தொடங்கியது. முதன்முறையாக களத்தில் இறங்கிய கண்ணன் பல வீரர்களுக்கு மத்தியில் ‘கோலை’ அடித்து அசத்தினான். அன்று விளையாட்டை முடித்து விட்டு வெளியேறும்போது அனைவரும் எழுந்து நின்று கைதட்டினர். அதுவே அவனின் வாழ்க்கையை மாற்றிய முக்கிய தருணம். சாதிப்பதற்கு வறுமை ஒரு தடையல்ல. கிடைக்கும் வாய்ப்பை சிறப்பாகப் பயன்படுத்தினால் வறுமை என்ற பேச்சுக்கே இடமில்லை.

**தீ.பூர்வஜன்,**
தரம்-7,
சாவகச்சேரி இந்துக்
கல்லூரி.





# விடுகதைகள்

1. முறையின்றித் தொட்டால், ஒட்டிக் கொண்டு உயிரை எடுப்பான் அவன் யார்?

**மின்சாரம்**

2. மரத்துக்கு மரம் தாவுவான், குரங்கல்ல, பட்டை போட்டிருப்பான், சாமி அல்ல, அவன் யார்?

**அணில்**

3. கையை வெட்டுவார், கழுத்தை வெட்டுவார். ஆனாலும் நல்லவர் அவர் யார்?

**தையல்காரர்**

4. இளமையில் பச்சை, முதுமையில் சிகப்பு, குணத்திலே எரிப்பு அது என்ன?

**மிளகாய்**

5. கண்ணால் பார்க்கலாம் கையால் பிடிக்க முடியாது அது என்ன?

**நிழல்**

6. நான்கு கால்கள் உள்ளவன், இரண்டு கைகள் உள்ளவன், அமர இடம் கொடுப்பான். அவன் யார்?

**நாற்காலி**

7. அழகான பெண்ணுக்கு அதிசயமான வியாதி, பாதிநாள் குறைவாள், பாதிநாள் வளர்வாள். அது என்ன?

**நிலா**

8. அக்கா விதைத்த முத்து, அள்ள முடியாத முத்து, அது என்ன?

**கோலம்**

9. பூ பூக்கும். காய் காய்க்கும். ஆனால் பழம் பழுக்காது. அது என்ன?


**தேங்காய்**

10. நீரிலும் வாழ்வேன், நிலத்திலும் வாழ்வேன். நீண்ட ஆயுள் உடைய எனக்கு இறைவன் கொடுத்த கவசமும் இருக்கு. நான் யார் ?

**ஆமை**


**ஜெ.ஆருசா, தரம் 5**
**யாழ்.ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்**

# வழிகாட்டுவோம்



# விலங்குப் புதிர்

இந்தப் படத்தில் பல விலங்குகளின் உடல் உறுப்புகள் ஒளிந்துள்ளன. அவற்றைக் கண்டுபிடியுங்கள்.



1. தலை..........................?
2. உடம்பு........................?
3. கால்கள்......................?
4. வால்..........................?

# நிலநடுக்கம்



உலகில் திடமாகவும், நிலையாகவும் இருப்பது நிலம் மட்டுமே. காற்று வீசுகிறது; அலைகள் சுழல்கின்றன. ஆனால் நிலம் மட்டும் நிலையாகவும் திடமாகவும் நிற்கிறது. அது எப்போதும் இப்படி இருப்பதில்லை.

உலகின் எங்கோ ஒரு பகுதியில் திடீரென அதிர்கிறது நிலம். அதனால், விரிசல் ஏற்படுகிறது. கட்டடங்கள் உடைந்து, இடிபாடுகளுள் சிக்கி உயிரினங்கள் மாய்கின்றன. சில நிமிடங்களில், எதுவுமே நடக்காதது போல் எல்லாம் அமைதி நிலைக்குத் திரும்பிவிடும். நிலம் நடுங்குவதை ஆங்கிலத்தில் ‘எர்த் க்வேக்’ என்பர். இந்த ஆங்கிலச் சொல்லுக்குத் தமிழில், ‘நில நடுக்கம்’ என பொருள்.

இது கடலுக்கடியிலும் நிகழும். அப்போது நீர்ப் பரப்பு குலுங்கும். இதனால் நீண்ட அலை உருவாகி, நீண்ட தூரம் பயணித்து, நிலப்பகுதியை அடையும். அவ்வாறு வரும்போது நீர்ச்சுவர் போல் மாறி, நிலத்தைத் தாக்கும். இதனால் பெரும் சேதம் ஏற்படும்.

கடலுக்கு அடியில் நிகழும் நடுக்கத்தால் தோன்றும் அலைக்கும், இதற்கும் தொடர்பில்லை. இதை குறிப்பிட புதிய சொல் தேவைப்பட்டது. கிழக்காசிய நாடான ஜப்பானின் மொழியில், ‘சுனாமி’ என இதற்குப் பெயர். அந்தச் சொல்லே உலகம் முழுவதும் பயன்படுத்தப்படுகிறது. இதை, ‘துறைமுக அலை’ என தமிழில் பொருள் கொள்ளலாம்.

# நலம் அறிய...

1 எனது மகளுக்கு 11 வயது. நான் ஒரு ஆசிரியை. தகுந்த வழிகாட்டலில் சிறப்பான சுகாதார பழக்கவழக்கங்களுடன் எனது மகளை வளர்க்கின்றேன். கடந்த இரு வாரங்களாக பென்சில், கரி, வெறும் அரிசி (சமைக்கப்படாத), மணல் போன்றவற்றை உண்ணத் தொடங்கினாள். ஆரம்பத்தில் விளையாட்டுக்காக என்று தோன்றியதாலும் சிறிய அளவில் உண்பதாலும் நான் கண்டுகொள்ளவில்லை. ஆனால் இப்பொழுது நாளாந்தம் உண்கின்றாள். சாதாரண உணவில் நாட்டமில்லை. ஏன் இப்படி உண்கிறாள்? மருத்துவ ரீதியாகவா அல்லது மனநல ரீதியாகவா இந்தப்பிரச்சினையை அணுகுவது ? எனக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. தயவு செய்து விடையளியுங்கள்.

ஹர்ஷினி, நீர்கொழும்பு



மருத்துவர் ப்ரியா கமலசிங்கம்
(யாழ்.போதனா மருத்துவமனை,
– சிலாபம் மாவட்டப்
பொது மருத்துவமனை)

# இரத்தச்சோகை என்றால் என்ன?

## Hemoglobin - ஹீமோகுளோபின்

இரத்தத்தின் பிரதான கூறு (RBC) செங்குருதியணுக்கள். இந்த செந்நிறத்துக்கு காரணமானது ஹீமோக்குளோபின். இது இரும்பு மற்றும் குளோபுலின் எனும் புரதத்துடனிணைந்த உருவாக்கப்படுவது. ஹீமோக்குளோபினது பணி- நுரையீரலிலிருந்து நுரையீரலுக்கு கரியமிலவாயுவையும் கடத்திச் செல்வது.

## இரத்தச்சோகை என்றால் என்ன?

குருதியில் மேற்கூறிய ஹீமோக்குளோபின் குறைவாக இருக்கும்போது ஆக்சிஜனை, தேவையான அளவு உடலிலுள்ள செல்களுக்கு எடுத்துச் செல்லமுடியாது. இதைத்தான் இரத்தச்சோகை என்கிறோம். இரத்தச்சோகை குருதியிலுள்ள ஹீமோக்குளோபினின் அளவைப் பொறுத்துக் கணிப்பிடப்படுகிறது.




| | சராசரி அளவு | இரத்தச்சோகை |
|---|---|---|
| ஆண் | 13.5 - 17.5g/dl | < 13.5. g/dl |
| பெண் | 12- 16 g/dl | < 12. g/dl |

| | | |
|---|---|---|
| மிதமான இரத்தச்சோகை | 7- 10 g/dl | Hb |
| தீவிரமானது | 4- 7 g/dl | |
| மிகத் தீவிரமானது | | |

உலக சுகாதார அமைப்பு கணித்துள்ள இரத்தச்சோகை உறுதி செய்யும் வரையறுக்கப்பட்ட ஈமோகுளிபினின் அளவு
(1g/dl= 0.6206mmol/L)

| வயதும், பாலும் | Hb வரையறை (g/dl) | Hb வரையறை (mmol/l) |
|---|---|---|
| குழந்தைகள் (0.5–5.0 வயது) | 11.0 | 6.8 |
| பிள்ளைகள் (5–12 வயது) | 11.5 | 7.1 |
| பதின்ம வயதினர் (12–15 வயது) | 12.0 | 7.4 |
| கருப்பமில்லாத பெண் (>15yrs) | 12.0 | 7.4 |
| கர்ப்பமான பெண் | 11.0 | 6.8 |
| ஆண் (>15yrs) | 13.0 | 8.1 |

## ஏற்படுவதற்கான காரணிகள்

1. கர்ப்பகாலம் (<11.Hb இரத்தச்சோகை)
2. கடுமையான மாதவிடாய் /இரத்தப்போக்கு
3. ஒட்டுண்ணித்தொற்று (வயிற்றில் புழு இருத்தல்)
4. ஊட்டச்சத்து குறைபாடு
5. மகப்பேற்றின்போது அதிக குருதி விரயம்

## அறிகுறிகள்

1. மூச்சுவாங்குதல்
2. இதயத்துடிப்பு அதிகரித்தல்
3. நெஞ்சுப் படபடப்பு
4. அடிக்கடி தலைவலி/ மயக்கம்
5. நகம், சருமம், வாயின் உட்பகுதி, கண்கீழ் மடல் முதலியவை வெளிறிப்போதல்
6. கரி, chalk, களிமண் போன்ற உண்ணத்தகாத பொருள்களை உண்ணுதல்
7. கவனக்குறைவு
8. மஞ்சள் காமாலை நோய்
9. எலும்பு அமைப்புகளில் மாற்றம்
10. கால்களில் அழற்சிப் புண்

பலரில் எவ்விதநோயறிகுறியின்றியும்/ வரையறுக்கப்படாத பொதுவான குறிகளிலிருந்து இந்த நோய் கண்டுபிடிக்கப்படாமல் போகும் சாத்தியக்கூறு உண்டென்பது குறிப்பிடத்தக்கது.!!!

இரத்தச்சோகை.

1. செங்குருதியணுக்களின் உருவத்தில் காணப்படுகிற மாற்றத்தின் அடிப்படை
2. இரத்தச்சோகை ஏற்படும் காரணத்தின் அடிப்படை
3. நோயின் தன்மை

போன்றவற்றின் அடிப்படையில் பலவகைப்படும்!!

## அடிப்படை வகைப்படுத்தல்

1. குருதிப்பெருக்கால் ஏற்படும் அதிகப்படியான இரத்த இழப்பு
2. அதிகப்படியான குருதிச் சிவப்பணுக்களின் அழிவு - Hemolysis
3. குறைந்த அளவிலான சிவப்பணுக்களின் உற்பத்தி.

## சிகிச்சை

பொதுவாக, அடிப்படைக்காரணத்தைப் பொறுத்தும் தீவிரதன்மையைப் பொறுத்தும் மாறுபடும்.

1. வைத்தியரின் வழிகாட்டலின்கீழ் இரும்புச்சத்து Vit B12, மற்றும் போலிக் அமில மாத்திரைகளை உண்ணுதல்
2. சரியான ஊட்டச்சத்துள்ள உணவுகளை உண்ணுதல்
3. சிறார்களுக்கு கிரமமாக பூச்சி மருந்தளித்தல்
4. கர்ப்பிணியாயின் இரும்புச்சத்து, போலிக் அமில மாத்திரைகளை உண்ணுதல்
5. சிலவேளைகளில் ஊசி மூலம் இரும்புச் சத்து மருந்து ஏற்றப்படலாம்.

மேற்கூறியவை பெரும்பாலும் மிதமான அளவு/ இலேசான அளவிலுள்ள இரத்தச்சோகைக்குரியவை.

6. கடுமையான இரத்தச்சோகையாயின், வைத்தியசாலை அனுமதியுடன் செயற்கை ஆக்சிஜென், இரத்தம் ஏற்றல் முதலியவை தேவைப்படலாம்.
7. aplastic anemia போன்ற நிலைமையில் எலும்பு மச்சை மாற்று அறுவைச் சிகிச்சை செய்ய நேரிடலாம்.
8. சிறுநீரக நோயாளிகளுக்கு எஜித்திரோபொயட்டின் சிகிச்சை அளிக்கப்படலாம்.
9. வாழ்க்கைமுறை மாற்றியமைப்பு என்பது இங்கு சிகிச்சையுடன் கடைப்பிடிக்க வேண்டியது. (உணவு உண்ணும்போது தேநீர் பருகுவதை தவிர்த்தல், புகைப்பிடிப்பதைக் கைவிடல், ஊட்டமான உணவாகாரம்)

இப்பொழுது உங்கள் கேள்விக்கு வருவோம் மகளை குழந்தை சிறப்பு வைத்தியரிடம் கூட்டிச் செல்லுங்கள். கட்டாயம் அடிப்படை இரத்தப் பரிசோதனை மேற்கொண்டு இலகுவில் பிரச்சினையைத் தீர்க்கலாம். பிள்ளை பதின்ம வயதை அடைவதால் தாமதிக்காமல் மருத்துவரை நாடவும்.


## இரும்புச்சத்து நிறைந்த உணவு என்றால்...

### தாங்கள் மாமிசம் உண்ணாதவராயின்

1. கீரை வகைகளில் 100 கிராமுக்கு 3mg வரை இரும்புச்சத்து உண்டு.அதிலும் முருங்கைக்கீரையில் 4mgவரை இருக்கிறது. அதை சூப் வைத்துக் குடியுங்கள். கீரைகளை ஒரு நாளைக்கு 300 கிராம் வரை எடுக்கலாம் இது ஒரு நாளைய தேவையில் 50–60% ஆக அமையும்.
2. 100g நிலக்கடலையில் 4.5mgவரை இரும்புச்சத்து உள்ளது. ஒரு நாளைய தேவையில் 25% வரை கிடைத்து விடும்.
3. பாதாம் பருப்பிலும் கிட்டத்தட்ட 5mg இரும்புச்சத்து இருக்கிறது.
4. பீன்ஸ் வகைகளில் 100gல் 5mg வரை இரும்புச்சத்து உண்டு. அதிலும் சுண்டக்காயில் 100gல் 22mgஇரும்புச்சத்து உள்ளது.

### நீங்கள் மாமிசம் உண்பவராயின்

1. நான்கு கால் விலங்குகள் எதுவானாலும் அதில் உங்கள் விருப்ப விலங்கின் கல்லீரல் 100 கிராம் சாப்பிட்டால் அதில் உங்களுக்கு 18 மில்லிகிராம் இரும்புச்சத்து கிடைக்கும். இது ஒரு நாளைய தேவையில் 100வீதத்தைப் பூர்த்தி செய்யும்.
2. மீன் வகைகளிலும் இரும்புச்சத்து உண்டு.
3. பாலில் இரும்புச்சத்து மிக மிகக் குறைவு
4. 100g முட்டையில் 1mg இரும்புச் சத்து இருக்கிறது.



(சென்றவாரத் தொடர்ச்சி)

# பாரதி: கவிதைகளும் நம்பிக்கைகளும்

○ தருமராசா அஜந்தகுமார்



### தன்னை இனங்காட்டுதல்

**வானிற் பறக்கின்ற புள்ளெல்லாம் நான்**
**மண்ணிற் திரியும் விலங்கெலாம் நான்**
**கானில் வளரு மரமெலாம் நான்**
**காற்றும் புனலுங் கடலுமே நான்**

என்று நம்பிக்கையோடு தன்னையே இனங்கண்டவன் பாரதி. அதுவே அவன் தன்னை மட்டுமல்ல உலகையே நேசிப்பதற்கானஅடிப்படையாக விளங்கியதும் எனலாம்.

"காக்கை குருவி எங்கள் ஜாதி" என்றும் "கடலும் மலையும் எங்கள் கூட்டம்" என்றும் நோக்கும் திசையெலாம் நாமன்றி வேறில்லை என்றும் இனங்கண்டதும் இதன் தொடர்ச்சியே எனலாம். ஒருவரின் வெற்றியின் பின்னணியில் இடையறாத போராட்டங்களும் சொல்லமுடியா துயருறும் கதைகளும் இருக்கும். எல்லாவற்றையும் விட்டு விடுதலையாகி தனக்குரிய நிலையை உருவாக்குவது எல்லோர்க்கும் வாய்ப்பது அல்ல. அதற்கான நம்பிக்கைத் தருணங்களை உருவாக்குவதோடு அமையாது மற்றவர்க்கும் வழிகாட்டியாக அமைவது அபூர்வ தருணம் ஆகும். அந்த அபூர்வ தருணம் பாரதியின் கவிதைகள் வழி வந்தடைவதே பெரியசெய்தியாகும். தன்னை வென்றாளும் திறமை பெறாதிங்கு தாழ்வுற்று நிற்போமா? என்ற அவனின் கேள்வியே அவனின் உருவாக்கத்தின் பின்னணியாயிற்று. தன்னை வென்றான். அதன் பின்னர் மனங்களை வென்றான். இப்போது காலத்தையும் வென்று மரணத்தையும் வென்று நிற்கின்றான். உயிர் பெரிதல்ல உறுதியே பெரிதாக இருந்தது. கொள்கையே பெரிதாக இருந்தது.

**ஊக்கமும் உள்வலியும் உண்மையிற் பற்றுமில்லா**
**மாக்களுக்கோர் கணமும் வாழத் தகுதியுண்டோ?**

என்ற கேள்வியில் அவனின் நம்பிக்கை உருவாக்கப் பின்னணிக்கான விடை இருக்கின்றது.

### விடுதலை பற்றிய நம்பிக்கை

**பொன்னும் மணியும் மிகப் பொங்கி நின்ற இந்நாட்டில்**
**அன்னமின்றி நாளும் அழிவார்கள் எத்தனை பேர்?**

என்று நாட்டின் சமத்துவமில்லாத தன்மையே அவனைக் கொதிநிலைக்குக் கொண்டு சென்று "தனியொருவனுக்கு உணவிலையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்" என்று பாடவைத்தது. தாயும் தந்தையும் அற்ற வறுமை சூழ்ந்துகொண்ட சூழலில் ஏன் பிறந்தனன் இத்துயர் நாட்டிலே என்று சோகத் தீயில் வெந்து போனவன்தான் பாரதி. ஆனால் எந்தையும் தாயும் மகிழ்ந்து குலவி இருந்ததும் இந் நாடே என்று நம்பிக்கையோடு தன்னைப் புதுக்கிக்கொள்கின்றான். ஏன் பிறந்தேன் இத்துயர் நாட்டில் என்று வெதும்பியவன் நாட்டின் துயர் களைய எழுத்தாயுதம் ஏந்தினான். வாய்ச்சொல்லில் வீரர்களான நடிப்புச் சுதேசிகளை ஏளனம் செய்து கொண்டு விடுதலைப்பயணத்தைப் பலவகையிலும் நம்பிக்கையோடு முன்னெடுத்தான்.

**"முப்பது கோடியும் வாழ்வோம் வீழில்**
**முப்பது கோடி முழுமையும் வீழ்வோம் "** என்று பாடியவன். வருகின்ற பாரதத்திற்காய்

**"ஒளி படைத்த கண்ணினாய் வா வா வா**
**உறுதிகொண்ட நெஞ்சினாய் வா வா வா "**
என்று நம்பிக்கையோடு அழைத்து நின்றான். சுதந்திரம் அடைவதற்கு முன்னரே 1908 இலேயே

**"ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே**
**ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோம்"** என்று நம்பிக்கையோடு பாடினான்.
பெண்கள் விடுதலைக்கும்மியிலும் இதே நம்பிக்கை உணர்வைக் காணலாம்.

**"பெண்கள் விடுதலை பெற்ற மகிழ்ச்சிகள்**
**பேசிக் களிப்பொடு நாம்பாடக்**
**கண்களி லேயொளி போல வுயிரில்**
**கலந்தொளிர் தெய்வம்நற் காப்பாமே"**

இன்றைய கவிஞர்கள் மீதெழும் குற்றச்சாட்டு அவர்களின் நம்பிக்கை வறட்சி. ஆனால் பாரதியிடம் எந்த வேளையிலும் உயிர்த்துடிப்பான நம்பிக்கை எழுச்சியைக் காணலாம். அதுவே அவனை இன்றும் அழியாத மகாகவிதையைத் தந்த கவிஞனாக்கியிருக்கின்றது.

### தமிழ் இனம் பற்றிய நம்பிக்கை

நாட்டின் மீது மட்டுமல்ல தனது இனத்தின் மீதும் பெரும் பற்றும் நம்பிக்கையும் கொண்டவனாக பாரதி இருந்தான். அவனுடைய இடையறாத வாசிப்பும் அறிவும் அந்த நம்பிக்கையை உருவாக்கின எனலாம்.

**"சிலப்பதி காரச் செய்யுளைக் கருதியும்**
**திருக்குற ளுறுதியும் தெளிவும் பொருளின்**
**ஆழமும் விரிவும் அழகும் கருதியும்**
**எல்லை யொன் றின்மை எனும் பொருள் அதனைக்**
**கம்பன் குறிகளாற் காட்டிட முயலும்**
**முயற்சியைக் கருதியும் முன்புநான் தமிழ்ச்**
**சாதியை அமரத் தன்மை வாய்ந்தது என்று**
**உறுதிகொண்டிருந்தேன்"**

இந்தத் தமிழினம் இந்தியாவைக் கடந்து ஆபிரிக்காவிலும் பல்வேறு தீவுகளிலும் துன்பமடைவதைக் கண்டும் இன்னும்பல்வேறு வேதனைகளை அனுபவித்ததைக் கண்டும் அந்த வருத்தங்களை இனம் கடந்துவிடும் என்று ஒருவகை உறுதியோடு இருந்தார்.

**"இஃதெலாம் கேட்டும் எனதுளம் அழிந்திலேன்**
**தெய்வம் மறவார் செயுங்கடன் பிழையார்**
**ஏதுதான் செயினும் ஏதுதான் வருந்தினும்**
**இறுதியில் பெருமையும் இன்பமும் பெறுவார்"**

என்ற பாரதியின் இனம் மீதான நம்பிக்கை பெரியது. அதுவே விதியையும் கேள்வி கேட்கத் தூண்டியது.

### தமிழ்மொழி பற்றிய நம்பிக்கை

நாட்டின் மீதான, இனத்தின் மீதான பற்றின் ஆழ்ந்த வெளிப்பாட்டை அவரின் மொழியுணர்விலும் நம்பிக்கையிலும் காணமுடிகின்றது. மேற்கு நாடுகளிலே புத்தம் புதிய கலைகள் அறிவு நூல்கள் தோன்றுகின்றன. அவை தமிழில் தோன்றுவதும் இல்லை; தோன்றவும் முடியாது. ஏனென்றால் அவற்றைச் சொல்லும் ஆற்றல் தமிழுக்கு இல்லை. மெல்லத் தமிழினிச்சாகும் என்றெல்லாம் ஒருவன் கூறும் போது இந்த வசைஎனக் கெய்திடலாமோ?



**"சென்றிடுவீர் எட்டுத் திக்கும்**
**கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"**
என்று தமிழின் வளத்தை அதிகரிக்கவேண்டும் என்றும், தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும்வகை செய்தல் வேண்டும் என்றும் உறுதிகொண்டவன் பாரதி. அதற்குரிய திட்டங்கள் பலவற்றை முன்மொழியவும் செய்தான். இங்கும் யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம் என்ற உறுதிநிலை முக்கியமானது.

### இறை நம்பிக்கை

பாரதியின் தேசபக்தி மொழிப்பக்தி போலவே இறைபக்தியும் முக்கியமானது. அவரது போராட்டங்களில் இருந்து அவருக்கு ஆறுதலைக் கொடுத்தது இறைபக்தியே ஆகும். அவரது விநாயகர் மணிமாலை பராசக்தி மீதான தோத்திரப் பாடல்கள் , கண்ணன் பாட்டு ஆகிய பாடற்றொகுதிகள் எல்லாம் வெறும்பிரார்த்தனைப் பாடல்கள் அல்ல. எல்லா நம்பிக்கைகளையும் பெரிய கடவுள் காக்க வேண்டும் என்று பாடியவர் அவர். தனது வல்லமைகளை பயன்படுத்த துணையாக சக்தியை இறைஞ்சியவர் பாரதியார். கண்ணனைப் பல்வேறு நிலைகளிலும்துணையாகப் பாடியவர். தனது துயரங்களில் இருந்து விடுதலையையும் சித்தவுறுதியையும் அவர் வேண்டியது தன்னை இந்த உலகத்திற்குப் பயன்படுத்திக்கொள்வதற்கே ஆகும். இதனை,

**"நாட்டினைத் துயரின்றி நன்கமைத்திடுவதும்**
**உளமெனு நாட்டை ஒரு பிழையின்றி**
**ஆள்வதும் பேரொளி ஞாயிறே யனைய**
**சுடர்தரு மதியொடு துயரின்றி வாழ்தலும்**
**நோக்கமாகக் கொண்டு நின்பதம் நோக்கினேன்"**

என்று விநாயகருக்கு விண்ணப்பிப்பதில் இருந்து அவரது நோக்கத்தை அறியலாம்.

### தனது கவிதைகள் பற்றிய நம்பிக்கை

"எளிய பதங்கள்; எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக் கூடிய சந்தம் பொதுஜனங்கள் விரும்பும் மெட்டு இவற்றினையுடைய காவியமொன்று தற்காலத்தில் செய்து தருவோன் நமது தாய்மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகின்றான்" என்று பாஞ்சாலிசபதத்தின் முகவுரையிலே பாரதியார் கூறினார் தாய்மொழிக்குப் புத்துயிர் வழங்கிய கவிஞனாக அவன் தன்னையே குறிப்பிடுகின்றான் என்பதை எளிதில் விளங்கிக்கொண்டு விடலாம்.
தனது கவிதைகளால் இந்த உலகத்தைப் பாதுகாக்கலாம் என்ற நம்பிக்கை அவனிடம் ஊன்றியிருந்தது. தீமையை எரிப்பதனாலேயே தன் கவிதையை தீக்கவி என்றவன். ஸ்ரீ எட்டயபுரம் மகாராஜாவுக்கு எழுதிய ஒலைத்தூக்கில் அவன் நம்பிக்கை இன்னும் ஆழமாக வெளிப்பட்டு நிற்பதைக் காணலாம்.

**"புவியனைத்தும் போற்றிட வான் புகழ் படைத்துத்**
**தமிழ்மொழியைப் புகழிலேற்றுங்**
**கவியரசர் தமிழ்நாட்டுக் கில்லையெனும்**
**வசையென்னாற் கழிந்ததன்றே"**

பாரதியாரின் ஆழ்ந்த நம்பிக்கை வீணாகிவிடவில்லை. கவிமணியின் 'பாட்டுக்கொரு புலவன் பாரதியடா' என்ற மதிப்பைவிட வேறொன்றும் தேவையில்லை. பண்டிதர்களின் மரபின் இறுக்கத்தில் இருந்த கவிதையை நாட்டுமக்களின் கும்மியையும் தழுவியபடி எளிமைப்பட்டுவிடுதலையாகிவிட உழைத்தார். அடிமைத்தனத்தில் சிதைந்த நாட்டை விடுதலை நோக்கி அழைத்துச் சென்றார்.சாதியால் பெண்ணடிமையால் சிதைந்திருந்த சமுதாயத்திற்கு விடுதலைக்குரலைப் பழக்கினார். தேமதுரத்தமிழோசை உலகமெலாம் பரவக் கருவியானார். இவற்றுக்கெல்லாம் சிதையா நெஞ்சினைக் கொண்ட தனதுநம்பிக்கைகளை எதிர்காலத் தலைமுறைக்கும் தொடரும்படி செய்தார். பாரதியின் கவிதைகளைப் படிக்கும் போதுஒருவன் வீழ்வேனென்று நினைத்தாயோ என்றபடி எழுவதற்குரிய மந்திரத்தன்மை இருக்கின்றது. மனிதன்இருக்கும்வரை நம்பிக்கை இருக்கும். அந்த நம்பிக்கையை ஊட்டிய பாரதியும் காலங்கடந்து தமிழாய் வாழ்வான்.



# தெணியானின் 'தவறிப்போனவன் கதை'யை

## முன்வைத்து சில குறிப்புகள்

○ இராகவன்

இந்த 'தவறிப்போனவன் கதை'யை நான் வாசிப்பதற்கும் மற்றவர்கள் வாசிப்பதற்கும் ஓர் இடைவெளியிருக்கிறது. இதற்கொரு முன்கதைச் சுருக்கம் தேவைப்படுகிறது. 1996ஆம் ஆண்டின் நடுப்பகுதி என்பதாக நினைவு. எனக்குப் பல்கலைக்கழக அனுமதி கிடைத்திருந்தது. முதற்படிவம் நிரப்பி அனுப்பி அது அனுமதிக்கப்பட்டு இரண்டாவது படிவம் நிரப்பி அனுப்ப வேண்டியிருந்தது. இங்கேயொன்றை முக்கியமாகக் குறிப் பிட்டாக வேண்டும்.

முதற்படிவத்தைப் புத்தகக்கடைகளில் வாங்கி நிரப்பி அனுப்பலாம். நானும் அதே நடைமுறையைப் பின்பற்றி முதற்படிவத்தை அனுப்பியிருந்தேன். தவிரவும் நான் முதற்படிவத்தை அனுப்பியபோது யாழ்ப்பாணம் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்தது. அதனால் முதற்படிவம் அனுப்புவதில் எந்தவொரு தடங்கலுமிருக்கவில்லை . ஆனால் இரண்டாவது படிவத்தை நான் நிரப்பி அனுப்ப வேண்டிய காலப்பகுதியில் யாழ்ப்பாணம் முழுமையாக இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் வந்திருந்தது. பல்கலைக் கழகக் கற்கை நெறியை மேற்கொள்ளத் தகுதியானவர்கள் மட்டுமே இரண்டாவது படிவத்தை நிரப்பி அனுப்பவேண்டும் என்பதால் அதை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்குச் சென்றுதான் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்தது.

அப்போது நெல்லியடி நகரப்பகுதிக்குள் செல்வதற்கு 'பாஸ்' நடைமுறையிருந்தது. அந்த நடைமுறையை உண்மையில் அப்போது நான் அறிந்திருக்கவில்லை. அப்போதுதான் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்திருந்தேன். க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அஞ்சல் அடையாள அட்டை ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்ததால் பாடசாலையை விட்டு வெளியேறும்வரை நான் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிப்பதில் ஆர்வம் காட்டவில்லை. யாழ்ப்பாணம் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வருவது உறுதியானதும்தான் கிராம சேவகர் ஊடாக விண்ணப்பித்திருந்தேன். அந்த விண்ணப்பத்தின் அடித்துண்டும் (புகைப்படம் ஒட்டப்பட்டு என்னிடமிருந்தது. இருந்தும் அஞ்சல் அட்டையையே பெரும்பாலும் நான் பயன்படுத்தி வந்தேன். ஒரு குறிப்பிட்ட தினத்தில் யாழ். பல்கலைக் கழகம் சென்று இரண்டாவது படிவத்தை எடுத்துவரும் பொருட்டு நானும் இன்னொரு நண்பனும் புறப் பட்டோம்.

நெல்லியடியில் சைக்கிளை விட்டுவிட்டு பேருந்தில் யாழ்ப்பாணம் செல்வதுதான் எங்களின் திட்டம். நாங்கள் விக்கினேஸ்வராக் கல்லூரி வீதியூடாகப் போனோம். இப்போது நெல்லியடியில் பிரம்மகுமாரிகளின் இராஜயோக நிலையம் அமைந்திருக்குமிடத்தில்தான் பெரும் மண் அணை எழுப்பி காவலரண் அமைக்கப்பட்டிருந்தது. அதுதான் நெல்லியடி நகரப்பகுதிக்குள் நுழைவதற்கான முதலாவது நுழைவாயில். இரண்டாவது நுழைவாயில் இப்போது நெல்லியடி தேசிய சேமிப்பு வங்கி அமைந்திருக்குமிடத்தில் அமைக் கப்பட்டிருந்தது. நாங்கள் போய் நுழைவாயிலில் நின்றிருந்த படையினரோடு எங்களுக்குத் தெரிந்த ஆங்கிலத்தில் கதைத்தோம். அவனுக்கு சிங்களத்தைத் தவிர வேறொன்றும் தெரியாது. அவன் தொடர்ந்து "பாஸ்? பாஸ்?" எனக் கேட்டுக் கொண்டிருந்தான். நாங்கள் அஞ்சல் அடையான அட்டையைக் காட்டினோம். அவன் அதைப் பொருட்படுத்தாமல் "பாஸ்? பாஸ்?" எனத் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தான். அப்போதுதான் எங்களுக்குப் பின்னால் நின்றிருந்த ஒருவர் "தம்பி உள்ளுக்குப் போறதுக்கு அவங்களிட்ட பாஸ் எடுத்திருக்க வேணும். நீங்கள் எடுக்கேல்லையா?" என்று கேட்டார். அப்போது




தான் எங்களுக்கு எல்லாம் விளங்கியது. நண்பன் மற்றப்பக்கத்தால் போய்ப் பாப்பம் எண்டான். அடுத்த நுழைவாயிலுக்குப் போனோம். அங்கேயும் அதே பல்லவிதான். அப்போது நண்பன் சொன்னான்.

"மந்திகைக்குப் போய்ப் பாப்பம்"

அங்கேயும் போனோம். சாவகச்சேரி வீதியால் சென்று ஆஸ்பத்திரி வீதிக்குள் நுழையுமிடத்துக்குக் குறுக்கே

> **கடவுள் மனிதனாய் வருவதில்லை . ஆனாலும் மனிதன் சில சமயங்களில் கடவுளாகி விடுகிறான். அநீதி என்னும் தர்மவிரோதமான பெயரில் கடவுளாக வந்து என்னைக் காப்பாற்றி இருக்கிறார். எனக் கதை சொல்லி மனதில் நினைவு கூருகிறார்.**

பெரிய மண் அணை எழுப்பப்பட்டு இருமருங்கும் காவலரண்கள் எழுப்பப்பட்டிருந்தன. காவலரணில் நின்ற படையினரிடம் விசயத்தைச் சொன்னோம். அவன் தலையாட்டிவிட்டுப் போய் ஒருவரைக் கூட்டி வந்தான். கட்டமிட்ட கறுப்புச் சேர்ட்டும் பழுப்பு நிறத்தில் சாறமும் அணிந்து தடித்த மூக்குக் கண்ணாடி போட்ட ஒருவர் வந்தார். பொதுநிறம். நீக்கல் விழுந்த பல்வரிசை. அவரைக் கண்டதும் எனது நண்பன் "அநியாயம் வாறான்" என்று காதைக் கடித்தான். அவர் எங்களிடம் வந்து "என்ன விசயம் தம்பிமார்?" என்று கேட்டார். நண்பன் அவரிடம் ஆதியோடந்தமாக விசயத்தைச் சொன்னான் "அடையாள அட்டை கொண்டு வந்தனீங்களா?" எனக் கேட்டார். அஞ்சல் அடையாள அட்டைகளை எடுத்து நீட்டினோம்.

"கொஞ்சம் நில்லுங்கோ வாறன்" என்று சொல்லிவிட்டுப் போய்ச் சிறிது நேரங்கழித்து வந்தார். "தம்பிமார் இதை வைச்சுக் கொண்டு 24 மணியாலத்துக்கு பாஸ் தரலாமாம். எடுத்துத்தரவா?" எனக் கேட்டார். எனக்குச் சம்மதிக்க மனமிருந்தாலும் நண்பன் "நாங்கள் ஒருக்கால் வீட்டைபோய்க் கதைச்சிட்டு வாறம்" எண்டு அஞ்சல் அடையாள அட்டைகளை வாங்கிக் கொண்டான். திரும்பி வரும்போது, "உவன்தான் மச்சான் அநியாயம். ஆமிக்கு இயக்கத்தைக் காட்டிக் குடுக்கிறவன். உவனோட கதைச்சமெண்டு தெரிஞ்சால் இயக்கம் எங்களையும் மண்டையில் போட்டிடும்" என்று நண்பன் சொன்னான்.

இங்கே நான் குறிப்பிட்ட அநியாயம்தான் 'தெணியானின் 'தவறிப்போனவன் கதை'யின் நாயகன். இதையொரு புதினமாகப் பார்ப்பதைவிட முக்கியமான ஒரு வரலாற்றுப் பதிவாகவே பார்க்கவேண்டும். இந்தக் கதையில் 'அநியாயம்' 'அநீதி ' எனப் பெயர் மாற்றப் பட்டிருக்கிறார். கதை சொல்லி நோய் நிமித்தம் மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். ஒரு நாளிரவு அவரது உடல்நிலை மோசமாகி மயக்கமடைந்து விடுகிறார். அவரை உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல வேண்டும்.

நோயாளர் காவுவண்டி வசதியுமில்லை. தனியார் வாகனமொன்றை ஒழுங்கு செய்து அவரைக் கொண்டு செல்ல ஏற்பாடு செய்கின்றனர். அது சாதாரண இரவல்ல. ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள இரவு. வீதிக்கு வீதி அமைக்கப்பட்டிருக்கும் காவலரண்களைக் கடந்து செல்லவேண்டியிருப்பதால் அநீதியைத் துணைக் கழைக்கிறார்கள். 'அநீதி' முதலில் தயங்கினாலும் நோயாளியின் நிலையைக் கண்டு மனமிரங்கி அவர்களுடன் புறப்படுகிறார். ஒவ்வொரு காவலரணிலும் கர



ணம் தப்பினால் மரணம் என்ற நிலையில் ஒரு ஹரிக்கோன் லாம்பைத் தூக்கிப் பிடித்தபடி காவலரணை நெருங்கி படையினருக்கு நிலைமையை விளக்கித் தொடர்ந்து செல்ல உதவுகிறார் அநீதி. இதன்மூலம் உரிய நேரத்தில் நோயாளியை யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று காப்பாற்றிக் கொள்ள முடிகிறது.

நோயாளியான கதை சொல்லி காலையில் கண் விழிக்கும்போது அவருடைய அந்தப் பார்வையில் பல வினாக்கள் தொக்கி நிற்பதைக் கூட நின்றி ருக்கும் மைத்துனர் உணர்ந்து கொண்டு, "யாழ்ப்

# தெணியானின்... (தொடர்ச்சி)

பாண ஆஸ்பத்திரியிலே இருக்கிறம். இரவு வந்தனாங்கள்" என்கிறார்.

"எப்பிடிக் கொண்டு வந்தனீங்கள் ? காரிலே நீங்கள் தனிச்சோ?"

"இல்லை ரைவரோட 'அநீதி' வந்தவர்"

"அநீதியோ ?"

"அவருக்கு என்ன பெயரெண்டு தெரியாது. அநீதி என்றுதான் சொல்லுகினம்" கதை சொல்லி தனது நோயையும் மறந்து மெல்லச் சிரிக்கிறார்.

"அவர் கூட வந்திருக்காது விட்டால் நாங்கள் இஞ்சை வந்து சேர்ந்திருக்க முடியாது"

"அப்படியா?"

"அவர் கடவுள் மாதிரி வந்து காப்பாத்தினார்"

கடவுள் மனிதனாய் வருவதில்லை . ஆனாலும் மனிதன் சில சமயங்களில் கடவுளாகி விடுகிறான். அநீதி என்னும் தர்மவிரோதமான பெயரில் கடவுளாக வந்து என்னைக் காப்பாற்றி இருக்கிறார். எனக் கதை சொல்லி மனதில் நினைவு கூருகிறார்.

"கேவியு முடிகிற நேரம் இஞ்சை இருந்து வெளிக்கிடேக்கை வாட்டுக்கு வந்து உங்களை ஒருக்கால் பார்த்துக் கொண்டுதான் அவர் போகிறார்."

"வித்தியாசமான ஆள்!"

"காருக்குக் காசும் வாங்கவில்லை ."


"ஏன் அப்படி?

"பிறகு தரச் சொல்லிப் போட்டு போய்விட்டினம்."

"அது சரியில்லை . மத்தியானம் போய் முதல் வேலையாகக் காசு குடுக்க வேணும்."

"சரி. முகம்கழுவத் தண்ணி எடுத்துக் கொண்டு வாறன்."

கதை சொல்லிக்கும் மைத்துனருக்கும் இடையில் நிகழுமிந்த உரையாடலானது தவறிப்போனவனான 'அநீதி ' என்ற கதாபாத்திரத்தின் மனிதாபிமான இயல்பை நன்கு எடுத்துக் காட்டுகிறது. இடையில் கதை சொல்லியின் அயலவரொருவர் மந்திகை ஆதார வைத்தியசாலையில்



இறந்துவிட கதை சொல்லியே இறந்து விட்டதாகத் தகவல் பரவி, கதைசொல்லி யாழ். போதனா வைத்தியசாலையில் இரவோடிரவாக அனுமதிக்கப்பட்டு உயிர் தப்பியதை அறிந்திராத அவரது நண்பர்கள் துக்கம் விசாரிக்க அவரது வீட்டுக்குச் சென்று திரும்புவதும் நிகழ்கிறது. கதை சொல்லி குணமடைந்து வீடு திரும்பியதுமே தன்னுயிரை மீட்டுக் கொடுத்த முகமறியாத அந்த மனிதரைப் போய்ப் பார்ப்பதற்கு இனிமேலும் காலதாமதம் செய்யக் கூடாதெனத் தீர்மானித்து மைத்துனருக்குத் தகவல் சொல்லி அனுப்பத் தயாராகிறார். அந்த மனிதரைச் சென்று பார்ப்பதற்கு வெறுங்கையோடு போகக்கூடாதென்று முதல் நாளே வாழைப்பழம் இரண்டு சீப்பும் வல்வெட்டித்துறைக்கு அனுப்பி சுவையான எள்ளுப் பாகும் வாங்கி வைத்துக் கொள்கிறார். மைத்துனர் காலை பத்து மணிக்கு வீட்டுக்கு வந்து அவரையழைத்துப் போவதாகச் சொல்லியிருக்கிறார். கதை சொல்லி மறுநாள் காலை ஒன்பது மணிக்கே வீட்டிலிருந்து புறப்படுச் செல்வதற்குத் தயாராகிவிட்டார். ஆனால் காலை பதினொரு மணியாகியும் அவரை அழைத்துப் போக மைத்துனர் வரவில்லை. கதை சொல்லிக்கு மனம் சலித்துப் போகின்றது. அவருக்குச் சிறிது சிறிதாக மனதில் சினம் மூண்டு கொண்டு வருகிறது. இன்னும் மைத்துனர் ஒரு தகவல் தானும் அவருக்கு அனுப்பி வைக்கவில்லை. மைத்துனருக்கு என்ன நடந்தது? இன்னுமேன் வராமலிருக்கிறார்? அவர் பொறுமையிழந்து தன் மகனை அழைத்து மைத்துனரைப் போய்ப் பார்த்து வருமாறு சொல்லி அனுப்புவதற்கு எண்ணும்போது மைத்துனர் கேற் திறந்து உள்ளே வருகிறார்.

அவரது முகம் கவலையினால் வாடிச் சோர்ந்து கிடக்கிறது. எப்போதும் கலகலப்பாக இருக்கும் மைத்துனர் அந்த உற்சாகத்தைத் தொலைத்துவிட்டவராகத் தோன்றுகிறார். மைத்துனர் உள்ளே வந்து கொண்டிருக்கும் வேகத்தில் என்றுமில்லாத ஒரு பதற்றம் அவரிடத்தில் வெளிப்படுகின்றது. மைத்துனர் கதை சொல்லியை நெருங்குவதற்கு முன்னே "அநீதி அல்லவோ தவறிப் போனார்" எனத் தடுமாறிக் கொண்டு கூறுகிறார். "என்னது? கதை சொல்லி அதிர்ந்து போகிறார். அவருக்கு எல்லாம் இருளடைந்து ஸ்தம்பித்துப் போகிறது. எங்கும் செறிந்த மையிருள். எல்லாம் வெற்றுச் சூனிய அந்த காரத்தில் சிறிதுபோது உறைந்து கிடக்கின்றன.

மைத்துனர் கதை சொல்லி அனுபவிக்கும் மனத்துயரை மௌனமாகப் பார்த்துக் கலங்கிக் கொண்டிருக்கிறார். காலம் கரைந்து கழிந்து போய்க் கொண்டிருக்கிறது. பொங்கி எழும் மனத்துயரை உள்ளே அடக்கி வைத்துக் கொண்டு கண்களைத் திறந்து மைத்துனரை நோக்கிக் கதை சொல்லி கேட்கிறார்.

"என்ன நடந்தது?"

"சுட்டுப் போட்டாங்கள்!"

"ஆர் ?"

"தெரியாது"

"ஏன்?"

"தெரியாது"

மைத்துநர் சொன்ன பதில்களைக் கேட்ட பிறகுதான் கதை சொல்லியின் அறியாமை அவர் நெஞ்சை உதைக்கிறது. அறிவுள்ள எந்தவொரு மனிதனும் இந்தக் கேள்விகளுக்கு இப்போது பதில் சொல்வானா ? உரையாடல் தொடர்கிறது.

"எங்கே நடந்தது?"

"மந்திகையிலே, அவற்றை கடைக்கு முன்னாலே"

"அவர் உண்மையில் கடைதான் வைச்சிருந்தவரா?"

"ஆருக்குத் தெரியும்?"

"நான் போய் அவற்றை முகத்தை ஒருக்கால் பார்க்க வேணும்."

"ஆமி பொலிஸ் வந்து நிற்கும்."

"ஆர் செய்திருப்பினம்?"

"உண்மை ஆருக்குத் தெரியும்?"

மடிந்துபோன அவர் எனக்கு உண்மையான ஒரு மனிதர். கதை சொல்லி அந்தத் துயரத்துக்கு மத்தியிலும் அப்பொழுது மனதில் நினைவு கூருகிறார். யார் சுட்டார்கள்? ஏன் சுட்டார்கள்? கதை சொல்லியின் மனதில் எழும் இந்த வினாக்களுக்கு எல்லாம் இப்பொழுது தெளிவான விடைகளை யாராலும் கண்டு கொள்ள இயலாது. ஆனால் விடை அறியாத புதிராகஇருக்கும் முகமறியாத அந்த மனிதனை நினைத்துக் கலங்கும் கதை சொல்லியின் விழிகளிலிருந்து வடியும் கண்ணீரை மெல்லத் துடைத்து விட்டுக் கொள்வதைத் தவிர அவரால் வேறு என்னதான் செய்யமுடியும்? அநியாத்தைச் சுட்டாச்சாம். ஏன் காதாரக் கேட்டிருப்போம். அப்போது அது ஒரு பரபரப்பையும் ஏன் மனமகிழ்ச்சியையும் ஏற்படுத்தியிருக்கக்கூடும். அப்போது அது ஒரு சாதாரண சம்பவம் அல்லது நிகழ்வாக இருந்திருக்கும். உண்மையில் இதுபோன்ற சம்பவங்களெல்லாம் வரலாற்றுப் பதிவுகள்தான். அந்த வரலாற்றுப் பதிவின் ஒரு சிறு பகுதியை தெணியான் நேர்மையுடன் செய்திருக்கிறார்.



# வித்துவான் பதில்கள்!

**1**

**வித்தா... மனிதன் இசையைக் குயிலிடம் இருந்து தான் கற்றுக் கொண்டானா?**

மதுகரன், இணுவில்.

மனிதன் போலச்செய்யும் இயல்பினால் இயற்கையிலிருந்தே பல விடயங்களைக் கற்றுக் கொண்டான் எனக் கூறப்படுகிறது.



**2**

**காதல் என்ற கரும்புத் தோட்டத்தில் முதியவர் குறுக்கீடு தேவைதானா வித்துவான்?**

சதாசிவம், முறிப்பு.

கரும்பு முற்றிப் பதமாகும்வரை கண்டபடி வாய் வைத்துச் சேதப் படுத்தாமற் பாதுகாக்க ஒருவர் தேவைதானே?



**3**

**வித்துவானே..உடல் பருத்தவள் நான். யானை போன்ற தோற்றமுடைய ஒருவர் எனக்குக் காதல் தூது அனுப்புகிறார். சம்மதம் சொல்லலாமா?**

கலா, கச்சாய்.

யானையின் தும்பிக்கையில் நம்பிக்கை வைக்க வேண்டியதுதான். காதல் என்றால் நம்பிக்கை வேண்டும். யானை என்றால் தும்பிக்கை வேண்டும். இரண்டும் இருந்தால் காதலிக்கலாம்.

**4**

**கணவனுக்கு காதில் திருகும் திருமதிகள் குறித்து?**

சுரேந்திரன், கோயிலாக்கண்டி.

காது மென்மையான இடம். அங்கே திருகியாவது சொல்வழிகேட்கிறதா என்று பார்க்கிறார்களோ?

# யாழ்ப்பாணப் பதிப்புத்துறை



## 1990 - 1995

○ தில்லைநாதன் கோபிநாத்

**1990** களின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தில் வெளியான பத்திரிகைகள், சஞ்சிகைகள் தொடர்பான தகவல்களை இதுவரை அலசி வந்தோம். பொருளாதாரத் தடை காரணமாக அச்சுத்தாள்கள் கூடக் கிடைக்காத அக்காலத்தில் யாழ்ப்பாணத்தின் பதிப்புச் செயற்பாடுகள் உச்சம் பெற்றிருந்தமைக்கு இரண்டு பிரதான காரணங்களை அடையாளம் காணக்கூடியதாக இருந்தது.

பொருளாதாரத் தடை காரணமாக வெளியுலகத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டிருந்த நிலையில் மாணவர்களும் மக்களும் வாசிப்பதற்கு உள்ளூர் பத்திரிகைகள், சஞ்சிகைகள் நாடியமை முதற்காரணம். இரண்டாவது காரணம் விடுதலைப் புலிகள் தமது தேசக் கட்டமைப்புத் தேவைகளுக்கும் பிரசாரத்துக்கும் அச்சு ஊடகங்களைப் பெருமளவில் பயன்படுத்தியமை.

அவ்வகையில் சஞ்சிகைகள், பத்திரிகைகள் மட்டுமின்றிக் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் நூல்களும் அக்காலத்தில் பிரசுரமாகின. செங்கை ஆழியான் க. குணராசாவின் ஜன்மபூமி, அக்கினி, கடல் கோட்டை போன்ற நாவல்கள் அக்காலத்தில் வெளியாகின. களம் பல கண்ட யாழ் கோட்டை, யாழ்ப்பாணத்து இராத்திரிகள், மகாவம்சம் தரும் இலங்கைச் சரித்திரம் போன்ற போர்க்காலத்துடன் ஒரு வகையில் தொடர்புடைய நூல்களையும் செங்கை ஆழியான் அக்காலத்தில் எழுதி வெளியிட்டார். டேவிட் லிகோரியும் தனது மீரா பதிப்பகம் மூலம் தொடர்ச்சியாக நூல்களை வெளியிட்டு வந்தார்.

புலிகளின் சட்டத்துறை உருவாகி வளர்ச்சியடைந்த காலமும் அதுவே என்பதால் அவர்களது சட்ட நூல்களும் தொடர்ச்சியாக வெளியாகி வந்தன. தமிழீழ தேசவழமைச் சட்டம் அக்காலத்தில் வெளியான முக்கிய நூல்களில் ஒன்று. உணவு, விறகு வெட்டல், மோட்டார் பதிவு போன்றவை தொடர்பான சட்டங்களும் அக்காலத்தில் பிரசுரமாகின.

பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்துடன் தொடர்புடையதான விரிவான ஆய்வு நூல்களும் அக்காலத்தில் வெளியாகின. தமிழீழத்தில் புள்ளிவிபரத் தரவுகள், உணவுத் தேவையும் உற்பத்தி இலக்குகளும் போன்ற நூல்கள் அத்தகையவை. தமிழீழக் கட்டுமானம் தொடர்பாக ஆய்வரங்குகளை நடத்தி அவற்றை நூலாக்கும் முயற்சிகளும் நடைபெற்றன. யாழ்ப்பாணக் கடனீரேரி தொடர்பான ஆய்வரங்கம், தமிழீழக் கட்டுமானம் தொடர்பான ஆய்வரங்கம் அத்தகையவை ஆகும்.

போர்க்காலத்தை ஆவணப்படுத்தும் நூல்களும் உருவாக்கப்பட்டன. அவற்றில் சாவடைந்த போராளிகள் தொடர்பான வெளியீடுகள் பெருமளவானவையாக இருந்தன. இந்திய அமைதிப்படையின் அட்டூழியங்கள் தொடர்பாக வில்லுக் குளத்துப் பறவை, அம்மாளைக் கும்புடுகிறானுகள், சாத்தானின் படைகள் போன்றவை அவ்வகையில் முக்கிய நூல்கள்.

போர்க்களங்களில் சாவடைந்த போராளிகளின் நூல்கள் சிலவும் அக்காலத்தில் வெளியாகின. இவற்றில் குறிப்பிடத்தக்க கவனம் பெற்ற நூல் கப்டன் மலரவனின் போர் உலா என்ற போர்க்கள அனுபவ நூலாகும். மாங்குள முகாம் மீதான தாக்குதலுக்குச் செல்வது முதல் மாங்குளப் போர் முடிவுவரை விபரிக்கும் அந்நூல் போராளிகளின் வாழ்வையும் படம்பிடித்துக் காட்டுவதாக அமைந்ததால் ஆர்வத்துடன் விரும்பி வாசிக்கப்பட்டது. அத்துடன் அக்காலத்தில் நடைபெற்ற போட்டிகளில் பரிசுகளாக வழங்கப்படல் போன்ற உத்திகள் மூலம் பரவலாக விநியோகிக்கப்பட்டன. வானதியின் கவிதைகள், கஸ்தூரியின் ஆக்கங்கள் போன்றவையும் போராளிக் கலைஞர்களின் நூல்கள் ஆகும். இந்த நூல்கள் தமிழகத்திலும் புலம்பெயர் நாடுகளிலும் பிற்காலத்தில் மொழிபெயர்ப்பும் செய்யப்பட்டன.

27




1994இல் சந்திரிகா ஜனாதிபதியானதைத் தொடர்ந்து இலங்கை அரசாங்கத்துக்கும் புலிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் தொடங்கிய காலத்தில் அச்சுத்தாள் போன்றவை யாழ்ப்பாணத்தில் ஓரளவு கிடைக்கத் தொடங்கியதால் வெளியீட்டுச் செயற்பாடுகள் மீண்டும் வேகமடைந்தன. 1995 ஒக்ரோபரில் வலிகாம இடப்பெயர்வு இவை அனைத்துக்கும் முற்றுப்புள்ளி வைப்பதாக அமைந்தது.

புலிகள் யாழ்ப்பாணத்தை இழந்து வன்னிக்குச் சென்றதுடன் பெருமளவு மக்களும் யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்தனர். கொழும்பு, தமிழக வெளியீடுகள் படிப்படியாக யாழ்ப்பாணத்துக்குக் கிடைக்கத் தொடங்கியதுடன் மின்சார வசதிகள் மீண்டும் கிடைத்தமையால் தொலைக்காட்சி, திரைப்படங்களின் வருகையும் உள்ளூர்ப் பதிப்புச் செயற்பாடுகளுக்கான தேவையைக் குறைப்பவையாக அமைந்தன. அவ்வகையில் 1990 களின் ஆரம்பத்தில் உருவான பதிப்பு எழுச்சி 1995 ஒக்ரோபரில் நிறைவடைந்தது.

(முற்றும்)



○ அகமது ஃபைசல்

ஒரு 'நிமிஷக்கதை'

ஒரு கரு நீலப் பறவை நுளம்பின் சிணுங்கலை தனக்கென வாங்கிக்கொண்டு, தனது கூவலையும், கனைப்பையும் நுளம்புக்கு கொடுப்பதாக பேசிக்கொண்டது. பேசியபடி எல்லாம் நடந்தது.

அடுத்த நாள் இரவு தனது பஞ்சணையில் உறங்கிக் கொண்டிருந்த கிளியோபெத்ராவின் வீட்டுக்குச் சென்றது அந்த நுளம்பு. கிளியோபெத்ராவின் பஞ்சணையும், கட்டிலின் விசாலமும், அதன் அழகும், அலங்காரமும் நுளம்பை வியக்க வைத்தன. இப்படியொரு நறுமணம் மிக்க அறைக்கு தன் வாழ் நாளில் ஒரு முறையும் வந்ததில்லையே என ஏக்கப் பெருமூச்சு விட்ட நுளம்பு, நன்றாக உறங்கிக்கொண்டிருக்கும் கிளியோபெத்ராவின் காதருகே சென்றது. பெத்ராவின் கூந்தலில் இருந்து வீசிய நறுமணம் நுளம்பை சுவர்க்க லோகத்தில் இருப்பதுபோன்று உணர வைத்தது. இன்பக் குதூகலமாய் இருந்தது நுளம்பு.

உடனே பெத்ராவின் காதுக்குள் சிணுங்கலாம் என்று தீர்மானித்த நுளம்புக்கு தனது சிணுங்கலை அந்த நீலப் பறவைக்கு கொடுத்துவிட்ட ஞாபகம் வந்தது. மேலும் அந்தப் பறவையின் காட்டுக் கத்தலை இப்போது கத்தினால் அழகிய பெத்ரா கண் விழித்துவிடுவாள் என்ற பயமும் வந்தது.

நுளம்பு மெல்ல கிளியோபெத்ராவின் கையில் அமர்ந்து கொண்டது. பெத்ராவின் கையினது மென்மை; பஞ்சு மேகத்தில் அமர்ந்து பறப்பது போன்ற உணர்வை நுளம்புக்கு கொடுத்தது. அழகு தேவதையின் அங்கங்களில் வலிக்காமல் தாவித் தாவி அமர்ந்து அழகை ரசித்த நுளம்புக்கு பசி மறந்துபோனது. பெத்ராவின் அழகை ரசிக்க இந்த ஒரு இரவு போதாதே என்று உள்ளுக்குள் நுளம்பு கவலையுற்றது. பெத்ரா அணிந்திருந்த ஆடை அலங்காரத்தைப் பார்த்த நுளம்பு அவள் ஆடை மீது நடந்து பார்த்தது. முத்தை உள்ளே வைத்து மூடியிருக்கும் சிப்பிக்கு வெளியே இத்தனை காவலர்களா! என பெத்ராவின் விழிகளின் இமை அழகைப் பார்த்தும் புலவனாக மாறிவிட்ட நுளம்பு அந்த இரவு விடியக் கூடாது என வேண்டிக்கொண்டது. ஆனாலும் விடிந்தே விட்டது. நுளம்பு தான் அனுபவித்த இன்பதாகம் தீராமல் அந்த அழகிய மாளிகையின் ஓர் மூலையில் போய் ஒளிந்து கொண்டது. அந்த விடியலில் கிளியோபெத்ராவின் பூந்தோட்டத்துக்குள் என்றுமில்லாத அழகில் ஒரு நிலப் பூ போன்று பூத்து நின்றது. ஒரு பறவை. அந்தப் பறவையை பெத்ராவின் தோழி ஒருத்தி கண்டுவிட்டாள். உடனே காவலர்களை அழைத்து அந்தப் பறவையைப் பிடித்துக்கொண்டுவந்து பெத்ராவின் முன்னே நிறுத்தினாள். அந்த நீலப் பறவை சிணுங்கத் தொடங்கியது. அதன் வித்தியாசமான சிணுங்கலை ரசித்த அழகி கிளியோபெத்ரா, இந்தப் பறவையை, எமது மாளிகையில் தங்கக் கூடு ஒன்றை அமைத்து அதன் உள்ளே உலாவ விடுங்கள் என உத்தரவிட்டாள்.

உத்தரவுப் படி எல்லாம் நடந்தன.

இத்தனையையும் மூலையில் நின்று பார்த்துக்கொண்டிருந்த நுளம்பு கத்தியது. எரிச்சலூட்டும் அந்த ஒலியைக் கேட்ட பெத்ரா "அங்கே என்ன மோசமான சத்தம் என்று கோபத்துடன் கேட்டாள். உடனே காவலர்கள் அந்த இடத்தை நோக்கிச் சென்று வேகமாக அந்த மூலை முடுக்கெல்லாம் அடித்துத் துடைத்து சுத்தம் செய்தார்கள். அதிலே ஒரு வீரக் காவலனின் கையில் பட்டு நுளம்பு கீழே விழுந்தது. எல்லோரும் இறந்த பின் சுவர்க்கமா? நரகமா? என்று பேசுகிறார்கள். ஆனால் நான் சுவர்க்கத்துக்கு வந்த பின் இறந்திருக்கிறேன். என்று பெருமையாகப் பேசிக்கொண்டு இறந்தது நுளம்பு.

வந்தவருக்கு 'திக்' என்றிருந்தது. 'ஒரு பிள்ளை அசைவற்று மீட்கப்பட்டுவிட்டது. ஆனால் ஏனைய இரு பிள்ளைகளும் எங்கே?' என்ற அச்சம் மேலிட,

" எங்கையடி பிள்ளையள்?" என்று கேட்டவாறு அவளின் கன்னத்தில் அடிக்கத் தொடங்கினார்.

" பிள்ளையள் ரண்டையும் கோயிலுக்குள்ள வைச்சுப் பூட்டினனான். தேடிப் பாருங்கோ" என்று அழுதபடி சொல்லிக்கொண்டிருந்தாள் அவள்.

அவள் சொல்லிமுடிப்பதற்கிடையில், கோயில் முழுதும் சல்லடை போட்டுத் தேடத் தொடங்கினர்.

"அங்க எவரும் இல்லை"

எல்லோரும் உதட்டைப் பிதுக்க,

" அங்கதான் பிள்ளையள்" என்று திரும்பத் திரும்ப அவள் சொல்லிக்கொண்டிருந்தாள்.

ஆனாலும் அவள் சொன்னதைப்போல பிள்ளைகள் அங்கில்லை. அங்கு இருந்தமைக்கான தடயங்களும் இல்லை.

அம்புலன்ஸ் வந்துவிட்டது. அசைவற்ற நிலையில் இருந்த சிறுவனும், அவளும் அம்புலன்ஸுக்குள் ஏற்றப்பட்டனர்.

அப்போது அவள் இன்னும் உச்சஸ்தாயியில் குரலெடுத்து, தலையில் அடித்து அழத் தொடங்கினாள்.

" என்ர ரெண்டு பிள்ளையளும் கிணத்துக்கதான் . தேடுங்கோ" என்று அந்த அழுகையினூடே சொல்லி விட்டுச் சென்றாள்.

அந்தக் கிணறு சுமார் 30 அடி ஆழமானது. இப்போது 20 அடி அளவுக்கு தண்ணீரால் நிறைந்திருந்தது. தண்ணீரை ஒருபக்கம் இறைத்துக் கொண்டிருக்கும்போதே , கிணற்றுக்குள் இறங்கி தேடிய ஒருவர், இரண்டு குழந்தைகளின் உடல்களும் கிணற்றினடியில் இருப்பதைச் சொன்னதும், பிள்ளைகள் இரண்டும் உயிரோடில்லை என்பது உறுதியாகி விட்டது.

இனி நீதிவான் வந்து பார்வையிட வேண்டும். இல்லாவிட்டால் சடலங்களை மீட்க முடியாது. எனவே அவர் வரும்வரை பலர் கிணற்றைச் சுற்றிக் காத்திருக்கத் தொடங்கினர். நள்ளிரவு தாண்டி விட்டது.

விடிகாலை 2.30 மணியளவில் ஒரு சிறுமியின் சடலம் மிதக்கத் தொடங்கியது. அதைக் கண்ட உறவுகள் கத்திக்கதறத் தொடங்கினர். அதிகாலை 5 மணியளவில் மற்றைய சிறுமியின் சடலமும் நீரின் மேலே வந்தது. காலை 10 மணியளவில் நீதிவான் சம்பவ இடத்துக்கு வந்து, சடலங்களைப் பார்வையிட்ட பின்னர், சட்ட ரீதியான நடைமுறைகளோடு இரண்டு சிறுமிகளின் சடலங்களும் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

இதேவேளை கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட, அசைவற்ற நிலையில் இருந்த குழந்தையும் இறந்துவிட்டதை மருத்துவர்கள் உறுதி செய்தனர். கிணற்றில் பாய்ந்த நவீன நல்லதங்காள் தப்பித்துவிட, பிஞ்சுக் குழந்தைகள் மூவரும் உயிரிழந்து போயினர்.

## எல்லாப் பக்கமும் துயரே!

வாழ்வில் திரும்பிய பக்கமெல்லாம் வறுமையும்,துயரமும் மட்டுமே துரத்தியதால், தன்னுடைய ஏழு பிள்ளைகளையும் கிணற்றில் போட்டுவிட்டு, தானும் குதித்த ஏழுபிள்ளை நல்லதங்காளைப் பற்றி அறிந்திருப்பீர்கள். இப்போதும் நல்லதங்காள்களுக்கு எம்மிடையே பஞ்சமில்லை. அப்படி ஒருத்திதான் மேலே சொல்லப்பட்ட சம்பவத்தில் வருகின்ற அவளும்.


கிணற்றில் பிள்ளைகளோடு பாய்ந்த அவளின் கணவனை எமது புலனாய்வுக்குழு சந்தித்தது. பிள்ளைகளை இழந்த கவலை அவ்வளவாக இல்லாத நிலையில் , தங்கள் கதையைச் சொல்லத் தொடங்கினான் அவன்.

"எங்கட சொந்த இடம் கிளிநொச்சி சிவிச்சென்ரர், பன்னங்கண்டியிலுள்ள சிவிக் சென்ரர் 7 ஆம் வகுப்பு வரைதான் படிச்சனான். பிறகு பள்ளிக்கூடம் போகாமல், கிளிநொச்சி சந்தையில இருந்த மரக்கறி கடை ஒண்டில வேலை செய்தன்.

கிளிநொச்சியை இலங்கை ஆமி பிடிச்ச சமயம், எங்கட அப்பா தேங்காய் பிடுங்கப் போனவர். பிறகு திரும்பி வரேலை.

ஏழு மாசங்களுக்குப் பிறகு அங்க இருந்த 'ரொய்லெட்' ஒண்டுக்க அவரின்ர சடலத்தை மீட்டம். ஆமிதான் பிடிச்சு சுட்டவங்கள்.





## காதலித்தே கல்யாணம்

அப்பா இல்லாததால சரியான கஷ்டம்.அதால மேசன் வேலைக்குப் போகத் துடங்கினன். அப்பதான் அவளைக் காதலிச்சன். ஒரே ஊர். சின்னனில இருந்தே தெரியும். ஆனால் ரண்டு வீட்டிலையும் எதிர்ப்பு.

எனக்கு குடிப்பழக்கம் இருந்தது அவளின்ர வீட்டுக்கு தெரியும். அதால அவையும் எதிர்ப்பு. அந்தநிலையில் 2008 ஆம் ஆண்டு இயக்கத்துக்குப் போக வேண்டிய கட்டாயம், ஆனால் ஒரு வருசத்தில திரும்ப வந்திட்டன். அதுக்குப் பிறகு ஆமியிட்ட சரணடைஞ்சு, தடுப்புக்கு போய், அங்க இருந்து 2011ஆம் ஆண்டிலை வெளியில வந்தன். வேற வேலை கிடைக்காததால கூலி வேலை தான் செய்தன். இந்தக் கட்டத்தில அவள் நலன்புரி நிலையத்தில இருக்கேக்கையே, சவூதிக்கு வேலை செய்யப் போட்டாள். ரெண்டு வருசத்தாலதான் திரும்பி வந்தாள்.

அப்ப என்னைச் சந்திச்சு " திரும்பவும் என்னை வெளிநாட்டுக்கு அனுப்ப வெளிக்கிடுகினம். இல்லாட்டி வேற ஆரையும் கலியாணம் கட்டிக் குடுத்திடுவினம் எண்டு சொன்னாள். இரண்டு வீட்டிலையும் எதிர்ப்பு எண்டபடியால, 2012 ஆம் ஆண்டிலை வீட்டை விட்டு ஓடிப்போய் கலியாணம் கட்டி, முறிகண்டியிலை இருந்தம்.

## முதலும் கிணற்றுக்குள் பாய்ந்தாள்

அங்க கொன்றாக்ட்டுக்கு மேசன் வேலையை எடுத்து, ஆக்களை வைச்சு செய்விச்சு வந்தன். வேலை கூட. அதோட வேலையாக்களுக்கு சம்பளம் கணக்குப் பார்த்து குடுத்துட்டு வர இன்னும் நேரஞ்செல்லும். அது அவளுக்கு பிடிக்கேலை. அடிக்கடி சண்டை. ஒருநாள் வீட்ட வர இரவு 11 ஆகியிட்டுது. அப்ப அவள் பிள்ளைத்தாச்சி. எங்கட முதலாவது பிள்ளை வயித்தில இருந்தது. ' ஏன் லேட்?'எண்டு கேட்டு, சண்டை பெரிசாகியிட்டுது. நான் ஆத்திரதிலை அடிச்சுப் போட்டு, உள்ளுக்கை போய்ப் படுத்திட்டன்.

அவள் அப்பிடியே அழுதுகொண்டு போய் கிணத்துக்கை விழுந்திட்டாள்.

எனக்கு என்ன செய்யிறதெண்டு தெரியேல்லை. பக்கத்திலை இருக்கிறவையை கூப்பிட்டு ஒருமாதிரி அவளைக் காப்பாத்தி மேல கொண்டு வந்திட்டம். அப்ப அவள் " நீங்கள் குளிக்கேக்க விழுந்ததைப் பார்த்து நான் ஓடியரேக்கை தவறி கிணத்துக்க விழுந்திட்டன் எண்டு சொல்லுங்கோ" எண்டாள். நானும் அப்பிடியே சொன்னன். இல்லாட்டி சட்டப்பிரச்சினை வரும் எண்டு அவள் சொல்லியிருந்தாள்.

## பிரிவோம்; சந்திப்போம்

அடுத்தநாள்,

"தனிய இருக்க பயம் எண்டால் உங்கட வீட்ட போய் இருக்கப் போறீங்களா?" எண்டு கேட்டன். உடன ஓம் எண்டிட்டாள். அவளை அவையின்ர அம்மா வீட்டுக்கு அனுப்பிப் போட்டு, நான் என்ரை அம்மா வீட்ட வந்திட்டன். ஆனா என்ரை அம்மாஅவையின்ர வீட்ட போய்ப் பிறகு கதைக்க, ஒரு திரும்ப வந்து மூன்றுநாள் எங்களோட இருந்தாள். பிறகும் "இஞ்ச இருக்கேலாது ; நான் வீட்டை போறன் "எண்டிட்டு தாய்வீட்டை போட்டாள்.

நானும் கொழும்பில மேசன் வேலைக்குப் போட்டு, .ரெண்டு மூண்டு கிழமைக்குப் பிறகு வந்து போன் எடுத்தன். உடனை , "மூண்டு மாசமா விட்டிட்டுப் போட்டாய் என்டுதான் நினைச்சன். வை போனை" எண்டு கட் பண்ணிட்டாள். அதுக்குப் பிறகு , பெண்கள் சிறுவர் பொலிஸ் பிரிவில் இருந்து எனக்கு பொலிஸ்காரர் கோல் எடுத்தினம். " உங்கட மனைவி முறைப்பாடு செய்துள்ளார். விசாரணைக்கு வாருங்கள்" எண்டு சொல்லிச்சினம். அங்க வைச்சு எங்கட வீட்டுக்கு வரமாட்டன் எண்டிட்டா. பிறகு அவவுக்கு பால்மா, சீனி , இரண்டாயிரம் ரூபா காசு எண்டு பொலிஸ் ஸ்ரேசனில ஒரு நாலு தரம் குடுத்தன். அவள் அங்க போய் அதை வேண்டுவாள். அதுக்குப்பிறகு நானும் கொழும்புக்குப் போட்டன்.

பிறகு பிள்ளை பிறக்கப் போகுது எண்டு போன் பண்ணிச் சொல்ல, நான் ஓடி வந்து பார்த்தன். அதுக்குப் பிறகு அவையின்ர வீட்டில இருந்து வேலைக்குப் போய் வந்தன். அங்கையும் குடிக்கவேண்டாம் எண்டு பிரச்சினை. இந்தமுறை அவளின்ர சகோதரங்களும் அடிக்க வந்திட்டினம். நான் அவளை நெடுக அடிக்கிறன் எண்டும், கஞ்சா, குடு எல்லாம் பாவிக்கிறனான் எண்டும் பொலிஸுக்கும் முறைப்பாடு குடுத்தவை. அதால அங்க இருக்க வேண்டாமெண்டு எனக்குப் பொலிஸ் சொல்லிச்சு. நானும் அம்மா வீட்டை வந்திட்டன். திரும்பவும் கொழும்புக்கு போக, எனக்கு டெங்கு வந்திட்டு. அதுக்கு ஹொஸ்பிட்டலுக்கு போக, என்னைப்பார்க்க அவள் வந்தாள். காய்ச்சல் சரியாக, அப்பிடியே ரிக்கெற்வெட்டி, அவையின்ர வீட்டை கூட்டிக்கொண்டு போனாள். அங்க இருந்து கொண்டு எங்கட காணிக்குள்ள கொட்டில் ஒண்டு போட்டம். அங்க இருக்கேக்க தான் ரண்டாவது மகள் பிறந்தவ.

## தாபரிப்பு வழக்கு

எங்களுக்குள்ள இடைக்கிடை சண்டை வாறதுதான். அடிச்சும் இருக்கிறன். ஆனால் அடுத்தநாளே. ரெண்டுபேரும் ஒற்றுமையாகிடுவம். இப்பிடியிருக்கேக்க மூண்டாவது பிள்ளையும் (மகன்) பிறந்திட்டான். பிள்ளை பிறந்து வரேக்கையே,

"என்னை எங்கட அம்மா வீட்டில கொண்டுபோய் விடு. இல்லையெண்டால் திருப்பி கொஸ்பிற்றலில கொண்டு போய் விடு" எண்டு ஒரே கரைச்சல். அதால அவளைத் தாய் வீட்டிலயே கொண்டுபோய் விட்டிட்டன். ஆனால் தேவையானதெல்லாம் வாங்கிக் குடுப்பன். ஒருநாள் இப்பிடி சாமான் வாங்கிக் கொண்டு போக "குடிச்சிருக்கிறியா? குடிச்சால் இஞ்சால வரவேண்டாம்" எண்டிச்சினம். அதால எனக்கு கோபம் வந்திட்டுது. "இன்னும் அரை மணித்தியாலத்தில நீயும் பிள்ளையளும் எங்கட வீட்ட வரவேணும்" எண்டு சொல்லிட்டு வந்திட்டன். அவளும் பிள்ளையளோட வந்திட்டாள். அங்க ஆள் வைச்சு அவளையும், பிள்ளையையும் பராமரிச்சன். அந்த வேலையாள் நிக்க, நான் தான் சமைச்சு வைச்சிட்டு வேலைக்குப் போய் வந்தன்.

ஒருக்கா அனலைதீவுக்குபோட்டு வந்து,பியர் வாங்கிக் கொண்டந்து குடிச்சன். அதால பெரும் சண்டை. 119 நம்பருக்கு அடிச்சு சொல்லி, விடியப்பிறம் 2 மணிக்கு வீட்டை பொலிஸ் வந்து, கூட்டிக்கொண்டு போட்டுது. என்ர தம்பிதான் வந்து பிணை எடுத்தவன்.

கொஞ்ச நாளில, தாபரிப்பு வழக்குப் போட முறையிட்டிருக்கிறாள். அதால கிளிநொச்சி நீதிமன்ற வளாகத்தில உள்ள அலுவலகத்தில வைச்சு ரண்டு பேரையும் விசாரிச்சு, "ஒற்றுமையாக போகிறீர்களா ?"எண்டு கேட்டிச்சினம்.

"நான் போக மாட்டேன் .போனால் என்னைக் கொல்லுவான் கொலைகாரன் " எண்டு அவள் சொல்லிட்டாள். அதால வழக்கு பதிவு செய்து, ஒவ்வொரு தவணைக்கும் போய் வந்தம். ஆனால் தீர்ப்பு வரேல்லை. திடீரெண்டு ஒருநாள் பிள்ளையளோட வீட்டை வந்து, 'ஒற்றுமையா இருப்பம்' எண்டாள். லோயருக்கும் போன் பண்ணி நாங்கள் ஒற்றுமையாகிட்டம் எண்டும் சொன்னாள். அதுக்குப் பிறகும் சின்னச் சின்ன சண்டை வரும். எண்டாலும் இப்பிடி நடக்கிற அளவுக்கு ஒண்டும் நடக்கேலை.

(மறுபக்கம் பார்க்க)

## கறுப்பு நாளான பிறந்தநாள்

முதல் நாள் வயலுக்குப் போட்டன். அங்க வேலை கூட. இரவும் அங்க நிண்டால் விடியப்பிறம் கூட வேலை செய்யலாம் எண்டு நினைச்சு வீட்டை வர மாட்டன் எண்டு போன் எடுத்து அவளுக்குச் சொன்னன். அவளுக்கு கோபம் வந்திட்டுது. "அப்ப உங்கையே நில்லு. பாயையும் தலையணையையும் குடுத்து விடுறன்" எண்டு சொல்லி போனை வைச்சிட்டாள்.









03.03.2021
விடிஞ்சதும் வீட்டை போனன். அப்பவும் அவளின்ர கோபம் போகேல்லை.
அவளின்ர பிறந்த நாளும் அண்டைக்குத் தான். வழமை மாதிரி பிள்ளையளைக் குளிப்பாட்டி உடுப்பு மாத்தேல்லை. நான் போய், முகம் கழுவிப்போட்டு வந்து தேத்தண்ணி கேட்டன்.
"தேத்தண்ணியை கொண்டுபோய் குடு" எண்டு மூத்த பிள்ளையிட்ட குடுத்துவிட்டாள்.
ஆனால் தேத்தண்ணி சூடில்லை. ஆறிப்போட்டுது.
" என்ன தேத்தண்ணி ஊத்தியிருக்கிறாய்?" என கேட்டு அதை எறிந்துவிட்டேன்.
பிறகு " சாப்பாட்டைப் போடு. வயலுக்குப் போகணும்" எண்டு சொன்னன். அதுக்கு "சாப்பாடு செய்யேல்லை" எண்டாள்.
"இப்ப எத்தனை மணி ?"
"எத்தினை மணியெண்டாலும் நான் நினைக்கிற நேரம் தான் செய்வன்" எண்டிட்டு அப்ப தான் புட்டு அவிக்க வெளிக்கிட்டாள். எனக்கும் கோபம் ஏறிட்டுது. நான் குடிச்ச தேத்தண்ணி கப்பை எடுத்து, வெளியால எறிஞ்சு போட்டு, புட்டு அவிக்கத் தொடங்கினாள்.
கப் எறிஞ்சதால எனக்கு இன்னும் ஆத்திரம் . " ஏனடி எறிஞ்சனி?'எண்டு கேக்க சண்டை முத்திட்டுது. உடன கையில இருந்த கப்பை எடுத்து அவளுக்கு எறிஞ்சு போட்டு, அடிக்கிறதுக்கு தடி எடுத்தன். உடன சத்தமா அழுது கொண்டு வெளியில ஓடிட்டாள். பிள்ளையளுக்கு பல்லுத்தீட்ட,ரூத் பேஸ்டும், பிரஷும் வாங்கியரச் சொல்லி காசும் குடுத்து, .ரெண்டாவது மகளைக் கடைக்கு அனுப்பினன், போய்க்கனநேரமாகியும் அவள் வரேல்லை. கடைக்கும் போகேல்லையாம். தாய்( அவள்) வந்து கூட்டிக்கொண்டு போட்டாள் எண்டு கடைக்காரர் சொன்னார்.
அதால நான் மூத்தவளிட்ட" தம்பியைப் பார்த்துக் கொள்ளுங்கோ" எண்டிட்டு வயலுக்கு போட்டன். கிளிநொச்சிக்குப் போன எங்கட அம்மாவும் வயலடிக்கு வந்திட்டா. அங்கேயே சமைச்சு, சாப்பிட்டிட்டு இருக்க்கேக்க தான், அம்மாவுக்கு கோல் வந்தது. கோல் கதைச்சுப் போட்டு, " உன்ர மனுசி பிள்ளையளோட ஒற்றைக்கை பிள்ளையார் கோயில் கிணத்துக்க பாய்ஞ்சிட்டாளாம்" எண்டு கத்தி அழுதா. எனக்கு என்ன செய்யிறதெண்டு தெரியேல்லை. இப்ப கூட அதை மறக்க ஏலாம இருக்கு. குடும்பச் சண்டை எண்டால் என்னை ஏதும் செய்திருக்கலாம். அதைவிட்டிட்டு இப்பிடி பிள்ளை யளை...."
அவன் சொல்லிமுடித்தான்.

### மூத்தவளுக்கும் அப்பிடி இளையவளுக்கும் இப்பிடி

"எங்கட பிள்ளை அவனைக் கட்டுறதில எங்களுக்கு விருப்பம் இல்லை. தாங்களா விரும்பி கட்டித்தான் இண்டைக்கு இந்த நிலை. இவளின்ரை அக்காவும் இப்பிடித்தான் அநியாயமாப் போட்டாள் ( அவளின் அக்காவின் கணவர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொள்ள, அக்காவும் கணவர் இறந்த நான்காம் நாள் தானும் தூக்கிட்டு உயிர் மாய்த்திருந்தார்) . அது நடந்து மூண்டு வருசமாச்சுது.
நாங்கள் அந்தக் கவலையிலை இருந்து மீள முதலே இப்படி ஒரு நிலை. இவளுக்கும் பிள்ளையளுக்கும் ஒழுங்கான உடுப்பு இல்லை. உடுப்பு வேண்டி குடுக்கிறதுமில்லை. எவ்வளவு கஷ்டப்பட்டாள் என்று அயலட்டையளை விசாரிச்சுப் பாத்தியளெண்டாத் தெரியும். நாங்களும் ஒரு மகளின்ர உழைப்பில் தான் வாழுறம். ஆம்பிளைப் பிள்ளைகள் இல்லாததாலை கேட்க ஆக்கள் இல்லை எண்டு, இவளுக்கு ஒரே அடி ஆய்க்கினை. அதுதான் உப்பிடி ஒரு முடிவை எடுத்திருக்கிறாள். பிள்ளையளோட தானும் சாகத்தான் பாய்ஞ்சிருக்கிறாள். அவள் தப்பினதால விதம் விதமாக கதைச்சுக் திரியினம். அவள் அனுபவிச்ச கொடுமை அவளுக்குத் தான் தெரியும்.
அண்டைக்கு அவளின்ரை பிறந்தநாள் வேற. பிள்ளையோட அழுதபடி ஓடி வந்தாள் . புட்டு அவிக்கேல்லை எண்டு புருசன் அடிக்கிறான் எண்டு சொல்லி அழுதா. போய் புட்டு அவிச்சுக் குடன் எண்டு சொன்னன். அப்பதான் பக்கத்து வீட்டு பிள்ளை போன் பண்ணி " அவன் போட்டான், பிள்ளைகள் இரண்டும் தனிய நிக்குதுகள்" என்று சொல்லிச்சுது. அதைக் கேட்டிட்டு ரெண்டாவது மகளோடு வீட்ட போட்டாள்.அதுக்குப் பிறகு இந்த மாதிரிச் செய்து போட்டாள். இப்ப கொஸ்பிட்டலில இருக்கிறாள். ஒண்டும் கதைக்கிறாளில்ல. வெறிச்ச மாதிரி பார்த்துக் கொண்டு இருக்கிறாள் "
இது அவளின் அம்மாவின் புலம்பல். துயர்படிந்த வாழ்வில் கூண்டோடு சாவதே முடிவென அவள் நினைத்ததாலேயே இந்தக் கதி என்பது தாயின் பேச்சில் தெரிந்தது.

### கடைசிக் கற்பூரம்

" அடிக்கடி அவளின்ரை வீட்டில சண்டை நடக்கும். சில நேரங்களில் நாங்கள் போய் விலக்குத் தீர்ப்பம். அண்டைக்கும் அப்பிடி ஒரு சண்டைச் சத்தம் கேட்டது. புருசன்காரன் தடி எடுத்ததைக் கண்டனாங்கள். ஆனால் அவளுக்கு அடிச்சதைக் காணேல்லை. பிறகு அழுதுகொண்டு வெளிய ஓடி வந்து "அடிக்கிறான்" எண்டு அழுதவா. அவளின்ரை வீட்டுக்காரன் கொஞ்ச நேரத்தில அங்க வர, அவள் ஒழுங்கை சந்திப் பக்கம் போட்டாள். பிறகு அவன்ரை அம்மாவும் வந்து எல்லாரும் வயலுக்கு போனவை. நாங்கள் உடன அந்த பிள்ளையின்ர( அவளின்) அம்மாக்கு போன் பண்ண மகளிட்ட கொடுத்தா" உங்கட வீட்டுக்காரர் போட்டார் பிள்ளைகள் தனிய" எண்டு சொன்னம். உடன வந்திட்டா. பிள்ளைகள் மூண்டையும் வெளிக்கிடுத்திக் கொண்டு பதினொரு மணி போல, எங்கட கடைக்கு ஆயிரம் ரூபா காசோட வந்து கற்பூரம் வாங்கினவா.
பின்னேரம், மூண்டரை மணி போலைதான் இப்பிடி நடந்திட்டுது எண்டு தெரிய வந்திச்சு" இது அவளின் வீட்டருகே கடை வைத்திருக்கும் பெண் சொன்ன தகவல்.

### பொறுத்து பொறுத்துப் பார்த்தும்...!

"அவளின்ர புருசன் ஒரே குடி. கஞ்சா கசிப்பும் பாவிக்கிறவன். அதால அடிக்கடி சண்டை வரும் . அவன் அடிக்க வெளிக்கிட்டால் அந்தப் பிள்ளைக்கு மாட்டுக்கு அடிக்கிற மாதிரித் தான் அடிக்கிறவன். இரண்டு வீடு தள்ளியும் அந்த பிள்ளை அழுகிற சத்தம் கேக்கும். ஆரும் மறிக்க போனாலும் போறவையைக் கண்டபடி ஏசுவான். அதால சண்டை எண்டாலும் ஒருத்தரும் மறிக்கப் போறதில்லை. பொறுத்து பொறுத்துப் பாத்து இனி ஒண்டும் செய்யேலாது எண்ட நிலையில தான் அவள் இப்படி ஒரு முடிவை எடுத்திருக்கிறாள். அவள் தப்பினதால அவள் பிழை செய்தவளா போட்டாள்.
அவள் பிள்ளைகளிலை சரியான அக்கறை. காலையிலேயே பிள்ளையள் மூண்டு பேரும் குளிச்சு வெளிக்கிட்டு வீட்டடியில கதிரை போட்டு இருப்பினம். மூத்தவள் படிப்பில் நல்ல கெட்டிக்காரி. பிள்ளைகளை எந்த நேரமும் துப்பரவா அழகா வச்சிருப்பாள்.
பிரிஞ்சு போனவள் அப்பிடியே பேசாமல் போயிருக்கலாம். திரும்ப இவனிட்ட வந்து அநியாயமா பிள்ளைகளையும் இழந்து பழிகாரி ஆகிட்டாள் ,
ஒருக்கா இரவு சாமத்தில் வந்த அவளின்ர புருசன், வாய் புசத்திக்கொண்டு படுத்திருக்கிறான். திடீரெண்டு கடைசிப் பெடியனில பாய்ஞ்சு கடிக்க வெளிக்கிட்டுட்டான். அவள் மூன்று பிள்ளை களையும் தூக்கிக்கொண்டு வெளியில் ஓடிவந்திட்டாள் . அவனும் வாசல் வரை கலைச்சுக் கொண்டு வந்தான். பிரகு அவன்ர தம்பியார் தான் வந்து அவனைக் கொண்ட்ரோல் பண்ணினவன். அது ஏதோ ஒரு தீய சக்தி அவனுக்குள் புகுந்து அப்படிச் செய்ததாகவும் ,மந்திரங்கள் தெரிஞ்ச தம்பியார் அவனை கட்டுப்படுத்தியதாகவும் கதைச்சவை. ஆனால் உண்மையில உவனுக்கு தீயசக்தி பிடிக்கேல்லை. கஞ்சா, கசிப்பு பாவிச்சு தான் அப்பிடி நடந்திருக்கு " என்று ஊரவர்கள் பெரும்பாலானோர் சொல்லிவைத்தாற் போல ஒரேமாதிரிக் கூறினார்கள். ஆனால் அவனோ ( அவளின் கணவன்) தான் கஞ்சா, கசிப்பு பாவிப்பதேயில்லை என்று சத்தியம் செய்கின்றான்.

## 2 கடிதங்கள்

அவள் மூன்று பிள்ளைகளோடு பிள்ளையார் கோயிலுக்குள் சென்று கும்பிட்டிருக்கிறாள்.,பிறகு வெளியில் மூன்று பிள்ளைகளோடு சென்றுவிட்டு சிறிது நேரத்தில் கடைசி பிள்ளையோடு மட்டும் கோயிலுக்குள் வந்து அழுதபடி மீண்டும் கும்பிட்டுள்ளாள். பின்னர் அவளைக் கிணற்றுக்குள் தான் ஊரவர்கள் கண்டிருக்கிறார்கள். எனவே முதலில் தன் இரு பெண் பிள்ளைகளையும் கிணற்றுக்குள் போட்டுவிட்டு, பின்னர் சிறிது நேரத்திலேயே அவளும் கடைசிப் பிள்ளையோடு பாய்ந்திருக்கிறாள்.
கிணற்றடியில் கழற்றி விடப்பட்டிருந்த செருப்புகளுக்கு கீழே இரண்டு கடிதங்கள் இருந்துள்ளன. ஒரு கடிதத்தில் அப்பாவால் தான் தற்கொலை செய்கிறோம் என எழுதிய கடிதத்தில் மூத்த மகளின் கையொப்பம் இருந்துள்ளது.

**மற்றொரு கடிதத்தில்,**
'ஊர் மக்களுக்கு....எனக்கு மூன்று பிள்ளைகள் இருக்கு. வழக்கு இருக்கு. மனுசன் குடி. சரியான அடி. நீங்கள் எல்லோரும் சேர்ந்து தான் இந்த குடிகாரனுக்கு தண்டனை கொடுக்க வேண்டும்' என எழுதப்பட்டிருந்தது. இந்தக் கடிதங்கள் மீட்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.
அவள் பிள்ளைகளோடு குதித்த கிணற்றில் இப்போது வழமைக்கு மாறாக நீர் ஊற்றெடுப்பது மிகக் குறைந்துள்ளது. இதனாலும், மூன்று பிள்ளைகள் இறந்ததால் அந்தக் கிணற்றைப் பயன்படுத்த ஊர்மக்கள் தயக்கம் காட்டுகின்றனர். எனவே அதனை மூடிவிடலாம் என்ற முடிவுக்கு ஊரவர்களும், ஆலய நிர்வாகத்தினரும் வந்திருக்கின்றனர் எனச் சிலர் சொன்னார்கள்.

## காரணம் கசிப்பும், கஞ்சாவுமே !

**மூன்று பிள்ளைகளின் சாவுக்கும் யார் காரணம்?**

- **நெஞ்சைக் கல்லாக்கிக் கொண்டு, வேறு முடிவை எடுக்கத் தெரியாமல் முட்டாள்தனமாக தன் பிள்ளைகளை கிணற்றில் வீசிய அவளா?**
- **அவளை இப்படி முடிவெடுக்கத் தூண்டுமளவுக்கு ஓயாத குடியும், அடியுமாக இருந்த அவளின் திருத்தவே முடியாத கணவனா?**
- **மனைவி என்பவளை கணவன் என்னவும் செய்யலாம் என்ற எங்கள் சமூக மனோநிலையா?**

இவையெல்லாம் மேலெழுந்தவாரியாகத் தெரியும் காரணங்கள். ஆனால் உண்மையில் வட்டக்கச்சியில் ஆழக் கால்பதித்துள்ள கசிப்பும், கஞ்சாவுமே பச்சிளம் பிள்ளைகளின் சாவுக்கு உண்மையான காரணம். அவன் கசிப்போ, கஞ்சாவோ பாவிக்காமல் இருந்திருந்தால் அந்தக் குடும்பத்தில் பிரச்சினையே வந்திருக்காது. பிள்ளைகளும் நல்லபடியாக இருந்திருப்பினம். இந்தக் குடும்பத்தை மாத்திரமல்ல இன்னும் பல குடும்பங்களின் வாழ்வையும் கஞ்சா, கசிப்பு என்பவை வட்டக்கச்சியில் மட்டுமல்லாது வடக்கு மாகாணம் எங்கும் வேட்டையாடத் தொடங்கியுள்ளன. எனவே முதலில் இந்தப் பகுதியில் போதைப் பொருள் பாவனையை இல்லாமல் செய்ய ஆக்கபூர்வமான நடவடிக்கையில் உரியவர்கள் இறங்க வேண்டும். இல்லையேல் , வீரத்துக்கும், பண்புக்கும் பெயர் போன வட்டக்கச்சி, குற்றங்களின் சொர்க்கபுரியாக மாறுவதைத் தவிர்க்கமுடியாது.

© 2000 Agfa-Gevaert N.V.



# இதுதான் இறுதி தீர்வா?

ந.பரமேஸ்வரன்

ஐ.நா.மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடரில் இந்தியப் பிரதிநிதி இந்திரா சந்தோஷ் பாண்டே "இலங்கை அரசாங்கம் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும். பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தின் கீழ் தமிழர்களுக்கு அதிகாரப்பகிர்வு வழங்கப்பட வேண்டும். தமிழர்கள் கௌரவமாக, சுயமரியாதையுடன்,கண்ணியமாக வாழ வேண்டும் " என உரையாற்றியிருந்தார். அதனைத் தொடர்ந்து பிரிட்டன், இணைத்தலைமை நாடுகளுடன் இணைந்து ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கவுள்ள வரைபில் , "இலங்கை அரசாங்கம் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த வேண்டும்" என்ற விடயத்தை உட் புகுத்தியுள்ளது. பிரிட்டன் கொண்டு வரவுள்ள இந்தத் தீர்மானம் பெரும்பாலும் ஏனைய நாடுகளால் அங்கீகரிக்கப்படுவதற்கான சாத்தியக்கூறுகளே காணப்படுகின்றன.

இலங்கையில் பதின்மூன்றாவது திருத்தச் சட்டம் அமுல்படுத்தப்பட்டால், இலங்கையில் இனப்பிரச்சனை தீர்ந்து விடும், இலங்கைத்தமிழர்களுக்கு உரிய அதிகாரப்பகிர்வு வழங்கப்பட்டு விடும் என பிரிட்டன் உள்ளிட்ட நாடுகள் நம்புகின்றன. ஆனால் பதின்மூன்றாவது திருத்தச்சட்டம் இலங்கைத்தமிழர்களின் அபிலாஷைகளை பூர்த்திசெய்யவில்லை என்பது இந்தியத் தலைவர்களுக்கு நன்கு தெரியும் . இருந்தும் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடரில் இந்தியப்பிரதிநிதி உரையாற்றியமை இந்தியாவின் நரித்தனம் என்றே சந்தேகிக்க வேண்டியுள்ளது. பதின்மூன்றாவது திருத்தச் சட்டம் இரு நாடுகளுக்கிடையில் செய்து கொள்ளப்பட்ட சர்வதேச ஒப்பந்தத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட ஒரு சட்டம். எனவே அதை இலங்கை அரசாங்கம் மீற முடியாது என்பதே சர்வதேசத்தின் நிலைப்பாடு.

இந்திய மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை விட கூடுதலாக இலங்கை தமிழர்களுக்கு வழங்கப்பட்டால், அது இந்தியாவில் பெரும் பூகம்பத்தை உருவாக்கும். அத்துடன் தற்போதைய மோடி அரசு காஷ்மீருக்கு வழக்கப்பட்டிருந்த விசேட அதிகாரங்களை பறித்து விட்டது.எனவே இந்த நிலையில் தமிழர்களுக்கு உச்சபட்ச அதிகாரப்பகிர்வை வழங்குமாறு இலங்கையை வலியுறுத்த இந்தியாவால் முடியாது. அதேவேளை, பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல் படுத்துமாறு இலங்கையை இந்தியா கோரும் பட்சத்தில் இலங்கையும் அதனை நிராகரிக்க முடியாது. யுத்தம் முடிந்தவுடன், 13+ ஐ அமுல்படுத்தப்போவதாக அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச இந்தியாவுக்கு வாக்குறுதி அளித்திருந்தார். ஏற்கனவே அமுலில் உள்ள ஒரு சட்டத்தை அமுல்படுத்துமாறு ஐ.நா. சபையில் தீர்மானம் கொண்டு வரப்படும் போது இலங்கை அரசால் அதனை நிராகரிக்க முடியாது. பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தின் கீழ் ஒற்றையாட்சி முறைமையும் பாதுகாக்கப்படுவதால், இலங்கையின் இறைமை மீறப்படுகிறது என ஓலமிடவும் இலங்கைக்கு வழியில்லை. இலங்கையை தனது பிடிக்குள் வைத்திருக்க வேண்டிய தேவை இந்தியாவுக்கு உள்ளது .அதேவேளை ஈழத்தமிழர்களையும் திருப்திப்படுத்த வேண்டும்; தமிழ்நாட்டு தமிழர்களின் வாயையும் அடைக்க வேண்டும். இவற்றுக்கெல்லாம் ஒரே தீர்வு, ஏற்கனவே நடைமுறையிலுள்ள பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்துவிப்பது தான்.

இதனால் உண்மையில் பாதிக்கப்படப் போவதென்னவோ, ஈழத்தமிழர்கள்தான். போகிற போக்கைப்பார்த்தால் காணி ,பொலிஸ் அதிகாரங்களுடன் கூடிய மாகாணசபையே தமிழர்களின் அறவழி, ஆயுதப் போராட்டங்களுக்கு கிடைக்கப்போகிற இறுதிப் பரிசு என்றே தோன்றுகிறது. அதாவது ஜனாதிபதியின் பிரதிநிதியான 'மாகாண ஜனாதிபதிகள்' (நிறைவேற்று அதிகாரம் மிக்க ஆளுநர்கள் ) வடக்கு, கிழக்கை ஆட்சி செய்யபோகின்றனர்.

இப்போது இணை அனுசரணை நாடுகளுக்கு கடிதம் எழுதிய முப்பெருந் தலை வர்களான விக்கி,கஜேந்திர குமார், சுமந்திரன் ஆகியோரின் அடுத்த கட்ட நகர்வு என்ன என்பதே கேள்வி?' எமக்கு 13 போதாது" என சர்வதேசத்திடம் முறையிடப்போகிறார்களா? அல்லது 13 இன் கீழ் மாகாணசபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மீளப்பெறப்பட முடியாதவாறு சர்வதேசம் பார்த்துக்கொள்ள வேண்டும்",
அல்லது ,

"ஏற்கனவே சிறுபான்மையினரின் நலன்களை பாதுகாக்கும் பொருட்டு சோல்பரியால் அறிமுகப்படுத்தப்பட்ட 29 ஆவது சரத்துக்கு நேர்ந்த கதி 13 க்கும் ஏற்படாதவாறு ஐ.நா.பார்த்துக்கொள்ள வேண்டும்" என்று சொல்லப்போகிறார்களா? இல்லையேல், "எமக்கு13 தேவையில்லை" என நிராகரிக்கப்போகிறார்களா? இப்போதைக்கு தமிழ் தலைமைகளின் முன்னால் உள்ள தெரிவுகள் இவைகள் தான். இந்தத் தெரிவுகள் மூலம் 13 ஆவது திருத்தச் சட்டமே எமக்கான இறுதித்தீர்வாக அமைந்தால், அதை( 13 ஐ) ஏற்காமல் 1987 ஆம் ஆண்டுக்குப்பின்னர் தொடர்ந்தும் போராடி உயிர் நீத்த போராளிகளினதும் பொது மக்களினதும் உயிரிழப்புகள் யாவையும் விழலுக்கு இறைத்த நீராகி விடும் என்பதே உண்மை.




விளையாட்டு

ஆர்.லயனல்




## பழசுக்கும் மவுசு !


பொதுவாகவே புதிய பொருள்களே பெறுமதியானவை. ஆனால் அந்த விதி எல்லாவற்றுக்கும் பொருத்தமானதல்ல. சில சமயங்களில் புதியவற்றை விடவும் பழமையானவைக்கு பெறுமதி அதிகம். அந்தப் பழைமைகளுக்கான மற்றுமொரு மகத்துவம் தான் தற்போது நடைபெற்றுவரும் லெஜன்ட்ஸ் கிரிக்கெட்.

கிரிக்கெட்டில் '90ஸ் கிட்ஸ்'களின் ஆதர்சங்களை வைத்து நடைபெற்று வரும் இந்த லெஜன்ட்ஸ் துடுப்பாட்டத் தொடர் எத்தனையோ பேரின் பள்ளிப் பருவ இரைமீட்டல்களாக அமைகின்றன. சச்சின், சேவாக். யுவராஜ், லாரா, டில்சான், சனத் ஜெயசூரிய, ஜொன்டி ரூட்ஸ், பீற்றர்சன், ரசல் ஆனல்ட், குலசேகர என்று ஏகப்பட்ட முன்னாள் வீரர்களை மீண்டும் ஒருதடவை கண்டு மகிழும் களமாக இந்த லெஜன்ட்ஸ் கிரிக்கெட் அமைந்துள்ளது .

இவ்வாறு ஒரு தொடர் நடத்தப்படுவதால் மகிழ்ச்சி ஒருபுறமிருக்க, மறுபக்கத்தில் இந்தத் தொடரில் பங்குபற்றியுள்ள முன்னாள் வீரர்களின் பெறுபேறுகளும், விளையாட்டும் பெரிதும் மலைக்கவும் வைக்கின்றன. குறிப்பாக சச்சினின் 'கவர் ட்ரைவ்' லாராவின் 'லோங் ஒன்', சேவாக்கின் முதல் பந்துப் பவுண்டரி, யுவராஜின் சிக்சர் மழை, டில்சானின் சகலதுறை மிரட்டல் என்று அனைவரும் ஆகச்சிறந்த விளையாட்டை வெளிப்படுத்துகின்றனர். ஆக, எங்கே அவர்கள் விட்டுச் சென்றார்களோ அங்கிருந்து மீண்டும் வந்துள்ளனர்.

சோகம் என்னவெனில் லெஜன்ட்ஸ் கிரிக்கெட்டில் விளையாடும் இலங்கை அணியின் முன்னாள் வீரர்களின் உடற் தகுதியும், பெறுபேறும் தற்போது இலங்கைத் தேசிய அணியில் விளையாடும் வீரர்களிடம் துளி கூட இல்லை என்பதே.

**"வயசானாலும் அந்த ஸ்டைலும் அழகும் இன்னும் மாறேலை"**



## பௌத்த துறவியான டோனி!

இந்திய அணியின் முன்னாள் தலைவரான டோனி, பௌத்த துறவிபோன்று வேடமிட்டுள்ள ஒளிப்படமொன்று சமூக வலைத்தளங்களில் பரவி வருகின்றது. இந்த ஒளிப்படம் ஏன்? எதற்கு? என்ற தேடல்கள் தற்போது தீவிரம் பெற்றுள்ளன. சர்வதேசப் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றுவிட்ட டோனி, இந்த வருடம் நடைபெறவுள்ள ஐ.பி.எல் தொடரில் கவனம் செலுத்தி வருகின்றார். கடந்த 10 ஆம் திகதியே டோனி வலைப்பயிற்சியை ஆரம்பித்துவிட்டார்.

டோனி வலைப்பயிற்சியை ஆரம்பித்த சில தினங்களில்தான் இந்த ஒளிப்படமும் வெளியானது. ஆரம்பத்தில் இந்த ஒளிப்படம் பல்வேறு சர்ச்சைகளைத் தோற்றுவித்திருந்த போதிலும் தற்போது அது ஒரு விளம்பரத்துக்கானது என்ற தகவல் வெளிப்பட்டுள்ளது. ஐ.பி. எல்லை விளம்பரப்படுத்தும் வகையில் இந்த ஒளிப்படம் டோனியை வைத்து எடுக்கப்பட்டுள்ளதாம்.

**' தலை ஓய்வை விரும்பினாலும் ஐ.பி.எல் விடுவதில்லை'**